
# விட்டு சித்தன் விரித்த தமிழ்


26



பேராசிரியர்

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

# விட்டுசித்தன் விரித்த தமிழ்




பேராசிரியர் :
டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## வீடுபேறு

மேலெ ழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
    மேல்மி டற்றினை யுள்ளெழ வாங்கி
காலும் கையும் விதிர்விதிர்த் தேறிக்
    கண்ணு றக்கம தாவதன் முன்னம்
மூல மாகிய ஒற்றை யெழுத்தை
    மூன்று மாத்திரை யுள்ளெழ வாங்கி
வேலை வண்ணனை மேவுதி ராகில்
    விண்ண கத்தினில் மேவலு மாமே[1]

—பெரியாழ்வார்

---

1. பெரியாழ். திரு-4, 5:4.

# விட்டுசித்தன் விரித்த தமிழ்

(ஆசிரியரின் 70-வது அகவை நினைவு வெளியீடு)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீசடகோபன் பொன்னடி'
பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்
(எம்.ஏ. பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி.)
தமிழ்ப்பேராசிரியர், துறைத்தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு—1987

© டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் M.D.
(ஆசிரியரின் இளையமகன்)
"வேங்கடம்"
AD—13 (பிளாட் - 3354)
அண்ணாநகர், சென்னை - 600 040

விலை ரூ. 25-00

VENKATAM PUBLICATIONS
AD—13 (Plot. No. 3354)
Anna Nagar, Madras - 600 040

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், 6, நல்லதம்பித் தெரு,
சென்னை - 600 002. தொலைபேசி : 847174.



முத்தர்

பத்மஸ்ரீ K. வேங்கடசாமி நாயுடு B.A., B.L.

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே[2]

*—அதிவீரராம பாண்டியன்*

பத்மஸ்ரீ K. வேங்கடசாமி நாயுடு B. A., B. L.

*சென்னை மாநில இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர்*

*திருமலை - திருப்பதி தேவஸ்தான முன்னாள் ஆட்சிக்குழுத் தலைவர்*

*சென்னை ஸ்ரீ வைணவ மகாசங்க முன்னாள் தலைவர்*

*பிறப்பு :* ஜூலை 1896 (துன்முகி-ஆடிப்பூரம்) *பரமபதித்தது :* 7-3-1972

அன்புப் படையல்

ஓங்குகாந் தீய நெறியினிற் பிறழா
உத்தமன்; திருநெடு மாலைப்
பாங்குறப் போற்றும் அன்பினன்; விண்ணில்
படர்ந்தெழு கார்முகில் அனையான்;
யாங்கணும் எவரும் போற்றிட அமைச்சாய்
அற்புதச் செயல்பல புரிந்தோன்;
வேங்கட சாமி நாயுடு பதத்தில்
மேவுகா ணிக்கையிந் நூலே.

---

2. வெற்றிவேற்கை-34

## எய்ப்பினில் வைப்பு

துப்புடை யாரை யடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவ ரென்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்த மையால்
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்
கேதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்;
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே![3]

—*பெரியாழ்வார்*

---

3. *பெரியாழ். திரு*.4. 10:1

# சிறப்புப் பாயிர மாலை

[புலவர் இரா. திருமுருகன், க.மு., கல்.மு.,
புதுச்சேரி — 605 001]

1. செந்தமிழ்த் தென்புதுவை என்று
திகழ்புதுச் சேரி தன்னைப்
பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி
பாங்குடன் பாடி னாலும்
நந்தமிழ் ஆழ்வார் இருவர்
பிறந்ததும் நாட்டின் தெற்கில்
முந்தி இருந்ததும் வில்லிபுத்
தூர்ப்புதுவை மூதூர் அன்றே?

2. அந்தப் புதுவை அருமைதனை
இவ்வுலகம் அறியும் வண்ணம்
முந்து புகழ்சான்ற வேயர்
குடித்தோன்றல் முகுந்த பட்டர்
அந்தம் மிகுபண்பின் அம்மை
பதுமவல்லி ஆகி யோர்க்கு
வந்து மகனாக விட்டுசித்
தர்பிறந்து வளர்ந்து வந்தார்.

எண்ணத்தில் தம்மை எழிலார்
யசோதையாய் ஏன்று கொண்டு
வண்ணங்கள் கொஞ்சிடும் பிள்ளைத்
தமிழ்ப்பாடல் மகிழ்ந்திசைத்தார்.

7. "பேதைக் குழவி பிடித்துச்
சுவைத்துண்ணும் பெற்றி மைசால்
பாதக் கமலங்கள் வந்திங்குக்
காணீரோ பவள வாயீர்!
காதினிற் குண்டலம் காணீரோ
பூந்தளிர்க் கைகள் என்னும்
போதினைக் கண்டு புரிவளை
யீர்!வந்து போற்றி டீரோ?

8. தாழியில் வெண்ணெய் தடங்கையால்
தொட்டளைந்து தான்வி ழுங்கும்
பேழை வயிற்றெம் பிரான்கண்டாய்
உன்னுடனே பெட்புக் கொண்டான்
ஆழிகொண் டுன்னை எறிவான்
வராவிட்டால் ஐயம் இல்லை
வாழ உறுதியேல் மாமதியே
தாமதியேல் மகிழ்ந்து வாராய்!

9. எண்ணெய் கவிழ்த்தும் இளைஞர்களைக்
கிள்ளி எழுப்பி விட்டும்
கண்ணில் மணல்கொண்டு தூவியும்
காணாமல் காலிற் பாய்ந்தும்
பண்ணும் குறும்பு பொறாமே
முறையிடுவான் பலரும் வந்தார்
கண்ணின் இனிய பெருமானே
நீராடக் கடிது வாராய்!

10. கஞ்சன் கறுக்கொண்டு நின்றன்மேல்
ஏவியதோர் கரிய பேயை
அஞ்சி அலற அழித்தொழித்தாய்
அஃதொன்றோ? ஆவி போக்கும்
நஞ்சுமிழும் நாகம் கிடந்தநற்
பொய்கைதனில் நடுங்கப் பாய்ந்து
அஞ்சப் பணத்தின்மேல் அஞ்சனத்தின்
வண்ணா! நீ ஆடி நின்றாய்.''

11. என்றெல்லாம் பட்டர்பிரான் இன்பம்
தருந்தமிழில் இசைத்த பாடல்
துன்றும் பொருள், சொல், தொடைநயங்கள்
காட்டிச் சுவைகள் எல்லாம்
நன்று விளக்கி நமக்கின்
றொருநூல் நயந்தளித்தார்
என்றும் இளையர் எழில்சுப்பு
ரெட்டியார் என்னும் ஏந்தல்.

12. சிறுவிரல்கள் மெல்லத் தடவிப்
பரிமாறச் செங்கண் கோடக்
குறுவெயர் விற்புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழலூ துங்கால்
கறவையின் கூட்டங்கள் கால்பரப்பிக்
கேட்டதுவும் கண்ணன் தோற்றம்
சிறுகாலை வண்டுதொழும் தெய்வப்
பதியெங்கும் திகழு மாறும்,

13. வெள்ளத்தின் மேலே விரிந்திருக்கும்
பாம்பணையில் விளங்கு மாப்போல்
உள்ளத்தின் உள்ளும் உவந்தினிது
செங்கண்மால் உறையு மாறும்,

கள்ளத்தில் கண்ணனுக்கே காதலியாய்த்
தன்னைத்தான் காட்டு மாறும்,
பள்ளத்தில் வீழ்ந்தோர் பதவிபெறப்
பத்திநெறி படைத்த வாறும்,

14. இருப்பூர்தி, பேருந்து போன்ற
தனித்தமிழ் இனிய சொற்கட்(கு)
இருப்பாய் விளங்கும் இனியவிந்
நூலினிலே எடுத்துக் காட்டி,
விருப்புற்றார் யாரும் விளங்கி
மகிழ்வகையில் விரித்த தன்மை
திருப்பதிப் பல்கலைக்கே செந்தமிழைத்
தந்தவரின் சிறப்பே அன்றோ?

15. பாடிப் பரவுதற்கே பட்டர்பிரான்
வாய்மலர்ந்த பாட்டென் றெண்ணும்
வாடிக்கை அன்பர்கள் நெஞ்சில்
தமிழ்ச்சொல் வளங்கள் எல்லாம்
ஓடிப் பெருகும் வகையில்
படிமவகை உத்தி தன்னைத்
தேடி விளக்குதலும் சுப்புரெட்டி
யார்க்குரிய சிறப்பே அன்றோ?

**வேறு**

16. ஆய்ப்பாடிக் கண்ணனையே தெய்வ மாக
ஆழ்வார்கள் பற்பலரும் சுவைத்தார்; பெற்ற
சேயாகப் பெரியாழ்வார் சுவைத்தார்; நாளும்
செய்யதமிழ் மாலைகளே செய்து சூடி
நாயகனாய் ஆண்டாளும் சுவைத்தார்; அந்த
நற்றமிழைச் சுப்புரெட்டி யார்சு வைத்துத்
தோய்வுற்றார்; அதனாலே நாம்சு வைக்கச்
சுவைததும்பும் இந்நூலை யாத்துத் தந்தார்.

17. முப்போதும் திருநீறு தாங்கும் நெற்றி;
 மூழ்கிமிக வைணவத்தில் திளைக்கும் நெஞ்சம்;
தப்பேதும் அறியாத செம்மல் வாழ்க்கை;
 சலியாத தமிழ்ப் பேச்சு; பயணம் செய்யும்
அப்போதும் விடுதிகளில் தங்கும் போதும்
 அணுவளவும் நேரத்தை வீணாக் காமல்
எப்போதும் எழுதிக்கொண் டிருக்கும் கைகள்;
 இவற்றின் பேர் சுப்புரெட்டி யார்என் பார்கள்.

18. பண்பாட்டிற் கொருவடிவம்; எளிய தோற்றம்
 பழகுவதற் கினியமுகம்; பழகி விட்ட
நண்பர்களின் நலன்களையே கருது கின்ற
 நல்லமனம்; ஆராய்ச்சி போற்றும் உள்ளம்
பண்பாடு, வள்ளுவனார், இராம லிங்கர்,
 பகர் மு. வ. இவர்பற்றி ஆராய் கின்ற
வண்புலவர் பரிசுபெற வைப்பு வைத்த
 வள்ளலுளம் இவைசுப்பு ரெட்டி யாராம்.

19. எத்தனைதான் புகழ்தன்னை எய்தி னாலும்
 எழுபதுக்கு முன்னாலே எழுபத் தெட்டு
சத்தான நூல்எழுதி வெளியிட் டாலும்
 சலியாமல் கலைக்கழகம் பலவும் சென்று
முத்தான விரிவுரைகள் ஆற்றி னாலும்
 முயன்றுகலைக் களஞ்சியத்தைச்
 சமைத்திட் டாலும்
எத்துணையும் செருக்கடையா எளிய உள்ளம்
 இதன்பெயர்தான் சுப்புரெட்டி யார்என்
 பார்கள்.

20. தாய்தன்னைக் குடல்விளக்கம் செய்த அந்தத்
 தாமோத ரன்போலக் கோட்டத் தூரைச்
சேயாக அவ்வூரில் பிறந்த தாலே
 சேயோரும் அறிந்திடவே செய்து விட்டார்

தூயபெரும் தொண்டுகளால் துறையூர் இன்று
சுடர்காரைக் குடிவேங்க டம்சீர்ச் சென்னை
ஆயபல ஊர்களையும் சிறக்கச் செய்தார்
அங்கெல்லாம் என்றுமிவர் புகழ்ம ணக்கும்.

21. அறிவியலில் தேர்ந்திருப்பார் சிலபேர்; என்றும்
ஆழ்ந்திருப்பார் இலக்கியத்தில் சிலபேர்; ஆனால்
அறிவியலும் இலக்கியமும் ஒருங்கே வல்லார்
அருமையிலும் அருமை;இவர் அதற்கோர் சான்று!
அறிவியலில் பதினான்கு புதுநூல் செய்தார்;
அவ்வளவில் இலக்கியங்கள் படைத்தளித்தார்;
அறிவியலின் பார்வையினால் ஆக்கித் தந்த
ஆராய்ச்சி நூல்களும்அவ் வளவி ருக்கும்.

22. மாசில்லாச் சமயநிலை விளக்கும் நூல்கள்
வரிசையிலோர் பதினேழு படைத்தளித்தார்;
தேசுடைய சான்றோர்தம் வாழ்க்கை தன்னைத்
தெரிக்கின்ற பனுவல்களோ முந்நான் காகும்;
ஆசிரியப் பணியாற்றி அறிந்த வெல்லாம்
ஐந்தரிய நூலாகத் தந்தார் மண்மேல்;
ஆசிரியப் பணியிருக்கும் வரையி ருக்கும்
அவர் படைத்த 'தமிழ்பயிற்று முறை'யின் சீர்த்தி!

23. கடலனைய பெருவாழ்வின் பரப்பை எல்லாம்
கடந்துவந்த பட்டறிவு; சொல்லச் சொன்னால்
மடைதிறந்த வெள்ளம்போல் பெருக்கெ டுக்கும்;
மாணிக்கம் வைரமெலாம் வந்து வீழும்!
கெடலரிய தம்வாழ்வில் நிகழ்ந்த எல்லாம்
கிளர்ச்சிதரும் பலநினைவுக் குமிழி யாக
விடலரிய விருப்பினொடு சுவைப்ப தற்கு
விரிவாக எழுதியுள்ளார் வெளியி டற்கே.

24. முனைவர்கள் பலபேரைப் படைத்த தாலே
முதுமுனைவர் என்றிவரைச் சொல்ல வேண்டும்;
அனைவருமே ஒருமனமாய் அளித்து வாழ்த்தும்
'அருங்கலைக் கோன்' பட்டத்தை அடைந்த
சான்றோர்;
கனவுழைப்பால், தமிழரசால், தமிழ்வ ளர்ச்சிக்
கழகத்தால் சென்னைப்பல் கலையால் எட்டு
நினைவரிய பரிசுகளைப் பெற்ற மேலோர்;
நிகரற்ற இவர்பெருமை நிகழ்த்தப் போமோ?

25. இத்தகைய பேரறிஞர் எழுதி யுள்ள
எளியநடை இனியதமிழ்க் கிருப்பே யான
வித்தகராம் விட்டுசித்தர் விரித்துச் சொன்ன
வீறுதமிழ்ப் பெருமைதனை விளக்கும் இந்நூல்
இத்தரையில் தமிழ்வாழும் வரையில் வாழும்!
இருந்தமிழில் இதுபோலத் தமிழர்க் கெல்லாம்
சொத்தான பலநூல்கள் இயற்றி எங்கள்
சுப்புரெட்டி யார்உலகில் நீடு வாழி!

'ஏழிலைச் சூழல்'
8/35, மறைமலையடிகள்
சாலை,
புதுச்சேரி — 605 001
6-5-1987
தொ. பே. 4391

இரா. திருமுருகன்

ஸ்ரீ :

ஸ்ரீசௌமிய நாராயணாய நம :

# அணிந்துரை

[திரு. க. பத்மநாபரெட்டியார்

பெருவள நல்லூர்]

குருந்தம்ஒன் று ஒசித்தானொடும் சென் று
கூடி யாடி விழாச்செய்து
திருந்து நான்மறை யோர்இராப்பகல்
ஏத்தி வாழ்திருக் கோட்டியூர்க்
கருந்தடமுகில் வண்ண னைக்கடைக்
கொண்டு கைதொழும் பக்தர்கள்
இருந்தவூரில் இருக்கும் மானிடர்
எத்த வங்கள்செய் தார்கொலோ! [4]

—பெரியாழ்வார்

'விட்டுசித்தன் விரித்த தமிழ்' என்னும் நூலின் ஆசிரியர் பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்களைக் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் கூறு நல்லுலகமும் கிட்டத்தட்டக் கால் நூற்றாண்டு காலமாக வைணவ உலகமும் நன்கு அறியும். இவர் கற்றுத்துறை போய வித்தகர்; கணக்காயர். எழுபது அகவையைத் தாண்டி நிற்கும் இப்பெரியார் பல பட்டங்கள் பெற்றிருந்தாலும் 'உன்னுகின்ற போதெல்லாம் இன்பம் நல்கும் ஒப்பற்ற திருவாய்மொழியை இனிதேயாய்ந்து' தத்துவம் கண்டு டாக்டர் பட்டம் பெற்றது இவர் பெற்ற பட்டங்களின் மணிமுடியாகும். ஆசிரியம், இலக்கியம், சமயம், திறனாய்வு

4. பெரியாழ். திரு. 4.4;7

அறிவியல் முதலிய பல துறைகளில் எழுதிய 78 நூல்களில் 12 நூல்கள் வைணவ சமய—தத்துவங்களைப் பற்றியவை. இவற்றுள் எட்டு நூல்கட்குச் சென்னைப் பல்கலைக்கழகம், தமிழக அரசு, தமிழ் வளர்ச்சிக்கழகம் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளன. அண்மையில் (மார்ச்சு - 1987) பண்ணுருட்டி ஸ்ரீமத் ஏ. வே. வி. இராமாநுச நாவலர் சபை தமது 62-வது ஸ்ரீ வைணவ மாநாட்டில் இவர்தம் வைணவத் திருத்தொண்டினைப் பாராட்டும் முகத்தான் 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி' என்ற விருதை வழங்கிச் சிறப்பித்தமை இவர் பெற்ற பெரும்பேறாகும். திருப்பதியில் தம் முயற்சியால் தமிழ்த்துறையைத் தோற்றுவித்து நன்கு வளர்த்து ஆற்றிய பணி பொன்னெழுத்துகளால் போற்றத்தக்கது; அறிஞர் உலகத்தால் பாராட்டத்தக்கது.

இப்போது 'பெரியாழ்வார் திருமொழியை' நன்கு ஆய்ந்து பொதுவிருப்பார்வ நூலாக வழங்குகின்றார். இது பொதுமக்களுக்கு நல்விருந்து; வைணவ உலகிற்கும் பெரு விருந்து. பெரியாழ்வாரைப்பற்றி இவர் விரித்துரைக்கும் கருத்துகள் படிப்போரின் மனத்தில் பாங்குறப் படிவதற்கு இவர் வகுத்துக்கொண்ட இந்நூலின் பதினான்கு இயல்களும், சரளமான தீந்தமிழ் நடையும், கருத்துகளைத் தெளிவாக விளக்கும் போக்கும் கைகொடுத்து உதவுகின்றன.

சைவசமயத்தைச் சார்ந்த இப்பெருமகனார் பதினான்கு இயல்களாக நடைபெறும் இந்தப் பனுவலில் சமயக் காழ்ப்பின்றி பொதுநோக்கோடு உண்மையை உணர்ந்து பெரியாழ்வாரைப் பற்றிய பல கருத்துகளையும் வைணவக் கொள்கைகளின் நுட்பங்களையும் சம்பிரதாய மரபு கெடாது இயன்ற அளவு வைணவ நடை கலந்து உணர்த்தும் திறன் அனைவராலும் போற்றத் தக்கதாகும்; வைணவப் பெருமக்களாலும் பாராட்டத்தக்கதாகும். அவற்றுள் சில:

(1) பல சுருதிப் பாசுரம் ஒன்றில் வரும் 'விட்டு சித்தன் விரித்தமிழ்' (3:6:11) என்ற சொற்

றொடரையே நூலின் பெயராக இட்டு ஆசிரியர் வழங்கியமை நூலிற்குக் கவர்ச்சியுடைய பெயராக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

(2) 'ஒரு மகள் தன்னையுடையேன்' (3.8:4) என்ற பாசுரத்தில் குறிப்பிடப்பெறும் 'ஒரே மகள் யார்?' என்பதன் விளக்கம் (பக். 6) அற்புதமாகவுள்ளது. இஃது ஆண்டாளைக் குறிக்காமல் தாய்ப் பாசுரத்தில் குறிக்கப்பெறும் 'மகள்' என்று ஆசிரியர் விளக்குவது (பக். 245) பொருத்தமாக அமைந்துள்ளது.

(3) பரத்துவ நிர்ணயத்தில் 'சமய சண்டமாருதங்கள்... தருக்கப் புலிகள்' வரையுள்ள பகுதி (பக். 13, 14) வாதச் சூழ்நிலையைக் காட்டி சொற்களின் ஓசையே வாதப் பிரதிவாதம் தொடங்கிவிட்டது போன்ற உணர்ச்சியை எழுப்பி விட்டுசித்தரின் வாதத் திறனையும் அற்புதமாகக் காட்டுவர்.

(4) 'திருப்பல்லாண்டு' பதிகத்தில் செல்வத்தை விரும்புபவர்கள், கைவல்யத்தை விரும்புபவர்கள், எம்பெருமானின் அநுபவத்தைமட்டிலும் விரும்புபவர்கள் (பக். 24) என்று மூன்று அதிகாரிகளைக் காட்டி இதன் விளக்கத்தை (பக். 33) தெளிவாக எடுத்துரைப்பது இவர்தம் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

(5) 'திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தமா?' என்ற வினாவை எழுப்பி வடகலை, தென்கலை முறை அவரவர் நிலையை விளக்கி நடுவு நிலையில் நின்று ஆய்ந்து (பக். 51) 'வேயர்தங்கள் குலத்த' (5. 4: 11) என்ற பாசுரத்தில் 'கோயில் கொண்ட கோவலன்' என்ற தொடருக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் செய்துள்ளதை எடுத்துக்காட்டி 'திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் அன்று' என்று எவரும் ஒப்புக் கொள்ளும் முறையில் விளக்கியுள்ளமை இவர்தம் நியாய வாதத்தைக் காட்டுகின்றது.

(6) கண்ணனைப் 'பிள்ளைப் பெருமாள்' என்று பெயரிட்டழைப்பது புதுமையாகவும், எவரும் வியந்து, உவந்து, ஏற்றுப் போற்றுவதுமாகவும் உள்ளது (இயல். 5).

(7) பிள்ளைப் பெருமாளின் வளர்ச்சி நிலைகளைப் பல பாசுரங்களைக் கொண்டு (பக். 75 - 103) பிற்காலப் பிள்ளைத்தமிழ்க் கூறுகளைச் சுவைபட விளக்கிப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு வித்திட்டவர் விஷ்ணுசித்தரே என்று அறுதியிட்டுக் கூறுவது இவர்தம் ஆராய்ச்சித் திறனை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

(8) கண்ணபிரானைக் குறித்து இவர்தம் 'விருந்தாவனம் எங்கும் செவிகளாய்...அடியார்களின் கொள்கையாக மலர்ந்துள்ளது' (பக். 173 - 174) என்ற பகுதியிலுள்ள விளக்கத்தில் ஒவ்வொரு சொற்றொடரும் கருத்தாழமும் சுவையும் மிக்கதாக உள்ளது.

(9) பாசுரங்களில் அகப் பொருள் கலப்பு (இயல் — 12) என்ற பகுதியில் உள்ள ஆராய்ச்சி ஆசிரியரின் சொந்த சொத்து. 'அகத்திணைக் கொள்கைகள்', 'தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை' என்ற இவர்தம் நூல்களே இதற்குச் சான்றுகளாக அமைகின்றன. அகப்பொருள் நுட்பங்கள் பக்தியாகப் பரிணமிக்கும் பொழுது எவ்வளவு உயர்நிலையை அடைகின்றன என்பதை விளக்கும் பாணியே இவர்தம் தனிச்சிறப்பாக அமைகின்றது.

(10) 'பாசுரங்களில் படிமங்கள்' (இயல் — 14) என்ற பகுதி மேனாட்டுத் திறனாய்வு முறையில் அமைந்துள்ளது. இதில் ஆசிரியரின் உளவியல் அறிவு கை கொடுத்து உதவியுள்ளது. இந்த இயல் இலக்கியத் திறனாய்வாளருக்கு ஒரு நல்ல விருந்து. ஆழ்வாரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தமையே இங்ஙனம் இவரைச் செயற்படச் செய்துள்ளது என்று கருதலாம்.

இவற்றைத் தவிர வடமொழிப் பதங்களுக்குச் சரியான தமிழில் விளக்கம் கூறுதல் (பக். 20), பக்தியின் பெருமை (பக். 258 - 59), பிள்ளைகட்குத் திருநாமம் இடுதல் (பக். 259), அகத்திணை மரபுகள் (பக். 265), நாட்டுப் பாடல்களின் தாக்கம் (பக். 266) போன்ற பகுதிகளில் நல்ல விளக்கங்களைக் காண முடிகின்றது. கண்ணனின் சிறு குறும்புகள், தீரச் செயல்கள் என்ற பகுதிகள் ஆழ்வாரின் கிருஷ்ணாநுபவத்தைத் தெளிவாக விளக்கு கின்றன.

இங்ஙனம் பல்வேறு கோணங்களில் பெரியாழ்வாரையும் அவரது திருமொழிகளின் விளக்கங்களையும் காட்டி நமக்கு அரியதோர் பக்தி விருந்தாக அமைந்த இப்பனுவல் உள்ளபடியே 'விட்டுசித்தன் விரித்த தமிழே' யாகும். பெரியாழ்வாரைப் புரிந்து கொள்ள விழைவாருக்கு இஃது ஓர் திறனாய்வு விளக்கமாகும். இத்தகைய நல்லதோர் பனுவலைப் படைத்து அளித்த பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் நீலமேனி நெடியோனின் தண்ணருளால் நல்ல உடல்நலத்துடனும் மனவளத்துடனும் நோய் நொடியற்ற நீண்ட ஆயுளுடனும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து நாட்டிற்கும், தமிழுக்கும், வைணவ சமயத்திற்கும் ஸ்ரீ சடகோபன் பொன்னடியாக, அருங்கலைக் கோனாகத், திகழ்ந்து தொண்டாற்ற வேண்டுமென்று அவன் திருக்கழலிணைகளை நினைத்து வணங்கி வாழ்த்துகின்றேன்.

பெருவளநல்லூர்
(வழி) பூவாளூர்
திருச்சி மாவட்டம்
பின்கோட் 621 712
6-5-1987

க. பத்மநாபன்

## உன்னில் அடங்கியவன்

பனிக்கடலிற் பள்ளிகோளைப்
 பழகவிட்டு ஓடிவந்தென்
மனக்கடலில், வாழவல்ல
 மாயமணாள நம்பி
தனிக்கடலே! தனிச்சுடரே!
 தனியுலகே! என்றென்று
உனக்கிடமா யிருக்கவென்னை
 உனக்குரித் தாக்கினையே.[5]

— *பெரியாழ்வார்*

5. *பெரியாழ். திரு.* 5.4:9

# நூல் முகம்

வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை
மெத்தை யாக விரித்து அதன்மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காண லாங்கொல்என் றாசையி னாலே
உள்ளஞ் சோர உகந்தெதிர் விம்மி
உரோப கூபங்களாய் கண்ண நீர்கள்
துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்
சொல்லாய் யானுன்னைத் தத்துறு மாறே[6].

—பெரியாழ்வார்.

பன்னிரண்டு ஆழ்வார்களைப் பற்றியும் அவர்களின் அருளிச் செயல்கள் பற்றியும் எளிய நடையில் நூல்கள் எழுதி பொதுமக்கட்கு விருந்தளிக்க வேண்டும் என்ற பேரவா என் மனத்தைப் பல ஆண்டுகளாகவே நெருடிக் கொண்டு இருந்தது. அந்த அவா நிறைவேறும் பாங்கில் முதன் முதலாக 'விட்டுசித்தன் விரித்த தமிழ்' என்ற தலைப்பில் பெரியாழ்வார் பற்றியும் அவருடைய அருளிச் செயல்களை விளக்கும் பாங்கிலும் இது முதலாவது நூலாக வெளி வருகின்றது. இந்த நூலின் திருநாமம் அந்த ஆழ்வாரின் திருவாக்காலேயே இட்டு வழங்க நினைத்தேன். அப்படியே நூலும் அத்திருநாமத்துடன் வெளி வருகின்றது.[7]

---

6. பெரியாழ். திரு. 5. 1: 7

7. ஷெ. ஷெ. 3. 6: 11 பாசுரத்தில் வந்த சொற்றொடரே நூலின் திருநாமமாக அமைந்துள்ளதைக் காண்க.

நூல் பதினான்கு இயல்களாக அமைந்துள்ளது. முதல் இயல் ஆழ்வாரின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக உரைக்கின்றது. அதனைத் தொடர்ந்து வரும் பதின்மூன்று இயல்களும் அருளிச் செயல்களைப் பல கோணங்களில் ஆய்வன. வைணவப் பெருமக்களுக்கு இந்நூல் நல்ல விருந்தாக இருக்கும் என்று கருதுகின்றேன். பொது மக்களும் இந்த ஆழ்வாரின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டு அநுபவிப்பதற்கு இப்பனுவல் ஒரு தூண்டுகோலாக — ஏன்? ஊன்றுகோலாகவும் — அமையும் என்று நம்புகின்றேன். இந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேறினால் என்னுடைய இந்த முயற்சி பயனுள்ளதாயிற்று என்று மகிழ்வேன். தம்மையும் தமது அருளிச் செயல்களையும் அறிமுகப்படுத்திய என்னை ஆழ்வாரும் வாழ்த்தி ஆசி கூறுவார் என்றும் உறுதி கொள்கின்றேன்.

திருப்பதியிலிருந்து ஓய்வு பெற்று 1978 சனவரி 14 ஆம் நாள் சென்னையில் குடியேறியதிலிருந்து 'தேனாய் கன்னலாய் அமுதாய்'த் தித்திக்கும் ஆழ்வார் பாசுரங்களை 'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன்போது' (நான்முகன் திருவந்தாதி — 63) என்றவாறு என் காலம் கழிகின்றது. என் ஆராய்ச்சியின் போது ஆழங்கால் பட்ட பாசுரங்களை மீண்டும் மனத்தில் இருத்தி அசை போடுவதற்குப் பெற்ற வாய்ப்பின் காரணமாக இந்நூல் பிறக்கின்றது. என் அநுபவம் இப்பனுவலைப் படிப்போரிடமும் ஏற்படுத்துமானால் அதனை யான்பெற்ற பெரும் பேறாகவே கருதுவேன்.

தமிழகத்தில் சுமார் 20 ஆண்டுகளும் ஆந்திரத்தில் சுமார் 20 ஆண்டுகளும் பணியாற்றி ஓய்வு ஊதியம் கூடப் பெறாது தவிக்கும் அடியேனுக்கு ஏழுமலையான் ஓரளவு நிதி வழங்கி (நூலின் முட்டுவழியில் 50% விழுக்காடு) உதவி புரிந்திராவிடில் இந்நூல் அச்சு வாகனம் ஏறிக் கற்போர் கரங்களில் கவினுறத் தவழ்வதற்கு வாய்ப்பே இருந்திராது. 'செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்' என்று

பேருண்மையை அறிந்து செல்வச் சீமானாகத் திகழும் ஏழுமலையான் 'அகலகில்லேன் இறையும்' என்று அவன் திருமார்பை விட்டு அகலாதிருக்கும் செல்வச் சீமாட்டியைத் தாங்கிக் கொண்டிருப்பவன். இந்நிலையில் நாடோறும் எண்ணற்ற பக்தர்கள் அவனுடைய கருவூலத்தை நிரப்பி வழியச் செய்து கொண்டுள்ளனர். இந்த உறுபெருஞ் செல்வத்தை அவன் அடியார்கள் பற்றி எழுதப் பெறும் நூல்கட்கு வரையாது வழங்கும் நிதி உதவித் திட்டத்தில் இந்நூலும் நிதி உதவி பெற்று வெளி வருகின்றது. இந்த 'வேங்கடம் மேவிய விளக்கு', மேலும் நான் எழுதி வைத்திருக்கும் **'மாணிக்கவாசகர்'**, **'சடகோபன் செந்தமிழ்'**, **'ஆழ்வார்களின் ஆரா அமுது'**, **'தாயுமான அடிகள்'** ஆகிய வற்றிற்கும், எழுதிவரும் **'கீதைப் பொழிவுகட்கும்'**, எழுத நினைத்திருக்கும் **'வடலூர் வள்ளல்'**, **'பட்டினத்தடிகள்'** முதலான பக்திப்பனுவல்கட்கும் நிதி ஒளிகாட்டி அவற்றை அச்சேறச் செய்வான் என்ற நம்பிக்கை என்பால் உண்டு. இவனது கருவியாக இயங்கி வரும் தேவஸ்தானத்தாருக்கும் குறிப்பாகத் திரு K. சுப்பராவ், திரு N .S. இராமமூர்த்தி ஆகிய இருவருக்கும் என் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது.

இந்நூலைச் செவ்விய முறையில் அழகுற அச்சிட்டு உதவிய கற்பக அச்சக மேலாளர் **திரு. க. நாராயணன்** அவர்கட்கும், எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக்கட்டை தயாரித்து மூவண்ணத்தில் அச்சிடும் வரையிலும் பொறுப்பேற்று உதவிய ஓவியமன்னர் திரு. P. N. **ஆனந்தன்** அவர்கட்கும், காப்புறை (Lamination) போட்டு உதவிய மாருதி லாமினேஷன் உரிமையாளர் **திரு. பார்த்திபன்** அவர்கட்கும் இவ்வளவும் ஆனநிலையில் அழகிய முறையில் கட்டமைத்துக் கற்போர் கையில் கவினுறத் தவழச் செய்த **திருநாவுக்கரசுக்கும்** என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்த பக்திப் பனுவலுக்குச் 'சிறப்புப்பாயிர மாலை' வழங்கிச் சிறப்பித்தவர் திரு. இரா. திருமுருகன் என்பார். செந்தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகரில் கல்வித் துறையில் பணியாற்றி வரும் என் அருமை நண்பர். தமிழில் கல்வியியலில் முதுகலை, மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதப் பட்டங்கள் பெற்றவர். பிரெஞ்சு மொழியியல், புல்லாங் குழல் இத்துறைகளில் சான்றிதழ்கள் பெற்றவர். இவர் நெஞ்சினின்று தமிழ், பேச்சாக, கவிதைகளாக வெளிவரும்; இசை புல்லாங்குழல் வழியாக மூச்சாக வெளிவரும். கண்டத்தாலும் இசைத்துக் கண்டாரை ஈர்க்கும் பெற்றியர். மாணவர்கட்கென்றும் பொதுமக்கட்கென்றும், அறிஞர்க்கென்றும் 18 நூல்களைப் படைத்துத் தந்த பாவலர். தமிழ் இலக்கணம், மொழியியல், இலக்கணம், கருநாடக இசை, இடப்பெயர் ஆய்வு, நாட்டுப்புறவியல், சித்த மருத்துவம் இப்பொருள்களில் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்ட ஆய்வு அறிஞர். பல கவியரங்குகள், கருத்தரங்குகள், இசையரங்குகள் இவற்றில் பங்கு கொண்டு இசைத்தமிழையும் இயற்றமிழையும் பரப்பி வரும் பண்பாளர். இவர்தம் தொண்டினைப் பாராட்டும் வகையில் இவர் பெற்ற விருதுகள் இலக்கணச்சுடர் (1979), இயலிசைச் செம்மல் (1981), தமிழ்க் காவலர் (1985) என்பன. பல்கலைக் கழகம் பல்கலைச் செல்வராகிய இவரைப் பயன் படுத்திக் கொள்ளாதது வருந்தத் தக்கது. ஐம்பத்தெட்டு அகவையை எட்டினாலும் டாக்டர் பட்டம் பெறும் நோக்குடன் ஆய்வு செய்து வருபவர். பழகுவதற்கு இனியர். 'நவில்தொறும், நூல்நயம் போலும் பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். மாணவர்கள்பால் பேரன்பு கொள்ளும் பேராசான். இசையின்பால் ஈடுபாடு கொண்ட இவர்தம் இல்லம் 'ஏழிசைச்சூழல்' என்பது. இந்தச் சீரிய இல்லத்திற்கு பல புலவர்கள் வந்து அளவளாவுவதுண்டு. 'பாண்டிச்சேரியா? புதுச்சேரியா?' என்ற இவர்தம் ஆய்வுக்

கட்டுரை அறிஞர் உலகத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது. பாரதியும் பாரதிதாசனும் இவர்தம் குறிக்கோள் நாயகர்களாகத் திகழ்வதால் இவர் விரைந்து கவிபாடும் வேந்தரானார். ஒரு தென் புதுவைக் கவிஞர் மற்றொரு தென் புதுவைப் பட்டர் பிரான் வாழ்க்கைத் திறனை விளக்கும் பனுவலுக்கு 'சிறப்புப் பாயிரமாலை' வழங்கியது மிகப் பொருத்தமாக அமைந்து விட்டது. பட்டர்பிரான் அருளால் இவர்தம் கவிபாடுந் திறன் மேலும் வளர்ந்து பொலியும். 'சிறப்புப் பாயிரமாலை' பட்டர்பிரானின் ஆசியைப் பெற்றுக் கொண்டே திகழும் என்பதற்கு ஐயம் இல்லை. மாலை வழங்கிய மதிநலம் அமைந்த மாண்பார் நண்பருக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த பக்திப் பனுவலுக்கு அணிந்துரை நல்கிய பேரன்பர் திரு. க. பத்மநாப ரெட்டியார் அவர்கள் நான் பிறந்த திருச்சி மாவட்டம் பெருவள நல்லூரில் வாழ்ந்து வரும் ஒரு சிறந்த பாகவதோத்தமர். என்னைப் போன்றே பெற்றோருக்கு ஒரே பிள்ளை. மகப்பேறற்ற பெரிய தந்தையார் அரவணைப்பில் வாழ்ந்தவர். பெரிய தந்தையாரோ வைணவ கிரந்தங்களைக் காலட்சேபம் செய்யும் திறம்படைத்த வைணவச் செம்மல். பெரிய தந்தையாரின் வைணவச் செல்வம் பிதிராஜிதச் சொத்தாக இவர்பால் இறங்கியுள்ளதைப் பல்லாண்டுகளாக அடியேன் கவனித்து வந்தவனாதலால், இவரிடம் என் வைணவ சம்பிரதாய நூலொன்றுக்கு அணிந்துரை பெறவேண்டும் என்ற அவா சில ஆண்டுகளாகவே என் உள்ளத்தை நெருடிக்கொண்டிருந்தது. அந்த அவாவை இந்த நூல் நிறைவு செய்கின்றது.

இந்தத் திருமாலடியார் பெஞ்சு வாடகை தந்து பள்ளியிறுதித் தேர்வு முடியப் படித்திருந்தாலும் அதற்குமேல் கற்றதும் கேட்டதுமே அதிகம். இவர் தமிழின்மேல் இருந்த ஆர்வத்தால் தமிழைத் தனியாகக் கற்று வித்துவான் - புகுமுகம், வித்துவான் - முதல்நிலைத் தேர்வுகள் எழுதி வெற்றி பெற்றவர். வித்துவான் - இறுதி நிலைத்

தேர்வு பெற்றால் அலுவல் பார்க்கும் அவா வந்துவிடும் என்று பெற்றோர் அத்தேர்வு எழுதுவதற்குத் தடை விதித்தனர். பரம்பரைத் தொழிலாக உழுவித்துண்டு வாழ்வதையே வாழ்க்கையாக அமைத்து விட்டனர். ஒருவிதத்தில் இது நல்லதே; எம்பெருமான் திருவுள்ளமும் இஃதே போலும். எனினும், தமிழின்பால் இருந்த ஆர்வம் வைணவ இலக்கியத்தின்பால் திரும்பியது அந்த நாராயண னின் திருவருளே என்று கருதுவது பொருந்தும். சிறுவனாக இருந்தபோது பெரிய தந்தையாரின் காலட்சேபம் கேட்ட காரணத்தால் இவர் திருமால் அடியாரானார். இதனால் 1941 முதல் 1947 முடிய திருவரங்கத்தில் இவரும் முதுபெரும் புலவர் பெ. இராமாநுஜ ரெட்டியாரும் சேர்ந்து ஸ்ரீ உப. வே. புத்தங்கோட்டம் திரு. சீநிவாச ஆசாரிய சுவாமி களிடமும் காலட்சேபம் கேட்கும் பேறுபெற்றவர். பின்னர், தனியாகத் திருவரங்கம் — மதுராந்தகம் திரு. உப. வே. வீரராகவாசாரிய சுவாமிகளிடம் சுவாமி தேசிகனின் கிரந்தங்கள் காலட்சேபம் கேட்டு உய்ந்தவர். அடுத்து பண்டித சித. நாராயண சுவாமிகளிடம் இலக்கணப் பாடம் கேட்டு தமிழறிவை பெருக்கிக் கொண்டவர்.

பக்தியே வடிவமானவர். சத் சங்கத்திலேயே நாட்டம் கொண்டவர். பல அரங்குகளில் வைணவத்தைப் பேசி அதனைப் பரப்பி வருபவர். திருமண் காப்பு தீட்டப்பெற்ற இவர்தம் மலர்ந்த முகப் பொலிவும் வைணவ சம்பிரதாயப் பேச்சும் அப்பேச்சில் உதிரும் வைணவ தத்துவங்களும் கண்டாரை ஈர்க்கும் பான்மையவை. இவருடன் கிட்டத் தட்ட நாற்பது ஆண்டு பழக்கம் இருந்தாலும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகவே நெருங்கிப்பழகும் வாய்ப் புகள் ஏற்பட்டன. காரணம், நான் வைணவ இலக்கியத் திலும் வைணவ தத்துவத்திலும் ஈடுபட்டதே யாகும். இதனால், இவர்தம் பல அருங்குணங்கள் அடியேனைக் கவர்ந்தன. இத்தகைய பக்திச் செல்வரின் அணிந்துரை இந்நூல் பெற்றது பெரியாழ்வாரின் திருவருளேயாகும்.

இவர் ஆசியால் இந்நூல் பொதுவாகத் தமிழ்கூறு நல்லுலகிலும் சிறப்பாக வைணவப் பெருமக்களிடமும் பெருமிதத்துடன் உலவும் என்பது என் திடமான நம்பிக்கை. அணிந்துரை அருளிய அன்பருக்கு 'தலையலாது கைம்மாறிலனே'.

திரு. K. வேங்கடசாமி நாயுடு அவர்களை அறிஞருலகமும் பக்தியுலகமும் நன்கு அறியும்; பாமரரும் நன்கு அறிவர். திரு. நாயுடு அவர்கள் சிறந்த தேசியவாதி; நாட்டுப் பற்றாளர். காந்தியடிகள்வழி ஒழுகும் நற்பண்பினர். இவர் வாழ்ந்த காலத்தில் கதருடையே இவர்தம் திருமேனிக்குப் பொலிவு தரும். செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தவராயினும் எளிமை வாழ்க்கையையே விரும்புபவர்; எளிமையாகவும் வாழ்ந்தவர். சாதி, சமய, அரசியல் பற்றுக்களைக் கடந்து மனித நெறியில் வாழ்ந்து மன்பதைக்குப் பேருதவிகள் பல புரிந்தவர். சிறந்த வழக்குரைஞர், சமூகச் சீர்திருத்தவாதி, சிறந்த கல்வியாளர், நேர்மையான அரசியல்வாதி, உயர்ந்த ஆட்சியாளர், பன்மொழிகளைப் பாங்காக அறிந்த மேதை, சிறந்த வைணவ சீலர் — இவை யாவும் உருண்டு திரண்ட உயர்ந்த மனிதர், சுருங்கக் கூறினால் 'பண்புடையார் பட்டுண்டு உலகம்', 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்ற பொன்மொழிகட்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்.

அருமை இராஜாஜி அமைச்சரவையில் இடம்பெற்று அறநிலையத்துறை அமைச்சர் பொறுப்பேற்று சிறந்த முறையில் பணியாற்றியவர். திருமலை - திருப்பதி தேவஸ்தான ஆட்சிக்குழுவில் உறுப்பினராகவும், பின்னர் அக்குழுவின் தலைவராகவும் இருந்து பல்லோர் வியக்கும் வண்ணம் அற்புதமாகப் பணியாற்றியவர். இறைபணி இவர்தம் இதயத் துடிப்பாக இருந்ததால் இவர் ஆற்றிய பணி பல்லோர் மகிழும் வண்ணம் இருந்தது. பல்லாண்டுகள் சென்னை வைணவ மகாசங்கத்தின் தலைவராக இருந்து பணியாற்றியமை பொன்னெழுத்துகளால் பொறிக்கப்

பெறவேண்டியதாகும். திரு. நாயுடு அவர்களும் திரு. T.M. நாராயணசாமி பிள்ளையும் மேற்கொண்ட முயற்சியால் தான் திரு.பு.ரா. புருடோத்தம நாயுடு அவர்களைக் கொண்டு 'திருவாய்மொழி — ஈட்டின் தமிழாக்கம்' (10 தொகுதிகள்) வெளி வந்தது. இந்த இரு பெரியார் களின் ஆலோசனையை ஏற்று டாக்டர் A.L. முதலியார் (சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்) இந்தப் பெரும்பணியை — தெய்வப்பணியாக — ஏற்று பல்கலைக் கழகப் பணியாகச் செய்வித்ததை வைணவ உலகம் நன்றி யுடன் போற்றும். பச்சையப்பன் கல்லூரி அறம், சர். தியாகராாசச் செட்டி கல்வி அறம், A.R.C. கல்வி அறம் போன்ற பல அறநிறுவனங்களில் பல்லாண்டுகள் தலை வராக இருந்து ஆற்றிய கல்விப் பணிகளை எவரும் மறவார்.

திரு. நாயுடு அவர்கள் கட்டடங்கள் எழுப்புவதில் நாட்டம் உள்ளவர். இவர் பணியாற்றிய நிறுவனங்களில் எல்லாம் ஏதாவது ஒரு கட்டடம் எழும்பும். சேத்துப்பட்டி லுள்ள பச்சையப்பன் கல்லூரிக் கட்டடம், திருப்பதியில் வேங்கடேசுவரா கலைக் கல்லூரிக் கட்டடம், பதுமாவதி மகளிர்க் கல்லூரிக் கட்டடம் (இப்போது பல்கலைக் கழகத் திற்கு வழங்கப்பட்டுள்ளன) இவர் காலத்தில் எழுந்தவை. இதனால் இவர் வீட்டு வசதி கோவாப்பரேட்டிவ் நிறுவனத் தின் தலைவராகவும் நகர வீட்டுவசதி மேம்பாட்டு வாரியத் தந்தையாகவும் அதன் காவலராகவும் பணி யாற்றும் வாய்ப்பினைப் பெற்றார். இவர் காலத்தில்தான் சென்னை காந்திநகர்க் குடியிருப்பும் வேங்கடேசபுரக் குடியிருப்பும் தோன்றின. இங்ஙனம் பல்லாண்டுகள் பல துறைகளில் சீரிய பணியாற்றிய இப்பெரியாரை நடுவண் அரசு பத்மஸ்ரீ (தாமரைச் செல்வர்)என்ற விருதை அளித்துச் சிறப்பித்தது.

ஒருசமயம் திரு.பு.ரா. புருசோத்தம நாயுடு அவர்கள் இப்பெரியாருக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார். (1962 என்பதாக நினைவு). அன்று முதல் நான் இவரைச்

சந்திக்கும்போதெல்லாம் அன்புடன் 'நன்கு உள்ளீர் களா?' (தெலுங்கில் 'பாஹுன்னரா?') என்று கேட்கும் போதெல்லாம் என் உள்ளம் குளிரும். புன்முறுவல் பூத்தமுகம், கலையுணர்வுடன் நெற்றியில் தீட்டப்பெற்ற திருமண்காப்பு, அமைதியாகப் பேசும் இனிய பேச்சு இவற்றில் சொக்கியநிலை இன்றும் என் உள்ளத்தில் பசுமையாகவே உள்ளது. பார்க்கும்போதெல்லாம் என் மனத்தில் இடம் பெற்றிருக்கும் 'விட்டுசித்தன்' போல் காட்சி தருவார். இப்பெரியாரின்பால் யான் கொண்டுள்ள பெருமைக்கும் மரியாதைக்கும் அறிகுறியாக, 'விட்டுசித்தன் விரித்த தமிழ்' என்ற இந்நூலை அன்புப் படையலாக்கும் பேறு பெறுகின்றேன். இந்த மகாப் பிரசாதத்தை—சென்னை வைணவ மகாசங்க மாநாட்டில் (டிசம்பர்-1987) 100 படிகளை பாகவதர்கட்கு வழங்கி அவர்கள் ஆசியையும் பெறுகின்றேன். இந்தப் பெரியார்களின் ஆசியால் இந்நூல் தமிழ் மக்களிடம் செல்வாக்குடன் திகழ்ந்து வைணவ உணர்ச்சியை வளர்க்கும் என்ற திடமான நம்பிக்கை என்றும் என்பால் உண்டு. இவையெல்லாம் எம்பெருமான் திருவருள் என்பது என் அதிராத நம்பிக்கை.

இந்நூலை யான் எழுதி வெளியிட என் இதயத்தாமரை யில் அந்தர்யாமியாக எழுந்தருளியிருக்கும் 'திண்வரைசூழ் திருவேங்கடமாமலை என் அப்பனை' மனம் மொழி மெய்களால் வணங்கி வாழ்த்தி அடிமையாகின்றேன்.

**வீடாக்கும் பெற்றி யறியாது மெய்வருத்திக்**
**கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்—வீடாக்கும்**
**மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான்**
**விண்ணவர்க்கு**
**நற்பொருள்தான் நாரா யணன்.**[8]

—திருமழிசை யாழ்வார்

'வேங்கடம்'
AD—13 (பிளாட் 3354)
அண்ணாநகர்
சென்னை—600 040
7—5—1987

ந. சுப்புரெட்டியார்
தொ. பே : 615583

8. நான்முகன், திருவந், 13

## கண்ணனின் குழலூதல் சிறப்பு

சிறுவி ரல்கள் தடவிப்பரி மாறச்
    செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்பக்
குருவெ யர்ப்புரு வங்கூட லிப்பக்
    கோவிந்தன் குழல்கொ டூதின போது
பறவையின் கணங்கள் கூடு துறந்து
    வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
    கவிழ்ந்தி றங்கிச் செவியாட்டகில் லாவே.[9]

— *பெரியாழ்வார்*

---

9. *பெரியாழ்.* திரு. 3.6:8.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 11 | மகன் | மகள் |
| 10 | 16 | விட்டு | விட்டுச் |
| ,, | 24 | அறுதியிட்டு | அறுதியிட்டுப் |
| 12 | 18 | கேள்வியுற்று | கேள்வியுற்றுக் |
| 43 | 21 | தொணடரடிப் | தொண்டரடிப் |
| 136 | 9 | அரியதாயாகும் | அரியதாகும் |
| 141 | 15 | வந்தராக | வந்தாராக |
| 152 | 9 | வென்ன | வென்ற |
| ,, | 20 | பிழைகும் | பிழைக்கும் |
| 154 | 6 | அபாண்டவாத்திரம் | அபாண்டவத்திரம் |
| 181 | 24 | பெயர் | பெயர். |
| 226 | 9 | தானான | தாமான |
| ,, | 21 | ஆண்மாக்கள | ஆன்மாக்கள் |
| 235 | 22 | பிரமை | பிரேமம் |
| 280 | 5 | தத்துவபப்டி | தத்துவப்படி |

# உள்ளுறை


அன்புப் படையல் v
சிறப்புப் பாயிரமாலை vii
அணிந்துரை xv
நூல் முகம் xxi
1. பிறப்பும் திருத்தொண்டும் 1
2. பரத்துவ நிர்ணயம் 9
3. பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் 19
4. திருப்பல்லாண்டு—தனிப் பிரபந்தமா? 41
5. பிள்ளைப் பெருமாள் அவதாரம் 53
6. பிள்ளைப்பெருமாளின் வளர்ச்சி நிலைகள் 75
7. கண்ணன் விளைத்த சிறுகுறும்புகள் 104
8. கண்ணனின் தீரச் செயல்கள் 120
9. பிருந்தாவனத்தில் வேணுகோபாலன் 158
10. அர்ச்சாவதார அநுபவம் 175
11. அந்தர்யாமித்துவ அநுபவம் 212
12. பாசுரங்களில் அகப்பொருள் கலப்பு 226
13. சமுதாயக் கண்ணோட்டம் 250
14. பாசுரங்களில் படிமங்கள் 270


## பின்னிணைப்புகள்


1. பயன்பட்ட நூல்கள் 282
2. பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்விய தேசங்கள் 284
பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் 285

# 1. பிறப்பும் திருத்தொண்டும்

தென் தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் (இப்போது காமராசர் மாவட்டம்) ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற ஊர் வரலாற்றுச் சிறப்பும் புராணச் சிறப்பும் மிக்கது. இவ்வூருக்கு இருப்பூர்தி நிலையம் உள்ளது. இருப்பூர்தியில் செல்ல விரும்புவோர் மதுரையிலிருந்து சென்றடையலாம். தவிர, மதுரையிலிருந்து இந்த ஊருக்கு அடிக்கடிப் பேருந்து வசதியும் உண்டு. பேருந்தில் செல்வோர் இவ்வூரை விரைவில் சென்றடையலாம். இவ்வூருக்கு நான்கு பக்கங்களிலிருந்தும் சாலை வசதிகளும் பேருந்து வசதிகளும் நன்முறையில் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. வைணவர்களின் 108 திவ்விய தேசங்களில் இதுவும் ஒன்று. பெரியாழ்வாரும் ஆண்டாளும் இத்திவ்விய தேசத்தை மங்களாசாசனம் செய்துள்ளனர். இந்த இருவரும் பிறந்த ஊர் ஸ்ரீவில்லிப் புத்தூரே.

இந்த ஊருக்கு வில்லிப்புத்தூர் என்று பெயர் வரக் காரணம் என்ன? நம் சிந்தனை புராண நோக்கில் செல்லு கின்றது. இரணியாட்சன் என்பவன் ஓர் அசுரன். இவன் பூமிக்குப் பெரும் பாரமாய் இருந்துகொண்டு சாது சனங் களை நலிந்து வந்தான். அவர்கட்கு எத்தனையோ கொடுமைகளையும் தீச்செயல்களையும் புரிந்து வந்தான். இப்படிப்பட்ட கொடிய அசுரனை எம்பெருமான் வராக வடிவங்கொண்டு வதைத்தான் என்பது புராண வரலாறு. இந்தத் தலந்தான் வராக க்ஷேத்திரம் என்று வடமொழிப்

பெயரால் வழங்கப்பெறுவதாக வில்லிப்புத்தூர்த் தல புராணம் விரித்துரைக்கின்றது.

**மல்லி நாடு:** வில்லிப்புத்தூர்ப் பகுதி ஒரு காலத்தில் செண்பகக் காடாக மண்டிக் கிடந்தது. இப்பகுதியை மல்லி என்ற வேடப்பெண்ணரசி ஒருத்தி ஆண்டுவந்தாள். எனவே, வராக க்ஷேத்திரம் மல்லி நாடு என்ற மற்றொரு பெயராலும் வழங்கி வந்தது. இறைவனது சாபத்தால் இரண்டு முனிவர்கள் அவளுக்கு இரண்டு புதல்வர்களாகத் தோன்றுகின்றனர். இவர்களுள் மூத்தவன் பெயர் வில்லி; இளையவன் பெயர் கண்டன். ஒரு நாள் இளையவன் வேட்டைக்குச் சென்ற இடத்தில் ஒரு புலியால் கொல்லப் படுகின்றான். இதனால் மனம் உடைந்து வாழ்ந்த வில்லியின் கனவில் பாற்கடல் பரந்தாமன் தோன்றி "அன்பனே, நீ இந்தக் காட்டை அழித்து இதனை ஒரு நகர மாகச் செய்வாயாக; பாண்டி, சோழ நாடுகளிலுள்ள அந்தணர்களைக் குடியேற்றுக" என்று சொல்லுகின்றான். அதன்படி வில்லி 'காடு கொன்று நாடாக்கிக் குளந்தொட்ட' நகரமே வில்லிப்புத்தூர். வில்லியால் நிறுவப் பெற்றதால் ஊர் வில்லிப்புத்தூர் என்ற பெயர் ஏற்படுகின்றது. மல்லி நாட்டிலுள்ள வடவேச்வரபுரம் என்ற பழைய நகரத்தை வில்லி புதுப்பித்ததால் அந்நகரத்திற்கு 'வில்லிப்புத்தூர்' என்ற பெயர் வந்தது என்றும் சொல்லுகின்றனர். இந்த ஊர் இந்தப் பெயராலும் சுருக்கமாக 'புத்தூர்' [1] என்றும் 'புதுவை' [2] என்றும் வேறு பெயர்களாலும் வழங்குவதைப் பெரியாழ்வார், ஆண்டாள் திருமொழிகளில் அறியலாம்.

இந்தப் புதுவை நகரில் வேயர் குலத்தில் [3] முகுந்தப் பட்டர் என்ற வைதிக அந்தணர் ஒருவர்; அவர்தம் இல்லக்

1. பெரியாழ். திரு. 1.4 : 10; 3.5:11.
2. ஷை. 1.2 : 21; 1.5 : 11. நாச். திரு. 1.10; 5 : 10.
3. வேயர்—பார்ப்பனர் குலத்தில் ஒரு பிரிவினர்.

கிழத்தி பதுமவல்லியம்மை. இவர்கள் இருவருக்கும் திருக் குமாரராகப் பிறந்தவர்தான் பெரியாழ்வார். இவரைக் கருடாம்சமாக அவதரித்தவர் என்று வைணவ உலகம் கருதும். பிறந்த திருநட்சத்திரம் ஆனி—சுவாதி. சிறு வயதிலேயே விஷ்ணுவைத் தம் சித்தத்தில் கொண்டிருக்க வேண்டும் என்று கருதிய பெற்றோர் இவருக்கு விஷ்ணு சித்தர் என்ற திருநாமம் இட்டு வழங்குகின்றனர். வில்லிப் புத்தூர் வடபெருங் கோயிலுடையானுடைய காரணமற்ற கடைக்கண் பார்வையினால் எம்பெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் அமுதம் உண்கையே இவரது இயல்பாக அமைகின்றது. எம்பெருமான் திருவுளத்திற்கு எத்தகைய செயல் உகப்போ அதுவே தாம் செய்யத்தக்கது என்று உறுதிக் கொண்டிருக்கின்றார்.

எந்தக் கைங்கரியத்தை மேற்கொள்ளலாம் என்று ஆராய்ந்து பார்க்கின்றார். ஸ்ரீகிருட்டிணாவதாரத்தில் கம்சனுடைய அரண்மனையில் பணிசெய்து கொண்டிருந்த மாலாகாரர் நினைவுக்கு வருகின்றார். கண்ணன் இவர் திருமாளிகைக்கு எழுந்தருளிப் பூமாலையை இரந்து பெற்று அணிந்துகொண்ட செய்தியை அநுசந்திக்கின்றார். 'மலர் சமர்ப்பித்தலே எம்பெருமானுக்கு உகப்பு' என்று அறுதியிடுகின்றார். வேதம் ஓதுவதுடன் நந்தவன கைங்கரி யத்தையும்[4] மேற்கொண்டார். ஒரு நீர்ப்பாங்கான இடத்தில் வேலி வளைத்து அதனிடையே கிணறு, குளம் உண்டாக்கி, வெண்டாமரை, செந்தாமரை, செங்கழு நீர், நீலோற்பலம், மல்லிகை, முல்லை, மாதவி முதலான நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப் பூக்களும், திருத்துழாய் முதலியனவும் மலிந்து பொலியுமாறு மலர் வனத்தை உண்டாக்குகின்றார். இம்மலர்களைக் கொண்டு மாலை தொடுத்து வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தி

4. கிங்கரன்—வேலையாள். இவன் செய்யும் தொழில் கைங்கரியம்; அஃதாவது அடிமைத்தொழில்.

மகிழ்வார். பூமாலையைக் கட்டுவது போல் பாமாலை கட்டுவதிலும் இவரது அவா எல்லை கடந்து நிற்கின்றது. எம்பெருமானுக்குக் கொஞ்சும்தமிழால் பிள்ளைத் தமிழ் பாடித் தந்த பெருமையை இவரிடம் காண முடிகின்றது. இதனைப் பின்னர் காண்போம். கண்ணனைப் பச்சைப் பசும் குழவிப் பருவத்திலிருந்து உருவகப்படுத்தி உலகிற்கு விட்ட பெருமை இப்பெரியாருக்கே உரியது என்று கூறின் அது மிகையன்று.

**நந்தவன கைங்கரியம்:** நந்தவனத்தை நன்கு கவனித்து அங்குக் கிடைக்கும் துளசி இலைகளையும் மலர்களையும் கொய்து அவற்றைக் கொண்டு பலவிதமான பூமாலைகளைக் கட்டுவார். அவற்றை அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் வடபத்திரசாயிக்குச் (ஆலிலைப் பள்ளியானுக்குச்) சாத்தி மகிழ்வார். இதுவே அவருக்கு அன்றாட கைங்கரியமாக இருந்து வருகின்றது. இவருக்கு நந்தவன கைங்கரியமும் மலர்த்தொண்டும் ஆனந்தமாகவே இருந்து வருகின்றன. எப்பொழுதும் இவர் இறையன்பில் ஊறித் திளைத்திருப்பார். 'உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்தில் ஊறுந்தேன்'[5] அல்லவா எம்பெருமான்? அடிக்கடி இவர் சிந்தனையில் ஓடுவது: "எம்பெருமானே, இவ்வுலகிலுள்ள ஒவ்வோர் ஆன்மாவும் உனக்கு அர்ப்பணமாக வேண்டிய ஒரு மலர்தானே! உன்னுடைய வாடாத மாலையில் பொலிவு பெற்றுத் திகழவேண்டிய மலரல்லவா? ஐயோ, எத்தனை மலர்கள் வெயிலில் உலர்ந்து போகின்றன! பனியிலே கருகிப் போகின்றன! மழையிலே அடிபட்டுப் போகின்றன! இந்த மலர்கள் எல்லாம் உன்னுடைய மணமாலையை அலங்கரிக்கும் நாள் எந்நாளோ?" என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே இவர் கைங்கரியம் செய்து கொண்டிருப்பார்; பூக்கொய்து மாலை கட்டிக் கொண்டிருப்பார். இந்த எண்ணங்களில் சில பாட்டாகப் பரிணமித்துப் பாமாலையாகி விடுவதும் உண்டு.

---

5. பெரி. திரு. 4.3 : 9

ஒரு பகற் கனவு : விஷ்ணு சித்தருக்குக் கண்ணன்மீது ஈடுபாடு அதிகம். கண்ணன்மீது பக்தி செலுத்திக்கொண்டே இவருள்ளம் எத்தனையோ பகற்கனவுகளில் ஆழ்ந்து கிடக்கும். இத்தகைய கனவுகளில் இவர்தம் உள்ளத்தையே ஒரு பெண்ணாகக் கற்பனை செய்துகொள்வார். இத்தகைய உள்ளத்தில் உள் மனம் பாரமார்த்திகப் பொருள்களில் மூழ்கிப்போய் ஈசுவரனுடைய காதலி என்று தன்னை நினைத்துக்கொள்ளும். உலகப் பற்றில் ஈடுபட்டுக் கிடக்கும் புறமனமோ தாயாக அமைந்து உள்மனத்தைத் (அக மனத்தைத்) தன் அருமை மகளாகக் கருதி அதற்கு அறிவுரை கூறத் தொடங்கும்.

இந்த நிலையில் ஒரு சமயம் ஏதோ ஒரு நாடகம் நிகழ்வதுபோல் இவருக்குச் சில பக்தியநுபவங்கள் ஏற்படு கின்றன. தன் மகளின் காதலைக் கண்டு தாய் திடுக்கிடு கின்றாள். "இளம் பெண்ணானாலும் இவள் எனக்குக் குழந்தைதானே!" என நினைக்கின்றாள். "ஏ பெண்டிர் காள்! நீங்கள் எல்லாம் உங்கள் தாய்மாருக்கு அடங்கிப் போவதில்லையா?" என்று மற்ற இளம்பெண்களை நோக்கி வினவுகின்றாள். அன்னை இப்படிக் கவலைப் பட்டுக் கொண்டிருக்க, அருமை மகளுக்கோ தன் காதலனைப் பற்றிய கவலையே பெரிதாக அமைகின்றது. இல்லத்தைச் சிறைச்சாலையாகவே நினைத்திருக்கின்றாள். எனவே, "எப்படியும் சுகமாக இருந்தால் சரி. காதலனிடம் சேர்க்கப் பாருங்கள்" என்று வாய்விட்டுச் செப்புகின்றாள் அன்னை.

இந்தக் கனவு நாடகத்தில் இறுதியாக ஓர் காட்சி. அழகான ஒரு தடாகம். செந்தாமரை மலர்கள் பூத்துக் கிடக்கின்றன. ஒரு நாள் அந்த மலர்களின்மீது பனி சொரிய, இதழும் மகரந்தமும் உதிர்கின்றன. "ஆ, என்ன தண்மை! என்ன மலர்ச்சி! என்ன சிவப்பு! என்ன நறுமணம்!" என்று கண்டோர் அதிசயிக்கும்படி இருந்த அந்த ஒப்பற்ற

பொய்கை எப்படியாகிவிட்டது! அப்படி அழகழிந்து வெறித்துப்போயுள்ளது காதலியின் இல்லம். ஏன்? அவளைத்தான் அங்குக் காணவில்லையே! அன்னை மட்டிலுமே தென்படுகின்றாள். "காதலனோடு சேர்த்து வைக்காமல் தாமதம் செய்தோமே!" என்று ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றாள். "எவ்வளவு அருமையாக வளர்த் தேன்! அவளுடைய அழகு - குண நிறைவினைக் கண்டு, அவற்றைப் பிறர் புகழ்வதையும் கேட்டு, 'இவளுக்கு அன்னை என்பதால்தானே எனக்குப் பெருமை?' என்றிருந் தேனே" என்றெல்லாம் பரிதவிக்கின்றது தாயின் இதயம்.

"ஐயோ! ஒரே மகன் அல்லவா!" என்று எண்ணாத தெல்லாம் எண்ணி,

> ஒருமகள் தன்னை உடையேன்'
> உலகம் நிறைந்த புகழால்
> திருமகள் போல வளர்த்தேன்;
> செங்கண்மால் தான்கொண்டு போனான்![6]

[திருமகள்-இலக்குமி; செங்கண்மால்-திருமால்]

என்று பல படியாக உருகித் திடீரென்று கனவு நிலை (தியான நிலை) கலைந்து விழித்துக் கொள்கின்றார் விஷ்ணு சித்தர். உண்மையில் அன்னை வேறு யாரும் இல்லை; விஷ்ணு சித்தரின் புறமனமே இவ்வாறு பேசு கின்றது. அந்த 'ஒரே மகள்' யார்? பக்திப் பெருங் காதலில் ஆழ்ந்துபோன அவர் உள்மனம் தானா? அல்லது அவர்தம் மகளைக் குறித்தே இப்படி ஒரு சூசகமான கனவு கண்டாரா? இதனைப் பிறிதோர் இடத்தில் விளக்குவேன்.

**மக்கட்பேறு :** விஷ்ணு சித்தருக்கு மக்கட்பேறு ஏற்பட வில்லை; அதைப்பற்றி அவர் கவலை கொண்டதாகவும் தெரியவில்லை. ஒரு நாள் பூக் கொய்வதற்காக அதிகாலை யில் நந்தவனத்திற்கு வருகின்றார். பச்சைப்பசேலென்று

---

6. பெரியாழ், திரு. 3.3:4

துளசி செழித்துக் காடாக வளர்ந்திருக்கின்றது; இலைகள் தளதளவென்று பொங்கித் தெய்வ மணம் வீசுகின்றன. பச்சைக்கம்பளம் விரித்தால் போல் இருந்த புல்தரையைத் தாண்டி அவர் செறிந்து வளர்ந்திருக்கும் துளசிச் செடி யருகில் ஓர் இளங் குழவி தென்படுகின்றது. 'இயற்கை யழகுகளுக்கிடையே இயற்கைத் தாய் இப்படி வடிவங் கொண்டுள்ளாளோ?' என்று வியப்பெய்துகின்றார் விஷ்ணு சித்தர். 'பெரிய பிராட்டியாரே தம் செந்தாமரைக் கோயிலிலிருந்து வெளிப்பட்டு இப்படி நாம் பார்க்கும் ஒரு குழந்தை வடிவம் கொண்டாரோ?' என்ற அதிசயம் அவர் மனத்தில் ஏற்படுகின்றது.

'பாகவதர்களின் புண்ணியமும் அடியேனின் பேறும் தான் இந்த உருவமாக வந்திருக்க வேண்டும். என் சிறு குடிலுக்கு எம்பெருமான் அனுப்பிய அருளின் சோதி இது' என்று சிந்திக்கின்றார். குழந்தையை எடுக்கின்றார்; மார்போடு அணைத்துக் கொள்ளுகின்றார்; உச்சி மோக்கின்றார்; முத்தமிடுகின்றார். 'எம்பெருமானுக்கு இன்று நந்தவனத்தில் கிடைத்த தெய்வ மலர் இது!' என்று தமக்குள்தாமே சொல்லிக் கொண்டு இல்லத்தை நோக்கி விரைகின்றார். அன்று, அப்போதே, தம்முடைய பக்தி ஒரு புதிய ஒளியும் அழகும் பெற்று விட்டதாக உணர்கின் றார். விஷ்ணுசித்தர் ஆலிலைப் பள்ளியானை நோக்கி, "இந்த அற்புத மலரை உனக்கே படையலாக்குகின்றேன். உன் சித்தம் நிறைவேறுவதாகுக" என்று வேண்டிக் கொள்கின்றார். வீடு, வாசல், தோட்டம், துரவு, விளை நிலம், நந்தவனம், எல்லாவற்றையும் அவனுடைய சேவைக்கே அர்ப்பணம் செய்து தமது வாழ்வைப் பரிசுத்த மாக்கிக் கொண்ட பெரியார், தமது வைராக்கிய உள்ளத்தை அன்று கவர்ந்துவிட்ட அந்தக் குழந்தையையும் அவனுக்கே அர்ப்பணம் செய்து விடுகின்றார்.[7]

---

7. இதன் விவரம் 'ஆழ்வார்கள் ஆரா அமுது' என்ற நூலின் 'ஞானப்பூங்கொடி' என்ற கட்டுரையில் காண்க.

'அவன் கொடுத்த செல்வம்! அவனுடைய செல்வத்தை அவன் பெயரால் பராமரிப்பது அடியேனின் கடமை' என்று எண்ணிய வண்ணம் குழந்தையும் கையுமாக இல்லத்தை அடைகின்றார். அவர்தம் தேவிகள் விரஜை எதிர்கொண்டு வந்து உள்ளம் உருகிக் கோயிலிலிருந்து அவர் கொண்டு வரும் பிரசாதத்தைப் பெற்றுக் கொள்வதைப்போல் இரண்டு கைகளாலும் பெற்றுக் கொள்கின்றாள். விரஜை குழந்தையை அணைத்துக் கொண்டே போய்த் தொட்டிலிடுகின்றாள். குழந்தை கிடைத்த விதத்தைக் கணவர் சொல்லச் சொல்ல அவளுடைய பக்தியும் அதிகரிக் கின்றது. அந்தத் தெய்வக் குழந்தையின் அழகை அள்ளி அள்ளிப் பருகுகின்றதை 'பிள்ளைக் கலிதீர்க்க இந்தப் பெண் கனியைப் பெருமாளே நமக்கு அளித்துள்ளார்!' என்று எண்ணி எண்ணி அந்தக் குழந்தையை நோக்க நோக்க அவள் உள்ளத்தில் உவகை புதிதுபுதிதாகப் பொங்கி வழிகின்றது. விஷ்ணு சித்தரும் 'நாம் உய்யும் பொருட்டே இந்த அற்புதக் குழந்தையை எம்பெருமான் நமக்கு அளித் துள்ளான்!' என்று ஆனந்த பரவசராகின்றார். இருவரும் அந்தக் குழந்தைக்குக் கோதை என்று திருநாமம் சூட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருகின்றனர். ஆழ்வாரும் மலர்த் தொண்டைத் தொடர்ந்து செய்து வருகின்றார்.

விஷ்ணு சித்தர் எண்பத்தைந்து திருநட்சத்திரங்கள் வாழ்ந்தவர் என்று குருபரம்பரைகளால் அறிய முடிகின்றது. இவர் பரமபதித்தது ஸ்ரீவில்லிபுத்தூரில்.

## 2. பரத்துவ நிர்ணயம்

விஷ்ணுசித்தர் வில்லிபுத்தூரில் வாழ்ந்த காலத்தில் (8ஆம் நூற்றாண்டு) மதுரையை ஆண்ட அரசன் ஸ்ரீவல்லப தேவன் என்பதாக வைணவ ஆசாரியர்கள் குறிப்பிடு கின்றனர். இந்த அரசனை நெடுமாறன் என்று குறிப்பிடுவர் விஷ்ணுசித்தர். இந்தப் பாண்டியனைப் பராந்தகன் — நெடுஞ்சடையனின் தந்தையாகிய **மாறவர்மன்** என்று கருதுவர் பேராசிரியர் மு. இராகவ அய்யங்கார் அவர்கள். இவன் காலத்தில் மதுரைக்கு விஷ்ணுசித்தரின் பாமாலை கிடைத்தது. இந்தப் பாமாலை பிறந்த இடம்தான் 'திருக் கூடல்' என வழங்கும் தென்மதுரையாகும். இந்தப் பாமாலைதான் **திருப்பல்லாண்டு** என்ற பிரபந்தம். இது நாதமுனிவர் அடைவுபடுத்திய நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில் முதலாயிரத்தில் முதலாவதாக அமைந்துள்ளது. திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் அன்று; அது பெரியாழ்வார் திருமொழியில் அடங்கியதே என்று நிலை நாட்டுவோரும் உளர்.[1] இதனை அடுத்த (3-வது) கட்டுரையின் இறுதியில் எடுத்துக் காட்டுவேன்.

**திருப்பல்லாண்டு** என்ற பாமாலை **கூடலழகர்[2] விஷய**

1. வேதாந்த தேசிகர்; பிரபந்த சாரம்-1, 9. பெரிய வாச்சான் பிள்ளையும் இக்கொள்கையினர்.

2. கூடலழகர் கோயில் மங்கம்மாள் சத்திரத்திற்குத் தென் திசையில் டி. வி. எஸ். தொழிற்சாலைக்குக் கிழக்கில் உள்ளது.

மாக ஏற்பட்டதாகப் பெரியோர் பணிப்பர். இதுதான் வரலாறு; மதுரை மாநகரில் ஸ்ரீர்வல்லபனின் ஆட்சி மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அவன் பல இரவுகளில் மாறுவேடம் பூண்டு நகர் சோதனை செய்து குடிமக்களின் சுக துக்கங்களை நேரில் அறிந்து வருகின்றான். அவர் களுடைய தேவைகளைத் தெரிந்து அவற்றை வழங்க வேண்டும் என்று சிந்திக்கின்றான். வழக்கமாக இங்ஙனம் சுற்றி வந்து கொண்டிருந்தபொழுது ஓர் இரவு அவன் ஒரு தெருத் திண்ணையில் யாரோ ஒருவன் உறங்கிக் கொண் டிருப்பதைக் காண்கின்றான். அவனை ஐயுற்று எழுப்பி, 'தாங்கள் யார்? தங்கள் இருப்பிடம் யாது? இங்கே ஏன் இப்படிக் கிடக்கின்றீர்கள்? உங்கள் நோக்கம் தான் என்ன?'' என்று கேட்கின்றான். அதற்கு அவன், ''ஐயா, நான் ஓர் திருத்தலப்பயணி. கங்கையாடித் திரும்புகின்றேன். ஸ்ரீவல்லபர் நல்லாட்சியில் மதுரை அடைந்திருக்கும் சிறப்பை யும் அழகையும் பார்த்து விட்டு குமரியாடப் போகின்றேன்; சேதுவையும் தரிசிக்க வேண்டும் என்பது என் திட்டம்'' என்று மறுமொழி பகர்கின்றான்.

அன்றோ முழு மதியம் காயும் இரவு. சந்திரன் தலைக்கு நேரே உச்சியில் வந்திருந்த சமயம். நிலவொளியில் திருத் தலப் பயணியின் முகப் பொலிவைக் கண்ணுறுகின்றான் அரசன்; அதனால் மிகவும் கவரப்பெறுகின்றான். 'இவன் திருத்தலப் பயணத்துடன் சாத்திரப் பயணமும் செய் திருப்பவன்' என்று அறுதியிட்டு ''பெரியீர் ஆன்ம வாழ்க்கைப் பயணத்திற்கு வழி கண்டிருப்பின், அதனை அடியேனுக்குக் காட்டியருள வேண்டும்'' என்று கேட் கின்றான் மாறுவேடத்துடன் வந்திருந்த மதுரை மன்னன்.

அந்தத் திருத்தலப் பயணி மனமுவந்து வடமொழிச் சுலோகம் ஒன்றினைக் கூறுகின்றான். அதன் பொருள்: ''இரவில் வேண்டிய உணவு முதலியவற்றைப் பகலில் தேடிக்

கொள்ளுகின்றனர். மழைக் காலங்களில் தேவையான வற்றை மற்றை எட்டுத் திங்களில் தேடி வைத்துக் கொள்ளு கின்றனர். முதுமையில் தேவையானவற்றை இளமையில் முயற்சி செய்கின்றனர். ஆனால் இப்படிப்பட்ட விவேகிகள் மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையில் தேட முயல வேண்டாவோ?'' என்கின்றான். தானும் இப்போது அந்த வழியைத்தான் நாடிச் செல்லுவதாக உரைக்கின்றான்.

மாறுவேடம் பூண்டு வந்த மன்னன் மனத்தில் திருத் தலப் பயணி சொன்ன செய்தி ஆழப் பதிந்து விடுகின்றது. அவன் நகர் சோதனையை முடித்துக் கொண்டு திருத்தலப் பயணியை அரண்மனைக்கு அழைத்துச் சென்று நல்விருந் தோம்பி, 'இதைத் தாங்கள் விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்ளலாம்' என்று வேண்டிய பொருளுதவி செய் கின்றான். அதிகாலையில் அந்தப் பயணி சேது தரிசனம் செய்து கொள்வதற்காக விடை பெறுகின்றான்.

மறுநாள் அரசவை கூடுகின்றது. சிற்றரசர்களும் சேனைத் தலைவர்களும் வணங்கி நிற்கின்றனர். வைதிகர் களும் முத்தமிழ்ப் புலவர்களும் ஆசி கூறுகின்றனர். அழகிய பெண்கள் இருபுறமும் நின்றவண்ணம் சாமரை வீசு கின்றனர். பாண்டிய மன்னன் முத்துப் பந்தரின் கீழ் இரத்தினம் இழைக்கப் பெற்ற சீரிய தங்கச் சிங்காதனத்தில், மார்பில் முத்தாரம் மின்ன தாரகை நடுவண் காட்சி தரும் முழு மதியம்போல் கொலு வீற்றிருந்து அரச காரியங்களை வழக்கம்போல் கவனிக்கின்றான். எனினும் முதல் நாள் இரவில் நடந்த நிகழ்ச்சி மீண்டும் மீண்டும் அவன் உள்ளத்தில் தோன்றிச் சிந்தனையில் ஆழ்த்துவதால் அவன் முகத்தில் பொலிவு காணப்பெறவில்லை. "நமது மன்னர் பெருமானுக்கும் ஏதோ மனக்குறை இருக்கும்போல் தோன்றுகின்றதே, என்றும் இருக்கும் முகத்தின் களை தென்படவில்லையே'' என்று வியப்பும் விசனமும் கலந்த பாவனையில் காணப்பட்டனர் அமைச்சர்கள்.

இந்நிலையில் வேத ஆகம இதிகாச புராணங்களில் வல்லுநரான செல்வநம்பி என்னும் அரச புரோகிதர் மன்னனுடன் கலந்துரையாடி அவன் மனக்குறையை அறிந்து கொள்ளுகின்றனர். "தத்துவ ஞானியான பரம பாகவதோத்தமர் ஒருவரை ஞான குருவாகக் கொண்டு ஒழுகுவதுதான் இம்மையிலே மறுமைக்கும் உரிய செல்வத்தைத் தேடிக் கொள்ளும் வழி" என்று யோசனை கூறுகின்றார். வாழ்க்கையில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு குறிக்கோள் பொருளையும் (புருஷார்த் தங்கள்) அளிக்க வல்ல பரதத்துவத்தை அறுதியிடும் வழியை ஆராய்கின்றனர். இறுதியில் பொன்னும் மணியு மாக அளவற்ற பொருளை ஒரு சீலையில் முடிந்துக் கட்டி அந்தப் பொற்கிழியை அரசவையின் தோரண வாயிலில் தொங்க விடுகின்றனர். சாரமான சமய உண்மையைச் சுருதி, சுமிருதி, ஆகமம், யுக்தி முதலிய பிரமாணங்களால் மெய்ப்பிக்கும் பெரியோருக்கு அக் கிழி உரியது என்று பறை யறைவித்து நாடெங்கும் அறிவிக்கின்றனர்.

இந்த அறிக்கையைக் கேள்வியுற்று குறிப்பிட்ட நாளில் வேத வேதாங்க வேதாந்தங்களில் வல்லவர்களான வித்துவான்களும், சமண பௌத்தம் முதலான புறச் சமயங் களைச் சார்ந்த பண்டிதமணிகளும், அளவை நூல் (தர்க்கம்) வல்லுநர்களும், பல்வேறு கலைகளில் பயிற்சி யுள்ளவர்களும், ஆத்திகர்களும், நாத்திகர்களும் மதுரையில் திரள்கின்றனர். பணத்தில் பற்றற்றவர்களும் வாதப் பிரதி வாதங்களில் ஆசை கொண்டு வருகின்றனர். அரசனும் அமைச்சர்களும் நாடு முழுவதும் திரண்டு வந்துள்ள விருந்தினர்களைக் கவனிப்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். பொதுமக்களும் இந்தப் பரத்துவ நிர்ணயத்தைக் காண ஆசைப்பட்டு வந்து கூடுகின்றனர். செல்வநம்பி மட்டிலும் "அவர் வருவாரோ, வரமாட்டாரோ?" என்ற ஐயத்துடன் ஸ்ரீவில்லிபுத்தூரைத் திசை நோக்கித் தொழுத வண்ணம் துடித்துக் கொண்டு இருக்கின்றார்.

குறிப்பிட்ட நேரமும் வருகின்றது. உண்மை காண வேண்டும் என்ற ஆவலுடன் அரசன் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருக்கின்றான். அவனுக்கு அருகில் செல்வநம்பி முதலிய வேத விற்பன்னர்களும், அமைச்சர் பெருமக்களும் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். சமய வாதிகள் ''என் சமயம் உயர்ந்தது; உன் சமயம் தாழ்ந்தது'' என்று வாதப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர். நூலறிவு மட்டும் பெற்று நுண்ணறிவில்லாத 'கற்றுத் துறைபோய' வித்தகர்கள் ''அந்த நூல் மேலானது; இந்த நூல் மேலானது'' என்று தம் தொண்டை கிழிய விவகரிக்கின்றனர். நுண்ணறிவும் அறிவுக் கூர்மையும் உள்ள புலவர் மணிகள் எதிர்வாதங்களைக் குத்திக் கிழித்தெறிகின்றனர். அளவை நூல் வல்லார்கள் எதிரிகளை மடக்கித் தலை குனிய வைக்கின்றனர். சில வித்துவ சிரோமணிகள் யுக்தி வாதங்களாலும் தம் அநுபவத்தையொட்டிய வாதங்களாலும் வேத சாத்திரங்களையே அடித்துத் தள்ளுகின்றனர். சில அறிஞர்கள் வாழ்வின் நிலையாமையை வற்புறுத்துகின்றனர். நாத்திகர்கள் ''கண்டதே காட்சி; கொண்டதே கோலம்; இம்மையில் துய்ப்பதுதான் இன்பம்! மறுமையென்பது வீண் கனவு — குருமார்களின் சூழ்ச்சி'' என்று தூசு கிளம்பப் பேசுகின்றனர். அரசன் களைப்புற்றவனாய்ப் பெருமூச்சு விடுகின்றான். செல்வநம்பியோ 'ஐயோ! இன்னும் விஷ்ணுசித்தர் வரவில்லையே!' என்று ஏங்குகின்றார்.

இதற்கு முந்திய நாள் இரவு வில்லிபுத்தூர் எம்பெருமான் விஷ்ணுசித்தரின் கனவில் தோன்றி ''விஷ்ணுசித்தரே, மதுரை சென்று பரத்துவத்தை நிலை நிறுத்திப் பொற்கிழியை அறுத்து வாரும்'' எனப் பணிக்கின்றான். விஷ்ணுசித்தரும் எம்பெருமான்மீது பாரத்தைப் போட்டுப் பாண்டியன் அனுப்பிய பல்லக்கில் மதுரைக்கு எழுந்தருள்கின்றார். முன்னரே தொடங்கிய ''சமயசண்டமாருதங்கள், தருக்கக் குடாரங்கள், ஆபாச நிரசனங்கள்,

கண்டன கண்டனங்கள், வயிரக் குப்பாயங்கள், வாதச் சூறாவளிகள்'' இவற்றால் தூளிகளை எழுப்பி அறிவைச் சூறையாடிக் கொண்டிருந்த ''வாதீப சிங்கங்கள், பரசமய கோளரிகள், தருக்கப் புலிகள்'' 'விஷ்ணுச்சித்தர் வருகின்றார்! வில்லிபுத்தூரார் வருகின்றார்!' என்ற ஒலியைக் கேட்கின்றனர். மதவெறியர்களின் உறுமல் களும், தார்க்கிகர்களின் கர்ச்சனைகளும், சூனியவாதிகளின் கனைப்புகளும் தாமாகவே அடங்கி விடுகின்றன. ஒரே அமைதி நிலவுகின்றது அவையில். சாந்தமான திருமுக மண்டலம், பன்னிரு திருமண்காப்புப் பொலியும் செம்மேனி இவை கண்டவர்களையெல்லாம் வசீகரிக்கின்றன. அதிசய மான தேசையும், பொலிவையும் காண்பவர்கள் யாவரும் அந்தக் கணமே கனிந்த கைகூப்புடன் அஞ்சலி செய் கின்றனர்; வழியமைத்துத் தருகின்றனர். சாந்தம் நிலவும் அவருடைய திருமுகமண்டலத்தைக் கண்டதும் அரசனும் தன் சீரிய சிங்காதனத்திலிருந்து எழுந்து அவருடைய அடிகளில் தம் முடிபட வீழ்ந்து வணங்குகின்றான். உள்ளத்தைத் துருவிப் பார்த்து நினைவுகளையெல்லாம் உணர்ந்து கொண்டதுபோல், அன்பும் இரக்கமும் நிறைந்த அவருடைய கண்கள் அரசனைக் குளிரக் கடாட்சிக்கின்றன. அந்தப் பெரியவரை அரசனும் புரோகிதரும் வணங்கி சிங்காதனத்தில் அமரச் செய்து அருகில் பயபக்தியுடன் நின்று கொண்டிருக்கின்றனர்.

வாதத்தில் கலந்து கொள்ள வந்த புலவர்களிடையே பொறாமைக் காய்ச்சல் அதிகமாகின்றது. 'அழுக்காறு உடையாருக்கு அதுவே சாலும்'[3] என்ற வள்ளுவர் வாக்கை அறிந்திருக்கும் புலவர்களின் பரம்பரைச் சொத்தாக அழுக்காறு இறங்கி வருவதை இன்றும் காண்கின்றோ மல்லவா? ''இவர் எங்களைப்போல் வேதம் முதலிய அளவிறந்த சாத்திரப் பயிற்சி பெற்று அதில் தேர்ந்தவரா?''

---

3. குறள்—165 (அழுக்காறாமை)

என்று முணுமுணுக்கினர் வேதவிற்பன்னர்கள். இவர்கள் ''இவருக்கு வேதங்களில் சிறப்பான பயிற்சி இல்லை'' என்கின்றனர். ''வேதம் தெரிந்தாலும் இவர் ஆகமம் நன்றாய் அறிவாரா?'' என்கின்றனர் ஆகமவாதிகள். 'வேதங்களில் ஞானம் இருப்பினும், அளவை நூல் (தர்க்கம்) அல்லவா சமய ஞானத்திற்கு உயிர்' என்கின்றனர் தருக்க வாதிகள். யோகியர் 'இவர் பக்தர்தானே!' என்கின்றனர். 'சமய ஞானமே அஞ்ஞானம்தான்; பக்தி முழுவதும் மூடபக்திதான்!' என்று நக்கலுடன் பரிகசிக்கின்றனர் நாத்திகர்கள். இந்தக் கூச்சல்கட்கிடையே அரசன் செல்வ நம்பியை நோக்கி ''இனி நாம் செய்ய வேண்டியதென்ன?'' என்று சாடையாகக் கேட்கின்றான். நம்பியும் ''கவலை வேண்டா; இவர்களை வெற்றி கொள்வார்!'' என்று குறிப்பாகப் பதிலிறுக்கின்றார்.

எல்லோருடைய வாதங்களும் ஒருவாறு முடிந்தபின்னர் விஷ்ணுசித்தர் தம் வாதத்தைத் தொடங்குகின்றார். சமய வாதிகள் விடுத்த வினாக்கட்கெல்லாம் அமைதியாக மறுமொழி பகர்கின்றார். அவர்களுடைய பொறாமையைப் பொறுமையினாலும், பகைமை உணர்ச்சியை அன்புணர்ச்சியாலும் வெல்கின்றார். தீய எண்ணங்களை நல்லெண்ணங்களாலும், அறியாமையை அறிவினாலும், வீண்பெருமையைப் பணிவினாலும் வென்று வாகை சூடுகின்றார். முரட்டுத்தனமான இதயங்களை இரக்கப் பாங்கான இதயத்தாலும் நம்பிக்கையினாலும் வென்று வெற்றிமாலை சூடுகின்றார்.

காரணமில்லாத காரியமே இல்லை என்று அளவியல் முறையில் நிலை நாட்டி இவ்வுலகின் காரணப்பொருளே கடவுள் என்று அறுதியிடுகின்றார். ''எந்த ஒரு பொருளால் எல்லாப் பொருள்களும் உண்டாகின்றனவோ, எந்த ஒரு பொருளால் எல்லாப் பொருள்களும் நிறைவு பெறுகின்றனவோ, எந்த ஒரு பொருளில் எல்லாப் பொருள்களும் இறுதியில் சேர்ந்து விடுகின்றனவோ அந்தப் பரம்பொருளே

தியானத்திற்கு உரிய இறைவன்'' என்றார். அந்தப் பரம் பொருளே நாராயணன்என்றும், அவனைச் சரணமடைவதே வீடுபேறு அடைவதற்குரிய வழியென்றும் விரிவாக விளக்கு கின்றார். விஷ்ணுவின் அவதார மூர்த்திகளும் வழிபடுவதற்கு உரியவை என்றும் எடுத்துக்காட்டுகின்றார். கண்ணன் வழி பாடு சிறந்தது என்று விளக்குகின்றார். எம்பெருமானை நோக்கி வழிபடுவதும் அவனுடைய ஆயிரம் நாமங்களை நாவினால் நவிற்றுவதும் பக்திப் பெருநெறியில் எளிதாகக் கொண்டுசேர்க்கும் என்றும், அந்தப்பக்தி நெறியே முத்தியில் கொண்டு சேர்க்கும் பெருநெறி என்றும் மெய்ப்பிக்கின்றார். கமலைக் கேள்வனுடைய கருணையைக் கனக்க நம்பியிருந்த அவருக்குச் சாத்திர உண்மைகள் யாவும் அங்கை நெல்லி யாகத் தெளிவாகின்றன. அவனுடைய திருவருளால் இதர சமயக் கொள்கையெல்லாம் சுருதி, சுமிருதி, இதிகாசம், புராணங்களின் துணையாலும் தமது யுக்தியாலும் மறுத்துத் தமது கொள்கையினை இன்னதென அறுதியிட்டு உணர்த்து கின்றார்.

விஷ்ணுசித்தர் சொன்னவற்றையெல்லாம் அரசன் மிக உன்னிப்பாகக் கேட்கின்றான். சாந்த சொரூபமான அந்த முகத்தைப் பார்த்துக் கொண்டே அந்தச் சொற்களைச் செவிமடுப்பது 'காதில் தேன் வந்து பாய்ந்தது' போல் இருக்கின்றது. விஷ்ணுசித்தர் அரசனை நேராகப் பார்க்கும் பொழுதெல்லாம் அவன் அவரது கண்களால் ஈர்க்கப் படுகின்றான்; அவரையே நோக்கிய வண்ணம் இருக் கின்றான். இரண்டொரு சமயங்களில் அவர் அரசனுடைய முகத்தை நேராகப் பார்த்துப் பேசும் சந்தர்ப்பங்களும் இருந்தன. அப்போது அந்த ஆச்சரியமான திருக்கண் களின் சக்தியை அவனால் தாங்க முடியவில்லை; தலை குனிந்த வண்ணம் அவரது திருவடிகளையே நோக்கிய வண்ணம் கேட்டுக் கொண்டிருக்கும் நிலை ஏற்படுகின்றது. இறுதியாக அவன் நிமிர்ந்து நோக்கியபோது, அவர் தோரணவாயிலை நோக்கிக் கைகளை நீட்டிக் கொண்டு

"எல்லா வேதப் பொருள்களும் வேதாந்தத்தில் அடங்கி, அந்த வேதாந்தம் பரம்பாகவதர்களுடைய ஞான பக்தியில் அடங்கியுள்ளது. ஞானபக்தியே இம்மைக்கும் மறுமைக்கும் உறுபெருஞ் செல்வம்" என்று சொல்லி முடிக்கின்றார். அப்போது அந்த வாசலில் கிழியாகக் கட்டியிருந்த பொருள் அப்படியே அவரை நோக்கி வளைந்ததைக் கண்ணுறு கின்றான் பாண்டியன். உடனே எழுந்து அந்தக் கிழியை அறுத்து அவரது திருவடிகளில் வைத்து வணங்குகின்றான். அப்பால் அங்குக் குழுமியிருந்த பாவலரும் நாவலரும், வேத விற்பன்னர்களும் ஆகமப் புலவர்களும் தமது கல்விச் செருக்கை மறந்து விஷ்ணுசித்தரின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றனர்.

இந்த வரலாற்றைப் பிற்கால ஆசிரியர்களில் ஒருவரான பாண்டிய பட்டர் என்பார்,

பாண்டியன் கொண்டாடப்
    பட்டர்பிரான் வந்தானென்(று)
ஈண்டிய சங்கம்
    எடுத்தூத — வேண்டிய
வேதங்கள் ஓதி
    விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய
    பற்று.[4]

[ஈண்டிய-திரண்ட; சங்கம்-சங்கு; பற்று-புகலிடம்; யாமுடைய பற்று-நம்முடைய புகலிடம்.]

என்று குறிப்பிடுவர். இந்த ஆசிரியரே இன்னொரு வெண்பாவினால் விஷ்ணுசித்தர் கிழியறுத்த வரலாற்றை வைணவர்களின் நினைவில் நிலை பெறச் செய்துள்ளார்.

---

4. திருப்பல்லாண்டு—தனியன்.

மின்னார் தடமதில்சூழ்
வில்லிபுத்தூர் என்றொருகால்
சொன்னார் கழற்கமலம்
சூடினோம்;—முன்னாள
கிழியறுத்தான் என்றுரைத்தோம்
கீழ்மையினால் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே!
வந்து.[5]

*[மின்ஆர்-ஒளி நிறைந்த; தடமதில்-அகன்றமதில்; ஒரு கால்-ஒரு தரம்; கழல் கமலம்-அடித்தாமரை; சூடினோம்-தலைமேல் கொண்டோம்.]*

பாண்டியபட்டர் சொல்லுகிறபடியே இந்த வரலாறு பல நூற்றாண்டுகளாக வைணவப் பெருமக்களுக்குக் கீழான நெறியை அகற்றி மேலான நெறியைக் காட்டி வந்துள்ளது.

5. ஷை. ஷை.

# 3. பல்லாண்டு பாடிய பட்டர்பிரான்

விஷ்ணுசித்தரின் பரத்துவ நிர்ணயம் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. பாண்டிய மன்னன் தன் அமைச்சர்களையும் அரச புரோகிதர் செல்வ நம்பியையும் கலந்து யோசித்து விஷ்ணுசித்தரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஒரு பெரு விழா எடுக்கின்றான். மதுரை மாநகர் முழுவதும் விழாக் கோலம் கொள்ளுகின்றது. அரசன் அரண்மனையில் கற்றவர்களின் அவையைக் கூட்டி, கற்றவர்கள் அனைவர்க்கும் தலைவராய்த் திகழும் விஷ்ணுசித்தருக்குப் பட்டர்பிரான் என்ற விருதை அளித்துப் பாராட்டுகின்றான். கற்றவர்கள் இதனை ஆதரித்துக் கையொலி எழுப்புகின்றனர்.

பின்னர் விஷ்ணுசித்தரைப் பட்டத்து யானையின்மீது ஏற்றி நகர்வலம் செய்விக்கின்றான். மதுரை மக்களுக்கு அந்த நாள் ஒரு பெரு விழாவாக அமைகின்றது. வீடுகளிலும், வாசல்களிலும், தெருக்களிலும் திரண்ட மக்கள் 'விஷ்ணுசித்தர் வாழ்க!' என்ற வாழ்த்தொலியை எழுப்புகின்றனர். ஊர்வலத்தில் திருச்சின்னமும் சங்கமும் கம்பீரமாக ஒலிகளை எழுப்புகின்றன. மங்கல வாத்தியங்கள் அதிர்கின்றன. வெண் கொற்றக்குடை நிழற்ற, இருமருங்கும் கவரிகள் வீச, யானைமீது இவர்ந்து வரும் விஷ்ணுசித்தர் நகர்வலம் வரும்போது வித்துவான்கள் கட்டியம் கூறுகின்றனர். மக்கள் திரள்களிடமிருந்து

வேதப் பயன் கொள்ளவல்ல விஷ்ணு சித்தர் வந்தார்!
வில்லிபுத்தூர் வேதக்கோன் வந்தார்!
விஷ்ணுசித்தர் வாழ்க!
பட்டர்பிரான் வாழ்க!

என்ற வாழ்த்தொலிகள் விண்ணை முட்டிய வண்ணம் உலா புறப்படுகின்றது.

ஆகாய வீதிகளிலும் தேவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து வாழ்த்துகின்றனர். இந்திரன், நான்முகன், சிவபெருமான் முதலியோரும் அந்தக் கூட்டத்தில் காட்சி அளிக்கின்றனர். அந்தக் கூட்டத்தினிடையே ஆயிரம் சூரியர்கள் ஒரே காலத்தில் கூடியிருப்பதுபோல் ஒரு பெருஞ் சோதி சுடர் விட்டுத் தோன்றுகின்றது. மகனுடைய விழாவைக் காண வரும் பெற்றோர்போல பரமபதநாதன் பிராட்டிமாருடன் பெரிய திருவடிமீது திருவாழி திருச் சங்குடன் தோன்றியதே அச்சோதி வெள்ளத்திற்குக் காரணமாகும். இந்த அருள் வெள்ளத்தைச் சேவித்ததும் விஷ்ணுசித்தரின் பரமபக்தி பாட்டாக வெளிப்படுகின்றது. அந்தத் தேவாதி தேவனுடைய சர்வ சக்தத்துவம் முதலிய திருக்குணங்களை அநுசந்திப்பதற்கு முன்னே சௌந்தரியம் (அழகு), சௌகுமார்யம் (இளமை), சௌலப்பியம் (எளிதாகப் பழகுதல்), சௌசீல்யம் (புரையறக் கலத்தல்) முதலிய திருக்குணங்களில் கண் செலுத்தி அவற்றையே சேவித்து ஈடுபட்டு ஆழ்ந்து பக்திப் பரவசராகின்றார் விஷ்ணுசித்தர்.

இதனால் தம்முடைய நிலையையும் எம்பெருமானுடைய நிலையையும் மறந்து, "காலம் நடையாடாத பரமபதத்திலிருக்கும் எம்பெருமானின் சேர்த்தியழகு (லாவண்யம்) காலமும் அசுர சக்திகளும் நடையாடுகின்ற இருள் தருமா இவ்வுலகில் வந்து நிற்கின்றதே. பாவிகளின் கண்ணெச்சில் பட்டு எம்பெருமானுக்கு என்ன தீங்கு

வருமோ?'' என்று அஞ்சியவர்போல் யானைக் கழுத்தின் மேல் கிடக்கும் மணியையே கைத்தாளமாகக் கொண்டு பல்லாண்டு பாடத் தொடங்குகின்றார்.

**பல்லாண்டு பல்லாண்டு**
**பல்லா யிரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**

என்று ஆனந்தக் கண்ணீர் அருவி சோரப் பாடல் வெளிப் படுகின்றது. 'பல்லாண்டு' என்று ஒரு தடவை சொன்னால் போதாதா? 'பல்லாண்டு, பல்லாண்டு' என்று இரு தடவையும் 'பல கோடி நூறாயிரம், பல்லாண்டு' என்றும் ஆசை தீரப் பாடுகின்றார் — தாகவிடாய் உள்ளவன் 'தண்ணீர், தண்ணீர்' என்று கூறுவது போலே. அதிக அச்சத்தால் இங்ஙனம் மங்களாசாசனம் பண்ணுகின்றார் என்பதை யறிந்த எம்பெருமான், திண்மை வாய்ந்த தன் தோள்களைக் காட்டியருள்கின்றான். அச்சந் தீரக் காட்டிய தோள் அழகு ஆழ்வாரின் அச்சம் அதிகரிக்கவே காரணம் ஆகின்றது. ஆகவே, மீண்டும் மங்களாசாசனம் செய்து பல்லாண்டு பாடுகின்றார்.

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு**
**பலகோடி நூறாயிரம்**
**மல்லாண்ட திண்டோள் மணிவண்ணாஉன்**
**சேவடி செவ்வி திருக்காப்பு**

[செவ்வி - அழகு; திருக்காப்பு - குறைவற்ற காவல் ஏற்படுவதாகும்.]

என்பதாக. 'உன் சேவடி செவ்வி திருக்காப்பு' என்று திருவடிக்கு மாத்திரம் மங்களாசாசனம் இருந்தாலும் இது திருமேனி முழுமைக்கும் மங்களாசாசனம் பண்ணின தாகும். சேஷபூதனுக்குத் திருவடியே உத்தேச்யம் என்பதைக் காட்டவே 'சேவடி செவ்வி திருக்காப்பு' என்கின்றார். இந்த மங்களாசாசனப் பதிகத்தில் பன்னி

ரண்டு பாசுரங்கள் உள்ளன. 'பல்லாண்டு, பல்லாண்டு' என்று தொடங்கும் முதற் பாசுரத்தைப் பல்லவிபோல் ஒவ்வொரு பாசுரத்தோடும் சேர்த்துப் பாடுகின்றனர்.

இரண்டாவது பாசுரத்தில் ஆழங்கால் படுவோம்.

**அடியோ மோடும்நின் னோடும்**
**பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு;**
**வடிவாய் நின்வல மார்பினில்**
**வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு;**
**வடிவார் சோதி வலத்துறை**
**யும்சுட ராழியும் பல்லாண்டு;**
**படையோர் புக்கு முழங்கும்அப்**
**பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு. (2)**

*[மங்கை - பெரிய பிராட்டியார்; புக்கு - புகுந்து; முழங்கும் - ஒலிக்கும்; அ - அளவற்ற பெருமையை யுடைய]*

என்பது பாசுரம். 'அடியவர்களான நாங்களும் எல்லோருக்கும் தலைவரான தேவரீரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் நெடு நாளளவும் மங்களமாக வாழவேண்டும்; பெரிய பிராட்டியாரும் தேவரீருமான சேர்த்தி எப்போதும் மாறாமல் நித்திய வாழ்க்கை செல்ல வேண்டும்; திருவாழியாழ்வானும் திருச்சங்காழ்வானும் குறையொன்றுமின்றி வாழவேண்டும்' — என்று உபய விபூதிகளோடும் கூடின நிலைமைக்கு மங்களாசாசனம் பண்ணுகின்றார். 'அடியோமோடும்' என்பதில் இந்த லீலா விபூதியிலுள்ள அனைவரும் அடங்குவர். மற்ற மூன்றடிகளிலாலும் பரமபதமாகிய நித்திய விபூதியிலுள்ள பெரிய பிராட்டியார் முதலானவர்களும் அடங்குவர். ஆக, இப்பாசுரத்தால் உபய விபூதிக்கும் தலைவனான எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுகின்றார் என்பதை அறிதல் வேண்டும்.

எம்பெருமானுடைய மங்களத்தை மட்டிலுமே விரும்புகின்றவரான இவ்வாழ்வார் 'அடியோமோடும்' என்று தம்முடைய மங்களத்தையும் ஏன் விரும்புகின்றார்? என்ற வினா எழுகின்றது. மங்களா சாசனம் பண்ணுவதற்குத் தம்மைப் போன்ற அடியவர்கள் இல்லாவிடில் எம்பெருமானுக்கு என்ன தீங்கு விளைந்திடுமோ என்ற அச்சம் பற்றிய நினைவினால் (பய சங்கையினால்) மங்களா சாசனத்தில் ஊக்கமுடைய தம்முடைய மங்களத்தையும் விரும்புகின்றார் என்பதை அறிதல் வேண்டும். ஆகவே, எம்பெருமானுடைய மங்களா சாசனத்தின் அபிவிருத்திக்காகவே தம்முடைய மேன்மையையும் வேண்டுகின்றார் என்பது தெளிவு.

**வடிவாய் ... மங்கை :** பெரிய பிராட்டியாராலே எம்பெருமானுக்கு மேன்மை உண்டாகின்றது என்பது 'வடிவாய்' என்று சிறப்பித்ததனால் விளங்கும். மலருக்கு மணத்தினாலும், இரத்தினத்திற்கு ஒளியினாலும் மேன்மையுண்டாகக் காண்கின்றோமல்லவா? அவை போல என்க. 'மங்கை' என்பதால் எப்போதும் மங்கைப் பருவமுடையவள் என்பது போதரும். ஆழ்வாருக்குக் கண்ணெதிரில் தோன்றுகின்ற சங்கை 'அப் பாஞ்சசன்யமும்' என்று கண்காணாத பொருளைக் கூறுமாறு போலே கூறலாமோ? என்னில்: தம்முடைய கண்ணெச்சில் படாதபடி முகத்தைத் திருப்பி வைத்துக் கொண்டு சொல்லுகின்றார் என்பதாகக் கருதவேண்டும். அல்லது அன்று பாரதப் பெரும் போரில் அப்படிப்பட்ட அரிய பெரிய காரியங்கள் செய்த 'பாஞ்சசன்யம்' என்றும், அழகிய 'பாஞ்சசன்யம்' என்றும் பொருள் கொள்ளினும் அமையும்.

இனி, இப்பதிகத்தின் கருத்தைச் சுருக்கமாக விளக்குவேன். இந்த ஆழ்வார் தனியராக இருந்து மங்களா சாசனம் பண்ணுவதில் மனநிறைவு பெறாமலும், 'யோக்கியமான பொருளைத் தனிமையாகத் துய்ப்பது தகாது' என்ற நியாயத்தைக் கொண்டும் இன்னும்

பலரையும் மங்களாசாசனத்திற்குத் துணையாகக் கூட்டிக் கொள்ளவேண்டும் என்று நினைக்கின்றார். உலகில் உள்ள மக்களை ஆராய்ந்து பார்த்ததில் அவர்கள் (1) செல்வத்தை விரும்புபவர்கள், (2) ஆன்மாநுபவமாகிய கைவல்யத்தை விரும்புபவர்கள், (3) எம்பெருமானுடைய அநுபவத்தை மட்டிலும் விரும்புபவர்கள் என்று மூவகையாக இருப்பதைக் காண்கின்றார். இந்த மூவகை அதிகாரிகளில் செல்வத்தை விரும்புகிறவர்களும் கைவல்யத்தை விரும்புகிறவர்களும் பயனை எதிர்பார்ப்பவர்களாக இருந்தாலும் அந்த அற்ப பலனுக்காவது எம்பெருமானைப் பணிந்து வழிபடு கின்றார்கள் என்பதால் அவர்களையும் திருத்திப் பணி கொள்ளலாம் என்று அறுதியிட்டு இம்மூவகை அதிகாரி களையும் மங்களா சாசனத்திற்கு அழைக்க விரும்பி முதன் முதலாக எம் பெருமானுடைய அநுபவத்தையே விரும்பும் ஞானிகளை மட்டிலும் மூன்றாவது பாசுரத்தில் அழைக் கின்றார்.

பகவத் விஷயம் தவிர மற்ற விஷயங்களில் செய்யும் கைங்கரியமெல்லாம் செய்வதற்குச் சிரமமாயும், சிரமப் பட்டுச் செய்தாலும் அந்தத் தேவதைக்கு மன நிறைவு இல்லாமலும், ஒருவாறு மன நிறைவு தருவதாக இருந்தா லும் அற்ப பலனைக் கொடுப்பனவாகவே இருக்கும்; அவை துயரத்தையும் விளைவிக்கும். பகவத் விஷயத்தில் செய்யும் கைங்கரியமோ எளிதாகச் செய்யக் கூடியதாகவும், விரைவில் எம்பெருமானை உவப்பிக்க வல்லதாயும் நிரந்தர மாகப் பலனையளிப்பதாகவும் இருப்பதால் அப்படிப்பட்ட பகவத் கைங்கரியத்தில் ஊன்றியிருப்பவர்களை 'வாழாட் பட்டு நின்றீர்' என்று விளிக்கின்றார். அப்படிப்பட்ட அதிகாரிகள் மிகவும் அருமைப்படுபவர்கள் என்பதைக் காட்டுகின்றார் 'உள்ளீர்கள்' என்று.

'மண்ணும் மணமுங் கொண்மின்' : மண்கொள்ளுகை யாவது - பெருவிழாவில் திருமுளைத் திருநாளுக்கு புழுதி மண் சுமப்பது. மணம் கொள்கையாவது - அந்தப் பெரு

விழாவில் மிகவும் ஈடுபாடு கொண்டிருப்பது. முற்காலத்தில் அடிமையோலை எழுதும்போது ''மண்ணுக்கும் மணத்துக்கும் உரியேனாகக் கடவேன்' என்று எழுதும் வழக்கம் இருந்தமை சிந்திக்கத் தக்கது. முதலடியில் 'உள்ளீரேல்' என்று ஆழ்வார் உரக்கக் கூவினபடியைக் கேட்டவர்கள் அவரழைத்த வேறுபாட்டை உணராமல் ஓடிவருகின்றனர். அவர்களில் வயிற்றுப் பிழைப்புக்காகக் கீழான சேவை செய்து பிழைப்பவர்களும் சேர்ந்திருந்தபடியால், அவர்களை, 'கூழாட்பட்டு புகுதலொட்டோம்' என்று விலக்கித் தள்ளுகின்றார் இரண்டாம் அடியால். பகவத் சம்பந்தத்தால் தமக்கு உண்டாகின்ற பெருமையையும், தாம் காலம் போக்கும் முறையையும், அருளிச் செய்கின்றார் பின்னிரண்டு அடிகளில். ''நாங்கள் ஏழு தலைமுறைகளிலும் - அநாதிகாலமாக - எம்பெருமானை உபாயமாகவும் உபேயமாகவும் கொண்டு மங்களாசாசனம் பண்ணுகின்றோமாகையால், மிகவும் அழகாயுள்ள எங்கள் குழுவில் நீங்கள் நுழைதல் ஆகாது'' என்று வயிறு வளர்க்கும் வம்பர்களை விலக்கித் தள்ளுகின்றார்.

மூன்றாவது பாசுரத்தில் (வாழாட்பட்டு) பயன்கருதாது அடிமைத் தொழில் புரியும் முமுட்சுகளை அழைத்தாரல்லவா? அப்படி அழைக்கும்போது' ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள்' என்று தம்முடைய பெருமையையும் சொல்லியழைத்தார். அந்த முமுட்சுகளும் 'நாங்களும் உம்மைப் போலவே ஏழு தலைமுறைகளாக - அநாதிகாலமாக - அடிமை செய்கின்றவர்கள்' என்று தங்களுடைய பெருமையையும் எம்பெருமானுக்கு மங்களா சாசனம் பண்ணுகின்றவர்கள் என்கின்ற தம் அன்றாடக் கடமைகளையும் சொல்லிக்கொண்டு வந்ததாக ஆறாவது பாசுரத்தில் அருளிச் செய்யப்பெறுகின்றது.

எந்தைதந் தைதந்தை தந்தைதம்
மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் (6)

இங்கு படி-உடம்பு; இச்சொல் இங்குத் தலைமுறையைக் காட்டுகின்றது. 'எங்களுடைய சந்ததியில் எல்லாரும் ஆட்செய்பவர்கள்' என்பதை உணர்த்த வழிவழி என்கின்றார்.

நான்காவது பாசுரத்தில் ஆன்மாநுபவத்தை விரும்பியிருக்கும் கைவல்யார்த்திகளை மங்களாசாசனம் செய்ய வரும்படி அழைக்கின்றார்.

**ஏடு நிலத்தில் இடுவதன்**
**முன்னம்வந் தெங்கள் குழாம்புகுந்து**
**கூடும் மனமுடை யீர்கள்!**
**வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ**
**நாடும் நகரமும் நன்கறி**
**யநமோ நாராய ணாயவென்று**
**பாடும் மனமுடைப் பத்தருள்**
**ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே. (4)**

[ஏடுநிலம் - பொல்லாத இடமாகிய கைவல்யம்; இடுவது-தள்ளுவது; வரம்பு-ஆன்மாநுபவ வரம்பு; ஒழி வந்து - ஒழித்து; ஒல்லை - விரைவாக]

என்பது பாசுரம். மூன்றாவது பாசுரத்தில் கூழாட்பட்டவர்களை விலக்கினாப்போலே இவர்களையும் விலக்க வேண்டியிருந்தாலும், இவர்கள் கைவல்யமாகின்ற சொந்தப் பலன் பெறுவதற்காகிலும் எம்பெருமானைச் சரணமடைந்தவர்களே என்ற மகிழ்ச்சிப் பெருக்கால் அவர்களையும் அழைத்து முறையான உபதேசங்களால் திருத்தலாம் என்ற நினைப்பால் அழைக்கின்றார் என்பதை அறிதல் வேண்டும். இந்தக் கைவல்யார்த்திகளைப் போலே ஐசுவர்யார்த்திகளும் சொந்தநலன் கருதுபவர்களாயிருக்க, அந்த ஐசுவர்யார்த்திகளை முதலில் அழைப்பதைத் தவிர்த்து கைவல்யார்த்திகளை முதலில் கூப்பிட்டது ஏன்? என்னில்; ஐசுவர்யார்த்திகளைச் சாவகாசமாகவும் திருத்திக் கொள்ளலாம்; கைவல்யார்த்திகளை அங்ஙனம்

சாவகாசமாகத் திருத்திக்கொள்ள இயலாது. ஏனென்றால், கைவல்யார்த்திகளின் உபாயாநுட்டானம் முடிந்து விட்டால் அவர்கள் ஆன்மாநுபவத்திற்காக ஏற்பட்ட மேலோகத்தில் போய்ச் சேர்ந்து விடுவார்கள்; மீண்டும் அங்கிருந்து ஒரு நாளும் திரும்பி வருதல் இல்லாமையாலே இப்போதே அவர்களைத் திருத்திக் கொள்ளாமல் தாமதம் செய்தாலும் 'அந்த அதிகாரிகள் பாழாய்ப் போவார்களே!' என்கின்ற அநுதாபத்தினால் ஐசுவர்யார்த்திகளுக்கு முன்னே கைவல்யார்த்திகட்கு முதலில் அழைப்பு விடுக்கின்றார் என்பதை அறிதல் வேண்டும்.

ஏடு நிலம் : பொல்லாத இடம் என்பது சொற்பொருள். சந்தர்ப்பபலத்தால் இது கைவல்ய இடம் என்று பொருள்படும். அன்றியும், 'ஏடு-சூக்கும சரீரமானது, நிலத்தில் - தனக்குக் காரணமான மூலப் பிரகிருதியில், இடுவதன் முன்னம் - சென்று சேர்வதற்கு முன்னே என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விடத்தில் ஒரு முக்கியமான கருத்தை மனத்தில் இருத்துதல் வேண்டும், உடம்பு (சரீரம்), நுண்ணுடம்பு (சூட்சுமசரீரம்) பருவுடம்பு (தூல சரீரம்) என இருவகைப்படும். பஞ்சபூதங்களின் சூக்கும அவத்தைகளாகிய தந்மாத்திரைகள் ஐந்தும், கருமேந்திரியங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், மனசு ஒன்றும் ஆகிய பதினாறு தத்துவங்களுடன் கூடிய உடம்பு நுண்ணுடம்பு எனப்படும். தந்மாத்திரைகளின் தூலங்களான பூதங்களோடு சேர்ந்து அவற்றோடு பஞ்சவிஷயங்களும், பிரகிருதி, மகாந், அகங்காரம் - ஆகிய 24 தத்துவங்களுடன் கூடிய உடல் தூல சரீரம் (பருஉடம்பு) எனப்படும். ஆன்மா தனது நுண்ணுடம்பு விரஜை நதியில் தீர்த்தமாடுவதால் நீங்கிய பிறகுதான் பரமபதத்தையோ கைவல்யத்தையோ அடையும்; இவ்விரண்டில் எதை அடைந்தாலும் திரும்பி வருதல் இல்லை. இந்த இருவகையான உடம்புகளுள் நுண்ணுடம்பு பரு உடம்பைக்காட்டிலும் பிரதானமாய் அதனுடைய சாரமுமாய் இருப்பதால் பாலின் ஏடு போலும்.

என்ற காரணம் பற்றி 'ஏடு' என்பது சூக்கும உடம்பைக் காட்டும்.

வரம்பு என்பது அவரவர்கள் ஏற்படுத்திக்கொண்ட எல்லை. 'ஆன்மாநுபவத்தோடு நாம் நின்றுவிடவேண்டியது; பகவானை அநுபவிக்கப் போகக்கூடாது' என்று கைவல்யார்த்திகள் வைத்துக்கொண்ட வரம்பை ஒழித்து விட்டுத் தம்முடன் வந்துசேருமாறு அழைக்கின்றார் ஆழ்வார். கைவல்ய நிஷ்டர்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறுவதற்காகப் பிரணவத்தை மட்டிலும் நாவால் நவிற்றுவர்; இனி, அப்படியல்லாமல் நாராயணாய என்பதையும் சேர்த்து எட்டெழுத்து மந்திரத்தையும் நவிற்றிக் கொண்டு வரவேண்டும் என்பதை 'நாடு நகரமும்... பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே' என்ற பின்னிரண்டு அடிகளால் அவர்களை அழைகின்றார்.

ஏழாம் பாசுரத்தில் கைவல்யார்த்திகள் திருந்தின படியைச் சொல்லுகின்றார். நாலாம் பாசுரத்தில் 'நாடு நகரமும் நன்கறிய' என்று அவர்களுடைய நன்மையை எல்லோரும் தெரிந்து கொள்ளுமாறு அவர்கள் வரவேண்டும் என்று அறுதியிட்டு, 'சங்கு சக்கரங்களாலே திருவிலச்சினை செய்து கொள்வது நல்ல உபாயம்' என்று அதைச் செய்து கொண்டு குடும்பத்துடன் மங்களாசாசனம் செய்பவர்களாக ஆய்விட்டதைக் கூறிக்கொண்டு வந்தார்கள் என்பதை அருளிச்செய்கின்றார்.

தீயின் பொலிகின்ற செஞ்சுட
    ராழி திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு
    நின்று குடிகுடி யாட்செய்கின்றோம். (7)

[தீயின்-சந்திரன் சூரியன் அக்கினி முதலிய சுடர்ப் பொருள்கள் எல்லாவற்றையும்விட; பொலிதல்-பிரகாசித்தல்; செஞ்சுடர்-சிவந்த ஒளி; ஆழி-வட்ட

வடிவம்; பொறி-அடையாளம்; ஒன்றுண்டு-அடையாளம் செய்யப்பெற்று; குடிகுடி-வழிவழியாக; ஆள்செய்கின்றோம் - கைங்கரியம் செய்து வருகின்றோம்]

என்பதால் இது தெளிவாகின்றது.

ஐந்தாவது பாசுரத்தில் ஐசுவரி யார்த்திகளை அழைக்கின்றார்.

அண்டக் குலத்துக் கதிபதி
 யாகி, அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக்
 களைந்த இருடிகே சன்தனக்கு
தொண்டக் குலத்தி லுள்ளீர்வந்
 தடிதொழு தாயிரநாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்த்துபல்
 லாண்டுபல் லாயிரத் தாண்டென்மினே (5)

[அண்டம்-உலக உருண்டை; அதிபதி-தலைவன்; இண்டைக்குலம்-நெருக்கமான கூட்டம்; தொண்டக்குலம்-தொண்டர் கூட்டம்; பண்டைக்குலம்-பயனை விரும்பிக் கிடக்கும் பழைய தன்மை; தவிர்த்து-நீக்கி]

என்பது பாசுரம். ஐசுவர்யார்த்திகள் இருவகைப்படுவர்: (1) நெடுநாளாக இருந்து கைதப்பிப்போன செல்வத்தை மீண்டும் அடைய விரும்புபவர்கள் ஒருவகை; (2) நெடுநாள் வறியராக இருந்து புதிதாகச் செல்வமடைகின்றவர்கள் மற்றொரு வகை. இந்த இருவகையினரையும் பாசுரத்தில் அழைக்கின்றார். இதை விளக்குவேன். 'அண்டக்குலத்துக்கு அதிபதியான இருடிகேசவனுக்குத் தொண்டக் குலத்திலுள்ளீர்!' என்றும், 'அசுரர் இராக்கதரை இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடிகேசனுக்குத் தொண்டக் குலத்திலுள்ளீர்!' என்றும் விளியை இரண்டாகப்

பகுத்துக் கொண்டு பொருள் காணவேண்டும். அண்டங்களுக்கு அதிபதியாயிருக்கை ஐசுவரியத்துக்கு முடிவெல்லையாயிருப்பதால், புதிய ஐசுவர்யத்தைப் பெற விரும்புகின்ற அதிகாரிகள் அப்படிப்பட்ட அண்டாதிபத்தியத்தைப் பெற விரும்பி அந்த விருப்பம் வெளிப்படும்படி 'அண்டாதிபதியே நம!' என்று எப்போதும் உருப்போடுபவர்கள்; அந்த அதிகாரிகளை அழைக்கின்றார் என்பது முதல் விளியால் தெளிவாகும். ஏற்கெனவே இருக்கின்ற செல்வத்தை அசுரர்-இராக்கதர்கள் போன்ற எதிரிகள் அபகரித்துக் கொண்டதனால் மீண்டும் அச்செல்வத்தைச் சம்பாதித்துக் கொள்ள விரும்புபவர்கள் அவ்விருப்பம் வெளிப்படும்படி "அசுர சத்துருவே நம:" என்று உருப்போடுபவர்கள்; அந்த அதிகாரிகளை அழைக்கின்றார் என்பது இரண்டாவது விளியால் விளங்கும்.

ஆக, இப்படி இருவகை அதிகாரிகளையும் அழைத்து, "ஐயகோ, நீங்கள் சொந்த நலன்களைக் கருதி எம்பெருமானின் ஆயிரம் திருநாமங்களையும் வாயாரச் சொல்லி மகிழ்வடையலாம். அப்படியிருக்க, அதைவிட்டு 'அண்டாதிபதி, அசுர சத்துரு' என்ற இரண்டு திருநாமங்களை மட்டும் அற்ப பலனுக்கு உருப்போட்டுக் கொண்டுள்ளீர்களே; இது தகாது; இனி ஆயிரம் திருநாமங்களையும் பயன் கருதாது அநுசந்தித்து எங்களுடைய குழுவில் சேர்ந்து மங்களாசாசனம் பண்ண வாருங்கள்"—என்று அழைக்கின்றார் என்பதை அறிந்து தெளிதல் வேண்டும்.

அண்டம்—உலக உருண்டை. இஃது அளவற்றதாகையால் 'அண்டக்குலம்' எனப்பட்டது. இதற்கு அதிபதி என்று எம்பெருமானைச் சொல்வது கருத்துடன் கூடியதாகும்; "உன்னைப் போலவே, நாங்களும் அண்டாதிபதியாகவேண்டும்" என்று தெரிவித்துக் கொண்டபடி. இண்டைக்குலம்—நெருக்கமான கூட்டம்; அசுரர் இராக்கதர்களாகின்ற சண்டாளருடைய கூட்டத்தைக் குறித்தபடி.

இருடீகேசன்—ஹ்ருஷீ கேசன்; இந்திரியங்களை அடக்கியவன். தொண்டர்+குலம்—தொண்டக்குலம்.

மேற்பாசுரத்தில் (ஐந்தாவது) அழைக்கப்பெற்ற ஐசுவர்யார்த்திகள் எம்பெருமானிடத்தில் சில ஐசுவர்யங்களைப் பெற்றுக்கொண்டு திருந்தி மங்களாசாசனத்திற்குச் சித்தராக வந்தபடியைச் சொல்லிக் கொள்ளுகின்றார்கள் என்று அருளச் செய்வது எட்டாவது பாசுரம்.

நெய்யிடை நல்லதோர் சோறும்
நியதமும் அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப்
பூ ணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமும்
தந்தென்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடி
யானுக்குப் பல்லாண்டு கூறுவனே. (8)

[நெய்யிடை-நெய்யின் நடுவே; நல்லது ஓர்-யோக்கியமாய் நல்ல; நியதமும்-எப்போதும்; அடைக்காய்-தாம்பூலம்; மெய் இட-உடம்பில் பூசிக்கொள்ள; சாந்து-சந்தனம்; வெள்உயிர்-சுத்த சாத்துவிகன்; பை-படம்; நாகம் பகைக்கொடியான்-கருடன்; பல்லாண்டு-மங்களாசாசனம்]

என்பது இந்தப் பாசுரம். இப்பதிகத்திலுள்ள 1 முதல் 7 முடிய உள்ள பாசுரங்கள் பன்மையாக முடிந்திருக்க, இஃது ஒருமையாக முடிகின்றது. இதற்குக் காரணம் என்ன? கூறுவேன்: உலகில் பயன் கருதாதவர்களின் கூட்டமும் கைவல்யார்த்திகளுடைய கூட்டமும் குறைவாக இருக்கும். அந்தக் கூட்டத்தில் நாலைந்து பேர்கள் பேசினதாகக் கருதி அவர்களது பாசுரங்களில் 'பல்லாண்டு பாடுதுமே' (6) என்றும், 'பல்லாண்டு கூறுதுமே' (7) என்றும் பன்மை வினையாக முடிந்தது. ஆனால் ஐசுவர்யார்த்திகளான இவர்

உண்ணும் சோறு போலே அன்புடன் இடப்பெற்றுச் சுவையில் குறைவில்லாத சோறு என்றவாறு. **அத்தாணிச்சேவகம்:** அரச அவையில் சேவகம் எம்பெருமான் இருக்குமிடத்தில் கூடவே இருந்து கொண்டு பிரியாமல் நின்று செய்கின்ற கைங்கரியம் ஐசுவர்யார்த்திகள் சொல்லுகின்ற பாசுரத்தில் எவ்வாறு பொருந்தும்? என்ற வினா எழுகின்றது. பயன் கருதாதவருக்கன்றோ அத்தாணிச் சேவகம் உள்ளது; சோறு அடைக்காய் பூண் குண்டலம் ஆகிய இவற்றைத் தந்து என்பது பொருந்துமேயன்றி அத்தாணிச் சேவகமும் தந்ததாகக் கூறுவது இவர்கட்குப் பொருந்தாதே என்னில்: ஐசுவர்யார்த்தியாயிருந்தாலும் பகவானுடைய கருணையால் திருந்திப் பயன் கருதாதவனாய் வந்தமை தோற்றும்படியாகச் சொல்லுகின்ற பாசுரமாகையாலே பொருந்தும் என்று கொள்ளல் அமையும். "நான் விரும்பின வாழ்க்கையை மாத்திரம் கொடுத்துவிடாமல் உய்யும் நெறியையும் உண்டாக்கி என்னைத் தூய்மையான ஆன்மாவாகச் செய்தானே!" என்று மகிழ்ந்து கூறுகின்ற பேச்சு இது. **வெள்ளுயிர்:** தூய்மையான ஆன்மா. சத்துவம், இராசசம், தாமதம் என்று மூன்று குணங்கள் உண்டு என்பதை நாம் அறிவோம். அவற்றுள் சத்துவ குணத்தை வெண்ணிறமுள்ளதாகவும், இராசச குணத்தைச் சிவப்பு நிறமுள்ளதாகவும், தமோ குணத்தைக் கறுப்பு நிறமுள்ளதாகவும் கூறுவது கவி மரபாகையால், இங்கே சாத்விகனை 'வெள்ளுயிர்' என்கின்றார்.

**ஒரு சிறு விளக்கம்:** ஆழ்வாரால் அழைக்கப் பெற்ற மூவகை அதிகாரிகளுள் பயன் கருதாத ஞானிகள் '**எந்தை தந்தை**' (6) என்ற பாசுரத்தாலும் கைவல்யார்த்திகள் '**தீயிற் பொலிகின்ற**' (7) என்ற பாசுரத்தாலும் ஐசுவர்யார்த்திகள் '**நெய்யிடை நல்லதோர்**' (8) என்ற பாசுரத்தாலும் ஆழ்வாரை நோக்கிச் சொன்னவையாகும். இனி, அடுத்து வரும் '**உடுத்துக் களைந்த**' (9) என்ற பாசுரம் ஞானிகளாலும், '**எந்நாள் எம்பெருமான்**' (10) கைவல்

யார்த்திகளாலும், 'அல்வழக் கொன்று மில்லா (11) என்ற பாசுரம் ஐசுவர்யார்த்திகளாலும் எம்பெருமானை நேரே நோக்கிச் சொன்னவையாகும். இவற்றுள் 7, 8 ஆம் பாசுரங்களில் எம்பெருமானுடைய விளி தெளிவாக உள்ளது. 9-வது பாசுரத்தில் அப்படித் தெளிவாக இல்லா விடினும் 'நின்பீதக ஆடை' என்கின்ற சொல்லாற்றலால் தெளிவாகின்றது.

முதலில் பயன்கருதாத ஞானிகள் எம்பெருமானை நோக்கிப் பேசுகின்றனர்.

உடுத்துக் களைந்தநின் பீதக
  ஆடை உடுத்துக் கலத்ததுண்டு
தொடுத்த துழாய்மலர் சூடிக்
  களைந்தன சூடும்இத் தொண்டர்களோம்
விடுத்த திசைக்கரு மந்திருத்
  தித்திரு வோணத் திருவிழவில்
படுத்தபைந் நாகணைப் பள்ளி கொண்
  டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (9)

*[உடுத்து—அரையில் சாத்தி; பீதக ஆடை—பீதாம் பரம்; கலித்தது—மிகுந்திருப்பது; திருத்தி—ஒழுங் காகச் செய்து; திருவோணம்—(ஒரு நட்சத்திரம்.)]*

இந்தப் பாசுரத்தில், "எம்பெருமானே! நாங்கள் எங்களுக் கென்று சோறு, கூறை, மலர், சாந்தம் முதலான வற்றை விலை கொடுத்து வாங்கிப் பயன்படுத்துவதில்லை; தேவரீர் அநுபவித்துக் கழித்தவற்றை மகாப் பிரசாதமாகக் கருதி அவற்றையே உண்பதும், உடுப்பதும், சூடுவதும் செய்வோம்; அவ்வளவோடும் நில்லாமல் தேவரீருக்கு எந்தத் திக்கில் என்ன காரியம் ஆகவேண்டியிருந்தாலும் அவற்றை ஒழுங்குபடச் செய்து முடிப்பதும் எங்கள் கடமை யாகச் செய்வோம். இதிலும் மனநிறைவு கொள்ளாமல், ஒரு வெள்ளி மலையில் காளமேகம் படிந்து கிடப்பது

போல் திருவனந்தாழ்வான் பள்ளியிலே தேவரீர் பள்ளி கொண்டிருக்கும் கிடந்த திருக்கோல அழகுக்குப் பல்லாண்டு பாடுவதும் செய்வோம்'' என்கின்றனர் பயன் கருதாத ஞானிகள்.

பீதக ஆடை; 'பீதம்' என்னும் வடசொல் 'க' என்ற விகுதி பெற்றுப் பீதகம் என்றாயிற்று. பொன் நிறமான ஆடை என்பது இதன் பொருள். எம்பெருமான் திருவரையில் சாத்திக் கொள்ளும் சாதாரண ஆடையெல்லாம் திவ்விய பீதாம்பரத்தின் அம்சமே என்பது சாத்திரம்.

அடுத்து ஆன்மாநுபவத்தையே அடையப்படும் பொருளாகக் கொண்டுள்ள கைவல்யார்த்திகள் தாம் திருந்தின படியைச் சொல்லிக் கொண்டு எம்பெருமானை நோக்கி மங்களாசாசனம் செய்வதாகச் சொல்லுகின்றனர்.

எந்நாள் எம்பெரு மான்உன்
தனக்கடி யோம்என் றெழுத்துப்பட்ட
அந்நா ளேஅடி யோங்கள்
அடிக்குடில் வீடுபெற் றுய்ந்ததுகாண்
செந்நாள் தோற்றித் திருமது
ரையுட் சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நா கத்தலைப் பாய்ந்தவ
னே! உன்னைப் பல்லாண்டு கூறுதுமே. (10)

[உன் தனக்கு - தேவரீருக்கு; எழுத்து - சொல்; பட்ட நாள்-வாயில் உண்டாகப் பெற்றநாள்; அடி குடில்-அடிமைப்பட்ட சந்தானம் எல்லாம்; வீடு-நற்கதி; செம் நாள்-நல்ல நட்சத்திரம்; தோற்றி-அவதரித்து; சிலை-வில்; குனித்து-வளைத்து; பாய்ந்தவன்-குதித்தவன்.]

என்பது பாசுரம். இதில் கைவல்யார்த்திகள் ''எம்பெருமானே, நாங்கள் கைவல்ய புருஷார்த்தம் அடைவதற்குச் சாதகமாக 'ஓம் நம:' முதலிய சொற்களை

நாவினால் நவிற்றிக் கொண்டு தேவரீரைத் தோத்திரம் செய்தோம். தேவரீர் எங்களைக் கடைக்கண் நோக்கி நாங்கள் மீட்சியற்ற கைவல்யத்தை அடைந்து கெட்டுப் போகாமல் அருள் புரிந்து நல்லறிவை யுண்டாக்கின படியால் அடியோங்கள் இப்போது திருந்தி தேவரீருக்குப் பல்லாண்டு பாடுகின்றவர்களாக ஆய்விட்டோம்'' என்கின்றனர்.

'தேவரீருக்கு அடியோம் என்று எழுதப்பட்ட நாள் எந்நாளோ, அந்நாளிலேயே அடியோங்களின் குடில் உய்ந்து போயிற்று' என்பது நைச்சியாநு சந்தானப் பேச்சு.

இவர்களை அடுத்து ஐசுவர்யார்த்திகள் தாங்கள் திருந்தின படியைச் சொல்லிக்கொண்டு எம்பெருமானை மங்களா சாசனம் செய்கின்றனர். எப்படி?

அல்வழக் கொன்றும் இல்லா அணி
    கோட்டியர் கோன் அபி மானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே!
    நானும் உனக்குப் பழவடியேன்
நல்வகை யால்நமோ நாரா
    யணாவென்று நாமம் பலபரவி
பல்வகை யாலும் பவித்திர
    னே!உன்னைப் பல்லாண்டு கூறுவனே. (11)

[அல்வழக்கு-அநீதிகள்; அணி-அழகிய; கோன்-தலைவர்; அபிமானதுங்கன்-வைணவ அபிமானத்தால் சிறந்தவர்; பவித்திரம்-பரிசுத்தம்; பரவி-ஏத்தி.]

என்பது பாசுரம். இதில் ஐசுவர்யார்த்திகள் எண்ணிறந்தவர்களாதலால், அவர்களில் ஒருவன் சொல்லுகின்றனனென்று அறியத்தக்கது. நெய்யிடை (8) என்ற பாசுரத்தில், 'கூறுவனே' என்று ஒருமைவினை வந்துள்ளதுபோல் இதில்

'கூறுவனே' என்று ஒருமை வினையினாலே முடிவது கவனிக்கத் தக்கது.

அல்வழக்கு: உடலையே ஆன்மா என்று நினைப்பது, எம்பெருமானுக்கு அடிமையாய்ப் பரதந்தரமான ஆன்மாவைச் சுதந்தரம் என்று நினைப்பது, சிறு தெய்வங்களைப் பரதெய்வமாக நினைப்பது, எம்பெருமானிடம் கீழான பலன்களை விரும்புவது, மோட்சத்திற்காகவும் கருமம் ஞானம் முதலிய வழிகளை அநுட்டிப்பது முதலானவை அல்வழக்குகள்–அநியாயங்கள். இவை இல்லாதவர் செல்வ நம்பி. 'செல்வநம்பி எப்படி நித்தியதாசரோ அப்படியே நாங்களும் நித்திய தாசராகி விட்டோம்' என்கின்றனர். 'அணிகோட்டியர் கோன்' என்ற தொடரால் செல்வநம்பி திருக்கோட்டியூரில் அவதரித்தவர் என்று அறிய முடிகின்றது.

இவ்விடத்தில் ஓர் ஐயம். இதுகாறும் ஐசுவர்யார்த்தியாயிருந்து இன்று வந்து சேர்ந்தவர்கள் 'செல்வநம்பியைப்போல் நானும் பழவடியேன்' என்று கூறலாமோ? என்னில்; 'பாவத்தாலே வந்த அகங்காரம் கழிந்துவிட்டால் எல்லா ஆன்மாக்களுக்கும் அடிமையே நிலை நிற்பதாகையால் அப்படிச் சொல்லக் குறை ஏன்? இல்லையன்றோ? இப்போது 'நல்ல வகையால்' என்றபடியால் இதுகாறும் இந்த ஐசுவர்யார்த்திகள் பகவந் நாமங்களைத் தீயவழியில் பயன்படுத்தினார்கள் என்று ஏற்படுகின்றது. தீயவழி— பலனை எதிர்பார்க்கும் வழி. இதுகாறும் தங்களுக்கிருந்த அழுக்குகளைப் போக்கித் தூய்மைப்படுத்திச் சேர்த்துக் கொண்டபடியால் 'பல்வகையாலும் பவித்திரனே!' என்கின்றனர்.

இறுதியாக ''பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை... நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாவென்று, பல்லாண்டு பரமாத்மனைச்

சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே'' (12) என்று பயன் உரைத்துப் பதிகத்தைத் தலைக்கட்டுகின்றார்.

பல்லாண்டு பாடிய பட்டர்பிரானும் 'பெரியாழ்வார்' என்னும் ஒரு புதிய திருநாமம் பெற்று வைணவ ஞானச்சுடர்களான பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். மற்றைய ஆழ்வார்களும் பரமபக்தியினால் எம்பெருமானுக்கு மங்களா சாசனம் செய்துள்ளபோதிலும், அவர்கள் 'பகவானுக்குக் குறையொன்றும் இல்லாதிருப்பதே நமக்கும் மங்களம்' என்று செய்துள்ளார்கள். ஆனால், விஷ்ணுசித்தரோ சர்வ இரட்சகனையும் இரட்சிக்க வழிதேடித் தடுமாறுவதுபோல் 'திருப்பல்லாண்டு' பாடியுள்ளார். எம்பெருமானுடைய வாழ்வையே தமது வாழ்வாக நினைத்துப் போற்றியுள்ளார். இந்த முறையில் இவர் ஏனைய ஆழ்வார்களினும் பெரியாராதலின் 'பெரியாழ்வார்' என்று திருநாமம் பெற்றார் என்பது மணவாள மாமுனிகளின் திருக்குறிப்பு.

**மங்களா சாசனத்தில்**
**மற்றுள்ள ஆழ்வார்கள்**
**தங்கள் ஆர் வத்தளவு**
**தான் அன்றிப் — பொங்கும்**
**பரிவாலே வில்லிபுத்தூர்ப்**
**பட்டர்பிரான் பெற்றான்**
**பெரியாழ்வார் என்னும்**
**பெயர்.**[1]

[ஆர்வத்து அளவு-நிறைந்த அன்பின் அளவு; பரிவு-இரக்கத்துடன் கூடிய பேரன்பு]

என்பது பாசுரம். ஆழ்வார்களுக்குரிய ஆர்வத்தையும் மிஞ்சிப் பொங்கிய பரிவல் பல்லாண்டு பாடிய காரணமாக விஷ்ணு சித்தருக்குப் 'பெரியாழ்வார்' என்ற பட்டம் கிடைத்தது

1. உபதேச ரத்னமாலை—18.

என்பது மாமுனிகளின் கருத்து. இராமாநுச நூற்றந்தாதி அருளிய திருவரங்கத்தமுதனாரும் இதனை,

> **சோராத காதல் பெருஞ்சுழிப்**
> **பால்தொல்லை மாலையொன் றும்**
> **பாரா தவனைப்பல் லாண்டென்று**
> **காப்பிடும் பான்மையன்.**[2]

*[சோராத-ஒரு நாளும் குறையாத; காதல்-பிரேமம்; தொல்லை மாலை-நித்தியனான எம்பெருமானை; ஒன்றும் பாராது-சிறிதும் மெய்ப்பிக்காமல்; காப்பிடும்-மங்களா சாசனம் செய்யும்; பான்மையன்-இயல்பையுடையவன்.]*

என்று குறிப்பிடுவர். "பிரேமத்தில் பெருஞ்சுழிப் படுகையாலே நித்தியனான எம்பெருமான் நிலையைச் சிறிதும் மெய்ப்பிக்காமல் 'பல்லாண்டு பல்லாண்டு' என்று மங்களா சாசனம் பண்ணுதலையே இயல்பாகவுடைய விஷ்ணுசித்தன்" என்பது அமுதனாரின் பாராட்டு.

பல்லாண்டு பாடிய பெரியார் தாம் வளர்த்த அன்பு மகளை எம்பெருமானுக்கு மணாட்டியாக அளித்து 'இறைவனுக்கும் மாமனார்' என்ற மதிக்கப்பெற்ற குறிப்பும், தாயுள்ளம் கொண்டு தம் அழகுத் தெய்வமாகிய கண்ணனைத் தமது பாவனையாலேயே தமது திருமொழியில் வளர்த்துவிட்ட குறிப்பும் 'பெரியாழ்வார்' என்ற பேரிலும் புகழிலும் புதை பொருளாக அமைந்துவிட்டதைக்கண்டு மகிழலாம். பாண்டிய மன்னன் அளித்த 'பட்டர்பிரான்' என்ற விருதைவிட இத்திருநாமம் புகழ் பெற்று விட்டது. குருபரம்பரையில் இவர் வரலாற்றிற்குப் 'பெரியாழ்வார் வைபவம்' என்றும், நாலாயிரத்தில் இவர் பாசுரங்கட்குப்

---

2. இராமாநுச. நூற். 15.

'பெரியாழ்வார் திருமொழி' என்ற தலைப்பும் அமைந்து அப்புகழ் நிலைபெற்றும் விட்டது.

பல்லாண்டு அருளிய பெரியார்மூலமாக வில்லிபுத்தூர் மதுரைக்கு வழங்கிய செல்வம் வைணவர்களில் பொது உடைமையாகிப் பக்தி நெறிக்கே ஒரு புதிய அழகினையும் பொலிவினையும் தந்து நிற்கின்றது.

> "உண்டோ திருப்பல்லாண்டுக்(கு)
> ஒப்பதோர் கலைதான்?
> உண்டோ பெரியாழ்வார்க் (கு)
> ஒப்ப ஒருவர்?"[3]

என்று வைணவ உலகம் இன்றும் பல்லாண்டு பாடிய பட்டர்பிரானை வியந்து பாராட்டுகின்றது; போற்று கின்றது.

பெரியாழ்வார் தம்மைச் சரணமடைந்த பாண்டியக் குலபதியைக் குளிரக் கடாட்சித்துப் பாகவதர் குழுவில் ஒருவனாக்கி விடுகின்றார். பின்னர் வில்லிபுத்தூர்க் கெழுந்தருளி கிழியிற்கிடைத்த பொருள்களையெல்லாம் வடபெருங்கோயிலுடையான் திருமுன்பே வைத்துத் தெண்டன் சமர்ப்பிக்கின்றார். அந்தப் பொருளைக் கொண்டு அத்திருக்கோயிலுக்குக் கோபுரம் எழுப்புகின்றார். பின்னர், பழையபடியே நந்தவன கைங்கரியம் நடத்தி வருகின்றார். இந்நிலையில் கிருஷ்ணாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டு அவ்வவதார சரிதைகளையே முக்கியமாகப் பாராட்டி அநுபவித்து அவ்வநுபவத்தாலுண்டான ஆனந்தத்திற்கு போக்கு வீடாக அதைப் பிரபந்தமுகமாக வெளியிடுகின்றார். இந்தப் பாசுரங்களே பின்னர் நாத முனிகள் அடைவுபடுத்திய நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் 'பெரியாழ்வார் திருமொழி' என்று முதலாயிரத்தில் இடம் பெறுவதாயிற்று.

---

3. உ. ர. மா: 20.

# 4. திருப்பல்லாண்டு — தனிப்பிரபந்தமா?

பெரியாழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் யாவற்றையும் தொகுத்து பெரியாழ்வார் திருமொழி என்ற பெயரில் முதலாயிரத்தில் முதலாவதாக இடம் பெறச் செய்துள்ளார் நாதமுனிகள். இன்று வெளிவந்திருக்கும் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளின் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பதிப்பில் திருபல்லாண்டு தனிப் பிரபந்தமாகவும், முதற்பத்தில் 'வண்ணமாடங்கள்' தொடங்கி 'வட்டு நடுவே' முடிய ஒன்பது திருமொழிகளை மட்டிலும் ஒரு பத்தாகக் கொண்டும் வெளியிடப் பெற்றுள்ளன. ஏனைய பத்துகளில் மாற்றம் இல்லை. இப்பதிப்பை யொட்டியே மர்ரே கம்பெனி ராஜம் பதிப்பும் அமைந்துள்ளது. இங்ஙனம் இம்முறை தென்கலையார் சம்பிரதாயமாக அமைந்து விடுகின்றது.

வி. பூதூர் மகாவித்துவான் வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பில் 'திருப்பல்லாண்டு' முதற்பத்தில் முதற்பதிகமாக அடங்கி முதற்பத்தில் பத்துத் திருமொழிகள் அடங்கியுள்ளன. இரண்டாம் பத்து மெச்சூது என்ற திருமொழியால் தொடங்குகின்றது. இரண்டாம் பத்துத் தொடங்கி மேற்குறிப்பிட்ட பிரதிவாதி பயங்கரம் பதிப்பைப் போலவே இப்பதிப்பும் அமைந்துள்ளது. வடகலையார் இந்தச் சம்பிரதாயத்தைத் தழுவுகின்றனர்போல் பூதூர்ப் புலவரின் பதிப்பு அமைந்து விடுகின்றது.

இந்த இரண்டு பதிப்புகளிலும் (இரண்டு சம்பிரதாயங்களிலும்) திருப்பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கொண்டவர்கள் தென்கலையார் என்றும், திருப்பல்லாண்டு தனிப்பிரபந்தம் அன்று, அது பெரியாழ்வார் திருமொழியில் முதல் பத்திலேயே அடங்கிவிடுகின்றது என்பது வடகலையார் கொள்கை என்றும் நாம் கொள்ள வேண்டியுள்ளது. இது அடியிற்கண்டவற்றால் தெளிவாகும்.

திவ்வியப் பிரபந்தங்களின் எண்ணிக்கையும் பாசுரங்களின் எண்ணிக்கையும் வேதாந்த தேசிகர் காலத்தில் வரையறுத்துக் கூறப் பெற்றவை. தேசிகர் திருப்பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கொள்ளவில்லை. அது பெரியாழ்வார் திருமொழியுடன் சேர்ந்தது என்ற சம்பிரதாயத்தை அப்படியே ஒப்புக் கொண்டவர்.

**ஏறணிபல் லாண்டுமுதல் பாட்டு நானூற்**
**றெழுபத்தொன் றிரண்டுமெனக் குதவுநீயே.**[1]

[ஏர் அணி-அழகு பொருந்திய; நானூற்றெழுபத்தொன்று இரண்டு-473].

என்று சேர்த்தே ஒரே தொகையாகக் கூறியிருப்பதனால் இதனை அறியலாம். அவர் தமது பிரபந்த சாரத்தில் மேற்கொண்டுள்ள முறையைக் கவனித்தால் இது தெளிவாகும். இந்த முறை பிரபந்தசாரம் முதல் பாடலில்,

**வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்**
**வகையான தொகைஇலக்கம் மற்றும் எல்லாம்.**[2]

[வாழ்வான-உய்வதற்குக் காரணமான; பாட்டின் வகையான தொகை-பாட்டின் வகுப்பின்படி எண்கள்; இலக்கம்-(அவரவர் அருளிச் செய்த பாசுரத்தின்) கூட்டிய எண்; மற்றும் எல்லாம்-(அந்தந்த பிரபந்தங்களில் வெளியாகும் சாரப் பொருளாகிய) பிற எல்லாம் ]

1. தே. பி 375; பிரபந்தசாரம்-9.
2. ஷை. 367; ஷை-1.

என்று பேசப்பெறுகின்றது. இதில் 'பாட்டின் வகையான தொகை' என்பது 'பாட்டின் வகுப்பின்படி எண்கள்' என்பதைக் குறிக்கின்றது. இதனை மேலும் விளக்குவேன். 'திருமொழிகள்; அவற்றுள் ஒவ்வொன்றின் பாட்டின் தொகை இலக்கம்' என்பதைக் கவனிக்க வேண்டும். எவ்விதமான தொகை? வகையாக. 'வகை' என்பது தனிப் பிரபந்தம். அதிலுள்ள பாசுரங்கள் இத்தனை என்பது வகையாகத் தொகை இலக்கம். 'இலக்கம்' என்பது அவரவர் அருளிச் செய்த பாசுரத்தின் கூட்டிய எண். 'மற்றுமெல்லாம்'—அவைகளை விட்டு ஒவ்வொரு ஆழ்வார் செய்த பாசுரங்களின் தொகை இலக்கம்; பிரபந்தங்களின் மொத்த இலக்கம்; எல்லாப் பிரபந்தங்களையும் சேர்த்து அவற்றிலுள்ள பாசுரங்களின் மொத்த இலக்கம். இவை எல்லாவற்றையும் விரித்துரைப்பதாகக் கூறுகின்றார்.

இந்த முறையை மேற்கொண்டு தமது பிரபந்தசாரம் இரண்டாவது முதல் பதினான்காவது வரையிலுமுள்ள பதின்மூன்று பாடல்களில் ஒவ்வோர் ஆழ்வார்களுடைய திருமொழிகளையும் (அல்லது திருமொழியையும்) தனித்தனியே அதனதன் தொகை இலக்கத்தையும் கூறுகின்றார். அவற்றில் திருமழிசை பிரான், நம்மாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார்—இந்த ஐவர்களைப் பற்றின பாடல்களில் அவரவர் அருளிச் செய்த பிரபந்தங்களைத் தனித்தனியே எடுத்து, அவற்றின் தனித்தனித் தொகை இலக்கத்தைக் கூறியுள்ளார். திருமழிசை யாழ்வாரின் நான்முகன் திருவந்தாதியில் 96 பாசுரங்களும், திருசந்த விருத்தத்தில் 120 பாசுரங்களும் உள்ளன என்று கூறும் முறையில்[3] பிரபந்தங்களின் தொகை இரண்டென்றும், அவற்றின் பாசுரங்களின் தொகை 96+120 =216 என்றும் அறுதியிடுகின்றார். நம்மாழ்வாரின் திருவிருத்தத்தில் 100 பாசுரங்களும், திருவாசிரியத்தில் 7 பாசுரங்

3. தே. பி. 371; பி. சா.5.

களும், பெரிய திருவந்தாதியில் 87 பாசுரங்களும், திருவாய் மொழியில் 1102 பாசுரங்களும் உள்ளன என்று குறிப்பிட்டுக் காட்டும் முறையில்[4] அவர் அருளிய பிரபந்தங்கள் நான்கென்றும் அவற்றின் பாசுரங்களின் தொகை 100+7+87+1102=1196 என்றும் வரையறுத்துக் காட்டுகின்றார். கோதைப் பிராட்டியின் திருப்பாவையில் 30 பாசுரங்களும் நாச்சியார் திருமொழியில் 143 பாசுரங்களும் உள்ளன என்று எடுத்துக்காட்டும் முறையில்[5] இவர் அருளிய பிரபந்தங்கள் இரண்டென்றும், பாசுரங்களின் தொகை 30+143=173 என்றும் உறுதி செய்கின்றார். தொண்டரடிப் பொடிகளின் திருமாலையில் 45 பாசுரங்களும் திருப்பள்ளி எழுச்சியில் 10 பாசுரங்களும் உள்ளன என்பதைக் கூறும் முறையில்[6] இவர் அருளிய பிரபந்தங்கள் இரண்டென்றும் பாசுரங்களின் தொகை 45+10=55 என்றும் உறுதி செய்கின்றார். இறுதியாக திருமங்கை மன்னனின் பெரிய திருமொழியில் 1084 பாசுரங்களும், திருக்குறுந்தாண்டகத்தில் 20 பாசுரங்களும், திருநெடுந்தாண்டகத்தில் 30 பாசுரங்களும், திருஎழு கூற்றிருக்கையில் ஒன்றும், சிறிய திருமடலில் 40 (நூல் 38+பிற்சேர்க்கை 2) பாசுரங்களும், பெரிய திருமடலில் 78 பாசுரங்களும் என்பதைக் காட்டும் முறையில்[7] இவர் திருவாய் மலர்ந்தருளிய பிரபந்தங்கள் ஆறு என்றும், இவர் அருளிய பாசுரங்களின் தொகை 1084+20+30+1+40+78=1253 என்றும் அறுதியிட்டு உரைக்கின்றனர். இத்தொகையைப் பிரபந்தசாரத்தின் இன்னொரு பாடலிலும் அறுதியிடுகின்றார். இதனை,

---

4. ஷை 372; ஷை-6.
5. ஷை 376; ஷை 10.
6. ஷை 377; ஷை 11.
7. ஷை 379; ஷை 13.

அத்தனுயர் வேங்கடமாற் காயி ரத்தோ
டானவிரு நூற்றோரைம் பத்து மூன்று[8]

[அத்தன் - தந்தை; வேங்கடம்-திருமலை; மால்-திருமால்.]

என்ற பாசுரப் பகுதியில் கண்டு தெளியலாம். இந்த ஐவரின் 'தொகை இலக்கத்தைக்' காட்டின முறை ஈண்டு விளக்கப் பெற்றது.

அடுத்து, முதலாழ்வார்கள் மூவர், மதுர கவிகள், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், திருவரங்கத்தமுதனார் என்ற இவ்வெழுவர் பாசுரங்களில், இவர்கள் ஒவ்வொரு பிரபந்தத்தையே செய்தவர்களாகையால் 'வகை' எதுவுமின்றி அதனதன் தொகை இலக்கமே கூறப் பெறுகின்றது. இதனையும் காட்டுவேன்.

| | |
|---|---|
| பொய்கையார் (வையந்தகளி) | 100 |
| பூதத்தார் (அன்பேதகளியா) | 100 |
| பேயாழ்வார் (திருக்கண்டேன்) | 100 |
| மதுர கவிகள் (தேவுமற்றறியேன்) | 11 |
| கோழிக்கோன் (திருமொழி) | 105 |
| திருப்பாணாழ்வார் (அமலனாதிபிரன்) | 10 |
| அமுதனார் (அந்தாதி) | 108 |

என்பதை[9] முறையே காணலாம்.

ஆயினும் பெரியாழ்வாரைப் பற்றின பாடலின்,

ஏரணிபல் லாண்டுமுதல் பாட்டு நானூற்
றெழுபத்தொன் றிரண்டுமெனக் குதவு வாயே.[10]

8. ஷை 382; ஷை 16.

9. தே. பி. (368, 369, 370, 373, 374, 378, 380); பி. சா. (2, 3, 4, 7, 8, 12, 14) காண்க.

10. தே. பி. 375; பி. சா. 9.

என்ற பகுதியில் வகை எதுவுமின்றித் தொகைமட்டிலும் 'நானூற்றெழுபத்தொன்றிரண்டு' (473) என்று கூறியுள்ளதை நோக்கும்போது தேசிகரின் (வடகலை சம்பிரதாயத்தின் தலைவர்) திருவுள்ளத்தில் **'திருப்பல்லாண்டு'** தனிப் பிரபந்தம் அன்று என்று இருந்தமை தெளிவாக அறிய முடிகின்றது. இவர் "இராமாநுச நூற்றந்தாதி"யைச் சேர்த்து திவ்வியப்பிரபந்தம் நாலாயிரம் பாசுரங்கள் கொண்டது என்ற கொள்கையினர். தேசிகருக்குக் காலத்தால் சற்றுப் பிற்பட்டவரான அப்பிள்ளையாசிரியர் (தென்னாச்சாரியார் சம்பிரதாயத்தினர்)[11] **திருப்பல்லாண்டு** தனிப் பிரபந்தமாகக் கொண்டவர். இதனை

**நல்லதிருப் பல்லாண்டு நான்மூன்றோன் வாழியே!**
**நானூற்றறு பத்தொன்றும் நமக்குரைத்தான்**
**வாழியே.**[12]

என்று பெரியாழ்வாரைப்பற்றியதமது வாழித் திருநாமத்தில் பிரித்துக் கூறியிருப்பதனால் அறியலாகும்.

இரு சாரார் கருத்துகளையும் விருப்பு வெறுப்பின்றி ஆராய்வது நம் கடமையாகின்றது.

1. திவ்வியப்பிரபந்தத்தை நாலாயிரமாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதியிலும் இந்த இந்தப் பிரபந்தம் இந்த

---

11. இவர்கள் இராமாநுச நூற்றந்தாதியை நீக்கித் திவ்வியப் பிரபந்தம் நாலாயிரம் பாசுரங்களையுடையது என்ற கொள்கையினர். இந்த இரு சம்பிரதாயத்தினர் கணக்கிடும் முறையை 'தெய்வத்தமிழ்' (சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு—முதல் பதிப்பு—1975) என்ற தொகுப்பில் 'வைணவ சமய நூல்கள்' என்ற 10-வது கட்டுரையில் (பக். 472—475) விரிவாக விளக்கப் பெற்றிருப்பதைக் கண்டு தெளிக.

12. வாழித் திருநாமம்-7.

இந்த வரிசையில் இருக்க வேண்டிய முறையை வரையறை செய்து அடைவு படுத்தியவர் நாதமுனிகள். அவர் திருப் பல்லாண்டைத் தனிப் பிரபந்தமாகக் கருதியிருந்தால் 'வண்ண மாடங்கள்' முதல் 'மெச்சூது' முடிய பத்துத் திருமொழிகளைச் சேர்த்து ஒரு தொகுதியாக்கி 'பெரியாழ் வார் திருமொழி — முதல் பத்து' என்று வகுத்திருக்க வேண்டுமேயன்றி 'ஒன்பது' திருமொழிகளை வைத்துப் 'பத்து' என்று பெயரிடக் காரணம் எதுவும் இல்லை. அவர் அங்ஙனம் செய்யாமல் 'வட்டு நடுவே' என்ற திரு மொழியுடன் ஒரு பத்தாக்கியுள்ளார். திவ்வியப்பிர பந்தத்தில் 'பத்து' என்ற பிரிவு இருக்குமறையில் மண்டலங் களின் உட்பிரிவுகள் வகுக்கப் பெற்றுள்ள மரபினை யொட்டியது. அங்கு அந்த உட்பிரிவுகள் ஸூக்தம் எனப் படுகின்றன. 'ஸூக்தம்' (ஸு + உக்தம் = திரு + மொழி) என்பதே தமிழில் 'திருமொழி' என வழங்கப் பெறுகின்றது.

2. பல திருமொழிகளுள்ள பிரபந்தங்களே பெரியாழ் வார் திருமொழி, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, பெரிய திருமொழி என்றிப்படி திருமொழி என்ற பெயர் பெற்றன. நம்மாழ்வார் ஆயிரமும் நம்மாழ்வார் திருமொழி என்றே கூறப் பெறலாமாயினும், அதன் சிறப்புத் தோன்ற 'திருவாய் மொழி' என வழங்கப் பெற்றது என்பது ஈண்டு அறிதற்பாலது. எனவே, திருமொழி திருவாய் மொழி என்ற பெயர்கட்குக் காரணமான பெயரையுடைய திருமொழிகளின் தொகையைக் கொண்டு முதல் பத்து. இரண்டாம் பத்து — என்றிப்படி வரையறை ஏற்பட்டது என்பது தெளிவு. இம்முறையால் 'பெரியாழ்வார் திரு மொழி' முதல் பத்துக்கு. இரண்டாம் பத்து முதலான வற்றைப் போலும், 'பெரிய திருமொழி;, 'திருவாய் மொழி' இவற்றின் பத்துகளைப் போலும் வழக்கமாகப் பத்துத் திருமொழிகள் இருந்தே தீரவேண்டும். ஆயின் ''பெரி யாழ்வார் திருமொழி' ஐந்தாம் பத்தில் நான்கு திரு

மொழிகள் தாமே உள்ளன. அதனைப் போலவே பத்துக்குக் குறைந்த ஒன்பது திருமொழிகளே உள்ள முதல் பத்தினை ஏன் 'பத்து' என்று வழங்குதல் கூடாது?'' என்று வினவலாம். பத்துப் பத்துத் திருமொழிகளாகப் பிரித்துக் கொண்டே போய் எஞ்சியுள்ள நான்கு திருமொழிகளை ஒரு பத்தாகக் கொள்வதற்கும், திவ்வியப்பிரபந்தத்தின் தொடக்கத்திலேயே அங்ஙனம் கொள்வதற்கும் வேறுபாடு உண்டு. தான் வரையறுத்த கொள்கையை எடுத்த எடுப்பிலேயே எவரும் கைவிடார். தவிர, முழுப்பத்து ஒன்றுக்குமேல் இருக்கும் இடங்களில்தான் ஓதுதல் முதலான வசதிகளைக் கருதித் திருமொழிகளைப் பத்துப் பத்தாகப் பிரித்தனர் என்பது கருதற்பாலது. ஆனால் பதினான்கு திருமொழிகளே உள்ள நாச்சியார் திருமொழியைப் பத்துப் பத்தாகப் பிரிக்காததற்குக் காரணம் முழுப் பத்து ஒன்றுக்கு மேற்படாதிருப்பதே காரணமாகும் என்பது ஈண்டு நினைத்தல் தகும். எனவே, திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் என்று கொள்வதற்கு ஏது ஒன்றும் இல்லை.

3. பெரியாழ்வாரைப் பற்றிய பிரபந்த சாரப் பாசுரத்தில் (9) "அவர் செய்த பிரபந்தம் இரண்டாயிருந்தும் அவற்றைத் தனித் தனியே எடுத்துப் பாட்டுகளின் எண்ணிக்கை கூறப் பெறவில்லை. இரண்டின் மொத்த எண்ணிக்கையே கூறப் பெற்றிருக்கிறது'' என்றால் அந்த நியமத்திற்குப் பங்கம் வரும். ஆகையால் திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் என்று கருதப் பெறவில்லை என்பது திண்ணம். ஒவ்வோர் ஆழ்வார் செய்த பாசுரங்களின் மொத்த எண்ணிக்கையைக் கூற வந்தவை பிரபந்த சாரத்தின் 15, 16 ஆகிய இரண்டு பாசுரங்களாகையால் அவற்றிற்கு முற்பட்ட பாசுரத்தில் அதற்குக் காரணமே இல்லை என்பதையும் ஈண்டுக் கவனித்தல் வேண்டும்.

4. திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் என்று தேசிகன் கருதினாரென்றால் அது பிரபந்த சாரத்தின் 17 ஆம்

பாட்டில் பிரபந்தங்கள் மொத்தம் இருபத்து நான்கு என்றதோடு முரணுகின்றது. இதற்கு ''அந்தப் பாசுரம் இடைச் செருகல். தேசிகன் செய்ததன்று. ஆகையால் அதோடு விரோதம் காட்டுவது பொருந்தாது'' என்று சமாதானம் கூறப்படுகின்றது. 17 ஆம் பாசுரத்தில் 'ஒரொருவர்' என்ற பிரயோகம் அவ்வளவு பாதகம் அல்ல என்று அப்பாசுரத்தைப் பிரமாணிக்கமாகக் கொள்ளும் கருத்து ஒப்புக் கொள்ளப் பெற்றுள்ளது. அந்தக் கருத்தில் திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தமானாலும் மொத்த எண்ணிக்கை கூறப்பெற்றுள்ளது என்ற சமாதானம் தவறு என்பதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். 17 ஆம் பாடல் இடைச்செருகல் என்று பேசச் செய்வது அங்குள்ள 'இருபத்து நான்கு' என்ற சொற்றொடர்தான். அந்தப் பாசுரத்தில் பிரபந்தங்கள் 24 என்பதுதான் முக்கியம். அது திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் என்ற கொள்கைக்கு முரணான காரணமாக இருப்பதால் அப் பாட்டு இடைச்செருகல் எனப்படுகின்றது.

5. திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தமானால் பெரியாழ்வார் திருமொழியில் முதல் பத்து பத்தாகாது, ஒன்பதேயாகும் என்பதற்குக் கூறப்பெறும் சமாதானம்: ''நூறு பாசுரங்களை ஒரு பத்தாக வழங்குவது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம். அதன்படி 'வண்ண மாடங்கள்' முதலாக 'மெச்சூது' தொடங்கும் வரையில் நூறு பாசுரங்கள் குறையாமலிருப்பதால் முதற் பத்தின் பிரிவு குற்றமற்றதே. திருப்பல்லாண்டைச் சேர்த்தால் நூற்றுப் பத்துப் பாசுரங்கட்கு மேற்படும். இதனால் திருப்பல்லாண்டு தனி நூலாகும்'' என்பது. இத்தகைய சமாதானம் சிறிதும் பொருத்தமற்றது. திருவாய்மொழியில் ஒவ்வொரு பத்திலும் 110 பாசுரங்கள் உள்ளன; இரண்டாம் பத்தில் 112 பாசுரங்கள் இருக்கின்றன. இவற்றைப் பத்தாக வழங்குகின்றவர்கள் ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தைச் சேராதவர்கள் என்று கொள்ள நேரிடும். இது பொருத்த

அசம்பாவிதமாகிவிடும். திருப்பல்லாண்டுடன் தொடங்குகின்ற பெரியாழ்வார் திருமொழி முதற் பத்திலும் 110 பாசுரங்கள் இருக்குமாகையால் அது தனிப் பிரபந்தம் என்பதற்கு இது பிரமாணமாக மாட்டாது.

6. இன்னொன்றும் ஈண்டு கருதத் தக்கது. நூறு பாசுரங்களுக்குப் பத்து என்று வியவகாரம் என்பது மிகவும் நகைப்புக்குரியது. நூறை நூறு என்னாமல் ஏன் பத்து என்றால் சமாதானம் கூறவேண்டுமே. கூறமுடியுமா? நூறு பாசுரங்களில் பத்துப் பத்துப் பாசுரங்கள் இருப்பதால் பத்து என்ற வியவகாரம் என்னில் ஐந்து இருபது அல்லது இருபது ஐந்து இருப்பதால் ஐந்து என்றோ இருபது என்றோ வியவகாரம் இருக்கலாமே. அஃது அவர் விருப்பம். ஆகையால் அப்படி வியவகரித்தார் எனில் காரணம் எதுவுமில்லாமல் வியவகரித்தார் என்று முடிகின்றது. இனி நூறு ஒரு பத்து என்று கருதியவர் சரியாக நூறு இருக்க வேண்டுமென்று கருதினாரா அல்லது சிறிது அதிகமாயும் இருக்கலாமென்று கருதினாரா? ஒவ்வொரு பத்திலும் நூற்றுக்கு அதிகமிருப்பதால் முதலில் கூறிய கருத்து கூடாது. இரண்டாவது கருத்தில் நூறு நூறாகப் பிரிக்கப் புகுந்தவர் ஒவ்வொரு பாகத்திலும் அதிகமாயும் இருக்கலாமென்று ஏன் கொள்ளவேண்டும்? திருமொழி நடுவில் நூறு முடிந்துவிடுகின்றது. 'வட்டு நடுவேயின்' ஐந்தாம் பாட்டோடு நூறாகிவிடுகின்றது. மிகுந்த ஐந்தை மேல் சேர்ப்பதில் பொருத்தம் இல்லை. அதனால் அந்த ஐந்தும் இந்த நூறிலேயே வைக்கப்படுகின்றதென்னில், இந்தச் சங்கடம் இருப்பதால் நூறு நூறாகப் பிரிக்கும் எண்ணம் அவருக்கு இல்லையென்றே கொள்ளவேண்டும். பத்து திருமொழிகளை ஒருபத்தாக்கினார் என்றால் எந்த விதக் குற்றமும் சங்கடமும் இல்லையாகையால் இதுவே பிரமாணிக்கம் என்பது தெளிவு.

7. பெரியவாச்சான் பிள்ளை போன்ற உரை மன்னர்களும் திருப்பல்லாண்டுடன் சேர்த்து பெரியாழ்வார்

திருமொழி ஒரே பிரபந்தம் என்ற திருவுள்ளம் கொண்டவர்கள். பெரியாழ்வார் திருமொழியின் இறுதிப் பாசுரமாகிய 'வேயர் தங்குலத்து' (5.4:11) என்கின்றதில் 'கோயில் கொண்ட கோவலன்' என்ற சொற்றொடருக்கு வியாக்கியானம் செய்யுமிடத்தில்,

> 'திருப்பல்லாண்டு தொடங்கி இவ்வளவும் இவர் மனத்திலிருக்கின்ற கிருஷ்ணன் தான் பிறந்த படியையும் வளர்ந்த படியையும் கேட்டான்'

என்று பெரியவாச்சான் பிள்ளை கூறியிருப்பதனாலும் இதற்கு முன்னர் 'திருப்பல்லாண்டின் அர்த்தத்தை நிகமிக்கின்றார்' என்று பன்முறை கூறியிருப்பதனாலும் ஒரு பிரபந்தம் ஆனால்தான் 'தொடக்கம்' என்பதும் 'நிகமனம்' என்பதும் சேருமாதலாலும் இவர் கருத்துப்படி 'திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தமன்று' என்பது உறுதிப்படுகின்றது.

8. மேலும் மணவாள மாமுனிகள் அருளிய 'உபதேச ரத்ன மாலை'யில் 'பல்லாண்டு பாடிய நம் பட்டர்பிரான்' (16) 'ஆதி திருப்பல்லாண்டானதுவும்' (19) 'உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலை' (20) என்ற சொற்றொடர்களில் வரும் 'திருப்பல்லாண்டு' என்பது அது தனிப் பிரபந்தம் என்பதை உறுதிப்படுத்துகின்றது என்றும், திருக்கோயில்களில் ஏதாவது ஒரு பிரபந்தம் ஓதநேரிடும் போதெல்லாம் 'திருப்பல்லாண்டு' முதலில் ஓதப்பெற்றும் அதன் பின்னரே அக்குறிப்பிட்ட பிரபந்தம் ஓதப்படுகின்றது என்ற வழக்கம் இருப்பதாலும் 'திருப்பல்லாண்டு தனிப் பிரபந்தம் என்பது மேலும் வலியுறுகின்றது' என்றும் கூறுகின்றனர். மேற் குறிப்பிட்ட 'உபதேசரத்ன மாலைப்' பாசுரங்களில் இரண்டாவது தொடரிலுள்ள 'திருப்பல்லாண்டு' வேதத்திற்கு 'ஓம்' என்ற பிரணவம் போல திவ்வியப் பிரபந்தத்தின் பொருளுக்கெல்லாம் சுருக்கமாயும் மங்கள ரூபமாயும் இருப்பதாகக் கூறுகின்றதே

யன்றி, தெளிவாக அஃது ஒரு பிரபந்தம் எனக் கூறாமை யாலும் அங்ஙனமே திருக்கோயில்களில் இருந்து வரும் வழக்கும் அது தனிப் பிரபந்தம் என்பதற்குத் தக்க ஆதாரம் இல்லாமையாலும் இரண்டையும் தக்க சான்று களாகக் கொள்வதற்கில்லை. மேலும் 'உபதேசரத்ன மாலை' ஆழ்வார்கள் அவதரித்த நாட்கள் மாதங்கள் தலங்கள் முதலிய செய்திகளைக் கூறுகின்றதே யன்றி அவர்கள் அருளியுள்ள பிரபந்தங்களைப் பற்றி (பிரபந்த சாரம் போல்) யாங்கணும் கூறவில்லை. ஆயினும் 'திருப் பல்லாண்டு' என்னும் திருமொழி அகண்ட திவ்வியப் பிரபந்தத்தின் தொடக்கத்தில் முன்வாசல் போல் இருப்ப தாலும், அது வேதத்தின் பிரணவம்போல் திகழ்வதாலும் அதற்குத் தனிப் பெருமை உள்ளது. திருக்கோவில்களில் முதலில் ஓதப் பெறுவதற்கு இதனையே காரணமாகவும் கொள்ளலாம். 'திரு' என்ற அடைமொழியால் இது சிறப்பிக்கப் பெறுவதற்கும் இதன் முதல் நிலையே காரணமாகும்.

இங்ஙனம் அசைக்க முடியாத பல ஏதுக்களைக் கொண்டு பெரியவாச்சான் பிள்ளை முதலானோர்க்கும் "திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழியின் தொடக்கத் திருமொழியே யன்றித் தனிப் பிரபந்தமன்று" என்பது தெளிவாகின்றது. இதன் ஒப்பற்ற பெருமைக்கு 'தனிப் பிரபந்தம்' என்ற நிலையின்மையால் எவ்வாற் றானும் குறை நேராது.

## 5. பிள்ளைப் பெருமாள் அவதாரம்

திண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டி நாட்டிலுள்ள பதினெட்டுத்திவ்விய தேசங்களுள் திருக்கோட்டியூரும் ஒன்று. இத்திருப்பதி இராமநாதபுரம் மாவட்டத்தில் (இப்போது இம்மாவட்டம் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் என்று திருநாமம் பெற்றுள்ளது) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர். மானாமதுரை-திருச்சி இருப்பூர்திப் பாதையில் 'கல்லல்' என்ற நிலையத்தில் இறங்கி எட்டுக் கல் தொலைவு மேற்கு நோக்கிச் சென்று இவ்வூரை அடையலாம்; அல்லது சிவகங்கையில் இறங்கிப் பேருந்துமூலம் வடக்கு நோக்கிப் பதினாறு கல் பயணம் செய்தும் இவ்வூர் சென்று சேரலாம். மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, காரைக்குடியிலிருந்து வருபவர்கள் திருப்புத்தூர் (பல சாலைகளின் சந்திப்பு) வந்து அங்கிருந்து தெற்கு நோக்கிச் சிவகங்கை செல்லும் பேருந்தில் ஏறிச் சென்று இவ்வூருக்குச் செல்லலாம். இதுவே சிறந்த வழி.

இவ்வூர் 'திருக்கோட்டியூர்' என்று திருநாமம் பெற்றதற்குக் காரணம் என்ன? மணிமுத்தா நதிக்கரையிலுள்ள இத் திருப்பதி முற்காலத்தில் கதம்ப முனிவரின் புண்ணிய ஆசிரமமாக இருந்தது. இரணியன் மூவுலகங்களையும் ஆட்சி செய்து தேவர்களை நைகின்றான். அவனை எப்படி ஒழிப்பது என்று வழி அறியாது திகைக்கின்றனர் தேவர்கள். கதம்ப முனிவர் உறையும் இத்திருத்தலத்தில் அரக்கர் எவரும் புக முடியாது சாபம் இருந்ததால், மும்மூர்த்திகளும்

தேவர்களும் சூழ்ந்து ஆழ்ந்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர இவ்விடத்தைத் தேர்ந்து எடுத்து ஒன்று கூடுகின்றனர். திருமால் நரசிம்மாவதாரம் எடுத்துத் தன் வள்ளுகிரினால் இரணியனை வதைப்பது என்று முடிவு செய்கின்றனர். தேவர்கள் யாவரும் கோஷ்டியாகச் (கூட்டமாகச்) சேர்ந்து ஆலோசனை செய்த இடமாதலின் இதனைக் 'கோட்டியூர்' என்று வழங்குகின்றனர். 'திரு' என்ற அடையுடன் இவ்வூர் **'திருக்கோட்டியூர்'** என்று திருநாமம் பெற்று வழங்கலாயிற்று. இக்காரணம் பற்றியே இத்தலத்தில் மும்மூர்த்திகளும் காட்சி அளிக்கின்றனர் போலும்.

ஸ்ரீவல்லப பாண்டியனின் அரச புரோகிதராகவும் அமைச்சராகவும் இருந்த **செல்வநம்பி** இந்த ஊரைச் சார்ந்தவர்.[1] இவர் பெரியாழ்வாரின் நெருங்கிய தோழர். ஒரு சமயம் செல்வநம்பியைப் பார்ப்பதற்குத் திருக்கோட்டியூர் வருகின்றார் விஷ்ணுச் சித்தர். இங்கே கோயில் கொண்டிருக்கும் சௌமிய நாராயண மூர்த்தியைத் தரிசித்துக் கொண்டிருக்கும்போது அந்தத் திவ்விய மங்கள விக்கிரகம் கிருஷ்ணாவதாரத்தை நினைவூட்டுவதாக அமைகின்றது விஷ்ணுச் சித்தருக்கு. இவர் மனக்கண்ணுக்கு அந்தத் திருக்கோயில் நந்தகோபன் மாளிகையாகவும், அந்த ஊர் ஆயர்பாடியாகவும் மாறிவிடுகின்றன பெரியாழ்வார் திருவுள்ளத்தில்; நின்றும் இருந்தும் நடந்தும் கூத்தாடியும் கோலம் காட்டும் சௌமிய நாராயணன் ஆயர்கட்கும் ஆய்ச்சியர்களுக்குமிடையே குழந்தைக் கண்ணனாக நேர் காட்சி தருகின்றான். இதைப் பெரியாழ்வார் கண்ணனின் பிறந்த நாள் காட்சிகளாகக் கண்டு நமக்குக் காட்டுகின்றார்; தானும் யசோதையாக மாறிக் காட்சியை வழங்குகின்றார். திருக்கோட்டியூரில் முதன்முதலாக ஏற்பட்ட பக்தியநுபவம் சொந்த ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூரிலும் அடிக்கடி ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் ஊகிக்கலாம்.

---

1. பெரியாழ். திரு. 1.1 : 10.

சௌமிய நாராயணன் நந்தகோபர் திருமாளிகையில் கிருஷ்ணனாக அவதரிக்கின்றான். இது திருவாய்ப்பாடியி லுள்ளாருக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது; அது கரை புரண்டு ஓடுகின்றது. இதனால் அவர்கள் ஓடுகின்றனர்; ஓடும்போதே விழுகின்றனர். ஒரே அவசரம்! ஒரே ஆனந்தம்! ஒரே ஆரவாரம்! எவ்வளவோ குதூகலத்துடன் ஓர் அரிய பொருளைத் தேடி வருகின்றவர்களைப் போல் வருகின்றனர் சிலர்! 'எங்கே நமது குட்டி ராஜா?' என்று கேட்டுக் கொண்டு வருகின்றனர் சிலர்! சிலரது மகிழ்ச்சி வசனத்தில் அடங்காமல் பாட்டாகப் புறப்படுகின்றது. சிலர் பல்வேறு இசைக்கருவிகளை இயக்கி தம் மகிழ்ச் சியைப் புலப்படுத்துகின்றனர். அந்த இசை முழக்கங்களால் ஆவேசம் கொண்டவர் போலச் சிலர் கூத்தாடுகின்றனர்.

ஆனந்தம் அதிகரித்து அறிவையும் தடுமாறச் செய் கின்றது. எண்ணெயையும் மஞ்சள் பொடியையும் ஒருவர் மேல் ஒருவர் தூவிக் கொள்ளவே அவ்விரண்டும் கீழே விழுந்து ஒன்று சேர்ந்து அந்தத் திருமாளிகை முற்றம் முழு வதையும் சேறு மயமாக ஆக்கிவிடுகின்றன.

**எண்ணெய் சுண்ணம்**
**எதிர்எதிர் தூவிட**
**கண்நல் முற்றம்**
**கலந்து அளறு ஆயிற்றே (1.2:1)**

*[அளறு-சேறு]*

சிலர் நெய்யையும் பாலையையும் தயிரையும் உறிகளோடு அறுத்துக் கொண்டு வந்து வருகின்றவர்கள் போகின்றவர் கட்கெல்லாம் வாரி வாரி வழங்கி அந்த அடுக்குச் சட்டிகளை உருட்டி நின்று தலைகால் தெரியாமல் நடனம் ஆடு கின்றனர்.

**உறியை முற்றத்து உருட்டிநின்(று) ஆடுவார்,**
**நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்,**
**செறிமென் கூந்தல் அவிழத் திளைத்(து) எங்கும்**
**அறிவ ழிந்தனர், ஆய்ப்பாடி ஆயரே! (1.2:4)**

*[செறி-அடர்ந்த; மென்-மெத்தென்ற]*

கூந்தல் அவிழ்ந்தாட அசைத்து அசைத்து ஆடிக்கொண்டே வரும் அந்த ஆய்ச்சிமார் 'இன்னது செய்கின்றோம்!' என்பதையே அறியாதவர்களாய்த் தங்களையும் உலகத்தையும் மறந்து விடுகின்றார்கள். இப்படி ஆய்ப்பாடி ஏதோ ஒரு சிறப்பான அன்புச் சூழலில் அகப்பட்டதுபோல் கிறுகிறுத்துப் போய்விடுகின்றது.

குழந்தை பிறந்ததற்கு 'வாழ்த்துச் சொல்லவேண்டும்' என்ற ஆர்வத்தால் புகுவாரும், வெளியில் வருவாருமாகப் பெருங்கூட்டம் நந்தகோபர் திருமாளிகையில் திரளுகின்றது. அவர்களில் சாமுத்திரிகா சாத்திரம் தெரிந்தவர்கள் 'இவ்வளவு அழகுள்ள ஆண் குழந்தையைப் பார்த்ததே இல்லை; ஒணத்தான் உலகாளும்!' என்று சொல்லிக்கொண்டு போகும் வார்த்தைகள் காதில் விழுகின்றன (1.2:3).

கொப்பரையில் மணப்பொருள்களும் மருந்துச்சரக்குகளும் இட்டுக் காய்ந்து குளிர்ந்த தண்ணீர் வைக்கப் பட்டுள்ளது. கைகால்களை மெள்ள நீட்டி, நிமிரச் செய்து 'நீண்டு நிமிர்ந்தான்!' என்று குழந்தையைக் கொண்டாடிப் பசு மஞ்சள் உரைத்துப் பூசிப் பைய நீராட்டுகின்றாள் யசோதைப்பிராட்டி. பிறகு 'நாக்கை நீட்டு!' என்று சொல்லிக்கொண்டே, நாக்கு வழிக்கத் தொடங்குகின்றாள். பவளம் போன்ற வாயைத் திறக்கின்றது குழந்தை. 'வாய்க்கும் நாவுக்கும் வேற்றுமை தெரியாத பச்சைப் பிள்ளை' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தாய் குழந்தையின் வாயை நோக்கும்போது—ஆ! அது என்ன கனவா? நனவா?—சகல உலகங்களையும் காண்கின்றாள் அந்தத் திருவாய்க்குள்ளே!

> கையும் காலும் நிமிர்த்துக் கடாநீர்
> பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
> ஐய! நாவழித் தாளுக்(கு)அங் காந்திட
> வையம் ஏழுகண் டாள்பிள் ளை! வாயுளே! (1.2:6)

[கடாரம்-கொப்பரை; ஐய-அதிசயம்; அங்காந்திட-வாய் திறக்க]

பார்த்தனுக்குப் பரந்தாமன் திவ்விய சட்சைக் (Divine eye) கொடுத்து தன்னுடைய பேருருவத்தைக் காட்டினாப் போலே இங்கு யசோதைக்கும் தன்னுடைய சுதந்திரமான இச்சையினால் இப்படிக் காட்டியருளினான் குழந்தை யாகிய கண்ணன் எனலாம்.

'பத்துநாளும் கடந்த இரண்டாம் நாள்' ஏதோ வெற்றி கிடைத்ததுபோல் எங்கே பார்த்தாலும் தம்பங்கள் நாட்டிக் கொடி கட்டித் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது ஆய்ப்பாடி. இது குழந்தைக்குத் திருநாமம் சூட்டும் நாள். கோகுலத்து இடையர்கள் யாவரும் குழந்தைக்குக் கிருஷ்ணன் என்று திருநாமமிட்டு அக்குழந்தையைத் தங்கள் தங்கள் கையிலே எடுத்துக் கொண்டு ஆனந்தம் பொங்கி வழிய நிற்கின்றனர் (1.2:8). ஆனால், இல்லத்தினுள் அந்தப்புரத்தில், யசோதைப் பிராட்டி தன் தோழியிடம் குழந்தையைக் குறித்து ஏதோ குற்றப்பத்திரிகை படிக்கின்றாள். அதையும் கேட்போம்.

கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்;
எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும்;
ஒடுக்கிப் புல்கில் உதரத்தைப் பாய்ந்திடும்;
மிடுக்கி லாமையால், நான்மெலிந்தேன், நங்காய்!
—(1.2 : 9)

[தொட்டில்-(இங்கே) துணித்தொட்டில், தூளி; மருங்கு-இடுப்பு; புல்கில்-அணைந்தால்; உதரம்-வயிறு; மிடுக்கு-வலிமை.]

யசோதையின் பேச்சு இது: "நங்காய்! தூளியில் கிடத்தினால், அது கிழிந்துபோகும்படி உதைக்கின்றது குழந்தை!" என்கின்றாள். 'ஐயோ, கால் நோகுமே! எடுத்துக்கொள்வோம்' என்று ஒக்கலில் வைத்துக் கொண்டால், அப்போதும் குழந்தை இருந்த இடத்தில் இராமல் கிளம்பிக் குதித்து இடுப்பை முறித்து விடுகின்றது.

உடனே, 'துட்டப்பயல்!' என்று ஆசை தீர மார்பில் அணைத்துக் கொண்டால், காலால் வயிற்றிலே பாய்ந்து உதைக்கின்றது. 'அம்மா சக்தி இல்லை எனக்கு! நான் எப்படி மெலிந்து போனேன், பார்!' என்று புகார் செய்யும் தாயைக் காண்கின்றோம். 'இப்படியெல்லாம் சேட்டை செய்யப் பிள்ளைக்குத்தான் சக்தி போதுமா?' என்ற கவலையும் இவளை இளைக்கச் செய்தது என்பது குறிப்பு.

கிருஷ்ணா நுபவத்தில் ஈடுபடும் பெரியாழ்வார் அந்தத் திருமேனியழகைத் திருவடி முதல் திருமுடி வரை (பாதாதி கேசமாக) அநுபவிக்கின்றார், யசோதைப் பிராட்டியின் கண்களாலேயே. மற்றப் பெண்களுக்கும் அந்தக் குழந்தையைக் காட்ட விரும்பிய யசோதைப் பிராட்டி போலவே, இவரும் தாம் கண்ட அழியா அழகு என்னும் தத்துவத்தை அநுபவ யோக்கியரான பிறருக்கும் 'காணீர்! காணீர்!' என்று காட்ட விரும்புகின்றார். யசோதை தானே சொல்லுகின்ற பாசுரங்களாக அருளிச் செய்தாலும் இடையில் ஆழ்வார் தமது தன்மையும் தோன்றுமாறும் அருளிச் செய்கின்றார்.

திருவடியை முதலில் அருளிச் செய்ததன் காரணம் என்ன?

'பிராட்டியும் அவனும் விடினும் திருவடிகள் விடாது, திண்கழலாயிருக்கும்'.

'சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை, ப்ரஜை முலையிலே வாய்வைக்குமாப் போலே'[2]

[திண்கழல்-உறுதியான கழல்; சேஷி-தலைவன், சேஷபூதன்-அடிமை; ப்ரஜை-குழந்தை.]

என்ற முமுட்சுப்படி வாக்கியங்கள் இதனைத்தெளிவாக்கும். இதன் காரணமாகவே திருப்பாணாழ்வாரும் 'கமல

2. முமுட்சுப்படி-146, 47.

பாதத்தில்' முதலில் கண் வைத்து திருமுடி வரையில் செல்லுகின்றார். அதுபோலவே இவரும் 'பாதகமலங்களில்' முதலில் கண் வைத்து 'குழல்கள்' வரை காட்டிச் செல்லுகின்றார்.

ஆழ்வார்கள் அனைவருக்குமே எம்பெருமான் திருவடி 'தேனே மலரும் திருப்பாதம்' ஆகும். இப்படிப்பட்ட தனது திருவடியிலுள்ள தேனைப் பருகுவதற்காகவும், தனது திருவயிற்றில் கிடக்கும் உலகங்களெல்லாம் உய்ய வேண்டும் என்பதற்காகவும் கண்ணன் தனது திருவடிகளில் ஒன்றை எடுத்து வாயிலே வைத்து சுவை பார்த்துக் கொண்டிருக்கின்றான். இதைக் காணும் யசோதைப் பிராட்டி மிக மகிழ்ந்து தன் மகிழ்ச்சியைப் பிறரும் கண்டு மகிழ வேண்டும் என்று எண்ணித் தன்னருகிலுள்ள பிற பெண்களைக் கொண்டாடி யழைத்து, 'நீங்கள் இக்குழந்தை சுவைத் துண்ணும் இப்பாதக் கமலங்களைப் பாருங்கள்' என்று அவர்கட்குக் காட்டுகின்றாள்.

**சீதக் கடலுள் அமுதன்ன தேவகி**
**கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த**
**பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்**
**பாதக் கமலங்கள் காணீரே!**
**பவள வாயீர் காணீரே!** (1.3 : 1)

[சீதம்-குளிர்ச்சி; குழல்-தலைமயிர்.]

அடுத்து, பாதக்கமலங்களில் உள்ள பத்து விரல்களையும் காணுமாறு பணிக்கின்றாள். கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன நவரத்தினங்கள். கால்களுக்கு இடும் செம்பஞ்சு, மருதாணி என்பனபோல கண்ணனுடைய திருப்பாதங்களில் ஒன்பது விரல்கட்கு நவரத்தின வண்ணத்தையும் மற்றொரு விரலுக்குப் பொன்னிறத்தையும் தீட்டி யசோதை 'என் மணிவண்ணனுடைய திருப்பாதங்களில் பத்து விரல்களும் - நவரத்தினங்களையும் நல்ல

பொன்னையும் ஒளி விளங்க மாறி மாறிப் பதித்து வைத்தாற் போலச் சேர்ந்தனவாய் இலட்சணங்களில் குறையொன்றும் இல்லாது இருப்பதை வந்து பாருங்கள்" என்கின்றாள் (2).

யசோதையின் முலைப்பாலை வயிறார உண்டு படுத்துக் கிடக்கின்றான் கண்ணன். அவனுடைய கணைக் கால்களில் வெள்ளித்தண்டை இலங்குகின்றது.

> **இணைக்காலில் வெள்ளித்**
> **தளைநின்று இலங்கும்**
> **கணைக்கால் இருந்தவா காணீரே!**
> **காரிகையீர்! வந்து காணீரே! (1.3:3)**

*[காரிகையீர் - அழகுடைய பெண்கள்]*

இந்த அழகை வந்து காணுமாறு பணிக்கின்றார் பெண்களை.

அடுத்துக் காண வேண்டுவது முழந்தாள். யசோதை சொல்லுகின்றாள்: "பெண்டிர்காள், நான் சிரமப் பட்டுக் கறந்து காய்ச்சித் தோய்த்துக் கடைந்து வெண்ணையாக்கி உருக்கித் தடாக்களில் சேர்த்து வைத்திருந்த நெய்யை ஒவ்வொரு தடாவாக ஒன்றும் மிச்சமாகாதபடி இவன் வாரியுண்கின்றான். 'இவ்வளவும் உண்டால் செரிக்க மாட்டாதே!' என்கின்ற வயிற்றெரிச்சலாலே கையைப் பிடித்திழுத்து மத்திலே சுற்றிக் கடைந்து பழகின தாம்பாலே அடிப்பதாக நான் ஓங்க, அச்சத்தாலே அதிலிருந்து தப்புவதற்காகத் தவழ்ந்தான். இப்படிப்பட்ட இவனுடைய முழந்தாள்கள் இருக்கும்படியை வந்து காணுங்கள்" என்கின்றாள் (4).

அடுத்து, திருத்துடைகளை வந்து காணுமாறு பணிப்பது:

பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத் துண்டிட்டு
உறங்குவான் போலே கிடந்தஇப் பிள்ளை
மறங்கொள் இரணியன் மார்வைமுன் கீண்டான்
குறங்குகளை வந்து காணீரே!
குவிமுலையீர்! வந்து காணீரே! (5)

*[பேய்ச்சி - பூதனை; குறங்குகள் - துடைகள்]*

என்பது பாசுரம். "முற்காலத்தில் கொடிய இரணியனுடைய மார்பைப் பிளந்தவன். பூதனையினுடைய முலையைச் சுவைத்துப் பாலுண்பவன்போல் அவளுடைய உயிரையும் உண்டவன். இப்போது இங்கு ஒன்றுமறியாதவன்போல் உறங்குகின்றான். இவனுடைய திருத்துடைகளை வந்து பாருங்கள்" என்கின்றாள் (5).

திருத்துடையிலிருந்து இவள் கவனம் முத்தத்திற்குத்[3] திரும்புகின்றது.

**மத்தக் களிற்று வசுதேவர் தம்முடை**
**சித்தம் பிரியாதே தேவகி தன்வயிற்றில்**
**அத்தத்தின் பத்தாம் நாள்[4] தோன்றிய அச்சுதன்**

---

3. முத்தம் - ஆண்குறி. 'மூத்ரம்' என்ற சொல் மூத்திரம் பெய்வதற்கு உறுப்பான அவயவத்தைச் சொல்லுவதாகச் சிலர் கூறுவர். சிறு குழந்தைகளின் குறியைப் பேரன்புடையோர் முத்தமிடுபவர்கள் என்னும் காரணம் பற்றி முத்தம் எனப் பெயராயிற்று என்பதாகவும் மற்றும் சிலர் கருதுவர்.

4. அத்தத்தின் பத்தாம் நாள் — கீழ்முறையில் கணக்கிட்டால் உரோகிணி நட்சத்திரம் வரும்; மேல்முறையில் எண்ணினால் திருவோணம் வரும். இங்ஙனம் இன்ன நட்சத்திரம் என்று வாய்விட்டுச் சொல்லாததற்குக் காரணம் என் என்னில்: இவ்வாழ்வார் மங்களா சாசன பரர்; "கண்ணன் பிறந்த நட்சத்திரத்தை நேராகச் சொன்

முத்தம் இருந்தவா காணீரே!
முகிழ்நகையீர் வந்து காணீரே! (6)

[மத்தம் - மதம்; களிறு - ஆண் யானை; சித்தம் - மனம்; அத்தம் - அஸ்தம்; பத்தாம் நாள் - திருவோணம்; அச்சுதன் - கண்ணன்; முத்தம் - ஆண் குறி; முகிழ்நகை - புன்முறுவல்]

என்பது பாசுரம். 'தேவகியின் திருவயிற்றில் அத்தத்தின் பத்தாம் நாள் திருவவதரித்த கண்ணனின் முத்தம் இருக்கும் நிலையைக் காணுங்கள்!' என்கின்றாள்.

முத்தத்திலிருந்து யசோதையின் கவனம் இடையழகுக்கும் இடையிலுள்ள ஆபரணங்களின் அழகுக்கும் செல்லுகின்றது.

இருங்கைம் மதகளிறு ஈர்க்கின் றவனை
பருங்கிப் பறித்துக்கொண் டோடு பரமன்றன்
நெருங்கு பவளமும் நேர்நாணும் முத்தும்
மருங்கும் இருந்தவா காணீரே!
வாணுதலீர்! வந்து காணீரே! (7)

[இருகை - பெரிய துதிக்கை; ஈர்க்கின்றவன் - வசமாக நடத்தும் பாகன்; பருங்கி - கொன்று; ஓடு - ஓடின; பரமன் - கண்ணன்; நெருங்கு பவளம் - செறியக் கோத்த பவள வடம்; நேர் நாண் - அழகிய அரை நாண்; மருங்கு - இடை]

"இவன் குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளைப் பறித்து யானையினையும், பாகனையும் கொன்று,

---

னால் 'சத்துருக்கள் அபிசார யாகம் (எதிரிக்கு மரணம் உண்டாகுமாறு செய்யும் ஒரு வித யாகம்) செய்வார்களோ?' என்ற அதிசங்கையினால் மறைத்துச் சொல்லுகின்றார் என்று சுவையாகப் பொருள் கூறுவர்.

கம்சன் இருக்கும் இடத்தைத் தேடிக் கொண்டு ஓடின பரம புருடன். செறியக் கோத்த பவளவடமும் அழகிய அரை நாணும் முத்துவடமும் சேர்ந்த இவனுடைய திருவரையின் அழகினைக் காணுங்கள்" என்று கூறி அழைக்கின்றாள்.

அடுத்து, திருவுந்தியின்மீது கவனம் போகின்றது. "இந்தப் பயல் தன்னோடு விளையாட வந்த சிறு பிள்ளைகளின் கூட்டத்தில் தன் வல்லமையைக் காட்டிக் கொம்பு முளைத்த யானைக்குட்டிபோல் தானே முக்கியினால் நின்று விளையாடுகின்றான். இவனுடைய திருவுந்தியின் அழகைக் கண்டு களியுங்கள்" என்று பெண்களின் கவனத்தைத் திருவுந்தியின்மீது திருப்புகின்றாள் (8). "இந்தத் துட்டப் பயல் ஆயர் பாடியிலுள்ள இடையர் மனையெல்லாம் சென்று பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றைக் களவு செய்ததாக ஆய்ச்சிகள் முறையிட, நான் இவனை வயிற்றில் கயிற்றினால் கட்டி உரலோடு பிணித்து வைத்தேன். இந்த உதரத்தை வந்து பாருங்கள்" என்று பணிக்கின்றாள் ஆய்ச்சிமார்களை (9).

'அகலகில்லேன் இறையும்' என்று கூறி அலர்மேல் மங்கை உறையும் திருமார்பைக் கண்டு களிக்குமாறு ஆய மங்கையர்களை அழைக்கின்றாள் யசோதைப் பிராட்டி.

பெருமா உரலில் பிணிப்புண் டிருந்து, அங்கு
இருமா மருதம் இறுத்தஇப் பிள்ளை
குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார்பு இருந்தவா காணீரே!
சேயிழை யீர்வந்து காணீரே! (1.3:10)

[பெருமா - மிகப் பெரிய; பிணித்தல் - கட்டுதல்; இறுத்த - முறித்த; குருமாமணிப் பூண் - கௌத்துவம்; குலாவி - அசைந்து]

என்பது பாசுரம். 'கௌத்துவமணி விளங்கப் பெற்ற திருமார்பினை வந்து காணுங்கள்!' என்கின்றாள்.

திருத்தோள்களின்மீது கவனம் செல்லுகின்றது. 'நாள்களோர் நாலைந்து திங்கள் அளவிலே'[5] சகடத்தை முறித்தான்; அதில் ஆவேசித்திருந்த சகடாசுரனைக் கொன்றான்; கோரப் பற்களையுடைய பூதனையின் உயிரைக் குடித்தான். இத்தகையவனின் திருத்தோள்களின் அழகை வந்து காணுங்கள்'' என்கிறாள் (11). திருத்தோள்களிலிருந்து திருக்கைத் தலங்களை நோக்குமாறு பணிக்கின்றாள்.

மைத்தடங் கண்ணி அசோதை வளர்க்கின்ற
செய்தலை நீல நிறத்துச் சிறுபிள்ளை
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய
கைத்தலங் கள்வந்து காணீரே!
கனங்குழை யீர்!வந்து காணீரே! (1.3.12)

[மை-மையணிந்த; தட-விசாலமான; கண்ணி-கண்களையுடையவள்; சிறுபிள்ளை-குழந்தை கண்ணன்; நெய்த்தலை-கூர்மை பொருந்திய; நேமி-திருவாழி; நிலாவிய-அமைந்துள்ள; கைத்தலம்-உள்ளங்கைகள்.]

என்பது பாசுரம். கண்ணழகு படைத்த யசோதைப் பிராட்டி பிறர் கையில் காட்டிக் கொடாமல் வைத்த கண்

5. இது நாலு அல்லது ஐந்து மாதங்களுக்குள்ளே என்றும், (நாலும் ஐந்தும் கூடின) ஒன்பது மாதங்களுக்குள்ளே என்றும், (நாலால் பெருக்கப்பட்ட ஐந்தாகிய) இருபது மாதங்களுக்குள்ளே என்றும் பொருள்படும். இந்த ஆழ்வார் மங்களா சாசனபரராதலால் குறைந்த வயதில் அரிய பெரிய செயலை ஆற்றினான் என்று சொன்னால் கண்ணெச்சில் படும் என்றஞ்சி அங்ஙனம் கண்ணேறு வராமைக்காக, மாதம் நாலென்றும், ஐந்தென்றும், ஒன்பதென்றும், இருபதென்றும் தெரியாதபடி மயங்க அருளிச் செய்தனர் என்று சுவைபட அருளிச் செய்வர் பூருவர்.

வாங்காமல் ஆதரித்து வளர்ப்பதனால்தான் அவளது கண்ணின் நிறமெல்லாம் கண்ணனது திருமேனியில் ஏறித் திருமேனியின் நிறம் கறுத்ததோ என்று ஆழ்வார் கருதுவதை முன்னிரண்டு அடிகள் உணர்த்துகின்றன. யசோதைப் பிராட்டிக்குச் சிற்சில சமயங்களில் காட்டுதலால் 'நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலங்கள்' என்று கொள்ளலாம். கைத்தலத்தில் சங்கு சக்கர ரேகைகள் அமைவது மகாபுருஷ இலட்சணம். "இத்தகைய கைத்தலங்களைக் கண்டு களியுங்கள்" என்கின்றாள்.

கைத்தலங்களிலிருந்து கண்டத்திற்கு வருகின்றாள். "அண்டரண்ட பகிரண்டத்தொரு மாநிலம் எழுமால் வரை முற்றும் உண்ட கண்டம்" (அமலனாதி—6) என்று பாண் பெருமாள் மங்களாசாசனம் செய்த கண்டம் அல்லவா?

வண்டமர் பூங்குழல் ஆய்ச்சி மகனாகக்
கொண்டு வளர்க்கின்ற கோவலக் குட்டற்கு
அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய
கண்டம் இருந்தவா காணீரே!
காரிகையீர்!வந்து காணீரே! (1.3:13).

[பூ குழல்-மலர் அணிந்த முடி; கோவலர்குட்டன்-இடைப் பிள்ளை; விழுங்கிய-பிரளய காலத்தில் விழுங்கிய; கண்டம்-கழுத்து.]

யசோதைப் பிராட்டி கண்ணனைத் தன் மகனென்றே நினைத்திருந்தாலும், ஆழ்வார் உண்மையை அறிந்தவராதலால், 'மகனாகக் கொண்டு வளர்க்கின்ற' என்கின்றார். "பிரளய காலத்தில் அண்டங்களையெல்லாம் ஒரு சேர விழுங்கிய கண்டத்தை வந்து காணுங்கள்!" என்கின்றாள்.

கண்டத்திலிருந்து திருவாய்க்குக் கவனம் செல்லுகின்றது. எப்படிப்பட்ட திருவாய்? யசோதை நிலையிலுள்ள ஆழ்வாரையே கேட்போம்.

'எம்தொண்டை வாய்ச்சிங்கம்' வாவென் றெடுத்துக்
கொண்டு
அம்தொண்டை வாயமுது ஆதரித்து ஆய்ச்சியர்
தம்தொண்டை வாயால் தருக்கிப் பருகும்இச்
செந்தொண்டை வாய்வந்து காணீரே!
சேயிழை யீர்!வந்து காணீரே! (1.3:14).

[தொண்டைவாய்-கொவ்வைச் செவ்வாய்; எடுத்துக் கொண்டு - ஒக்கலில் எடுத்துக் கொண்டு; தொண்டைவாய் அமுது-வாயில் ஊறும் அமுதம் போன்ற நீர்; ஆதரித்து-விரும்பி; தருக்கி-நெருங்க; செம்-சிவந்த; சேயிழையீர்-பெண்காள்!]

"இடைப்பெண்கள் 'என் சிங்கக்குட்டியே, வா!' என்று கண்ணனை எடுத்துக் கொண்டு கண்ணனுடைய திருவாயில் ஊறும் அமுதத்தைப் பருகுவார்கள். இத்தகைய அமுதம் ஊறும் வாயை வந்து காணுங்கள்!" என்று அழைப்பு விடுக்கின்றாள்.

திருவதரத்திலிருந்து அவனுடைய குரல், திருக் கண்கள், திருப்பவளம் துடித்தல், புன்முறுவல், மூக்கு இவற்றின்மீது கவனம் செல்லுகின்றது. 'மூக்கும் முழியும்' என்பது உலக வசனம் அல்லவா?

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்
நாக்கு வழித்துநீ ராட்டும்இந் நம்பிக்கு
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்
மூக்கும் இருந்தவா காணீரே!
மொய்குழ லீர்!வந்து காணீரே! (1.3:15).

[நோக்கி-ஆராய்ந்து பார்த்து; நுணுக்கிய-அரைத்த; நீராட்டும்-குளிப்பாட்டும்; வாக்கு-குரல்; நயனம்-கண்; முறுவல்-புன்சிரிப்பு; மொய் குழல்-செறிந்த மயிர்]

என்பது பாசுரம். கண்ணனின் திருமேனியழகினை அறியும் யசோதைப் பிராட்டி தான் அத்திருமேனிக்கு ஏற்றவாறு தகுதியாக அரைத்த மஞ்சள்காப்பாலே நாக்கை வழித்துத் திருமஞ்சனம் செய்யும்படி அடங்கியிருப்பன். இந்நிலையில் 'அவனுடைய திருவாக்கும், நயனமும் வாயும் முறுவலும் மூக்கும் இருக்கின்ற அழகை வந்து கண்டு மகிழுங்கள்' என்கின்றாள்.

முகச்சமுதாயச் சோபையைக் காட்டும் நோக்குடன் தொகுப்பாகச் சொன்னவற்றிலிருந்து திருக்கண்களைத் தனியாக நோக்குமாறு பணிக்கின்றாள் யசோதைப் பிராட்டி. 'கரியவாகிப் புடைபரந்து, மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்டஅப் பெரிய வாய கண்கள்' (அமலனாதி—8) என்று பாண்பெருமாள் மங்களாசாசனம் செய்த திருக் கண்கள் அல்லவா?

**விண்கொள் அமரர்கள் வேதனை தீரமுன்**
**மண்கொள் வசுதேவர் தம்மகனாய் வந்து**
**திண்கொள் அசுரரைத் தேய வளர்கின்றான்**
**கண்க ளிருந்தவா காணீரே!**

**கனவளை யீர்!வந்து காணீரே!** (1.3:16).

*[விண்கொள்-உம்பர் உலகிலுள்ள; அமரர்-தேவர்கள்; வேதனை-துன்பம்; மண்கொள்-பூமியை இருப்பிடமாகக் கொண்ட; திண்கொள்-வலிமை கொண்ட; தேய-ஒழிய; கனம்-தங்கம்.]*

என்பது பாசுரம். தேவர்கள் துன்பம் தீரும்படி வசுதேவனுடைய மகனாகப் பிறந்து இவன் வளரும்போதே அசுரர்கள் தேயத் தொடங்கினர். "இத்தகையவனின் திருக் கண்களை வந்து கண்டு அநுபவியுங்கள்!" என்கின்றார்.

திருக்கண்களிலிருந்து திருப்புருவங்களின்மீது இவள் பார்வை படுகின்றது.

பருவம் நிரம்பாமே பாரெல்லாம் உய்யத்
திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற
உருவு கரிய ஒளிமணி வண்ணன்
புருவம் இருந்தவா காணீரே!
பூண்முலை யீர்!வந்து காணீரே! (1.3:17).

[பருவம்-வயது; பார்-பூமி; திரு-பெரிய பிராட்டியார்; உரு-உருவம்; மணிவண்ணன்-நீலமணி போன்ற நிறமுடையவன்]

என்பது பாசுரம். முதலடியால் சக்கரவர்த்தித் திருமகனை விட கண்ணபிரானின் வேறுபாடு தெரிவிக்கப்படுகின்றதாகக் கருதலாம். அவன் பருவம் நிரம்பின பின்னரே விரோதிகளை முடித்தான். இவனோ சிறுவயதிலேயே விரோதிகளை நிரசித்தான். "இத்தகைய கண்ணபிரானின் திருப்புருவ அழகினைக் கண்ணால் பருகுங்கள்!" என்கின்றாள்.

திருப்புருவத்தை அநுபவித்த ஆழ்வாரின் மனம் மகர குண்டலங்களின்மீது தாவுகின்றது.

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்
உண்ணும் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு
வண்ணம் எழில்கொள் மகரக் குழையிவை
திண்ணம் இருந்தவா காணீரே!
சேயிழை யீர்!வந்து காணீரே! (1.3:18).

[மண்-பூமி; உண்ணும் திறத்து-திருவயிற்றில் வைக்கிற அளவில்; பிள்ளை-கண்ணன்; எழில்-அழகு; மகரக் குழை-மகரகுண்டலம்; திண்ணம்-திண்மை.]

பிரளய காலத்தில் மலை ஏழும், கடலேழும், உலகேழும் வயிற்றில் வைத்துக் கொண்டவன்; 'இவற்றைப் பிரளயம் கொள்ளாதபடி காத்தோமே' என்பதால் மகிழ்ச்சி. சுறா மீன் வடிவமாகச் செய்யப்பெறும் காதணியே மகர குண்டலம். "இம்மகர குண்டலங்களை வந்து காணுங்கள்!"

என்பது யசோதையின் அழைப்பு. மகர குண்டலங்கள் ஆடும்போது கவனித்தால் காதின் அழகு தென்படும் என்பது குறிப்பு.

திருச்செவியிலிருந்து யசோதையின் கவனம் திரு நெற்றிக்குத் தாவுகின்றது. இங்குக் கண்ணனின் சிறு குறும்பு களை நினைவூட்டுகின்றாள் யசோதை.

**முற்றிலும் தூதையும் முன்கைமேல் பூவையும்**
**சிற்றில் இழைத்துத் திரிதரு வோர்களை**
**பற்றிப் பறித்துக்கொண் டோடும் பரமன்றன்**
**நெற்றி யிருந்தவா காணீரே!**
**நேரிழை யீர்!வந்து காணீரே! (1.3:19)**

[சிற்றில்-சிறு வீடு; இழைத்து-செய்து கொண்டு; முற்றில்-சுளகு; தூதை-சிறு பானை; பூவை-நாகணவாய்ப்புள்; பறித்தல்-அபகரித்தல்.]

கண்ணன் அவதரித்த பதின்மூன்று பதினான்கு நாட் களுக்குள் ஊர்ப் பெண்களை அழைத்து உறுப்புகளின் அழகை யசோதை காட்டும் பாசுரமாக இத்திருமொழி அமைந்திருந்தாலும், பிறகு நடைபெற்ற சிறு குறும்புகளை யெல்லாம் இந்த ஆழ்வார் அறிந்தவராதலால், அவற்றை யும் கண்ணபிரானுக்குச் சிறப்பாக இருக்குமாறு அருளிச் செய்கின்றார். சிறு பெண்கள் தெருக்களில் கொட்டப் பெற்றிருக்கும் மண்ணையும் கல்லையும் கொண்டு வீடு கட்டி விளையாடுவதைச் சிற்றில் இழைத்தல் என்பர். அதற்கு மணல் கொழிக்க சிறு முறம் வைத்துக் கொண் டிருப்பர். மணற்சோறு சமைக்கச் சிறுபானையையும் வைத்துக் கொண்டிருப்பர். அப்பெண்கள் கொஞ்சி விளை யாடும் பொருட்டுத் தங்களது முன்னங்கைமேல் நாகண வாய்ப் புள்ளையும் வைத்துக் கொண்டிருப்பர். இவற்றை யெல்லாம் வலிந்து பறித்துக் கொண்டு ஓடும் தீம்பன் கண்ணன். அப்படி இவன் ஓடும்போது ஓடுகின்ற களைப் பினால் இவனது நெற்றியில் குறுவியர்வு தோன்றி அழகா

யிருப்பதைக் காணுமாறு அழைக்கின்றாள் யசோதைப் பிராட்டி. கண்ணன் வரலாறு முழுவதையும், திருமாலின் தீரச் செயல்களையும் ஆழ்வார் அறிந்தவராதலால் தடா நெய் உண்ணல் (4), குவலயா பீடத்தை அழித்தல் (7), கண்ணனைப் பழந்தாம்பால் கட்டுதல் (9), உடலில் பிணித்த நிலையில் மருத மரங்களை வீழ்த்துதல் (9, 10), சாடு உதைத்தது, பூதனையின் உயிர் குடித்தது (11), நேமி யும் சங்கும் நிலாவிய கைத்தலங்களைக் காட்டுதல் (12), உலகை உண்ட வரலாறு (13, 18) போன்ற செய்திகள் பாசுரங்களில் அநுசந்திக்கப்பெறுவதற்கு இதுவே காரண மாகும் என்பது உளங்கொள்ளத் தக்கது.

இறுதியாக யசோதையின் ஈடுபாடு திருக்குழலின்மீது செல்லுகின்றது.

**அழகிய பைம்பொன்னின் கோல்அங்கைக் கொண்டு**
**கழல்கள் சதங்கை கலந்தெங்கும் ஆர்ப்ப**
**மழகன்று இனங்கள் மறித்துத் திரிவான்**
**குழல்கள் இருந்தவா காணீரே!**
**குவிமுலை யீர்! வந்து காணீரே! (1.3:20)**

[பைம்பொன் - பசும்பொன்; கோல்-மாடுமேய்க்கும் கோல்; அம்கை-அழகிய கை; கழல்கள்-வீரக்கழல் கள்; கலந்து-சேர்ந்து; ஆர்ப்ப-ஒலிக்க; மழகன்று கள்-இளமை பொருந்திய கன்றுகள்; மறித்து- மடக்கி; குழல்கள்-திருமுடி (மயிர்)]

கண்டவர்களின் கண்ணுக்கு அழகியதும் பசும் பொன்னால் செய்யப்பட்டதுமான மாடுமேய்க்கும் கோலை அழகிய கையிலே பிடித்துக்கொண்டு கானில் மேயும் கன்றுகளை மடக்கித் திரியுங்கால் கால்களிலுள்ள வீரக்கழல்களும் சதங்கைகளும் ஒன்றோடொன்று கலந்து அவன் போகும் இடம் எல்லாம் ஒலிக்கும்; அப்போது அவன் தலையில் உள்ள திருக்குழல்கள் அசைந்து அலைந்து விளங்கும்.

இவற்றின் அழகினை வந்து கண்டு அநுபவியுங்கள்'' என்கின்றாள்.

அழகு என்பது ஒரு தத்துவம். 'உலகில் அழகுக்கு ஒரு வரையறை காண்பது, அவ்வடிவத்தைப் படைப்பவரின் தொழிற் குறைவினாலேயன்றி, அழகென்னும் பொருளுக்கோ எல்லை இல்லை' என்று சித்தாந்தம் செய்து காட்டுவன் கம்பநாடன் சூர்ப்பணகையின் வாய்மொழியாக.[6] இந்த அழகு காதலர்களை ஒருவர்பால் மற்றொருவரை ஈர்க்கும் பெற்றியது என்பதை நாம் அறிவோம். பக்தர்களை இவ்வழகு ஈடுபடுத்தும் பாடு சொல்லுந்தரமன்று. அழகிய மணவாளனின் ஒவ்வோர் உறுப்பின் அழகிலும் ஈடுபட்டுப் பேசும் திருப்பாணாழ்வார்,

**அண்டர்கோன் அணியரங்**
**கன்என் அமுதினைக்**
**கண்ட கண்கள்**
**மற்றொன்றினைக் காணாவே.**[7]

என்று முத்தாய்ப்பாகக் கூறுவர். சூடிக்கொடுத்த சுடர்க்கொடி அழகிய மணவாளனை, ''என் அரங்கத்து இன்னமுதர், குழல் அழகர், வாய் அழகர், கண் அழகர், கொப்பூழில், எழுகமலப் பூ அழகர்''[8] என்று பேசி அவன் அழகில் ஆழங்கால் படுவர்.

நம்மாழ்வார் திருமாலிருஞ் சோலைமலை அழகரின் திருமேனி அழகில் ஈடுபட்ட திறம் தனிச்சிறப்பு வாய்ந்தது. கற்பகத்தரு கப்பும் கிளையுமாகப் பணைத்துப் பூத்தாற் போலே நிற்கின்றான் எம்பெருமான். அவனது அழகு வெள்ளம் அலைமோதி ஆழ்வார்மீது பாய்கின்றது. எம்பெருமானை நோக்கி வினவுகின்றார்,

---

6. ஆரணி. சூர்ப்ப-60
7. அமலனாதி-10.
8. நாச். திரு, 11:2.

முடிச்சோதி யாய்உனது
முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதி நீநின்ற
தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி ஆடையொடும்
பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ?
திருமாலே! கட்டுரையே.[9]

[முடி-தலை; அடி-திருவடி; படிச்சோதி-இயற்கையான காந்தி; கடி-திருவரை.]

என்ற திருப்பாசுரத்தில். "நின் திருமுக மண்டலத்தின் காந்தி மேல்முகமாகக் கிளர்ந்து கிரீடச் சோதியாக ஆயிற்றா? நின்திருவடிகளின் ஒளிதான் ஆசன பதுமமாகத் தென்படுகின்றதா? நின்திருவரையின் சோதிதான் படிச் சோதி ஆடையாயும் பல்கலனாயும் கலந்ததுவோ? அடியேனுக்குத் தெரிய அருளிச் செய்யவேண்டும்" என்கின்றார். ஒவ்வோரழகில் ஈடுபடுகின்ற காலத்தில் அஃதொன்றே சிறந்ததாய்த் தோன்றி நிற்கும் தன்மையை இப்பாசுரத்தில் தெரிவிக்கின்றார் ஆழ்வார். இந்நிலை இராமன் மிதிலை மாநகரில் திரு உலாப் போந்தபோது அவனது திருமேனி அழகினைக் கண்ட மாதரின் நிலையை நினைவூட்டுகின்றது.

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன;
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கொண்ட சமயத் தன்னான்
உருவுகண் டாரை யொத்தார்[10]

[கமலம்-தாமரை; தாள்-திருவடி; வாள்கொண்ட-வாளையொத்த; ஊழ்-பெருமை; உருவு-வடிவு]

---

9. திருவாய். 3.1:1.
10. பாலகாண். உலாவி. 19

ஒவ்வோர் உறுப்பையும் கண்டவர்கள் அதனதன் அழகின் மேல் வைத்த கண் வாங்கமுடியாமல் அழுந்திவிட்டார்கள். அதனதன் அழகுக்கு ஓர் எல்லை இல்லாமையாலே அதன தனினின்றும் தம் கவனத்தைப் பிறிதொன்றில் திரும்ப முடியாது அதனதன் அழகிலேயே சொக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிவிக்கின்றான் கம்பநாடன். பிறிதோரிடத்தில் இராமனை,

அழியா அழகுடையான்[11]

என்று போற்றுவான். 'அழகின் சிரிப்பு' என்ற நூலில் பாவேந்தர் நம்மை இயற்கையழகில் ஈடுபடுத்துவதை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

அழகெலாம் திரண்ட ஒரு குழந்தையைக் காணும் போது "கிருஷ்ண விக்கிரகம் (விக்கிரகம்-திருமேனி) போல் இருப்பதாகக் கூறுவர் பெண்கள். கிருஷ்ணாவதார காலத்தில் யசோதைப் பிராட்டி ஊர்ப் பெண்டுகளை யெல்லாம் அழைத்துக் கண்ணபிரானுடைய திருவடிமுதல் திருமுடிவரை உள்ள உறுப்புகளின் அழகைக் காட்டுவதை அநுபவித்தோம். இந்த அநுபவத்தின் பயனை ஆழ்வார் தானான தன்மையில் நின்று,

சுருப்பார் குழலி யசோதைமுன் சொன்ன
திருப்பாத கேசத்தைத் தென்புதுவைப் பட்டன்
விருப்பால் உரைத்த இருபதோ டொன்றும்
உரைப்பார்போய் வைகுந்தத் தொன்றுவர் தாமே.
(1.3:21)

என்று முதல் இருபதினின்றும் சந்த வேறுபாடு தோன்ற[12] பயனுரைத்துத் தலைக்கட்டுகின்றார். இப்பாசுரங்களை ஓத வல்லவர்கள் எம்பெருமானை நித்தியாநுபவம் பண்ணு

11. ஷை அயோத். கங்கைப்-1

12. இத் திருமொழியின் முதல் இருபது பாசுரங்கள் கலிவிருத்தத்தால் ஆனவை. இறுதிப் பாசுரம் தரவுக் கொச்சகக் கலிப்பாவால் ஆனது.

வதற்குப் பாங்கான திருநாட்டில் சென்று இன்புறுவர் என்பதாக.

பிள்ளைப் பெருமானின் பிறப்பைப் பாரதியார்,

**கண்ணன் பிறந்தான்—எங்கள்**
**கண்ணன் பிறந்தான்**[13]

என்று குதூகலத்துடன் பேசி மகிழ்வதை ஈண்டு நாம் எண்ணி மகிழ்கின்றோம்.

இக்கட்டுரையின் பிற்பகுதியில் குறிப்பிடப்பெற்ற வருணனை பிற்கால இலக்கியமாகிய **'பாதாதி'** (பன்னிரு பாட். 50) தோன்றுவதற்கு வித்தாக அமைந்தது என்று கருதலாம். பாதாதி, பாதமாகிய ஆதியை உடையது. பாத முதலாக முடிவரையில் பாடப்பெறுவது என்பது கருத்து. இதில் 1. உள்ளங்கால், 2. அடியின் நகங்கள், 3. அடியின் விரல்கள், 4. புற அடிகள், 5. பரடுகள், 6. பாதங்கள், 7. கணைக் கால்கள், 8. முழந்தாள்கள், 9. தொடைகள், 10. அல்குல் (இடுப்பின் கீழ்ப்பகுதி), 11. கொப்பூழ், 12. வயிறு, 13. வயிற்றின் வரைகள், 14. இடை, 15. வயிற்றின் மயிர் ஒழுங்கு, 16. தனங்கள், 17. கைந் நகங்கள், 18. கை விரல்கள், 19. முன் கைகள், 20. உள்ளங் கைகள், 21. இரண்டு தோள்கள், 22. கழுத்து, 23. முகம், 24. பற்கள், 25. செவ்வாய், 26. மூக்கு, 27. கண்கள், 28. காதுகள், 29. புருவங்கள், 30. நெற்றி என்ற முப்பது உறுப்புகளுடன் 31. தலைமயிர், 32. கன்னமும் கூடிய 32 உறுப்புகளையும் பாதம் ஆதியாகும்படி வைத்துப் பாடப் பெறும் இலக்கியம் ஆகும். பேரிலக்கியங்களில் இவை தென்படுவதைக் காணலாம்.

கேசம் ஆதியாக வைத்துப் பாடப்பெறும் இலக்கியம் **'கேசாதிபாதம்'** என்பது. ஆடவர்களைப் பாடுமிடத்து முலை (16) என்பதை நீக்கி **'மார்பு'** என்பதனைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

---

13. பா. பா: தோத்திரப் பாடல்கள். கண்ணன் பிறப்பு-1

## 6. பிள்ளைப் பெருமாளின் வளர்ச்சி நிலைகள்

பிள்ளைப் பெருமாள் உண்மையிலேயே இந்தியாவின் செல்வக்களஞ்சியம். இவ்வுலகின் கலி தீர்த்து ஏற்றம் புரிய வந்த பிள்ளைக் கனியமுது. அன்று அசோதைமுன் ஆடிவருந் தேனாக இருந்தான். அவளுக்குமுன் ஓடி வருங்கால் அவள் உள்ளம் குளிருவதாகவும், அவனை ஊரார் மெச்சிப் புகழும்போதெல்லாம் மேனிசிலிர்ப் பதாகவும் இருந்தது. அவனுடைய முல்லைச் சிரிப்பே பலரது மூர்க்கத்தைத் தவிர்க்கும்; அவனைத் தழுவும் போது தழுவுபவர் உன்மத்தராவர். அன்பு தருவதில் அவனுக்கு நேர் அவனே. இப்படிப் பல்வேறு விதமாக அசோதைக்கு இன்பந் தந்து வந்தவன் பிள்ளைப்பெருமாள். இவனது வளர்ச்சி நிலைகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை அநுபவித்து மகிழ்ந்தவள் யசோதைப் பிராட்டி. இவற்றைப் பெரியாழ்வார் யசோதை நிலையில் நின்று அநுபவிப்பதை நாமும் அநுசந்தித்து மகிழ்வோம்.

தொட்டில் பருவம்: குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி-சில சமயம் தூளியிலும் போட்டு-தாலாட்டின படியை அவளைப் போலவே ஆழ்வார் தாமும் அநுபவித்துப் பேசுகின்றார். எம்பெருமான் எந்த இடத்தில் எந்தத் திருமேனியோடு அவதரித்தாலும் பிரமன் சிவன் இந்திரன் முதலான தேவர்களும் தங்களாலியன்ற அளவு கைங்கரியம் செய்து மகிழ்வர். இங்குக் கண்ணனைத் தொட்டிலில்

கிடத்தும் விழாவில் பிரமன், திவ்வியமான தொட்டிலைக் கொணர்ந்து சமர்ப்பிக்கின்றான்; இது மாணிக்கத்தையும் வயிரத்தையும் இழைத்த தங்கத்தொட்டில். இதை நினைந்து யசோதை நிலையில் தன்னைப் பாவித்துக் கொண்டு,

> **மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**
> **ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுத்தொட்டில்**
> **பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்**
> **மாணிக் குறளனே! தாலேலோ!**
> **வையம் அளந்தானே தாலேலோ!** (1.4 : 1)

*[ஆணிப்பொன்-மாற்றுயர்ந்த பொன்; வண்ணம்-அழகிய; பேணி-விரும்பி; விடுதந்தான்-அனுப்பினான்; மாணி-பிரமச்சாரி; வையம்-உலகம்.]*

என்று தாலாட்டுகின்றார் ஆழ்வார். சிவபெருமான் திருவரைக்குச் சேரும்படியான பொன்மணி, நடுநடுவே கலந்து கோக்கப் பெற்ற அழகிய இடைச்சுரிகை, அழகிய மாதுளம் பூக்கோவையான அரைவடம்—என்பவற்றை அனுப்பியுள்ளான். இவற்றை நினைந்து தாலாட்டுகின்றார்.

குபேரன் ஐம்படைத் தாலியையும் முத்து வடத்தையும் கொண்டு வந்து சமர்ப்பித்து அஞ்சலி பண்ணிக் கொண்டு நிற்கின்றான். இதனை ஆழ்வார்,

> **எழிலார் திருமார்வுக்கு ஏற்கும் இவையென்று**
> **அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு**
> **வழுவில் கொடையான் வயிச்சி ரவணன்**
> **தொழுதுஉவ னாய்நின்றான்; தாலேலோ!**
> **தூமணி வண்ணனே தாலேலோ!** (1.4 : 5)

*[எழில்-அழகு; ஆரம்-முத்து வடம்; வழுஇல்-குற்றமற்ற; வயிச்சிரவணன்-குபேரன் (பிரமபுத்திரனான புலஸ்திய பிரசாபதியினுடைய புத்திரனாகிய*

விச்வர முனிவனுக்குப் பரத்வாச புத்திரியினிடம் பிறந்தவன்); தொழுது-அஞ்சலி பண்ணி.]

என்ற பாசுரத்தால் தாலாட்டி மகிழ்கின்றார். இந்திரன் கிண்கிணியையும் (3), தேவர்கள் பலர் கூடி வலம்புரிச்சங்கு, சேவடிக் கிண்கிணி, கைவளையல்கள், தோள் வளையல் களையும் (4), வருணன் முத்தாரத்தையும் பவளவடத் தையும் (6), பெரிய பிராட்டியார் துளசி மாலையையும் கற்பகப் பூக்களாலான நெற்றி மாலையையும் (7), பூமிப் பிராட்டியார் கச்சுப்பட்டை, பொன்னாலான உடைவாள், கரைகட்டிய சேலை (யசோதைக்காக?)யையும், கனக மயமான தோள்வளையல்களையும், காம்புகளுடன் கூடிய பொற்பூவையும் (8), துர்க்காதேவி கஸ்தூரி, கருப்பூரம், சந்தனம் முதலிய நறுமணப் பொடிகள், மஞ்சள் பொடி, கண் மை, சிந்துரம் ஆகியவற்றையும் (9) அனுப்பியவற்றை யெல்லாம் நினைத்துக் கொண்டு தாலாட்டுகின்றார். இதுவே பிற்காலப் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் 'தாலப்பருவச்' செயல்களாக வளர்ந்ததாகக் கருதலாம்.

தவழும் பருவம்: தொட்டில் பருவம் கழிந்து தவழ்ந்து விளையாடத் தக்க பருவம் வந்தெய்துகின்றது பிள்ளைப் பெருமாளுக்கு. இப்பருவத்தில் அவன் நீணிலாமுற்றத்தே போந்து தவழ்ந்து புழுதி அளைவது, அம்புலியை (சந்திரனை) அழைப்பது என்பவற்றை யசோதைப் பிராட்டி அநுபவித்து, அவனுக்கு உகப்பாகச் சந்திரனை வரச் சொல்லித் தான் பலகாலும் அழைத்த நிலையை ஆழ்வாரும் அநுபவபூர்வமாக பேசி மகிழும் பாசுரங்களில் நாமும் ஆழங்கால் படுவோம் (1.5).

"சந்திரா, என் குழந்தை கண்ணன் நெற்றியிலே சுட்டி அசையவும் அரையிலே சதங்கை 'கிண் கிண்' என்று ஒலிக்கவும், முற்றத்தில் தவழ்ந்து சென்று புழுதி அளை கின்றான். இந்தச் சிறு விளையாட்டைக் கண்டால் நீ கண் படைத்த பயன் பெறுவாய். இந்தப் பிள்ளையின் சேட்டை

களைக் காண்கின்ற காரணமாக நீ இங்கே போந்து குழந்தையின் கண்ணில் தென்படுவாயாக'' என்று யசோதைப் பிராட்டி அம்புலியை அழைக்கின்றாள் (1). அடுத்துப் பேசுவது:

> என்சிறுக் குட்டன் எனக்கோர்
> இன்னமுது எம்பிரான்
> தன்சிறுக் கைகளால் காட்டிக்
> காட்டி அழைக்கின்றான்
> அஞ்சன வண்ணனோ(டு) ஆடல்
> ஆட உறுதியேல்
> மஞ்சில் மறையாதே, மாமதீ
> மகிழ்ந் தோடிவா (2)

[அஞ்சனம்-மை; ஆடல் ஆட-விளையாட; மஞ்சு-மேகம்]

என்ற பாசுரம் பேசுகின்றார். மாலைக் காலத்தில் பெற்றோர் குழந்தைகளை இடுப்பில் எடுத்துக் கொண்டு 'நிலா நிலா ஓடிவா; நில்லாமல் ஓடிவா' என்று கையால் சந்திரனை அழைக்கும் வழக்கப்படிச் சந்திரனை அழைக்கின்றாள் யசோதைப் பிராட்டி. சந்திரன் மேகத்தில் மறைந்து போதல் இயல்பாதலின் 'மஞ்சில் மறையாதே மாமதீ ஓடிவா' என்கின்றாள்.

இப்படி அழைத்தும் சந்திரன் வரக் காணாமையால் 'அழகில் தன்னோ டொப்பார் எவரும் இல்லை' என்ற செருக்கினால் வாரா திருக்கின்றான் என்று கருதி அவன் செருக்கு அடங்கப் பேசுகின்றாள். 'சந்திரா, நீ இப்போது தேய்வதும் வளர்வதுமாக உள்ளாய்; களங்கமும் உன் பால் உண்டு. இப்படியில்லாமல் நீ எப்போதும் முழுமதியமாகத் திகழ்ந்துக் களங்கமும் நீங்கி செயற்கை யழகுடன் திகழ்ந்தாலும் என் சிறுகுட்டன் முகத்திற்குச் சிறிதும் ஒப்பாகமாட்டாய். ஆகையால் உன் செருக்கை ஒழித்து நின்னைக் காட்டிலும் மிக அழகிய முகமண்டலத்தை

யுடையவனான இவன் உன்னைக் கைகளால் அழைப்பதைப் பரம போக்கியமாக அநுசந்தித்து ஓடிவா. நீண்ட நேரமாகக் கைநீட்டி உன்னை அழைக்கும் இந்தக் குழந்தையின் கை நோவுபடும் அபசாரத்தைச் செய்யற்க' என்கின்றாள் (3).

இன்னும், 'என் மகன் சக்கரக் கையன் இடுப்பில் இருந்து கொண்டு மலரவிழித்து உன்னையே காட்டுகின்றான். கபடம் செய்யாமல் வந்தருள்க' என்கின்றாள் (4). 'சந்திரா, இக்குழந்தையின் அமுதூறும் மழலைச் சொல் நின் காதில் விழவில்லையா? நீ செவிடனா? நீ காது கேளாதாரைப்போல் போய்விட்டால் நீ செவிபடைத்த பயனை இழந்தவனாவாய்' என்கின்றாள் (5). 'இவன் இப்போது கொட்டாவி விடத் தொடங்குகின்றான். இனி உறங்கிவிடுவான். உறங்காவிடில் உண்ட முலைப்பால் செரிமானம் ஆகாது. ஆதலால் இவன் உறங்கிப் போவதற்கு முன் வந்து சேர்க' என்று அழைக்கின்றாள் (6).

என்ன பேசியும் அசையாத அம்புலியை அச்சுறுத்தத் தொடங்குகின்றாள் அசோதைப் பிராட்டி.

> **பாலகன் என்று பரிபவம்**
> **செய்யேல் பண்டொருநாள்**
> **ஆலின் இலை வளர்ந்த**
> **சிறுக்கன் அவன்இவன்;**
> **மேல் எழப் பாய்ந்து பிடித்துக்**
> **கொள்ளும் வெகுளுமேல்,**
> **மாலை மதியாதே மாமதீ!**
> **மகிழ்ந்து ஓடிவா. (7)**

[பாலகன்-சிறுபயல்; பரிபவம்-தவிர்த்தல்; சிறுக்கன்-சிறுபிள்ளை. வெகுளும் ஏல்-சீறினால்; மாலை-மகாபுருஷன்.]

என்பது பாசுரம். இதில், ''சந்திரா, ஓயாமல் உன்னை அழைக்கச் செய்தும், 'இவன் ஒரு சிறுபிள்ளைதானே'

என்று அலட்சியமாக நினைக்கின்றாய் என்பது தெரிகின்றது; இவனைச் சிறியன் என்று கருதற்க; முன்னொரு காலத்தில் பிரளயம் வந்தபோது உலகங்களை யெல்லாம் தன் வயிற்றில் வைத்துக் கொண்டு சிறு பசுங் குழந்தையாக இருந்தவன்; இப்படிப்பட்டவன் சீறி நின் மீது பாய்ந்து உன்னைப் பிடித்துக் கொள்ளவும் நேரிடும். ஆகவே, இவனை அவமதியாமல் உடனே விரைந் தோடிவா'' என்கின்றாள்.

இன்னோர் அச்சுறுத்தல்:

தாழியில் வெண்ணெய் தடங்கை
ஆர விழுங்கிய
பேழை வயிற்றெம் பிரான்கண்டாய்,
உன்னைக் கூவுகின்றான்
ஆழிகொண் டுன்னை யெறியும்
ஐயுற வில்லைகாண்
வாழ உறுதியேல் மாம
தீ! மகிழ்ந் தோடிவா. (9)

[தடகை ஆர-பெரிய கை நிறைய; பேழை வயிறு-பெருவயிறு; ஆழி-சக்கரம்; எறியும்-வெட்டி விடுவான்; ஐயுறவு-ஐயம்; உறுதியேல்-கருதியேல்]

இதில் ''சந்திரா, இவன் உன்னை அழைப்பது வெண்ணெயை வாரி விழுங்கினதுபோல ஆசையின் கனத்தி லானது. வெண்ணெய்த் தாழியை இவனுக்கு எட்டாதபடி வைத்தால் கல்லை விட்டெறிந்து அத்தாழியை உடைப்பது போல, நீயும் வாராதிருந்தால் இவன் சக்கரா யுதத்தை உன்மீது ஏவி உன் தலையை அறுத்திடுவன்; ஆதலால் பிழைத்திருக்க விரும்பினால் 'பிகு' பண்ணாது பெருந்தன்மையாய் வந்துவிடு'' என்கின்றார். இந்தச் செய்திகளைக் கூறும் முறைதான் பிற்காலத்து பிள்ளைத் தமிழில் ''அம்புலிப் பருவமாக'' முகிழ்த்தது என்று கருதலாம்.

செங்கீரைப் பருவம்: இளமைப் பருவத்து விளையாடல்களில் செங்கீரையாடுவது என்பது ஒன்று. அதாவது-தாய்மார் முதலானோர் குழந்தைகளைத் தாமே ஆட்டுவிப்ப தொரு கூத்து. பிள்ளை தனது இரண்டுகைகளையும் முழந்தாளையும் ஊன்றித் தலையை நிமிர்த்திக்கொண்டு ஆடுதல் என்பாரும் உண்டு. இவ்விளையாட்டைக் காண வேண்டும் என்று விரும்பிய யசோதைப் பிராட்டி 'எனக் கொருகால் ஆடுக செங்கீரை ஆடுக ஆடுக' 1.6:1,2,3,4, என்று வேண்டி அதனை அநுபவித்தாற் போலவே ஆழ்வாரும் தம்மை யசோதை நிலையில் பாவித்துக் கொண்டு பேசி மகிழ்கின்றார். இத்திருமொழியிலுள்ள பாசுரங்கள் யாவும் படித்து இன்புறத் தக்கவை. இரண்டு பாசுரங்களை மட்டிலும் காட்டுவேன். ஒரு பாசுரத்தில் செங்கீரையாடும் போது திருமார்பில் உறையும் பிராட்டிக்கு அசைதல் உண்டாகாதபடி ஆடவேண்டும் என்கின்றார் (1). இன்னொரு பாசுரம்:

உன்னையும் ஒக்கலையிற் கொண்டுதம் இல்மருவி
　　உன்னொடு தங்கள்கருத் தாயின செய்துவரும்,
கன்னிய ரும்மகிழக் கண்டவர் கண்குளிரக்
　　கற்றவர் தெற்றிவரப் பெற்ற எனக்கருளி
மன்னு குறுங்குடியாய்! வெள்ளறையாய்! மதில்சூழ்
　　சோலை மலைக்கரசே! கண்ண புரத்தமுதே!
என் அவ லங்களை வாய்! ஆடுக செங்கீரை!
　　ஏழுல கும்உடையாய் ஆடுக ஆடுகவே — 1.6:8

[ஒக்கலை - இடுப்பு; கன்னியர்-இளம் பெண்கள்; தெற்றிவர - தொடுத்து வரும்படி; அவலம்-துன்பம்.]

என்பது. இதில், ''பிரானே, நீ எப்படிச் செங்கீரை ஆட வேண்டுமென்றால், உன்னை இடுப்பில் எடுத்துக் கொண்டு தங்கள் தங்கள் இல்லத்திற்குச் சென்று தங்கள் விருப்பப்படி

உன்னை யநுபவித்து வருகின்ற கன்னிப் பெண்களும் மனம் மகிழும்படி ஆடவேண்டும்; சாமானியமாகப் பார்க்கின்ற எல்லாருடைய கண்களும் குளிரும்படி ஆட வேண்டும்; கவிதொடுக்கவல்லவர்கள் பிள்ளைக் கவிகள் பாடிக் கொண்டு வரும்படி ஆடவேண்டும்'' என்கின்றார்.

*இதற்கு அடுத்த பாசுரம்:*

பாலொடு நெய்தயிர்ஒண் சாந்தொடு சண்பகமும்
 பங்கயம் நல்லகருப் பூரமும் நாறிவர
கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்
 கோமள வெள்ளிமுளை போல்சில பல்லிலக
நீல நிறத்தழகார் ஐம்படை யின்நடுவே
 நின்கனி வாயமுதம் இற்று முறிந்துவிழ
ஏலும் மறைப்பொருளே! ஆடுக செங்கீரை
 ஏழுலகும் உடையாய்! ஆடுக ஆடுகவே (1 6:9)

*[ஒண்-அழகிய; பங்கயம்-தாமரை மலர்; நாறி-மணம் வீசி; கோலம்-அழகிய; கோமளம்-இளையதான்; இலக-விளங்க; ஐம்படை-ஐம்படைத்தாலி]*

என்பது. இதில், ''கண்ணபிரான் நெய், பால், தயிர் முதலியவற்றைப் பலகாலும் திருமேனியில் பூசிக்கொள்வதனாலும் செங்கீரையாடும்போது அவை நல்ல பரிமளம் கமழா நிற்கும். அப்படிச் செங்கீரையாடுகையில் வாயைத் திறந்து சிறிது சிரிக்கும்போது 'கர்ப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ?' (நாச். திரு. 7:1) என்றபடி இயற்கையாகவே தாமரைப்பூ பச்சைக் கற்பூரங்களின் நறுமணமுடைய திருப்பவளத்தின் பரிமளமும் வீசும். வாயினுள்ளே வெள்ளியரும்புகள் போன்ற சில பற்கள் ஒளிரும்; திருமார்பிலணிந்த ஆபரணங்களின்மேல் வாயிலூறுகின்ற அமுதநீர் இற்று இற்றுவிழும். இப்படிப்பட்ட நிலைலமகளுடன் செங்கீரையாடுமாறு வேண்டுகின்றாள். இத்திருமொழியில் உலகு படைத்து உண்டல், நரசிம்மா

வதார தீரச்செயல்கள், கோவர்த்தனம் தூக்கிக் கல் மாரி காத்தமை, மதுகைடவர்களை நிரசித்து நான்மறைகளை மீட்டுக் கொணர்ந்தமை, குவலயா பீடத்தைக் கொன் றமை, ஏழ்விடைகளை அடக்கினமை, இரட்டை மருத மரங்களைச் சாய்த்தமை, காளியன் தலைமீது நர்த்தன மாடி அவனை அடக்கியமை, வைதிகன் பிள்ளைகளை மீட்டுத் தந்தமை போன்ற தீரச் செயல்கள் குறிப்பிடப் பெறுகின்றன. இம்முறைதான் பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் 'செங்கீரைப் பருவம்' அமைவதற்கு முன் னோடியாயிற்று என்று கருதலாம்.

**சப்பாணி கொட்டுதல்:** இஃது ஒரு கையோடு மற்றொரு கையையும் சேர்த்துக் கொட்டுதலாகிய விளையாட்டு. சப்பாணி கொட்டுதல்—சக பாணி கொட்டுதல். பாணி—கை. ஒரு கையோடு மற்றொரு கையைச் சேர்த்துத் தட்டுதல். இத்திருமொழியில் (1.7) பல பாசுரங்களில் வரும் '**சப்பாணி**' என்ற சொல் '**சப்பாணி கொட்டியருள்**' என்று பொருள்படும். அரைச்சதங்கைகள் கிண்கிணியார்க் கவும் முத்துப்போன்ற பற்கள் விளங்கவும் (1), தன் அரையிலிருந்து இழிந்து தந்தை அரையிலிருந்து கொண்டும் (2), மீண்டும் தன் மடிக்கே வந்து அமர்ந்தும் (3), சந்திரனை அழைத்தும் (4), சப்பாணி கொட்டுமாறு வேண்டுகின்றாள் யசோதைப் பிராட்டி. திருவரையில் படிந்த சேற்றையும் புழுதி மண்ணையும் கொணர்ந்து வந்து தன்மேல் உறைக்கப் பூசியும் (5), தேருய்த்த கைகள் (6), கடல் கலங்க சரந் தொட்ட கைகள் (7), இலங்கை அரக்கர் அவிய அடுகணை தொடுத்த கைகள் (8), இரணியன் மார்பம் பிளந்திட்ட கைகள் (9), ஆழ்கடல் தன்னை கடைந்திட்ட கைகள் (10) என்று கைகளைப் புகழ்ந்து சப்பாணி கொட்டுமாறு வேண்டுகின்றாள். எடுத்துக்காட்டாக இத்திருமொழியில் ஒரு பாசுரம்:

**புட்டியிற்சேறும் புழுதியும் கொண்டுவந்து**
**அட்டி அமுக்கி அகம்புக் கறியாமே**

சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெயும் உண்
பட்டிக்கன்றே! கொட்டாய் சப்பாணி
பற்பநாபா கொட்டாய் சப்பாணி (5).

என்பது. இத்திருமொழி பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் 'சப்பாணிப் பருவம்' அமைய வழியமைத்துத் தந்ததாகக் கருதலாம்.

தளர்நடைப் பருவம்: தட்டுத்தடுமாறி நடக்குமாறு யசோதை கண்ணனை வேண்டுதல் இப்பருவச் செயல்கள். திருவடிகளைத் தரையில் நன்றாகப் பதியவைத்து நடக்கும் பருவம் அன்று. ஆகையாலே தட்டுத்தடுமாறி நடக்கும் நடையாகின்றது.

தொடர்சங் கிலிகை சலார்பிலார் என்னத்
தூங்குபொன் மணிஒலிப்ப
படுமும் மதப்புனல் சோர வாரணம்
பையநின்று ஊர்வதுபோல்
உடன்கூடிக் கிண்கிணி ஆரவா ரிப்ப
உடைமணி பறைகறங்க
தடந்தா ளிணைகொண்டு சார்ங்க பாணி
தளர்நடை நடவானோ! (1)

[தூங்கு-தொங்குகின்ற; மும்மதம்-மூன்று மதங்கள் (கன்னமதம், கபோல மதம், பீஜமதம்); சோர-பெருக; வாரணம்-யானை; கிண்கிணி-கால் சதங்கை; கறங்க-ஒலிக்க; தளர்நடை-இளநடை]

என்று பேசி மகிழ்கின்றார். கண்ணன் தளர்நடை நடக்கும் போது யானை மெல்ல நடந்து போவது போல் இருக்கும். யானை மதத்தின் மிகுதியால் கட்டுத்தறியை முறித்து விட்டுக் காலிலிட்ட இரும்புச் சங்கிலியை இழுத்துக் கொண்டு நடக்கும்போது அந்தச் சங்கிலித்தொடர் 'சலார் பிலார்' என்று ஒலிக்கும்; பொன் கயிற்றினால் கட்டித் தனது இருபுறங்களிலும் தொங்கவிடப்பெற்ற மணிகள்

ஒலிக்கவும் மதநீர் பெருகவும் மெல்ல நடக்கும். அதுபோல, பிள்ளைப் பெருமாள் தளர்நடை நடக்கும்போது காலி லணிந்துள்ள சதங்கைகள் கிண்கிணிக்கும்; இடையிற் கட்டிய சிறுமணிகள் பறைபோல் ஒலிக்கும்; நடக்கின்ற ஆயாசத்தினால் உடலில் வேர்வை நீர் பெருகும் என்கின்றார்.

புன்முறுவல் செய்துகொண்டே தளர்நடை நடக்க வேண்டும் (2). தன் வாயில் நின்றும் கரும்புச்சாறுபோல் இனிமையான நீர் வடியும்படிச் சிரித்துக்கொண்டு தனக்கு முத்தம் கொடுக்கும் தன்மையுள்ளவன் (4).[1] மலர்ந்த தாமரைப் பூவினின்றும் தேன் சிறுசிறு துளியாய்ப் பெருகி வடிவது போலத் தன் வாயினின்றும் இடைவிடாமல் 'வாலெயிற்றூறிய நீர்' பெருகவும் நடந்து போகும்போது திருவரைமணிகள் கணகணவென்று ஒலிக்கும் (7). பரந்த திருவடிகளைக் கொண்டு மலர் மெத்தையின்மீது காலூறுத் தாமல் மெல்ல நடக்கவேண்டும் (9). நெற்றியில் தொங்கு கின்ற சுட்டி அசையவும், குறியிலிருந்து சிறுநீர் துளித்துளி யாகச் சொட்டவும் நடக்கவேண்டும் (10). இத்திருமொழி 'வருகைப் பருவத்திற்கு' வழியமைத்துத் தந்தது என்று கருதலாம்.

**அச்சோ அச்சோ:** குழந்தைகள் அன்னையர் இடுப்பில் ஏறுவதற்காக ஓடிவந்து அவர்களைத் தழுவி அணைத்துக் கொள்ளும் இயல்பை வேண்டுவது இது. 'அச்சோ' என்பது—முற்காலத்தில் குழந்தையை 'அணைத்துக்கொள்' என்று வேண்டுவதற்கு வழங்கிய குறிப்புச் சொல். கண்ணன் தன்னை அணைத்துக் கொள்ளுதலை நினைக்கும்போது தோன்றும் பரமானந்தத்தில் மூழ்கி நெஞ்சுருகிச் சொல்லி ழந்து வாய்விட்டுச் சொல்லமாட்டாமல் அவ்வாச்சரியத்தை ஒரு தரத்திற்கு இருதரம் 'அச்சோ அச்சோ' என்கின்றாள்

1. பிற்காலப் பிள்ளைப் பாட்டின் 'முத்தப் பருவத் திற்கு' அடி அமைத்தலுக்கு மூலம் இது.

என்றும் கூறலாம். எனவே, இது—இங்கு 'அணைத்துக் கொள்' என்ற பொருளைத்தரும் சந்தர்ப்பத்தால் குறிக்கும் சொல்என்று கருதினும் அமையும்.

இத்திருமொழியில் (1.9) இரண்டு பாசுரங்களைக் காட்டுவேன்.

மிக்க பெரும்புகழ் மாவலி வேள்வியில்
தக்கதி தன்றென்று தானம் விலக்கிய
சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளறிய
சக்கரக் கையனே! அச்சோ! அச்சோ!
சங்கம் இடந்தானே அச்சோ! அச்சோ! (7)

[கிளறிய-கலக்கின; சங்கம்-சங்கு; இடத்தான்-இடக் கையில் ஏந்தியவன்]

என்பது ஒரு பாசுரம். ''மாவலியின் தானத்தில் குறுக்கிட்ட சுக்கிரனின் கண்ணைக் குத்திக் கலக்கிய சக்கரக் கையனே! என்னை அணைந்து கொள்'' என்கின்றார் இதில்.

அடுத்த பாசுரம்:

என்னிது மாயம்?என் னப்பன் அறிந்திலன்
முன்னை வண்ணமே கொண்டளா வாய்என்ன
மன்னு நமுசியை வானிற் சுழற்றிய
மின்னு முடியனே! அச்சோ! அச்சோ!
வேங்கட வாணனே! அச்சோ! அச்சோ! (8)

[மாயம்-மாயச் செய்கை; அப்பன்-தந்தை; முன்னைய வண்ணம்-யாசிக்கவந்தபோது இருந்த வடிவம்; நமுசி-மாவலி மகன்; மின்னு-விளங்குகின்ற]

என்பது இரண்டாவது பாசுரம். இதில், நமுசி திரிவிக்கிர மனோடு நீண்ட நேரம் வழக்காடி, எம்பெருமான் சொன்ன சமாதானங்களைக் கேளாமல் தான் பிடித்த திருவடியின் பிடியை விடாமல் உறுதியாக இருக்க, எம்பெருமான் வளர்ந்த திருவடியினால் அவனை ஆகாயத்தில் சுழன்று

விழும்படி செய்தனன் என்ற வரலாறு காண்க. "இத்தகைய பிரானே! என்னை வந்து அணைக" என்கின்றார்.

**புறம் புல்குதல் :** முதுகிற் கட்டிக் கொள்ளல். தாய் அமர்ந்துகொண்டு ஏதாவது பணியில் ஈடுபட்டிருக்கும் பொழுது அவளுடைய குழந்தை பின்பக்கமாக வந்து முதுகில் அணைந்து கொள்ளலை இன்றும் காணலாம். யசோதைப் பிராட்டி அக்காலத்தில் கண்ணன் இவ்வாறு கட்டிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினாற் போலே ஆழ்வாரும் தம்மை அவளாகப் பாவித்துத் தம் முதுகில் கண்ணன் வந்து கட்டிக் கொள்வதாகப் 'பாவநா பிரகர்ஷத் தால்' (சிறந்த கற்பனையால்) அநுபவித்து இனியரா கின்றார் (1.10).

**வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க**
**மொட்டு நுனியில் முளைக்கின்ற முத்தேபோல்**
**சொட்டுச்சொட் டென்னத் துளிக்கத் துளிக்கஎன்**
**குட்டன்வந் தென்னைப் புறம்புல்குவான்**
**கோவிந்தன் என்னைப் புறம்புல்குவான்! (1)**

[வட்டு - இரண்டு நீல ரத்ந வட்டுகள்; வளர்கின்ற - நீண்டு கொண்டிருக்கின்ற; மாணிக்க மொட்டு - இந்திர நீலமான அரும்பு; சொட்டு சொட்டு என்ன - சொட்டுச் சொட்டு என்று ஓசையுண் டாகும்படி; துளி துளிக்க - பல தரம் துளியாகி நிற்க].

என்பது இப்பதிகத்தின் முதல் பாசுரம். இதில் 'வட்டு நடுவே வளர்கின்ற மாணிக்க மொட்டு' என்றது கண்ணனது குறியை. நிறத்தாலும் அமைப்பாலும் உவமை. 'முளைக்கின்ற முத்து' என்றது அதினின்றும் வெளி வருகின்ற 'சிறுநீரை'. சிறுநீர்த் துளிகள் இற்று இற்று மீண்டும் வருதலால் 'சொட்டுச் சொட்டென்னத் துளிக்கத் துளிக்க' என்கின்றார்.

**முத்தவை காண முதுமணற் குன்றேறி**
**கூத்துவந் தாடிக் குழலா லிசைபாடி**
**வாய்த்த மறையோர் வணங்க இமையவர்**
**ஏத்தவந் தென்னைப் புறம்புல்குவான்**
**எம்பிரான் என்னைப் புறம்புல்குவான் (8)**

*[முத்தவை - வயது முதிர்ந்த இடைச் சனங்கள்; வாய்த்த - கிட்டின; மறையோர் - முனிவர்கள்; இமையவர் - தேவர்கள்; ஏத்த - துதிக்க; உவந்து- மகிழ்ந்து]*

*இதில், ''பிள்ளைப் பெருமாள் எல்லாரும் காணும்படியாக மிகவும் உயர்ந்ததொரு மணற்குன்றின்மேல் ஏறி நின்று தான் விரும்பின பெண்களின் பேரைச் சொல்லுதலும் தன் மேல் சினங்கொண்டிருக்கும் பெண்களின் காலைக் கையைக் கட்டிக் கொண்டு பொறுப்பித்தலும் முதலான ஒலியின் குறிப்புகள். தன்னோடு பழகும் பெண்கள் உணரும்படிப் புல்லாங்குழல் ஊதியும், நிலவறைகளில் கிடக்கும் பெண் களும் இவ்விடத்தைவிட்டு ஓடோடி வந்து காண்கையாலே மிகவும் மனம் உகந்து கூத்தாடியும் நிற்க, அவனுடைய சேஷ்டிதா ரசத்தை அநுபவித்து இருடிகளும் தேவர்களும் வணங்கித் துதிக்க இப்படிக் கூத்தாடின அழகுடன் அப் பிரான் வந்து தன்னைப் புல்கவேண்டும் என்பது ஆழ்வாரின் அவா.*

**அப்பூச்சி காட்டுதல் :** *இது சிறு பிள்ளைகளின் விளை யாட்டு. கண்ணை இறுத்துவது, மேல் இமையை மடக்கிக் கொண்டு இதர பிள்ளைகளை வெருட்டுவது, மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுதல் முதலாகச் செய்யும் பயங்கரமான பாலசேட்டைகள் பூச்சிக் காட்டுதலில் அடங்கும்.*

**மெச்சூது சங்கம் இடத்தான்நல் வேயூதி**
**பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய்**

**பத்தூர் பெறாதன்று பாரதம் கைசெய்த**
**அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்**
**அம்மனே அப்பூச்சி காட்டுகின்றான் (1)**

*[மெச்சு - அனைவரும் கொண்டாடும்படி; இடத்தான் - இடக்கையில் ஏந்தியுள்ளவன்; பொறை - பொறுமை; கை செய்த - அணிவகுத்துச் செய்த; தூதன் - கண்ணன்]*

என்பது இப்பதிகத்தின் (2.1) முதல் பாசுரம். இதில் தூது சென்று, பத்தூர்கூட பெறமுடியாது போர் செய்வித்து பாண்டவர்கட்கு வெற்றி தந்த கண்ணன் அப்பூச்சி காட்டுவதை ஆழ்வார் அநுபவிக்கின்றார். இப்பாசுரத்தில் ஈற்றடி குறித்து ஓர் ஐதிகம். இப்பாசுரத்தை நம்பெருமாள் சந்நிதியில் உடையவர் கோஷ்டியில் 'உய்ந்த பிள்ளை' என்ற பெயர் கொண்ட அரையர் அபிநயிக்கும்போது 'அத்தூதன்' என்னும்போது கண்ணபிரானையும் 'அப்பூச்சி' என்னும்போது கண் இமையை மடக்கிக் கொண்டு வருவதையும் காட்டி அபிநயிக்க, உடையவரின் பின்புறம் எழுந்தருளியிருந்த எம்பார் (இராமாநுசரின் ஒன்றுவிட்ட தம்பி) தம் இரு கைகளையும் திருத்தோள்களோடு இணைத்துக் காட்ட, அரையரும் தாம் முன் அபிநயித்ததை விட்டு எம்பார் காட்டியதுபோலவே, எம்பெருமான் திருத்தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அந்வயிக்க, உடையவர் மிகவும் உகந்து, "கோவிந்தப் பெருமாள் (எம்பார்) இருந்தீரோ?" என்றாராம். இதனால் ஏற்படும் விளக்கம் — தூதனாய் தன் சௌலப்பியத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தினர் கருதும்படி இருப்பவன் அவர்கள் அஞ்சும்படி சில சமயம் ஈச்வரத்துவச் சின்னங்களைக் காட்டுகின்றான் என்பது. இஃது ஈற்றடிக்கு உள்ளுறைப் பொருள்.

**சேப்பூண்ட சாடு சிதறி திருடிநெய்க்கு**
**ஆப்பூண்டு நந்தன் மனைவி கடைதாம்பால்**

**சோப்பூண்டு துள்ளித் துடிக்கத் துடிக்க அன்று**
**ஆப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான்**
**அப்பனே அப்பூச்சி காட்டுகின்றான் (5)**

*[சே-எருதுகள்; பூண்ட-கட்டுதற்கு உரிய; சாடு-சகடம்; சிதறி-உருக்குலையும்படி; ஆப்பூண்டு-உடைமைக்கு உரியவர் கையில் அகப்பட்டுக் கொண்டு; கடை தாம்பு-கடையும் கயிறு ]*

என்பது பாசுரம். 'களவு கண்டது உண்டாகில் கையும் பிடியுமாய்ப் பிடித்துக் கொணருங்கள்' என்று சொல்லிய தாய் தன் முன்பே ஆய்ச்சிமார் கண்ணனைக் கண்டு பிடித்துக் கொணர, அது கண்ட யசோதை 'நான் பிள்ளையை வளர்ப்பது மிகவும் அழகிது!' என்று சொல்லித் தன்னைத் தானே மோதிக் கொண்டு அவர்கள் முன்னே தன் வயிற்றெரிச்சல் எல்லாம் தோன்றும்படி அடிக்க, அடி உண்டவனாகிய கண்ணன் அப்பூச்சி காட்டுவதை நினைந்து மகிழ்கின்றார் ஆழ்வார்.

**அம்மம் உண்ண அழைத்தல் :** பிள்ளைப் பெருமாள் (**கண்ணன்**) பகல் முழுவதும் விளையாடி இளைத்துப் பொழுது போனதையும் முலையுண்பதையும் மறந்து உறங்கிப் போய் விடுகின்றான். மறுநாள் விடிந்து நெடும் போதாகியும் கண் விழியாதிருக்கின்றான். யசோதைப் பிராட்டி அவனைத் துயில் எழுப்பி அம்மம் உண்ணாமையை (முலையுண்ணாமையை) அவனுக்கு அறிவித்து முலையுண்ணும்படி வற்புறுத்துகின்றாள். ஊட்டவும் செய்கின்றாள். இந்நிகழ்ச்சியைத் தாமும் அநுபவிக்க விரும்பிய ஆழ்வார் தம்மை அப்பிராட்டியாகப் பாவித்துக் கொண்டு அவனை அம்மம் உண்ண எழுப்புதல் முதலியவற்றைப் பேசி இனியராகின்றார் இத்திருமொழியில் (2.2).

**அரவணையாய்! ஆயரேறே!**
**அம்மம்உண்ணத் துயிலெழாயே**
**இரவும்உண்ணா துறங்கிப்போய்**
**இன்றும்உச்சி கொண்டதாலோ**

வரவுங்காணேன் வயிறசைத்தாய்
வனமுலைகள் சோர்ந்துபாய
திருவுடைய வாய்மடுத்துத்
திளைத்துதைத்துப் பருகிடாயே! (1)

[அரவு-பாம்பு; அணை-மெத்தை; அம்மம் உண்ண-முலையுண்ண; உச்சி கொண்டது-உச்சிப் போதாய் விட்டது; வரவு - வருவதை; சோர்ந்து - பால் வடிந்து; திரு-அழகு.]

என்பது முதல் பாசுரம். "ஆயர் ஏறே! நேற்று இரவும் முலையுண்ணாது உறங்கிப் போய் விட்டாய்; இப்போதும் பொழுது விடிந்து உச்சிப் பொழுதாய் விட்டது. ஆதலால் உறக்கம் தெளிந்து படுக்கையினின்றும் எழுந்திரு; நீயே எழுந்திருந்து அம்மம் உண்ண வேணுமென்று சொல்லி வருவதையும் கண்டிலேன். என் முலைகள் பால் வடிந்து பெருகிக் கொண்டுள்ளன. அழகிய நின்வாயை வைத்து முலையுண்பாய்" என்கின்றார்.

காது குத்தல்: யசோதைப் பிராட்டி பிள்ளைப் பெருமாளுக்கு காது குத்திக் காது பெருக்கிக் காதணிகளும் இட்டு அநுபவிக்க ஆசைப்படுகிறாள். இந்த விழாவுக்கு ஊரிலுள்ள பெண்களையெல்லாம் அழைக்கின்றாள். வந்தவர்கட்கு மரியாதை செய்யப் பொருள்களைச் சேமித்து வைக்கின்றாள். காது குத்தக் கண்ணனை அழைக்க அவன் காது நோகும் என்று மறுக்க, அதற்கு அவள் அவன் அஞ்சாமைக்குறுப்பான நல்லன பேசியும் அவனுக்கு உறுப்பான பொருள்களைக் காட்டியும் உடன்படச் செய்து காது பெருக்கினபடியை ஆழ்வாரும் அவளைப் போல் அநுபவிக்க ஆசைபட்டுத் தம்மை அவளாகப் பாவித்து அவனைக் குறித்துப் பாசுரங்களைப் பேசி அநுபவித்து இனியராகின்றார் இத்திருமொழியில் (2.3).

போய்ப்பா டுடையநின் தந்தையும் தாழ்த்தான்
பொருதிறல் கஞ்சன் கடியன்
காப்பாரு மில்லை கடல்வண்ணா! உன்னைத்
தனியேபோய் எங்கும் திரிசி
பேய்ப்பால் முலையுண்ட பித்தனே! கேசவ
நம்பீ! உனைக்காது குத்த
ஆய்ப்பாலர் பெண்டுகள் எல்லாரும் வந்தார்
அடைக்காய் திருத்திநான் வைத்தேன்! (3)

*[பாடு-பெருமை; போய் தாழ்த்தான்-தாமதித்தான்; பொருதிறல்-போர் செய்வதில் வல்ல; திரிதி-திரி கின்றாய்; அடைக்காய்-வெற்றிலை பாக்குகள்.]*

*என்பது பாசுரம். இதில், "கண்ணா! உன்னைக் காப்பதில் வல்லவரான மாடு மேய்க்கப் போன நின் தந்தையும் வரத் தாமதித்தார்; கம்சன் நின்மீது கறுக்கொண்டு இருப்பதனால் எந்தச் சமயத்திலும் யாரையும் அனுப்புவன்; வழி தெரிந்து காப்பாற்ற வல்ல ஒருவரும் இங்கில்லை; நீயே அச்சமின்றி எங்கும் திரிகின்றாய்; சில சமயம் அவர்களை விட்டுப் பிரிந்தும் செல்கின்றாய். இப்படியெல்லாம் செய்கின்ற நீ இங்கு வா; உன் காது குத்து விழாவுக்கு ஆய்ப்பாடிப் பெண்கள் வந்திருக்கின்றனர்; அவர்கட்குக் கொடுக்க வெற்றிலைப் பாக்குகளெல்லாம் தயாராக உள்ளன" என்று சொல்லி அழைக்கின்றாள்.*

விண்ணெல்லாம் கேட்க அழுத்திட்டாய் உன்வாயில்
விரும்பி யதனைநான் நோக்கி
மண்ணெல்லாம் கண்டுஎன் மனத்துள்ளே அஞ்சி
மதுசூத னேஎன்றி ருந்தேன்
புண்ணேதும் இல்லை,உன் காது மறியும்;
பொறுத்திறைப் போதுஇரு, நம்பீ,
கண்ணா!என் கார்முகி லே!கடல் வண்ணா!
காவல னே!முலை யுணாயே! (6)

[விண்-மேலுலகங்கள்; அதை-மண்ணை; மண்-உலகங்கள்; மறியும்-சிறிது மடங்கும்; இறைபோது-கண நேரம்.]

என்பது பாசுரம். இதில், ''காதில் கடிப்பு இடவேண்டும் என்று யசோதை அழைத்தும் அவளைப்பாராது மண்ணையும் தின்கின்றான். அதற்காக அவள் கோபங் கொண்டு அவனை அடிக்கின்றாள். அப்போது அவன் தனது வாயைத் திறந்து கொண்டு விண்ணெல்லாம் கேட்கும்படி அழுகின்றான். யசோதை இவன் தின்ற மண்ணின் அளவைத் தெரிந்துகொள்ள விரும்பி வாயைப் பார்க்கையில், அவன் வாயினுள் உலகங்கள் எல்லாம் முன்போல் இருக்கக் கண்டு, ''இவனை 'நம் செல்லப் பிள்ளை' என்று அடித்தோமே! இவன் சர்வேச்வரனன்றோ?'' என அஞ்சி இருக்கின்றாள். பிள்ளைப் பெருமாள் தன்னை யசோதை இப்படி வேறாக எண்ணியதைப் பொறாமல் அதனை அவள் மறந்து தன் பிள்ளை என்றே கருதித் தழுவும்படி அருகில் வந்து நிற்கின்றான். அப்போது அவன் காதில் கடிப்பை இடும்படி முயல, பிள்ளைப் பெருமாள் அது கண்டு ''அம்மா! என் காது குத்தியதனால் புண்ணாய் உள்ளது; அதை இட்டால் நோகும். ஆதலால் அஃது எனக்கு வேண்டா'' என மறுக்கின்றான். யசோதை ''உன் காதில் புண் ஒன்றும் இல்லை; புண் ஆறிவிட்டது; இந்த குண்டலத்தை இடும்போது உன் காது சற்று மடங்கும்; அதை மாத்திரம் பொறுத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொல்ல, பிள்ளைப் பெருமாள் அதற்கு இசைந்து நிற்கின்றான். யசோதை அவனைப் பலபடியாகக் கொண்டாடிக் காப்பிடும்போது உண்டாகும் நோவைப் பொறுப்பதற்காக முலை உண்ண வேண்டும் என்று விரும்புகின்றாள்'' என்ற விவரம் கண்டு மகிழலாம். இதிலுள்ள 12 பாசுரங்களில், நம்மாழ்வாரின் 'பன்னிரு திருநாமத்' திருவாய்மொழி போல எம்பெருமானின் 12 திருநாமங்களும் வருவதைக் கண்டு மகிழலாம்.

**நீராட்டம்:** யசோதைப் பிராட்டி பிள்ளைப் பெருமா ளுக்குக் காதைப் பெருக்கிக் கடிப்பிட்ட பிறகு, அந்தக் களைப்பு நீங்க அவனை நீராட்டம் செய்ய ஆசைப் படுகின்றாள். இதற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் ஆயத்தப்படுத்தி வைக்கின்றாள். பின்னர் பிள்ளையை நோக்கி அவனைப் பல படியாகப் புகழ்ந்தழைத்து மஞ்சன மாட்டியதை ஆழ்வார் அநுபவிக்க விரும்பி தம்மை அவளாகப் பாவித்து அவள் அக்காலத்தில் பேசியதை யெல்லாம் பேசி இனியராகின்றார் இத்திருமொழியில் (2.4).

> **வெண்ணெய் அளைந்த குணுங்கும்**
> **விளையாடு புழுதியுங் கொண்டு**
> **திண்ணென இவ்விரா உன்னைத்**
> **தேய்த்துக் கிடக்கநான் ஒட்டேன்**
> **எண்ணெய் புளிப்பழங் கொண்டிங்கு**
> **எத்தனை போதுமி ருந்தேன்**
> **நண்ணல் அரிய பிரானே!**
> **நாரணா! நீராட வாராய். (1)**

என்பது பாசுரம். இதில், ''தாரார் தடம்தோள்கள் உள்ள ளவும் கை நீட்டி, ஆராத வெண்ணெய்'' (சிறுத்திருமடல்) அளைந்ததனால் உடம்பெல்லாம் அந்த வெண்ணெய்பட்டு மொச்சை நாற்றம் வீசும்; அத்துடன் விளையாடப் போனால் அதன்மேல் புழுதிபடியும்; இவ்விரண்டும் உடம்பி லிருந்தால் தினவு தின்னும்; அதற்காகக் கண்ணன் உடம்பைப் படுக்கையில் தேய்ப்பானாம். இப்படியெல்லாம் பிள்ளைப் பெருமாள் வருந்துவதைப் பொறுக்கமாட்டாமல் யசோதை அவனை நீராட அழைக்கின்றனள்.

> **அப்பம் கலந்த சிற்றுண்டி**
> **அக்காரம் பாலிற் கலந்து**
> **சொப்பட நான்சுட்டு வைத்தேன்**
> **தின்னல் உறுதியேல் நம்பீ!**

செப்பிள மென்முலை யார்கள்
சிறுபுறம் பேசிச் சிரிப்பர்
சொப்பட நீராட வேண்டும்!
சோத்தம்பிரான் இங்கே வாராய்! (2.4;5)

[செப்பு-பொற்கலசம்; சிறுபுறம் பேசி-அற்பமான குற்றங்களை மறைவிற் சொல்லி; அக்காரம்-வெல்லக்கட்டி; சொப்பட-நன்றாக; தின்னல் உறுதல்-விரும்புதல்; சோத்தம்-அஞ்சலி.]

என்பது பாசுரம். இதில், "'இப்பையல் அழுக்குடம்பனாய்த் திரிகின்றான்' என்று ஆயமங்கையர் ஏசுவதற்கு இடம் இல்லாதபடி நீராடவருவையாகில் நினக்கு வேண்டிய பலகாரங்கள் தருவேன்" என்கின்றாள்.

குழல்வாரக் காக்கையை வா எனல்: மஞ்சன மாட்டிய பிறகு பிள்ளைப் பெருமாளுக்குக் குழல் வாரக் கருது கின்றாள். அவன் அழுது ஓடுதல், ஆடுதல் செய்யாமல் செவ்வனே இருந்து குழல் வாரிக்கொள்வதற்காக, உலகத்தார் தலைவாரும்போது வசப்படுத்துவதற்குச் சொல்லுவது போலே, 'அக்கக்காய் குழல்வாரவா' என்று சொல்லிக் கண்ணனைச் சீராட்டிக் கொண்டு தன் வசப் படுத்தினபடியை ஆழ்வாரும் அநுபவிக்க விரும்பித் தம்மை அவளாகப் பாவித்து அக்காலத்தில் அவள் அக்கக்காய் என்று அழைத்தாப் போலே தாமும் அழைத்துச் சீராட்டிக் குழல் வாருகையாகின்ற ரசத்தை அநுபவித்து மகிழ் கின்றார் (2.5).

பின்னை மணாளனை பேரினிற் கிடந்தானை
முன்னை அமரர் முதல்தனி வித்தினை
என்னையும் எங்கள் குடிமுழு தாட்கொண்ட
மன்னனை வந்துகுழல் வாராய், அக்காக்காய்
மாதவன் தன்குழல் வாராய், அக் காக்காய்! (1)

[பின்னை-நப்பின்னை; மணாளனை-நாயகனை; பேர்-திருப்பேர் நகர்; முன்னை அமரர் - பகவத

நுபவத்தில் முதல்வரான நித்திய சூரிகள்; தனி வித்து-ஒப்பற்ற காரணன்; குழல்-கூந்தல்; அக்காக் காய்-காக்கையே]

என்பது பாசுரம். காக்கை வந்து கத்தும்போது குழந்தைகள் பராக்காக இருக்குமாதலால் அப்போது குழந்தைகட்குத் தலைவாருதல் சுகமாய் முடிதல்பற்றி அச்செயலைக் காக்கையின்மேல் ஏற்றிக் 'குழல் வாராய் அக்காக்காய்' என்கின்றாள்.

உந்தி எழுந்த உருவ மலர்தன்னில்
சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தவன்
கொந்தக் குழலை குறந்து புளியட்டி
தந்தத்தின் சீப்பால்குழல் வாராய், அக்காக்காய்
தாமோ தரன்தன் குழல் வாராய், அக் காக்காய்! (8)

[உந்தி-திருநாபி; சதுமுகன்-பிரமன்; புளி அட்டி-புளிப் பழத்தையிட்டு; குறந்து-சிக்குவிடுத்து]

என்பது பாசுரம். யசோதைப் பிராட்டி பிள்ளைப் பெருமானை எண்ணெய் தேய்த்துப் புளிப்பழம் இட்டு நீராட்டியதனால், அப்படி நீராடிய கண்ணனது கூந்தல் சிக்காகியிருக்கும்; ஆதலால் யசோதைப் பிராட்டி, 'காக்கையே! நெறிப்புப்போம்படி எண்ணெய் தடவித் தந்தச் சீப்பினால் தலைவார வருக' என்கின்றாள்.

**கோல் கொண்டு வா என்னல்:** யசோதைப் பிராட்டி கண்ணனைக் குழல்வாரின பின்பு பூச்சூட நினைத்திருக் கையில் கண்ணபிரான் சாதி ஆசாரத்திற் கேற்பக் கன்று மேய்க்கும் பிள்ளைகளுடன் போக நினைத்துக் 'கன்று மேய்க்கின்ற கோல் கொடு' என்று தாயை வற்புறுத்திக் கேட்க, அவளும் இவனைப் பூச்சூடிக் காணவேண்டும் என் கின்ற அவாவினாலே அதற்கிசைவதுபோல் நடித்துக் கோல் கொடாமல் அவனை வஞ்சித்துச் சொல்லியதை ஆழ்வார் தம்மை அவளாகப் பாவித்துச் சொல்லி இனியரா

கின்றார். இத்திருமொழியும் (2.6) காக்கையைக் குறித்துச் சொல்லியது என்பதை இத்திருமொழி 7ஆம் பாட்டால் அறியலாம்.

**வேலிக்கோல் வெட்டி விளையாடு வில்லேற்றி**
**தாலிக் கொழுந்தைத் தடங்கழுத் திற்பூண்டு**
**பீலித் தழையைப் பிணைத்துப் பிறகிட்டு**
**காலிப்பின் போவாற்கோர் கோல் கொண்டுவா**
**கடல்நிற வண்ணற்கோர் கோல் கொண்டுவா! (1)**

*[வேலிக்கோல்-வேலிக் கால்களிலுள்ள கோல்; விளையாடுவில்-லீலோபகரணமான வில்; கொழுந்து தாலி-ஆமைத் தாலி; பீலி-மயில் தோகை; பிறகு இட்டு-பின்புறத்தில் கட்டிக் கொண்டு; காலி-பசுக் கூட்டம்.]*

என்பது பாசுரம். "இடைச் சாதிக்குத் தக்கபடி ஆமைத் தாலி என்னும் ஒருவகை ஆபரணத்தைக் கழுத்திலணிந்தும் மயில் தோகைகளைச் சேர்த்துக் கட்டிப் பின்புறத்தில் அணிந்தும், வேலிக் கால்களில் வெட்டின சிறு கோல்களை வில்லாகச் செய்து நாணேற்றி வளைத்து விளையாடிக் கொண்டே கன்றுகளை மேய்க்கச் செல்லும் என் மகனுக்குக் கோல் கொண்டுவா" என்கின்றாள் இதில்.

**பொற்றிகழ் சித்திர கூடப் பொருப்பினில்**
**உற்ற வடிவில் ஒரு கண்ணும் கொண்டஅக்**
**கற்றைக் குழலன் கடியன் விரைந்துஉன்னை**
**மற்றைக்கண் கொள்ளாமே கோல் கொண்டுவா**
**மணிவண்ண நம்பிக்கோர் கோல்கொண்டுவா! (7)**

*[பொன்திகழ்-அழகியதாய் விளங்குகின்ற; பொருப்பு-மலைச்சாரல்; கற்றை-தொகுதி; கடியன்-குரூரன்]*

என்பது பாசுரம். இதில், "காக்கையே! இவன் முன்னம்

இராமனாயிருந்த காலத்தில் உன் சாதியில் ஒருவன் செய்யத் தகாததைச் செய்ததற்காகக் கண்ணொன்றைப் பறித்திருக்கின்றான். நீ இப்போது நான் சொல்லியதைச் செய்யாமலிருந்தாலோ உன் மற்றொரு கண்ணையும் பிடுங்கி விடுவான்; ஆகவே, இவனுக்கு விரைந்து கோல் கொண்டுவா'' என்கின்றாள்.

பூச்சூட்டல்: கன்று மேய்க்கப் போகவேண்டும் என்று அடம்பிடித்து அழுது தொல்லை தந்த கண்ணனை யசோதை, 'அக்காக்காய்! நம்பிக்குக் கோல் கொண்டுவா' என்று சொல்லி ஏமாற்றி அவனது அழுகையை நிறுத்திய பிறகு, தான் நினைத்தபடி 'நான் பல்வேறு மலர்களை வைத்திருக்கின்றேன்; அவை செவ்வியழிவதற்கு முன்னே நீ அவற்றைச் சூட வர வேண்டும்' என்று அப்பிள்ளைப் பெருமாளை அழைத்த முறையை ஆழ்வார் தாமும் அநுபவிக்க அவாக்கொண்டு தம்மை அவளாகப் பாவித்து அவள் சொல்லியவாறே சொல்லியழைத்து இனியரா கின்றார் இத்திருமொழியில் (2.7).

**ஆனிரை மேய்க்கநீ போதி**
**அருமருந் தாவ தறியாய்**
**கானகம் எல்லாம் திரிந்துஉன்**
**கரிய திருமேனி வாட**
**பானையில் பாலைப் பருகிப்**
**பற்றாதார் எல்லாம் சிரிப்ப**
**தேனில் இனிய பிரானே!**
**செண்பகப் பூச்சூட்ட வாராய். (1)**

*[கானகம்-காடு; பற்றாதார்-பகைவர்கள்]*

என்பது பாசுரம். '''இந்தப் பிள்ளைப் பெருமான் எங்கள் வீட்டில் கைப்பானையிலிருந்த பாலைப் பருகிப் போனான்.' என்று உகவாதார் சொல்லும்படிக் கறந்த பானையிலிருந்த பச்சைப் பாலைப் பருகிய பித்தனாயினும் தேனைவிட

இனியவனே! உன்னுடைய திருமேனியின் அருமையைத் தெரிந்து கொள்ளாமல் காட்டிலே போய் திரிவது தவிர்ந்து செண்பகப்பூவை நான் சூட்டும்படி வரவேண்டும்" என்கின்றாள்.

**அண்டத் தமரர்கள் சூழ**
**அத்தரணி யுள் அங்கி ருந்தாய்**
**தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்**
**தூமல ராள்மண வாளா!**
**உண்டிட்டு உலகினை ஏழும்**
**ஓரால் இலைத்துயில் கொண்டாய்**
**கண்டுநான் உன்னை உகக்கக்**
**கருமுகைப் பூச்சூட்ட வாராய்! (9)**

[அண்டம் - பரமபதம்; அமரர்கள் - நித்தியசூரிகள்; அத்தாணி-அருகான இடம்; தொண்டர்கள்-அடியார்கள்; உண்டிட்டு- அமுதுசெய்து; துயில் - உறக்கம்; உவக்க-மகிழ; கருமுகை-இருவாட்சி]

என்பது பாசுரம். இதில், "பரமபதத்தில் ஏழுலகும் தனிக் கோல் செல்ல வீற்றிருப்பவனே! அந்த இருப்பைக் காட்டிலும் மிக விரும்பி அன்பர்களின் நெஞ்சில் எழுந்தருளியிருப்பவனே! பெரிய பிராட்டியின் கேள்வனே! உலகங்களைப் பிரளயம் கொள்ளாதபடி, திருவயிற்றில் வைத்துக் காப்பவனே! மாலையும் மயிர்முடியுமாக உன்னை நான் கண்டு களிக்குமாறு இருவாட்சி சூட வர வேண்டும்" என்கின்றார். இப்பாசுரங்களில் பாசுரத்திற்கு ஒன்றாக (செண்பகம், மல்லிகை, பாதிரி, செங்கழு நீர், புன்னை, குருக்கத்தி, இருவாட்சி, கருமுகை என்று) எட்டுப் பூக்கள் குறிப்பிடப் பெற்றிருப்பதைப் பார்க்கும்போது நாடோறும் மலர்களால் மூடப்பெற்று எண்ணற்ற அடியார்கட்குச் சேவை சாதிக்கும் ஏழுமலையான் நினைவுக்கு வருகின்றான்.

**காப்பிடல்:** யசோதைப் பிராட்டி பிள்ளைப் பெருமாளை நீராட்டிக் குழல் வாரிப் பூச்சூட்டின பின்பு

அவனுக்குக் கண்ணேறு (திருஷ்டி தோஷம்) ஏற்படாதபடி காப்பிட வேண்டுமென்று கருதி, 'நீ பொழுதுபோன வேளையில் நாற்சந்தி, முச்சந்தி முதலிய இடங்களில் நில்லாதே' என்று அப்பிள்ளையை அழைத்துக் காப்பிட்ட படியை ஆழ்வாரும் அநுபவிக்க விரும்பித் தம்மை அவளாகப் பாவித்து, திருவெள்ளறையில் பிள்ளைப் பெருமான் அர்ச்சையாய் நிற்கின்ற நிலையிலே அந்த யசோதைப் பிராட்டியின் பேச்சாலே காப்பிட அழைத்து இனியராகின்றார் இத்திருமொழியில் (2.8).

**இந்திர னோடு பிரமன்**
**ஈசன் இமையவ ரெல்லாம்**
**மந்திர மாமலர் கொண்டு**
**மறைந்துவ ராய்வந்து நின்றார்**
**சந்திரன் மாளிகை சேரும்**
**சதுரர்கள் வெள்ளறை நின்றாய்**
**அந்தியம் போதிது வாகும்;**
**அழகனே காப்பிட வாராய். (1)**

*[இமையவர் - தேவர்; உவராய் - அண்மையராய்; அந்தியம்போது - மாலை நேரம்]*

என்பது பாசுரம். "இதில் திருவெள்ளறைத் தேனே, இந்திரன் நான்முகன் சிவபெருமான் சிறந்த மந்திர மலர் களுடன் வந்து மறைந்து நிற்கின்றனர். அந்திக் காலமும் வந்துவிட்டது. உன் அழகுக்கு ஒருவித குறையும் வராதபடி நான் திருவந்திக் காப்பிடவேண்டும். ஆகவே, இல்லம் வருக" என்கின்றார்.

மேலும்,

**இருக்கொடு நீர்சங்கிற் கொண்டிட்(டு)**
**எழில்மறை யோர்வந்து நின்றார்**
**தருக்கேல் நம்பி! சந்தி நின்று**
**தாய்சொல்லுக் கொள்ளாய் சிலநாள்**

திருக்காப்பு நானுன்னைச் சாத்தத்
தேசுடை வெள்ளறை நின்றாய்!
உருக்காட்டும் அந்தி விளக்கின்று
ஒளிகொள்ள ஏற்றுகேன் வாராய். (9)

[இருக்கொடு - புருஷசூக்தம் முதலான ருக்குகள் சொல்லிக்கொண்டு; மறையோர்-அந்தணர்கள்; தருக்கேல்-செருக்கித் திரியாதே; காப்பு-இரட்சை; தேசு-தேஜஸ்]

என்பது மற்றொரு பாசுரம். இதில் "உனக்குக் காப்பிடுவதற்கு அந்தணர்கள் சங்குகளில் நீர் எடுத்துக்கொண்டு வந்துள்ளனர்; நீ நாற்சந்தியில் திரிதல் ஆகாது. அது கீழான தேவதைகள் வசிக்கும் இடம். தாய் வார்த்தையைத் தட்டாதே. உனக்கு இரட்சை இடுவதற்காக அந்தி விளக்கு ஏற்றுவேன். இதைக் காண வருக" என்கின்றார். இக்காலத்தில் விளக்கேற்றிக் குழந்தைகட்குச் சுழற்றும் வழக்கம் இருப்பது நினைவு கூரத்தக்கது.

பிற்காலப் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் வரும் 'காப்புப் பருவத்திற்கு' இது அடியெடுத்துத் தந்ததாகக் கருதலாம். இத்திருமொழியில் வரும் மற்றொரு பாசுரம் 'சிற்றில் சிதைத்தல் பருவம்' என்பதற்கு அடியெடுத்துத் தந்ததாகக் கொள்ளலாம்.

செப்போது மென்முலை யார்கள்
சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு
அப்போது நான்உரப் பப்போய்
அடிசிலை உண்டிலை, யாள்வாய்!
முப்போதும் வானவர் ஏத்தும்
முனிவர்கள் வெள்ளறை நின்றாய்!
இப்போது நான்ஒன்றும் செய்யேன்
எம்பிரான்! காப்பிட வாராய்! (3)

[செப்பு - பொற்கலசம்; சிறு சோறு - மணற் சோறு; இல் - சிற்றில் (மணல் வீடு); சிதைத்திட்டு-அழித்திட்டு; உரப்ப - கோபித்துக் கொள்ள; அடிசில் - சோறு]

என்பது பாசுரம். இதில், ''சிறு பெண்கள் விளையாட்டாக சமைத்துக் கொண்டிருந்த மணற் சோற்றையும் கட்டின மணல் வீட்டையும் நீ சிதைத்தாய்; அவர்களை வலுச் சண்டைக்கு இழுத்தாய். நான் 'நீ இப்படித் திரியக் கூடாது' என்று உன்னைச் சிறிது அதட்டினேன். ஒருகால் நான் அடிப்பேன் என்று அஞ்சி நீ ஓடிப் போனாய்; சோறும் உண்டிலை. இப்போது அப்படி ஒன்றும் செய்யேன். காப்பிட வாராய்'' என்கின்றார்.

**பிள்ளைத்தமிழ் இலக்கியம்** : பிற்காலத்தில் எழுந்த இந்த வகை இலக்கியத்திற்கு வித்திட்டவர் விஷ்ணு சித்தரே என்பதை நாம் காணும்போது எல்லையற்ற மகிழ்ச்சியை அடைகின்றோம். பிள்ளைப் பாட்டின் இலக்கணத்தைப் 'பன்னிரு பாட்டியல்',

பிள்ளைப் பாட்டே தெள்ளின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே[2]

என்று பேசும். 'திங்கள்' என்னாது 'ஆன்ற திங்கள்' என்று சிறப்பித்ததனால் பிள்ளைப்பாட்டை ஒன்றித்த மாதங்களில் (3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19, 21) கேட்பித்தல் வேண்டும் என்பதையும், மூன்றாம் ஆண்டிலும் ஐந்தாம் ஆண்டிலும், ஏழாம் ஆண்டிலும் கேட்பிக்கினும் இழுக்கு அன்று என்பதையும் அறிவித்தற்காகும்.

ஆண்பாற் பிள்ளைப்பாட்டில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருக என்றல், அம்புலி,

2. பன், பாட் - 101.

சிற்றில் சிதைத்தல், சிறுபறை, சிறுதேர் — என்று பத்து நிலைகளும்; பெண்பாற் பிள்ளைப் பாட்டில் இறுதியில் கூறப் பெற்ற மூன்றுக்குப் பதிலாக அம்மானை, நீராடல், ஊசல் என்ற மூன்று நிலைகளும் அமையும். பெரியாழ்வார் திருமொழியில் 1.4 முதல் 2.8 முடியவுள்ள பிள்ளைத் தமிழ்க் கூறுகள் விளக்கமாகவுள்ளன. இவற்றுள் சிறுபறை, சிறுதேர் என்ற இரண்டு நிலைகள் காட்டப் பெறவில்லை. ஆயினும் காப்பு முதல் எல்லாமும் அச்சோவச்சோ, புறம் புல்குதல், அப்பூச்சி காட்டுதல், அம்மம் உண்ண அழைத்தல், நீராட்டம், குழல் வாராய் அக்காக்காய், ஓர் கோல் கொண்டு வா, பூச்சூட்டல், காப்பிடல் என்ற நிலைகளும் காணப் பெறுகின்றன. இவற்றிலிருந்தே பிள்ளைத்தமிழ் அமைப்பு வளர்ந்தது என்று உறுதியாகக் கொள்ளலாம்.

# 7. கண்ணன் விளைத்த சிறு குறும்புகள்

குழந்தைகளின் மழலை மொழி பெற்றோருக்கு இன்பம் தருதல் போல அவர்கள் செய்யும் சிறு குறும்புகளும் இன்பந் தரும்- நம் சிறுவர்கள் செய்யும் சிறு குறும்புகள் பெற்றோருக்கும் மற்றோருக்கும் சிறிது அருவருப்பை விளைவித்தாலும் கண்ணன் செய்த சிறு குறும்புகளை யசோதைப் பிராட்டி அநுபவித்து மகிழ்கின்றாள். இந்தப் பிராட்டி பெற்ற அநுபவத்தைப் பெரியாழ்வார் தம்மை யசோதையாகப் பாவித்துக் கொண்டு அவற்றை அநுபவித்து இனியராகின்றார். அவற்றுள் சிலவற்றில் நாமும் ஆழங்கால்பட்டு அநுபவிப்போம்.

யசோதைப் பிராட்டி (பெரியாழ்வார்) சந்திரனை நோக்கிப் பேசுகின்றாள்:

**தன்முகத்துச்சுட்டித்**
**தூங்கத் தூங்கத் தவழ்ந்துபோய்**
**பொன்முகக் கிண்கிணி**
**யார்ப்பப் புழுதியளைகின்றான்**
**என்மகன் கோவிந்தன். (1.5:1)**

[சுட்டி-நெற்றியில் தொங்கும் அணி; தூங்கத்தூங்க-பலகாலும் அசைய; பொன்முகம்-அழகிய முகம்; கிண்கிணி-சதங்கை; ஆர்ப்ப-ஒலிப்ப]

குழந்தையாகிய கண்ணன் புழுதியில் புரண்டு விளையாடுவதில் யசோதையின் நாட்டம் செல்லுகின்றது. இந்த

விளையாட்டைக் கண்டு கண் படைத்த பயனைப் பெறுமாறு அம்புலியை அழைக்கின்றாள்.

கண்ணன் செய்யும் குறும்புகள் பல நிகழ்ச்சிகளைக் கொண்டவை. ஒரு நிகழ்ச்சி: கண்ணன் புழுதியில் விளையாடும்போது உடம்பில் வியர்வை நீர் உண்டாகும். அவ்வேர்வை நீரால் நனைந்து புழுதி படிந்த இடம் சேறாகவும், நனையாத இடம் புழுதி மண்ணாகவும் இருக்கும். அப்படியே ஓடிவந்து தாயை அணைத்துக்கொள்வான். அந்தச் சேறும் புழுதியும் தாயின் உடலின்மீது படிந்துவிடும். பின்னர் அன்னைக்குத் தெரியாதபடி வீட்டினுள் புகுந்து சட்டியில் வைத்திருக்கும் தயிரையும் மிடாக்களிலிருக்கின்ற வெண்ணெயையும் உண்பான்; அவன் பட்டி மேய்ந்து திரியும் கன்று போன்றவன். இதனைப் பெரியாழ்வார்,

**புட்டியிற் சேறும் புழுதியும் கொண்டுவந்து**
**அட்டி யமுக்கி அகம்புக் கறியாமே**
**சட்டித் தயிரும் தடாவினில் வெண்ணெயும்உண்**
**பட்டிக் கன்றே. (1.7:5)**

[புட்டி-திருவரை; அட்டி அமுக்கி-இட்டு உறைக்கப்பூசி; அகம்-வீடு; அறியாமே-தெரியாதபடி; தடா-மிடா]

என்று அநுசந்தித்து மகிழ்கின்றார் யசோதைப் பிராட்டி நிலையில்.

திருவாய்ப்பாடியிலுள்ளார் தம் தயிர், வெண்ணெய், பால் முதலியவற்றைக் கண்ணனுக் கெட்டாதபடி உயரத்தில் உள்ள உறிகளின்மீது சேமித்து வைப்பர். இதைக் கண்டு கண்ணன் ஒரு பொத்த உரலைத் தேடிக் கண்டுபிடித்து உருட்டிக்கொண்டு வந்து தலைகீழாகக் கவிழ்த்துப் போட்டு அதன் மேலேறி உறியை எட்டி அதிலுள்ளவற்றை விழுங்குவான். இந்த நிகழ்ச்சியில் விஷ்ணுசித்தர்,

பொத்த வுரலைக் கவிழ்த்து அதன் மேலேறி
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்த திருவயி றார விழுங்கிய
அத்தன். (1.10:7)

[பொத்த - அடியில் ஓட்டையுள்ள; தடா - மிடா; தித்தித்த - மதுரமான; ஆர - நிரம்ப; மொத்த - மிகுதியாக; அத்தன் - தலைவன்]

என்று ஆழங்கால்பட்டு அகமகிழ்கின்றார். இங்கு நல்ல உரலானால் அதை நடுவே யாரேனும் சிலர் கார்யார்த்தமாகத் தேடி வந்து தன்னைப் பிடித்துக்கொள்ளக் கூடுமென்று பொத்த உரலைத் தேடிப் பிடித்தான் என்பது சிறப்புப் பொருளாகும்.

அடிக்கடித் தன் மகன் மீது புகார் சொல்லும் ஆய்ச்சியர்களை நோக்கி, "என் மகன்மீது வீண் பழி சுமத்தாதீர்கள்; களவு கண்டதுண்டாகில் கையும் பிடியுமாய்ப் பிடித்துக் கொணருங்கள்" என்று சொல்லிய யசோதை முன் ஆய்ச்சிமார் கண்ணனைக் கையும் பிடியுமாய்ப் பிடித்துக் கொணர, அது கண்ட யசோதை "நான் பிள்ளையைப் பெற்று வளர்ப்பது மிகவும் அழகாயிருந்தது!" என்று சொல்லித் தன்னைத் தானே— மோதிக்கொண்டு அவர்கள் முன்னே தன் வயிற்றெரிச்சலெல்லாம் தோன்றும்படி அடிக்கின்றாள். இந்நிகழ்ச்சியை,

திருடி நெய்க்கு
ஆப்பூண்டு நந்தன் மனைவி கடைத்தாம்பால்
சோப்பூண்டு துள்ளித் துடிக்கத் துடிக்க அன்று
ஆப்பூண்டான். (2.1:5)

[திருடி - களவு செய்து; ஆப்பூண்டு - அகப்பட்டுக் கொண்டு; கடைத்தாம்பு - கடையும் தாம்பு; சோப்பூண்டு - அடியுண்டு; ஆப்பூண்டான் - கட்டுண்டான்]

என்று அநுசந்தித்து மகிழ்கின்றார்.

அழகாகப் பின்னப்பட்ட பெரிய உறிமேல் திண்மையான பாத்திரத்தில் வெண்ணெய் வைக்கப் பெற்றுள்ளது. கண்ணன் அதைக் களவு செய்து உண்டுவிட்டு விரைவாக ஓடிவந்து பொய்யுறக்கம் கொள்ளுகின்றான். இதனைச் சொல்லி மகிழ்ந்து குழல் வாரிக்கொள்ள வரும்படி அழைக்கின்றாள் யசோதை. பெரியாழ்வாரின் உள்ளம் கண்ணனின் இந்தச் சிறு குறும்பில் ஈடுபட்டு,

> **திண்ணக் கலத்துத் திரையுறிமேல் வைத்த**
> **வெண்ணெய் விழுங்கி விரைய உறங்கிடும்**
> **அண்ணல். (2.5:3)**

[திண்ண-திண்ணிய; கலம்-பாத்திரம்; திரை-பின்னு தலையுடைய; விரைய-விரைவாக; உறங்கிடும்-பொய் உறக்கம் கொள்ளும்]

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார்.

ஓர் ஆய்ச்சியின் குற்றப்பத்திரிகை இது: "அசோதாய், உன் மகன் வீட்டில் வயிறு வளர்ப்பதற்கு ஒன்றுமில்லாமல் இவ்வாறு தீம்பு செய்பவன் அன்றே; செல்வச் செருக்கினாலன்றோ செய்கின்றான்? 'நாம் இங்ஙனம் செய்தால் நம்முடைய ஐசுவரியத்திற்கும் பிறப்புக்கும் தகுமோ?' என்றும் இவன் ஆலோசிப்பதில்லை. தவிரவும், இப்படித் தீம்பு செய்வதே தனக்குப் புகழ் எனவும் நினைக்கின்றானே; இவன் இப்போது என் வீட்டில் வந்து உருக்குவதற்காக வைத்திருந்த வெண்ணெயைச் சிறிதும் மிஞ்சாதபடி புசித்துக் கடைசியில் "வெறுங் கலத்தை வெற்பிடையிட்டு அதன் ஓசை கேட்டு" (2.9:1) மகிழ்கின்றான். இவன் செய்த தீம்புகளை எங்களால் பொறுக்கமுடிகின்றதில்லை. புண்ணிலே புளிச்சாற்றைப் பிழிந்தாற்போல் பொறுக்கமுடியாத தீமைகளை ஒவ்வொரு வீட்டிலும் செய்கின்றான். இவனது திருட்டுத் தொழிலைத் தடுக்க எங்களால் முடியவில்லை. ஆகையால் உன் பிள்ளையைக் கூவியழைத்துத் தீம்பு செய்ய வொட்டாதபடி

வீட்டிலே உன் பக்கத்திலேயே வைத்துக்கொள். இல்லா விடில் நாங்கள் ஆயர்பாடியில் குடியிருக்கவே முடியாது'' என்கின்றாள். இந்நிகழ்ச்சியை பெரியாழ்வார்,

திருவுடைப் பிள்ளைதான் தீய வாறு
தேக்கமொன் றும்இலன்; தேசு டையன்
உருக வைத்த குடத்தோடு வெண்ணெய்
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான்.
அருகி ருந்தார் தம்மை அநியாயம்
செய்வது தான்வ ழக்கோ? அசோதாய்!
வருகவென் றுன்மகன் தன்னைக் கூவாய்
வாழ வொட்டான் மதுசூ தனனே. (2.9:3)

[திருவுடைப் பிள்ளை-செல்வப் பிள்ளை; தேசு-புகழ்; போந்து-வந்து; அருகு-பக்கத்தில்; வழக்கு-நியாயம்; வாழவொட்டான்-குடிவாழ்ந்திருக்க வொட்டான்]

வெண்ணெய் விழுங்கி வெறுங்க லத்தை
வெற்பிடை யிட்டதன் ஓசை கேட்கும்;
கண்ண பிரான்கற்ற கல்வி தன்னைக்
காக்ககில் லோம்,உன் மகனைக் காவாய்
புண்ணில் புளிப்பெய்தால் ஒக்கும்தீமை
புரைபுரை யால்இவை செய்யவல்ல
அண்ணற்கண் ணானோர் மகனைப் பெற்ற
அசோதை நங்காய்உன் மகனை கூவாய் (2.9:1)

[வெற்பிடை-கல்லில்; கல்வி-திருமிகுக் கலை; காவாய்-தடுப்பாயாக; புரைபுரை-வீடுதோறும்; கூவாய்-அழைத்துக் கொள்க]

என்று அநுசந்தித்துக் களிப்பெய்துகின்றார்.

ஆய்ச்சியின் முறையீட்டைக் கேட்ட யசோதைப் பிராட்டி கண்ணனுடைய நற்குண நற்செயல்களை எடுத்துரைத்து 'கண்ணா, இங்கே வா' என்று அழைக்க,

முறையிட்டுக் கொள்ள வந்து அருகே நிற்பவள், 'நீ இப்படி இவனைப் புகழ்ந்து அழைக்கலாமா? அச்சுறுத்தி யன்றோ அழைக்க வேண்டும்?' என்று சொல்ல, யசோதைப் பிராட்டி அதற்கு, 'இவன் எனக்குச் செல்வப்பிள்ளையாயிற்றே' என்று கூறிவிட்டுக் கண்ணனை நோக்கி 'அஞ்சன வண்ணா, உன்னைப் பிறர் பழித்துச் சொன்னால் என்னால் காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருக்கமுடியாது. ஆகவே அயலகத்தார் ஒன்றும் சொல்ல இடம் இல்லாதபடி நீ இங்கே வந்து சேர்க' என்று அழைக்கின்றாள். இந்தக் காட்சியில் ஈடுபட்ட ஆழ்வார்,

> **வருக வருக வருக இங்கே**
> **வாமன நம்பீ! வருக இங்கே**
> **கரிய குழல்செய்ய வாய்மு கத்துக்**
> **காகுத்த நம்பீ! வருக இங்கே**
> **அரியன் இவனெனக் கின்று, நங்காய்**
> **அஞ்சன வண்ணா! அசல கத்தார்**
> **பரிபவம் பேசத் தரிக்க கில்லேன்;**
> **பாவியே னுக்கிங்கே போத ராயே. (2.9:2)**

[கரியகுழல்-கருநிறமான கூந்தல்; அரியன்-அருமை யானவன்; அஞ்சனம்-மை; பரிபவம்-அவமானம்; தரிக்க-பொறுக்க; பாவியேனுக்கு-பாபத்தைப் பண்ணின எனக்கு; போதராய்-வாராய்]

என்று அநுசந்தித்து மகிழ்கின்றார்.

இன்னும், கண்ணனைப் பலபடியாகப் புகழ்ந்து 'கண்ணா! முலையுண்ண வா' என்று அழைக்க, அவன் தன் மகிழ்ச்சி தோற்ற 'யான் அம்மம் உண்டு வந்தேன் காண்!' என்று ஓடிவந்து இல்லத்தினுள் புகுகின்றான். யசோதை அவன் வந்த அழகையும் முகமலர்ச்சியையும் கண்டு மகிழ்ந்து அக்கண்ணபிரானை எதிர் கொண்டு சென்று அவனைத் தன் இடுப்பிலேற்றி அணைத்துக் கொள்கின்றாள். கண்ணன் முன்பு செய்த தீம்புகளை

மறந்து விட்டு அவனை எதிர் சென்று எடுத்துக் கொள்ளும்படி அவன் பண்ணின ஆச்சரியத்தில் ஈடுபட்டு 'இப்பருவத்தில் இவன் இவ்வளவு விரகனாவதே' என்று தன்னில்தான் மகிழ்ந்து போலிகின்றாள். இந்த அநுபவத்தை ஆழ்வார் அநுசந்தித்து வியக்கின்றார் (2.9:4).

இன்னோர் ஆய்ச்சி வந்து முறையிடுவது: "அசோதை நங்காய்! என் மகள் பாலைக் கறந்தெடுத்துக் கொண்டு வந்து அப் பாலை அடுப்பின் மேலேற்றி வைத்தாள்; அதற்குக் காவலாகவும் இருந்தாள். நான் அதைக் காய்ச்சு வதற்கு நெருப்பெடுத்து வர மேலண்டை வீட்டிற்குச் சென்றேன். அங்கே ஒரு சிறிது நேரம் பேசிக் கொண்டு நின்று விட்டேன். அதற்குள் நின்மகன் என் வீடு புகுந்து என் மகள் இருந்த இடத்திற்குச் சென்று பாத்திரத்திலுள்ள பச்சைப் பாலைச் (காய்ச்சாத பாலைச்) சாய்த்துப் பருகி விட்டு ஒன்றும் அறியாதவன் போல் வந்து நிற்கின்றான். இவனைக் கூப்பிட்டுச் சிட்சித்து அடக்கி வைப்பாயாக" என்கின்றாள் (2.9:5).

இதைக் கேட்டும் யசோதைப் பிராட்டி கண்ணன்மீது சிறிதும் சினம் கொள்ளாது, அவனை மேலும் பலவாறு புகழ்ந்து "இனி அண்டை வீடுகளுக்குப் போகாமல் நம் அகத்துக்கு வந்துவிடு. பக்கத்து வீட்டுக்காரர்கள் உன்னை வாய்க்கு வந்தபடி பேசுகின்றனர். நான் அவற்றைக் காதால் கேட்கவும் சகிக்கவில்லை; வாயால் சொல்லவும் நாக்கு கூசுகின்றது. அவர்கள் வாய்க்கு இரையாகாமல் இங்கே வந்து விடுக" என்று வேண்டுவதை ஆழ்வார் ஒரு பாசுரத்தில் (2.6:6) அநுசந்தித்து மகிழ்கின்றார். இப் பதிகத்துப் பாசுரங்கள் யாவும் படித்து அநுபவிக்கத் தக்கவை.

**வேறு சில குறும்புகள் :** கண்ணன் சிறுவனாக இருந்த போது சில கட்டெறும்புகளைப் பிடித்துக் கன்றுகளின் காதில் விடுவான். அதனால் அக் கன்றுகள் வெருண்டு

சிதறிப் போய்க் கண்டுபிடிக்க முடியாதபடி ஓடிப்போய் விடும். இதைக் கண்டு கண்ணன் மகிழ்வான். இதனை யசோதைப் பிராட்டி, "கன்றுகள் ஓடிவிட்டால், பால் கறக்க முடியாது; வெண்ணெயைத் திரட்டி விழுங்க உனக்கு வெண்ணெய் கிடைக்காது" என்று கூறுகின்றாள். இதனைப் பெரியாழ்வார்,

**கன்றுகள் ஓடச் செவியிற்**
**கட்டெறும்பு பிடித்து இட்டால்,**
**தென்றிக்கெடும் ஆகில் வெண்ணெய்**
**திரட்டி விழுங்குமா காண்பன் (2.4:2)**

[ஓட-வெருண்டு ஓட; தென்றி-சிதறி; காண்பன்-பார்ப்பேன்.]

என்று ஒரு பாசுரத்தில் அநுசந்தித்து மகிழ்கின்றார்.

கண்ணன் கட்டெறும்பைக் கன்றின் காதில் விட்டதைப் பாரதியார் வேறு விதமாக அநுசந்திக்கின்றார். இவர் கண்ணன் ஆறேழு கட்டெறும்புகள் அங்காந்திருக்கும் பெண்களின் வாயில் விட்டு வேடிக்கை பார்ப்பான். இதனைப் பாரதியார்,

**அங்காந் திருக்கும்வாய் தனிலே—கண்ணன்**
**ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்;**
**எங்காகி லும்பார்த்த துண்டோ?—கண்ணன்**
**எங்களைச் செய்கின்ற வேடிக்கை ஒன்றோ?**[1]

என்று கூறி மகிழ்வார். தீராத விளையாட்டுப் பிள்ளையின் தெவிட்டாத விளையாட்டுகளைப் பட்டியலிட்டுக் காட்டுவார்.

சில சமயம் எண்ணெய்க் குடத்தை உருட்டி விடுவான்; அவர்கள் சிந்திப்போன எண்ணெயை வழிப்பதும்

1. கண்ணன் பாட்டு — கண்ணன் விளையாட்டுப் பிள்ளை-6.

துடைப்பதுமாயிருக்கையில் அவர்கள் அச்செயலை விட்டு ஓடி வரும்படி தொட்டிலில் படுத்து உறங்கும் குழந்தையைத் தேள் கொட்டினாற் போல வீரிட்டுக் கதறியழும்படி வெடுக்கெனக் கிள்ளி விடுவான். அவனைச் சூழ்ந்து வரும் பிள்ளைகட்கு அப்பூச்சி காட்டிப் பயப்படுத்துவான். அப் பூச்சி காட்டுதலாவது, கண் இமையைத் தலைகீழாக மாற்றி விழித்தும், மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவதுமான பயங்கரமான பாலசேட்டைகள். இவற்றை யசோதைப் பிராட்டி அநுபவித்ததைப் போன்று ஆழ்வார்தாமும் தம்மை யசோதை நிலையில் வைத்து,

> **எண்ணெய்க் குடத்தை யுருட்டி**
> **இளம்பிள்ளை கிள்ளி எழுப்பி**
> **கண்ணைப் புரட்டி விழித்துக்**
> **கழகண்டு செய்யும் பிரானே! (2.4:6)**

*[கண்ணைப் புரட்டி-கண் இமையைத் தலைகீழாகப் புரட்டி; விழித்து-அப்பூச்சி காட்டி.]*

என்ற பாசுரத்தில் அநுசந்தித்து மகிழ்கின்றார்.

கண்ணன் கன்றுகளிடம் செய்யும் சேட்டை அவற்றின் வாலில் பனையோலைகளைக் கட்டிவிடுதல். அவை ஓடும் போது சலசலப்பு ஓசையை உண்டாக்கும்; அந்த ஓசையைக் கேட்டு மேலும் அவை வெருவியோடும். இங்ஙனம் கன்றுகள் நாலாபக்கமும் சிதறியோடுவதைக் கண்டு கண்ணன் களிப்பெய்துவான். இதனை யசோதைப் பிராட்டி கண்குளிரக் கண்டு அநுபவித்தாற் போல ஆழ்வார் தாமும் தம்மை அப்பிராட்டி நிலையில் பாவனை செய்து கொண்டு;

> **'கன்றினை வாலோலை கட்டி' (2.4:8)**

என்ற சொற்றொடரில் அநுசந்தித்து மகிழ்கின்றார்.

**சிறு பெண்களிடம்:** பெதும்பைப் பருவமுடைய மகளிர் சிற்றில் அமைத்தும் சிறு சோறு சமைத்தும் மணலில்

விளையாடுவார்கள். அவற்றைக் கண்ணன் அழித்துவிட்டு அவர்களை வலுச்சண்டைக்கு இழுப்பான். 'நீ இப்படித் திரியக் கூடாது' என்று யசோதை இதமாக அதட்டினதால், ஒருகால் அன்னை அடிக்கக் கூடும் என்று அஞ்சி சோறுண்ணுவதற்கும் வாராது ஓடிவிடுவான். இந்த நிகழ்ச்சியை ஆழ்வார்,

> செப்போது மென்முலை யார்கள்
> சிறுசோறும் இல்லும் சிதைத்திட்டு
> அப்போது நானுரப் பப்போய்
> அடிசிலும் உண்டிலை (2.8:3)

[இல்-வீடு; உரப்ப-கோபிக்க]

என்று அநுசந்தித்து மகிழ்கின்றார்.

சிறு பெண்கள் கண் திறந்து மணலில் விளையாட முடியாதபடி அவர்கள் கண்களில் மண்ணைத் தூவுகின்றான். 'ஏன் தூவுகின்றாய்?' என்று அவர்கள் கேட்டால், உடனே அவர்களைக் காலால் உதைக்கின்றான். பல பெண்கள், யசோதையிடம் வந்து முறையிடுகின்றனர் இந் நிகழ்ச்சியை விஷ்ணுசித்தர்,

> கண்ணில் மணல்கொடு தூவிக்
> காலினால் பாய்ந்தனை என்றென்று
> எண்ணரும் பிள்ளைகள் வந்திட்டு
> இவரால் முறைப்படுகின்றார்! (2.8:4)

[எண் அரு-மிகப் பல; பாய்தல்-உதைத்தல்]

என்ற பாசுரத்தில் ஈடுபட்டு மகிழ்கின்றார்.

"ஆயர் பாடியில் ஐந்து இலட்சம் குடிகள் உள்ளனர். இவ்வூரில் தீம்பு செய்யும் பிள்ளைகள் எத்தனையோ பேர் இருப்பர். அப்படியிருக்கவும் அவர்கள் செய்யும் தீம்புகளையெல்லாம் உன்மேல் ஏற்றிப் பேசுகின்றார்கள். உன்மீது குற்றம் சுமத்தும் அவர்களைவிட்டு என்னிடம் வந்துவிடு" என்று யசோதை வேண்டியதை ஆழ்வார்,

பல்லா யிரவர் இவ்வூரில்
  பிள்ளைகள் தீமைகள் செய்வார்
எல்லாம்உன் மேலன் றிப் போகாது!
  எம்பிரான்! நீஇங்கே வாராய்! (2.8:5)

*[தீமைகள்-தீம்புகள்; போகாது-ஏறாது.]*

என்ற பாசுரத்தில் மிக்க ஈடுபாட்டுடன் அநுசந்திக்கின்றார். திருவாய் மொழி 1.5:5 என்ற பாசுர உரையில் நம்பிள்ளை, "தீம்பு சேருவது கிருஷ்ணனுக்கே யாகையாலே, போம் பழியெல்லாம் அமணன் தலையோடே என்னுமாப் போலே அவன் தலையிலே ஏறிட்டுச் சொல்லுதல்' என்று குறிப் பிடுவர்.

நம்பிள்ளை சூக்தியில் அடங்கிய வரலாறு: கள்ளன் ஒருவன் அந்தணன் ஒருவன் வீட்டில் கன்னமிட்டான். அந்தச் சுவர் அன்றைக்குத்தான் வைக்கப்பெற்ற ஈரச் சுவராகையால், சுவர்விழுந்து அதனால் அமுக்கப் பெற்றுக் கள்ளன் இறந்தான். இந்நிலையில் கள்ளனின் உறவினர் வந்து அந்தணனைப் பழிதரவேண்டும் என்று நிர்ப்பந்தித்தனர். பின்னர் இருதரத்தாரும் அரசன் பக்கல் சென்றனர். அந்த அரசனோ அறிவற்றவன்; மூர்க்கன். அவன் அந்தணனை நோக்கி, "அந்தணா, நீ ஈரச்சுவர் வைத்ததனாலன்றோ அவன் முடிந்தான்? ஆகையால் நீ பழிகொடுக்க வேண்டும்" என்றான். அந்தணன், "அரசே இஃது எனக்குத் தெரியாது; சுவர் வைத்த பணியாளனைக் கேட்க வேண்டும்" என்று பதிலிறுத்தான். பின்னர்ப் பணியாளரை வரவழைத்து, "நீ தானே ஈரச்சுவர் வைத்தாய்; நீ தான் பழி தரவேண்டும்" என்று சொல்ல, அவனும் "தண்ணீர் விடுகின்றவன் அதிகமாக விட்டிட் டான்; நான் இதற்குப் பொறுப்பல்லன்" எனத் தப்பித்துக் கொண்டான். பின்னர்த் தண்ணீர் விட்டவனை வர வழைத்து விசாரித்தபோது அவன், "குயவன் பெரும்

பானையைத் தந்தான்; அதனால் நீர் அதிகமாயிற்று; நான் என்ன செய்வேன்?'' என்று கூறி நழுவினான்.

பின்னர் அரசன் குயவனுக்கு ஆள் அனுப்பி வரவழைத்து விசாரிக்க அவனும், ''என்னால் வந்ததன்று; நான் பானையைச் சிறிதாகவே செய்ய நினைத்தேன்; அதனைச் செய்து கொண்டிருந்தபோது ஒரு வேசி போக வரத் திரிந்தாள்; என் கவனம் கலைந்தது. அவளைப் பார்க்கின்ற பராக்கிலே பானை பெருத்து விட்டது. நானென்ன செய்வேன்?'' என்று மறுமொழி கூற, பிறகு தாசியை அழைத்து விசாரிக்கும்போது, அவளும் ''என்னால் வந்ததன்று; வண்ணான் என் சேலையை விரைவில் தராமையாலே நான் போக வரத் திரிந்தேன்'' எனப் பதில் கூறிவிட்டாள். பின்னர் வண்ணான் அழைத்து விசாரிக்கப் பெற்றான். அவனும், ''அரசே, நான் இதற்குப் பொறுப்பல்லேன்; துணி துவைக்கும் துறையிலே கல்லின் மீது ஓர் அமணன் (திகம்பரசாமி) உட்கார்ந்திருந்தான். எவ்வளவு உரப்பியும் அவன் எழுந்து செல்லவில்லை; பிறகு அவனாகவே எழுந்து சென்ற பிறகு சேலையைத் துவைத்துத் தர வேண்டியதாயிற்று. நான் என்ன செய்வேன்? அந்த அமணனே தாமதத்திற்குக் காரணன் ஆவான்'' என்று பதிலிறுத்தான்.

பின்னர் அந்த அமணனைத் தேடிப் பிடித்துக் கொணர்ந்து, ''நீயன்றோ இத்தனையும் செய்தாய்? நீ தான் பழி கொடுக்க வேண்டும்'' என்று அரசன் கட்டளையிட, அவன் மௌனியாகையாலே ஒன்றும் விடை கூறாதிருந்தான். மூட அரசன் ''உண்மையில் பழி தன்னிடத்திலுள்ளதனால்தான் இவன் வாய் திறந்திலன்; இவனே குற்றவாளி'' என்று தீர்மானித்து அவன் தலையை அரியக் கட்டளையிட்டான்.

அமணன் குற்றம் செய்யாதிருக்கவும் பழி அவன் தலையிலே ஏறினாப்போலே கண்ணன் தீம்பு செய்யா

திருந்தாலும் பிறருடைய தீம்பும் அவன் தலையில் ஏறும் என்று விநோதமாகக் காட்டப்பெற்றது.

கண்ணனிடம் நலிவுபட்ட ஆயமகளிர் பலர்வந்து யசோதைப் பிராட்டியிடம் முறையிடுகின்றனர். ஒரு சிறு கூட்டத்தின் முறையீடு இது. "அம்மா, உங்கள் கண்ணன், தான் நினைத்தபடி தீம்பு செய்யவொண்ணாதபடி பலருடைய போக்குவரத்துள்ள இடத்தில் விளையாடினாலும் அங்கும் வந்து தீமைகள் செய்கின்றான். இன்று பலரும் கூடும் யமுனையாற்றின் மணலில் விளையாடிக் கொண்டிருந்தோம். கண்ணன் எங்கள்மீது சேற்றை விட்டெறிந்து எங்களுடைய வளையல்களையும் துகில்களையும் வாரி வாரி எடுத்துக் கொண்டு காற்றிலும் கடிய வேகத்துடன் வீடு வந்து புகுந்து கொண்டான். வாசலில் நின்று அவன் பேரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கதறுகின்ற எங்களைக் குறித்து ஒரு வாய்ச்சொல்லும் அருளவில்லை. வளையல் விஷயமாகவும் பேச்சு இல்லை" என்கின்றனர். (2.10:1)

இன்னொரு மகளிர் கூட்டத்தின் முறையீடு இது: "நாங்கள் எங்கள் ஆடைகளைக் கரையில் களைந்து வைத்து விட்டு ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தோம். அப்போது உங்கள் (எங்கள்?) கண்ணன் அவற்றை வாரி எடுத்துக் கொண்டு வந்து விண்ணை முட்டும் குருந்தமரத்தின் மீது ஏறிக் கொண்டான். நாங்கள் எவ்வளவு வேண்டியும் அவற்றை எங்களிடம் தந்தருள மறுக்கின்றான்" என்கின்றனர் (2.10:2).

**ஆய்ச்சியரின் குற்றச்சாட்டுகள் :** நாள்தோறும் ஆய்ச்சியரின் வாய்முறையீடுகள் வந்து குவிகின்றன. ஓர் ஆய்ச்சி இவ்வாறு முறையிடுகின்றாள்: "ஆண்டுதோறும் திருவோண நட்சத்திரத்தைக் கொண்டாடுகின்றேன். மாதந்தோறும் கொண்டாட வசதிகள் இன்மையால், இவ்வாண்டு அதைக் கொண்டாட, செந்நெல் அரிசி, சிறு பயற்றம் பருப்பு, காய்ச்சித் திரட்டிய கன்னற்பாகு, மணம் மிக்க புத்துருக்கு நெய், பால்

இவற்றைக் கொண்டு பாயசம், பட்சணங்களை நோன்புக்கு உறுப்பாகச் சமைத்தேன். இப்பிள்ளையின் இயல்பை முன்பிருந்தே அறிவேன். விரதத்திற்குச் சமைக்கப் பெற்ற வற்றையெல்லாம் ஒன்றும் மிகாதபடி விழுங்கிவிட்டு அதிலும் மனநிறைவு கொள்ளாமல், நான் இன்னமும் உண்ண வேண்டும் என்று சொல்லிக் கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்று நின்றான். உன் பிள்ளையை அழைத்துக் கொள்க. நீ பிள்ளையை வளர்க்கும் விதம் மிக அழகு!'' என்கின்றாள். இந்த நிலையையும் ஒரு பாசுரத்தில் (2.9:7) ஈடுபட்டு மகிழ்கின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் ஆய்ச்சி கூறியதைக் கேட்டு யசோதைப் பிராட்டி தன் பிள்ளையை நோக்கி, ''கண்ணா, இங்கே வந்துவிடுக; 'மாட்டேன்' என்று சொல்லாமல் வந்துவிடு. நம் வீட்டில் விளையாடுவதற்கு விசாலமான இடம் உண்டு. இழிசனங்களான வேலைக்காரிகளும் வேலைக்காரர்களும் கூட உன்மீது குற்றம் சுமத்தும் அழுக்காறுடையவர் களிடமிருந்து கொண்டு விளையாடாமல், இசைந்திடும் குழலழகும் நீயுமாய் வரும் நிலையைக் கண்டு நான் மகிழும் படி இங்கு வந்துவிடு. தாய் சொல்லைத் தட்டாமலிருப்பது தான் நல்ல பிள்ளைக்கு அழகு. தாமோதரா, இங்கு போதருக'' என்று கண்ணனை அழைக்கின்றாள். தாமோதரா: 'என் கயிறுண்டு; உன் வயிறுண்டு; அங்கிருந்து கொண்டு பெறும் பேறு' என்பது உள்ளுறை. இக்காட்சி யிலும் ஈடுபடுகின்றார் ஆழ்வார் (2.9:8).

யசோதை இப்படிப் பாடுபட்டுக் கூப்பிட்டும் கண்ணன் வரவில்லை. மாறாக, மற்றோர் இடைச்சி அகத்தில் நுழைகின்றான். அங்கு வெல்லப் பாகுடன் தயாரிக்கப் பெற்ற இலட்டும், சீடை என்ற தின்பண்டமும், காரெள் இட்டு வாரின எள்ளுருண்டை ஆகியவற்றைத் தனித்தனியே பாத்திரங்களில் வைக்கப் பெற்றிருப்பதைக் காண்கின்றான். இவற்றை உறியில் வைத்து தன் வீடுதானே என்று காவல் வைக்காமல் வெளியில் சென்றிருந்தாள் இடைச்சி. 'இது

தான் தக்க சமயம்!' என்று கண்ணன் அவற்றையெல்லாம் ஒருசேர விழுங்கி விட்டு வெளியே வந்து விடுகின்றான். இவ்வளவிலும் மனநிறைவு பெறாமல் மீண்டும் அகத்தினுள் புகுந்து உறியை நோக்கி 'செவ்வியையுடைத்தான வெண்ணெய் இருக்குமா?' என்று ஆராய்கின்றான். இச் செய்தியை இடைச்சியொருத்திக் கூறி "நீ பிள்ளையை வளர்க்கும் அழகே அழகு!" என்று இடித்துக் காட்டு கின்றாள் (2.9:9).

இந்த இடைச்சி சொல்லி வாய் மூடுவதற்குள் மற்றொருத்தி வந்து கண்ணன் தன் வீட்டில் நடந்தவற்றை நவிலுகின்றாள். வந்தவள் "யசோதை நங்காய்! உன் மகன் புரிந்த தீம்புகளை எடுத்துச் சொல்லுவதற்கு முன் நீ சீற்றங்கொள்ளுகின்றாய்; உன் பிள்ளையே வஞ்சகச் செயல்களைப் புரிபவனாக இருக்கின்றான்" என்கின்றாள். "அவன் என்ன தீம்பு செய்தான்?" என்று யசோதை கேட்க, வந்தவள், "என் வீட்டில் புகுந்து என் மகளைப் பேர் சொல்லி அழைத்து, அவளுடைய கையிலிருந்த வளையல்களை வலிந்து பறித்துக் கொண்டு சென்று, காட்டிலிருந்து நாவற்பழங்களைக் கொணர்ந்து விற்கும் பெண் பிள்ளையிடம் வளையல்களைத் தந்து அதற்குப் பதிலாக நல்ல பழங்களைப் பெற்றுக் கொண்டு திரும்புகை யில் என்னைக் கண்டு விட்டான். உடனே கண்ணன் 'என் அப்பன் குதிருக்குள் இல்லை' என்று சுட்டிக்காட்டுவது போல், 'நான் வளையலைக் கொடுக்கவில்லை. என் கையில் வளையலைப் பார்த்தாயா? நான் உன் வீட்டில் புகுந்ததைக் கண்டாயோ? உன் மகளைப் பேர் சொல்லி அழைத்ததைப் பார்த்தாயோ? வந்து கையில் வளை கழற்றினதைக் கண்டாயோ? அப்படிக் கண்டிருந் தால் உன் மகள் வளையை அப்போதே பிடுங்கிக் கொள்ள லாமல்லவா?' என்றாற்போல வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போய், நான் மறுநாக்கெடுக்க முடியாதபடி பண்ணிச் சிரிக்கின்றான்" என்று புகார் செய்கின்றாள் இந்த இடைச்சி.

சொல்லில் அரசிப் படுதி, நங்காய்!
சூழல் உடையன்உன் பிள்ளை தானே
இல்லம் புகுந்தென் மகளைக் கூவிக்
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற
அங்கொருத் திக்குஅவ் வளைகொ டுத்து
நல்லன நாவற் பழங்கள் கொண்டு
'நானல்லேன்' என்று சிரிக்கின் றானே

*[அரசிப்படுதி-சீற்றங்கொள்ளுகின்றாய்; சூழல் - வஞ்சகச் செயல்கள்.]*

*என்ற பாசுரத்தில் இந்த நிகழ்ச்சியை அநுசந்தித்து மகிழ் கின்றார் ஆழ்வார்.*

*இங்ஙனம் தாயாக நின்று அநுபவிக்கும் கண்ணனின் சிறு குறும்புகள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளு கின்றன. அன்னையின் அன்பு ஆழங்காண முடியாத மாக்கடல். காதலர்களின் காதலைப் போல் கொந்தளித்து அலையெறியும் மாக்கடல் அன்று. சாந்தமான-தூய்மை யான-ஒளி மயமான மாக்கடல். இந்த விதமான அன்புக் கடலில் விளைந்தவை விஷ்ணுசித்தரின் பல பாசுரங்களும் பக்தி அநுபவங்களும். அவற்றில் ஆழங்கால் பட்டு நம்முடைய பக்திப் பயிரை வளர்ப்போம்; பக்தி அநுபவங் களில் திளைப்போம்.*

*இந்நிலையில்,*

மருவும் நின்திரு நெற்றியில் சுட்டி
அசைத ரமணி வாயிடை முத்தம்
தருத லும்உன்தன் தாதையைப் போலும்
வடிவு கண்டுகொண் டுள்ளமும் குளிர
விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து
வெகுளி யாய்நின் றுரைக்கும்அவ் வுரையும்
திருவி லேன்ஒன் றும் பெற்றிலேன்; எல்லாம்
தெய்வ நங்கை யசோதைபெற் றாளே.

(பெரு.திரு.5)

*என்ற பாசுரத்தின் அநுபவத்திலும் ஆழங்கால்பட்டு மகிழ் கின்றோம்.*

# 8. கண்ணனின் தீரச் செயல்கள்

எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப்பட்டிருக்கும். அவனுடைய திருநாமங்களைச் சொல்லியநுபவித்தல், அவனுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லியநுபவித்தல், அவனுடைய வடிவழகைச் சொல்லி அநுபவித்தல், **அவனுடைய தீரச்செயல்களைச் சொல்லியநுபவித்தல்,** திவ்விய தேசங்களின் வளங்களைச் சொல்லியநுபவித்தல், அங்கே அபிமானமுள்ள ஸ்ரீவைணவர்களின் பெருமையைப் பேசி அநுபவித்தல்—என்றிப்படிப் பலவகைப்பட்டிருக்கும் பகவதநுபவம். கிருஷ்ண பக்தியில் சிறந்தவர் பெரியாழ்வார்; குறிப்பாக அவன் சிறுவனாக இருந்தபொழுது அவன் ஆற்றிய தீரச் செயல்களில் ஆழங்கால்பட்டு மகிழ்ந்தவர். இத்தகைய தீரச் செயல்கள் சிலவற்றில் நாமும் ஆழங்கால் படுவோம். இத்தீரச் செயல்கள் **'அதிமாநுஷ்ய சேஷ்டிதங்கள்'** என்று குறிப்பிடுவர் வைணவப் பெருமக்கள். தமிழர்கள் இதைச் **'சிறு சேவகங்கள்'** என்று குறிப்பிடுவர்.

1. **பூதனை வரலாறு:** கம்சன் ஆகாயவாணி சொன்னதைக் கேட்டது முதல், தேவகியின் கருப்பம் பிறந்ததும் அப்போதைக்கப்போது அழித்து வருகின்றான். எம்பெருமானது யோக நித்திரையால் பிறந்த கன்னிகையைக் கொல்ல முயன்றபோது அக்கன்னிகை 'உன்னைக் கொல்லப் போகின்றவன் ஒளித்து வளர்கின்றான்' என்று சொல்லியதைக் கேட்டது முதல் கண்ணன்மேல் சினங்கொண்டு அவன் பால்மணம் மாறாத பாலகனாக இருக்கும்

போது பேய் மகளாகிய பூதனையை ஏவினான் என்பது அக்காலத்தில் உலகறிந்த செய்தி.

> **கஞ்சன் கறுக்கொண்டு நின்மேல்**
> **கருநிறச் செம்மயிர்ப் பேயை**
> **வஞ்சிப்ப தற்கு விடுத்தான்**
> **என்பதோர் வார்த்தையும் உண்டு (2.8:6.).**

இந்தப் பூதனை அழகான ஆய்ச்சி உருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து ஆங்கு உறங்கிக் கொண்டிருந்த குழந்தைக் கண்ணனை எடுத்து தன் நஞ்சு தீற்றிய முலையைப் பாலுண்ணக் கொடுத்துக் கொல்ல முயல, குழந்தைக் கண்ணன் அவ்வரக்கியின் முலையைக் கைகளால் இறுகப் பிடித்துப் பாலுண்ணும் பாவனையில் அவள் உயிரையும் உறிஞ்சி அவளைப் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும் படி செய்தருளினான். இதனை,

> **கள்ளத்தி னால்வந்த**
> **பேய்ச்சி முலைஉயிர்**
> **துள்ளச் சுவைத்தானால் (2.10:6)**

என்ற பாசுரத்தால் அறியலாம். இவனைப் 'பேயின் முலை உண்ட பிள்ளை இவன்' (2.5:2) என்றும்,

> **பொல்லா வடிவுடைப் பேய்ச்சி**
> **துஞ்சப் புணர்முலை வாய்மடுக்க**
> **வல்லான் (4.1:6)**

என்றும் குறிப்பிடுவர். இந்நிகழ்ச்சியை பல பாசுரங்களில்[1] குறிப்பிடுவர் ஆழ்வார்.

**2. சகடாசுரன் வரலாறு :** திருவாய்ப்பாடியில் நந்த கோபன் திருமாளிகையில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்தில்

1. பெரியாழ். திரு : 1.2:5; 1.5:4; 2.3:1; 2.3:12; என்பன காண்க.

கண்ணனைத் தொட்டிலிலிட்டுக் கண் வளர்த்தி விட்டு யசோதை யமுனைக்கு நீராடப் போயினாள். கம்சனால் ஏவப்பெற்ற அசுரன் ஒருவன் அச்சகடத்தில் வந்து ஆவே சித்து குழந்தைக் கண்ணன்மீது விழுந்து கொல்ல முயன் றதை அறிந்த பகவான் பாலுக்கு அழுகின்ற பாவனையில் தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைத்தருள, அவ்வுதைபட்ட மாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழே விழுந்து அசுரன் உட்பட அழிந்தது.

நாள்கள்ஓர் நாலைந்து
திங்கள் அளவிலே
தாளை நிமிர்த்துச்
சகடத்தைச் சாடிப்போய்
வாள்கொள் வளைஎயிற்று
ஆருயிர் வவ்வினான் (1.2:11)

[நிமிர்த்து-தூக்கி; சகடம்-வண்டி; சாடிப்போய்-உதைத்து; வாள்-ஒளி; வளைஎயிறு-கோரப்பற்கள்; வவ்வினான்-கவர்ந்தான்.]

என்ற பாசுரத்தில் இந்த வரலாறு அநுசந்திக்கப்பெறு கின்றது. நாளைந்து - நாலு அல்லது ஐந்து மாதத்திற் குள்ளே என்றும், (நாலு மாதம் கூடின) ஒன்பது மாதங் களுக்குள்ளே என்றும், (நாலால் பெருக்கப்பெற்ற ஐந் தாகிய) இருபது மாதங்களுக்குள்ளே என்றும் பொருள்படும். இல்வாழ்வார் மங்களாசாசனம் செய்வதையே தம் பணி யாகக் கொண்டிருப்பதால் சிறிய வயதிலேயே அரிய பெரிய செயல்களை ஆற்றினான் என்று சொன்னால் கண்ணெச்சில் படும் என்று அஞ்சி அங்ஙனம் நிகழாமைக்காக மாதம் நாலென்றும் ஐந்தென்றும் ஒன்பதென்றும் இருபதென்றும் தெரியாதபடி மயங்க அருளிச் செய்தார் என்று ரசோக்தி யாக அருளிச் செய்வர் பூருவர்கள். இன்னோர் இடத்தில் இந்த நிகழ்ச்சியை,

கஞ்சன் தன்னால் புணர்க்கப்பட்ட
கள்ளச்சகடு கலக்கு அழிய
பஞ்சி யன்ன மெல்லடியால்
பாய்ந்தபோது நொந்திடும் என்று
அஞ்சினேன் காண்! (2.2:4)

[புணர்க்கப்பட்ட - ஏற்படுத்தப்பெற்ற; கள்ளம்-வஞ்சகம்; கலக்கு அழிய-குலைந்து போகும்படி; பாய்ந்த போது-உதைத்தபோது; நொந்திடும்-நோவுபடும்]

என்று அநுசந்திப்பார். இங்ஙனமே பல பாசுரங்களில்[2] இந்நிகழ்ச்சி குறிப்பிடப் பெறுகின்றது.

**3. சாந்து பெற்றுக் கூன் நிமிர்த்தது:** அக்ரூரன் பலராமன், கண்ணன் ஆகிய இருவரையும் கூட்டிக் கொண்டு மதுரையில் புகுந்து போகும்போது இராசவீதியில் ஒரு கூனியைக் கண்டனர். கண்ணன், "யாருக்கு இந்தச் சாந்து கொண்டு போகின்றாய்?" என்று கேட்டருள, அந்தக் கூனி இவ்வாறு காதலுடையவன்போலக் கண்ணன் அருளிச் செய்தது கேட்டு அவனது திருமேனியழகிலும் திருக்கண் நோக்கிலும் மனம் ஈர்க்கப்பெற்று, "அழகனே, நான் கம்சனுக்கு சந்தனம் முதலிய பூச்சுகள் சித்தம் செய்யும் பணிப்பெண்; என் பெயர் நைகவக்கிரை. இஃது உனக்குத் தெரியாதா?" என்று பதிலிறுத்தாள். கண்ணன், "எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்கும் நல்க வேண்டும்" என்று கேட்டவுடனே, அவளும் "அப்படியே திருவுள்ளம் பற்றுங்கள்" என்று மிக்க அன்புடனும் ஆதரத்துடனும் பூச்சைத் தந்தாள். அப்பூச்சை பலராமனும் கண்ணனும் அணிந்து கொண்டனர். கண்ணன் "இவள் பயன்கருதாது தந்தாள்" என்று உகந்து, அவள் முதுகில் வேர் விழுந்ததோ

2. பெரியாழ். திரு: 2.4:4; 2.5:2; 2.8:7; 3.1:2; 3.9:9 காண்க.

என்னும்படி உறைந்து கிடந்த கூனை நிமிர்த்து விடுவதற்குத் திருவுள்ளம் பற்றி, நடுவிரலும் அதற்கு முன்விரலும் கொண்ட நுனிக் கையினால் அவளை மேல்வாய்க் கட்டையிற் பிடித்துத் தன் திருவடிகளினால் அவள் கால்களை அமுக்கி இழுத்துத் தூக்கிக் கூன் உடலுக்குள் அடங்கி விடும்படி கோணல் நிமிர்த்தி அவளை மகளிற் சிறந்த உருவினளாக்கினன் என்பது வரலாறு. இதனை விஷ்ணு சித்தர்,

நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்ன
தேறி யவளும் திருவுடம்பிற் பூச
ஊறிய கூனினை உள்ளே யொடுங்க அன்(று)
ஏறி உருவினாய் (1·9:4)

[நாறிய-நறுமணம் வீசும்; சாந்தம்-சந்தனம்; இறை-சிறிது; நல்கு-கொடு; தேறி-தெளிந்து; திருவுடம்பு-திருமேனி; ஊறிய-நீண்ட நாட்களாக இருக்கும்; ஒடுங்க-அடங்கும்படி; ஏறஉருவினாய்-நிமிர்த்து உருவினவனே]

என பாசுரத்தில் அநுசந்தித்து அகமகிழ்கின்றார்.

4. **வில் விழவு அழித்தது:** கண்ணனும் பலராமனும் திருவாய்ப்பாடியில் வாழ்ந்து கொண்டிருந்தபொழுது கம்சன் தனது நகரமான மதுரையில் தான் 'வில் விழா' ஒன்று எடுப்பதாகத் திட்டமிட்டு அதைக் காண்பதற்காக இந்த இரண்டு சிறுவர்களையும் அழைத்துவரும்படி அக்ரூரரை அனுப்பினான். அவர் ஆயர்பாடி சென்று அவ்விருவர்களையும் அழைத்து வர, அவர்கள் வட மதுரையில் வந்து சேர்ந்தனர். கண்ணன் கம்சனுடைய வஞ்சத்தை அறிந்தவனாகையாலே வில்விழா நடைபெறும் ஆயுதசாலையில் புகுந்து, 'இவனுக்கு வில்லொருகேடு, விழாவொருகேடு' என்று சொல்லி, அந்த வில்லை எடுத்து முறித்தெறிந்தனன்.

'திருமதுரையில் சிலைகுனித்து' (திருப்பல்-10)
என்பதனால் அறியலாம்.

5. குவலயாபீட வதம்: வில்விழாவைக் காரணமாகக் கொண்டு கம்சன் அனுப்பிய அழைப்பின்படி பலராமனும் கண்ணனும் அக்ரூரருடன் வந்து கொண்டிருக்கையில் அரண்மனைக்கு வரும் வழியில் சிறுவர்கள் இருவரையும் கொல்லுவதற்கு குவலயாபீடம் என்ற ஒரு மதயானை ஆயுதம் தாங்கிய பாகனுடன் கம்சனின் ஏவலின்படி நிறுத்தி வைக்கப் பெற்றிருந்தது. இவர்களை நோக்கி யானை பாய்ந்து வர, யாதவ வீரர்கள் இருவரும் அதனை எதிர்த்து அதன் கொம்புகள் இரண்டையும் சேற்றிலிருந்து முள்ளங்கியை எடுப்பதுபோல் எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அவற்றால் அடித்து யானையையும் பாகனையும் உயிர் தொலைத்தனர்.

இதனை ஆழ்வார்,

பொருகரியின் கொம்பு ஒசித்தாய் (2·7:5)
என்றும்,

கும்பக் களிறு ஆட்டகோவே! (2·8:8)
என்றும்,

கஞ்சன் தன்
ஒருவாரணம் உயிர்உண்டவன் (4·2:5)
என்றும்,

வில்பிடித்து இறுத்து வேழத்தை முறுக்கி
மேல்இருந் தவன்தலை சாடி (4·7:7)
என்றும் ஆழ்வார் அநுசந்தித்து மகிழ்கின்றார்.

6. மல்லர்களை மாய்த்தது: யானையையும் பாகனையும் கொன்று சிறுவர்கள் அரண்மனையினுள் நுழையும் பொழுது, ஒருகால் யானைக்கும் பாகனுக்கும் தப்பி உள்ளே வந்தால், அவர்களை எதிர்த்துக் கொல்லும்படி

கம்சனால் ஏவப் பெற்றிருந்த சாணூரன், முஷ்டிகன் என்ற மலைபோன்ற இருபெருமல்லர்கள் சிறுவர்களை உக்கிரமாக எதிர்த்து மலைந்தனர். யாதவச் சிறுவர்கள் அவர்கள் இருவரையும் மற்போரிலேயே வென்று கொன்றனர். இந்த நிகழ்ச்சியை,

இருமலைபோல் எதிர்ந்த மல்லர்
இருவர் அங்கம் எரிசெய்தாய் (2.2:8)

என்றும்,

தெருவின்கண் தீமைகள் செய்து
சிக்கென மல்லர்க ளோடு
பொருது வருகின்ற பொன்னே! (2·7:6)

என்றும் ஆழ்வார் அநுசந்திப்பதைக் கண்டு மகிழலாம். அரண்மனைக்குப் போகும்பொழுது கம்சனுக்கு ஆடைகளை வெளுக்கும் வண்ணானைக் கொன்று அவனிடமிருந்து ஆடைகளைப் பறித்துக் கொண்டமை, கஞ்சனுடைய வில்லை முறித்தமை, குவலயாபீடத்தைக் கொன்றமை இவை போன்ற செயல்கள் ‘தெருவின்கண் தீமைகள் செய்து’ என்பதில் அடங்கும்.

**7. கம்ச வதம்:** யாதவச் சிறுவர்கள் மல்லர்களை முடித்து விட்டு உள்ளே போகும்போது கம்சன் சிறுவர் களைக் கோபித்து எதிர்க்கின்றான். சிம்மாதனத்தின்மீது இருவரும் பாய்ந்து அவனது திருமுடியை வீழ்த்துகின்றனர். பின்னர் அவனைத் தரையில் தள்ளி அடித்து நொறுக்கிக் கொன்று விடுகின்றனர். இதனை ஆழ்வார்,

கறுத்திட் டெதிர்நின்ற
கஞ்சனைக் கொன்றான் (2.2:6)

*[கறுத்து-சினங்கொண்டு]*

என்றும்,

> **கஞ்சனைக் கால்கொடு**
> **பாய்ந்தாய் (2·7:6)**

என்றும் அநுசந்திக்கின்றார்.

**8. தேனுகன் வரலாறு :** தேனுகன் என்பவன் ஓர் அசுரன். இவன் கம்சனின் ஏவலால் கழுதை வடிவங் கொண்டு காட்டுக்குள்ளே கண்ணனை நலிவதாக வந்தவன். ஒரு நாள் கண்ணபிரான் பலராமனோடும் வேறு சில ஆயர் சிறுவர்களோடும் ஆநிரை மேய்த்துக் கொண்டு கனிகள் கவினுறும்படி மிகுதியாகப் பழுத்து மணம் பரப்பிக் கொண்டிருந்த ஒரு பனஞ்சோலையை அடைந்தனர். பனம் பழங்களை விரும்பி உதிர்க்கத் தொடங்கினர். அப்பொழுது அச்சோலைக்குத் தலைவனும் கம்சனின் பரிவாரத்தில் ஒருவனுமான தேனுகன் சினங் கொண்டு கழுதை வடிவத்துடன் எதிர்த்துப் போர் செய்தான். கண்ணன் உடனே மிக எளிதாக அவனுடைய பின்னங் கால்கள் இரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதை யைச் சுழற்றி உயிர்செகும்படி ஒரு பனைமரத்தின்மீது வீசியெறிந்து அவனை அழித்தனன். இந்நிகழ்ச்சியை,

> **தேனுகன் ஆவி செகுத்துப் பனங்கனி**
> **தான்எறிந் திட்ட தடம்பெருந் தோளினால்**
> **வானவர் கோன்விட வந்த மழைதடுத்து**
> **ஆனிரை காத்தான் (2.10:4)**

என்று ஆழ்வார் அநுசந்தித்து அகம் மகிழ்கின்றார்; இதில் இந்திரன் பசிக் கோபத்தினால் ஏவிய கல்மாரி தடுத்து ஆனிரைகளைக் காத்த வரலாறும் கலந்துள்ளது. இந் நிகழ்ச்சி பிலம்பன் காளியன் வரலாற்றுடன் இன்னொரு பாசுரத்திலும் (3.6:4) அநுசந்திக்கப்படுகின்றது.

**9. பிரலம்பாசுரனைப் பிணமாக்கியது :** பிரலம்பன் என் பவன் ஓர் அசுரன். ஓர் ஆயர் சிறுவன் வடிவங் கொண்டு கிருஷ்ணன், பலராமன் ஏனைய ஆயர் சிறுவர்களுடன் விளை

யாடிக்கொண்டிருந்தான். ஒரு வித பந்தாட்டத்தில் தோற்றவர்கள் வென்றவர்களைச் சுமந்து கொண்டு ஆனிரைகள் பிரிந்து சிதறிப் போகாமல் அவற்றை வலப்புறமாகச் சென்று மடக்கவேண்டும் என்பதும் அங்ஙனம் செல்லுங்கால் தாம் அமைத்துள்ள குறிகளைத் தொட்டுத் தாம் இருந்த இடத்திற்கே வந்து சேரவேண்டும் என்பதும் நிபந்தனைகள். இதில் பலராமனைப் பிரலம்பன் சுமந்து செல்லும் வாய்ப்பு வந்தது. அங்ஙனம் சுமந்து செல்லுங்கால் பிரலம்பன் தீய எண்ணத்தனாய்க் குறிகளைத் தாண்டிப் போனான். பலராமன் தன் ஆற்றல் சிறப்பினால் அவனுக்கு அதிகப் பாரமானான். உடனே பிரலம்பன் தன் உண்மையான அரக்க உருவத்துடன் வான்வழிச் செல்லத் தொடங்கினான். பலராமன் மடக்கிய தன் கையினால் அசுரன் தலையில் ஓங்கிக் குத்த, அசுரன் தலை பிளந்து உடலெங்கும் செந்நீர் பெருகக் கதறிக் கொண்டு பூமியில் விழுந்து உயிர் ஒழிந்தனன். இந் நிகழ்ச்சியினையும், மேற்குறிப்பிட்ட தேனுகன் நிகழ்ச்சியினையும் காளியன் நிகழ்ச்சியோடு ஒரு சேரத் தொகுத்து,

தேனுகன் பிலம்பன் காளியன் என்னும்
தீப்பப் பூடுகள் அடங்க உழக்கிக்
கான கம்படி உலாவி உலாவிக்
கருஞ்சிறுக் கன்குழல் ஊதினபோது (3.6:4)

[பிலம்பன் - பிரலம்பன்; தீப்பூடுகள் - கொடியபூடுகள்; உழக்கி - அழித்து; கானகம்படி - காட்டுக்குள்ளே; கருஞ்சிறுக்கன் - கரிய சிறு திருமேனியையுடைய பிள்ளையாகிய கண்ணன்]

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார் பெரியாழ்வார். இங்ஙனம் பலராமனால் செய்யப் பெற்ற அசுரவதத்தைக் கண்ணன் செய்தருளினதாக அநுசந்திப்பது ஒற்றுமை நயம் பற்றியதாகும். இதையே இன்னொரு பாசுரத்திலும் அநுசந்திக்கின்றார்.

சுருள்உடைய பொழில்மருதும் கதக்களிறும்
பிலம்பனையும் கடிய மாவும்
உருள்உடைய சகடினையும் மல்லரையும்
உடையவிட்டு ஓசை கேட்டான் (4.9:3)

[சுருள் - சீற்றம்; மருது - இரட்டை மருத மரங்கள்; கதம் களிறு - குவலயாபீடம்; பிலம்பன் - பிரலம்பாசுரன்; கடியமா - குரூரனான குதிரை வடிவாய் வந்த கேசி; சகடு - சகடாசுரன்; மல்லர் - சாணூரன், முஷ்டிகன்; உடைய விட்டு - கொன்று: ஓசை - புகழ்]

என்பது பாசுரம். இதில் நளகூபர மணிக்ரீவர்கள், குவலயாபீடம், சகடாசுரன், மல்லர்கள் - இவர்கள் வரலாற்றுடன் பிரலம்பன் வரலாறு கலந்து அநுசந்திக்கப் பெறுகின்றது.

10. **மருதம் இறுத்தது :** குழந்தைப் பருவத்தில் கண்ணன் துன்பத்துக்குள்ளாக்கும் பல திருவிளையாடல்களைப் புரியக் கண்டு சினங் கொண்ட யசோதைப் பிராட்டி அவனைத் திருவயிற்றிற் கயிற்றினால் கட்டி ஓர் பொத்த உரலில் பிணித்துவிட்டாள். கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு தவழ்ந்து அவண் இருந்த இரட்டை மருத மரத்தின் நடுவே எழுந்தருள, அவ்வுரல் குறுக்காக நின்று இழுக்கப்பெற்றதனால் அம்மரங்கள் இரண்டும் முறிந்து விழுந்தன. உடனே முன் ஒருகால் நாரத முனிவரின் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் குபேர புத்திரர்கள் இருவரும் சாபந் தீர்ந்து சென்றனர். இதனை விஷ்ணுசித்தர்,

பேயின் முலையுண்ட பிள்ளை இவன்முன்னம்
மாயச் சகடும் மருதும் இறுத்தவன் (2.5:2)

[பேய் - பூதனை: சகடு - வண்டி: மருது - மருத மரங்கள், இறுத்தவன் - ஒடித்தவன்]

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். பின்னுமொரு பாசுரத்தில் இந்நிகழ்ச்சியை,

கள்ளச் சகடும் மருதும்
கலக்கழி யஉதை செய்த
பிள்ளை யரசே! நீபேயைப்
பிடித்து முலையுண்ட பின்னை (2.8:7).

[கள்ளம்-வஞ்சனை; சகடு-வண்டி; கலக்கு அழிய-கட்டுக்குலைந் தழியும்படி; பிள்ளை அரசே-பிள்ளைத் தன்மையைக் கொண்ட பெருமையனே; பேய்-பூதனை]

என்பது பாசுரம். இதில் சகடாசுரன், பூதனை வரலாறுகளுடன் கலந்து அநுசந்திக்கின்றார். இன்னும் வேறு பாசுரங்களிலும்[3] இந்நிகழ்ச்சி அநுசந்தானம் ஆகின்றது.

11. **பகாசுரன் வரலாறு :** பகாசுரன் என்பவன் கிருஷ்ணனைக் கொல்லுமாறு கம்சனால் ஏவப்பெற்ற அசுரர்களில் ஒருவன். இவன் பெரியதொரு கொக்கின் வடிவங்கொண்டு வழக்கமாகக் கண்ணனும் அவன் தோழர்களும் மாலையில் கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு வீடு திரும்பும் ஓர் ஒற்றையடிப் பாதையருகில் காத்திருந்தான். அவ்வழியாக வரிசையாக வரும் கன்றுகளை ஒவ்வொன்றாக விழுங்கிவிட்டான்; கண்ணனின் தோழர்களையும் ஒவ்வொருவராகக் கபளீகரம் பண்ணிவிட்டான். இறுதியாக வந்தவன் கண்ணன். அவனையும் அலகால் கொத்தி விழுங்கினன். கொக்கின் வயிற்றின் உள்ளே செல்லும் கண்ணன் அசுரன் வயிற்றில் நெருப்புபோல் எரிந்தான். அசுரன் அதனைப் பொறுக்கமாட்டாமல் கண்ணனை உமிழவே, அவன் வெளியில் வருங்கால் தன் இரு கைகளாலும் இரண்டு அலகுகளையும் பிடித்துக்கொண்டு வெளியே குதித்துக் கொக்கினை இருகூறாகக் கிழித்து

3. பெரியாழ். திரு. 1.2:10; 1.5:5 என்பன காண்க.

அனைவரையும் விடுவித்தான். இச்செயலைத் திருமங்கை யாழ்வார்,

புள்வாய்ப் பிளந்த புனிதா! (7.1:4)

என்று அநுசந்தித்து அகமகிழ்கின்றார். 'புள்ளின் வாய்க் கீண்டானை' (திருப். 13)—(கீண்டல்-பிளத்தல்)—என்று ஆண்டாள் ஆழங்காற்படுகின்றார். 'இகல் கொள் புள்ளைப் பிளந்ததும்' (திருவாய். 6.4:6) என்று இதனை அநுபவித்து மகிழ்கின்றார் நம்மாழ்வார்.

பள்ளத்தில் மேயும் பறவை உருக்கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான்கண்டு
'புள்இது' என்று பொதுக்கோ வாய்கீண்டிட்ட
பிள்ளை (2.5:4).

[பள்ளத்தில் மேயும் பறவை-கொக்கு; பொதுக்கோ-பொதுக்கென; கீண்டிட்ட-பிளந்த]

என்று பெரியாழ்வார் ஆழங்கால் பட்டுப் பெரிதும் மகிழ்வதையும் எண்ணி மகிழ்கின்றோம்.

12. வையம் ஏழும் உண்ட வரலாறு: ஒருநாள் கண்ணன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தனன்; கண்ணன் மண்ணைத் தின்றதாகப் பலராமன்மூலம் கேள்வியுற்ற யசோதைப்பிராட்டி ஓடிப்போய்க் கண்ணனை வாரி எடுத்துக்கொண்டு இல்லத்தினுள் ஏகி, 'ஏன் மண்ணைத் தின்றாய்?' என்று அச்சுறுத்தினாள். கண்ணனோ 'அம்மா நான் மண்ணைத் தின்னவில்லை; அண்ணன் வேண்டுமென்றே கோள் சொல்லுகின்றான்; என் வாயைப் பார்!' என்று வாயைத் திறந்து காட்டினன். யசோதை அந்த வாய் வழியாகக் கண்ணனின் திருவயிற்றில் வையம் ஏழினையும் கண்டு வியப்புற்றாள். 'இவன் ஆயர் மகன் அல்லன்; கருந்தெய்வம்' என்று அறுதியிட்டனள். சிறிது நேரத்தில் அந்த மயக்கநிலை மாறித் தன்னுடைய மகனாகவே எண்ணிக் கொண்டாள். இந்த நிகழ்ச்சியை விஷ்ணுசித்தர்,

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித் தாளுக்கு அங்காந்தி
வையம் ஏழு கண்டாள் வாயுளே (1.1:6).

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். ஆனால், கண்ண னாகிய குழந்தையை நீராட்டி நா வழிக்க முயலுங்கால் இக் காட்சியைக் கண்டதாக அநுசந்திக்கின்றார். கண்ணன் பார்த்தனுக்கு ஞானக்கண்ணைக் கொடுத்துத் தன் பேருரு வத்தைக் காட்டியதைப்போல, யசோதைப் பிராட்டிக்குத் தன்னுடைய தெய்வத்தன்மையைக் காட்டவேண்டுமென்ற பேரவாவினால் இங்ஙனம் செய்தனன் போலும். கண்ணன் முலைப்பால் உண்ணும்போது கொட்டாவிவிடுவது போல் வாயைத்திறந்து தன் பேருருவம் காட்டினதாகவும் சில புராணங்கள் கூறும்.

**13. கன்றினால் விளவெறிந்தது:** கம்சனால் ஏவப் பெற்ற கவித்தாசுரன் விளாமரத்தின் வடிவாய்க் கன்று மேய்க்கும் கண்ணன் தன் கீழ்வரும்போது அவன்மேல் விழுந்து கொல்லுவதாக எண்ணி வந்து நிற்கின்றான். அவ்வாறே வத்சாசுரன் என்பான் கண்ணனை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவமாக வந்து காத்திருக்கின்றான். இதனை நன்கு அறிந்த கண்ணன் அக் கன்றின் கால்களைப் பற்றிச் சுழற்றி விளாமரத்தின் மீது தாக்குகின்றான். இருவரும் சிதைந்து தமது அசுர வடிவத்துடன் விழுந்து மடிகின்றனர். இந்த நிகழ்ச்சி யினைப் பெரியாழ்வார்,

கானக வல்விளவின் காய்உதி ரக்கருதிக்
கன்றது கொண்டெறியும் கருநிற என்கன்றே!
(1.5:4)

*[கானகம்-காடு; வல்விளவு-வலிமை பொருந்திய விளாமரம்]*

என்று அநுசந்தித்து அகமகிழ்கின்றார். மேலும், இதே நிகழ்ச்சியில்,

கன்றினம் மேய்த்துக் கனிக்கொரு கன்றினை
பற்றி எறிந்த பரமன் (2.5:5).

[கன்று இனம்-கன்றுகளின் கூட்டம்; பரமன்-பரம
புருடன்]

என்றும்,

விரும்பாக் கன்றொன்று கொண்டு
விளங்கனி வீழ எறிந்த பிரானே! (3.1:6)

[விரும்பா-விரும்பாமல்]

என்றும் ஆழங்கால்பட்டு அநுபவிக்கின்றார். திருமங்கையாழ்வார் இந்நிகழ்ச்சியினை,

கன்று அதனால் விளவுஎறிந்து
கனிஉதிர்த்த காளை! (3.10:8).

என்று சொல்லித் தன்னை மறப்பர். யசோதைப் பிராட்டி கண்ணனைக் கன்றுகளை மட்டிலும் மேய்த்து வருமாறு ஏனைய இடைச் சிறுவர்களுடன் அனுப்பிவைப்பாள். பெரிய மாடுகளை மேய்க்க அனுப்புவதில்லை. கன்றுகளின் மீது கண்ணன் மிக அன்பாய் இருப்பான். ஒரு குறிப்பு: மலைமீதுள்ள காடுகளில் கண்ணன் கன்றுகளை மேய்த்துக் கொண்டிருக்கும்போது, இளங்கன்றுகள் அங்குள்ள தடாகங்களில் நீர் அருந்தப் போகும்போது நீரில் முன்னே இறங்கிக் குடிக்க அஞ்சும். அக்கன்றுகட்கு நீருண்ணும் விதத்தைப் பழகுவிப்பதற்காகக் கண்ணன் தன் முதுகில் கைகளைக் கட்டிக் கொண்டு கவிழ்ந்து நின்று தண்ணீரமுது செய்து காட்டுவன். இதைத்தான் திருமங்கையாழ்வார் 'வரைமீகானில் தடம் பருகு கருமுகிலை' (பெரி. திரு. 2.5:3) என்கின்றார் என்று பட்டர் அருளிச் செய்வார். சிலப்பதிகாரமும்,

'கன்று குணிலாக்
கனிஉதிர்த்த மாயவன்'[4]

என்று இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

4. சிலப். மதுரைக். ஆய்ச்சியர் குரவை-பாட்டு.1

**14. மாதவத்தோன் புத்திரனை மீட்டுக் கொடுத்தது:** பலராமனும் கண்ணனும் வேத அத்யயனம் செய்ய விரும்பி அவந்தி நகரம் சென்று அங்கிருந்த **சாந்தீபினி** என்னும் பிராமணோத்தமர் பக்கல் எல்லா சாத்திரங்களையும் 64 நாட்களுக்குள் கற்றுக்கொண்டு விடைபெறுங் காலத்தில் குருதட்சணை சமர்ப்பிக்கத் தேடுகின்றனர் குருவை. அந்த ஆசாரியர் கண்ணனின் அதிமானுஷ்ய சேஷ்டித ஆற்றலை அறிந்தவராதலால், "பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு பிரபாச தீர்த்த கட்டத்தில் கடலில் மூழ்கி மரித்துப் போன என் மகனைக் கொண்டு வந்து தரவேண்டும்" என்று விருப்பத்தைத் தெரிவித்தார். கண்ணனும் அதற்கு இசைந்து அம் மகனைக் கொண்டுபோன சங்கின் உருவங்கொண்டு மாக்கடலில் வசிக்கும் **பஞ்சஜநன்** என்ற அசுரனே அவ்வந்தணச் சிறுவனைக் கொண்டுபோயினன் என்பதை வருணனால் அறிந்து, கடலில் இறங்கி அவ்வசுரனைக் கொன்று அவன் உடலாகிய பாஞ்சசன்யத்தை எடுத்து வாயில் வைத்து முழங்கிக் கொண்டு யமபுரிக்கு எழுந்தருளி அங்கு யாதனையிற் கிடந்த அந்தச் சிறுவனை அவன் இறந்தபோது கொண்டிருந்த உருவம் மாறாதபடி கொண்டு வந்து தட்சணையாகக் கொடுத்தான். இந்த வரலாற்றை நினைந்து பெரியாழ்வார்,

> **மாதவத்தோன் புத்திரன்போய்**
> **மறிகடல்வாய் மாண்டானை**
> **ஓதுவித்த தக்கணையா**
> **உருவுருவே கொடுத்தான்! (4.8;1)**

*[மாதவத்தோன்-சாந்தீபினி; ஓதுவித்த-வேத அத்யயனம் பண்ணுவித்த; உருஉருவே-மாறாத உருவுடன்]*

என்று அநுசந்திக்கின்றார். திருமங்கை யாழ்வாரும் இந் நிகழ்ச்சியில்,

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்
உனக்குமுன் தந்த அந்தணன் ஒருவன்
'காதல் என்மகன் புகல்இடம் காணேன்;
கண்டுநீ தருவாய் எனக்கு' என்று
கோதில் வாய்மையி னான்உனை வேண்டிய
குறைமு டித்தவன் சிறுவனைக் கொடுத்தாய்
(5.8:7)

*[ஓது-ஓதி உணர்தற்குரிய; கோது இல்-குற்றம் இல்லாத; அந்தணன்-சாந்தீபினி; புகல் இடம்-சென்ற இடம்]*

*என்று ஆழங்கால்பட்டு அநுபவிப்பர். "கடலில் மூழ்கின குமாரனை மீட்டுக் கொடுத்தருளியதுபோல, சம்சார சாகரத்தில் மூழ்கிய என்னை மீட்டுப் பாதுகாத்தருள வேண்டும்" என்பது இப்பாட்டுக்குக் கருத்தாகக் கொள்ள பெறும்.*

**15. சீமாலிகன் வரலாறு:** *மாலிகன் என்பான் கண்ணபிரானின் உயிர்த் தோழனான ஓர் இடையன். மேன்மைப் பொருளைத்தரும் (ஸ்ரீ) என்ற சொல் (சீ) எனத் திரிந்து வந்து ஓர் 'சீமாலிகன்' என்று அவன் பெயரோடு அமைந்து கிடக்கின்றது. இவன் கண்ணபிரானிடம் பல விதமான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றவன். ஒருவருக்கும் அஞ்சாமல் தன்முனைப்புக்கொண்டு சாதுசனங்களை இம்சித்துக் கொண்டிருந்தான். இதைக் கேள்வியுற்ற கண்ணன் மிக வருந்தி 'நண்பனாகிய இவனைக் கொல்வது தகாது; ஏதாவது செய்தேயாக வேண்டும்' என்று எண்ணி, ஒரு நாள், 'நீ இப்படிச் செய்வது தகாது' என்று அறிவுரை வழங்கினான். அசுர இயல்புள்ள அந்த மாலிகனும் தன் வாயில் வந்தபடி பிதற்றி "நீ எல்லா ஆயுதங்களையும் கையாளும் முறையைக் கற்பித்தாய்; திருவாழிப் பயிற்சியை மட்டிலும் கற்பித்தாய் இல்லை" என்று கண்ணன்மீது குறை கூறினான். கண்ணனும் "இதில், பழகுவது உனக்கு*

முடியாது; எனக்கே அசாத்தாரணமானது'' என்று சொல்ல, அவனும் ''என்னால் முடியாததும் ஒன்று உண்டோ? நீ அவசியம் அப்பயிற்சியைக் கற்பித்தே ஆகவேண்டும்'' என நிர்ப்பந்தித்தான். கண்ணன் அவனை யொழிக்க ''இதுதான் சமயம்'' என்று திருவுள்ளம் கொண்டான். சக்கரப்படையை எடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்றிக் காட்டினான் கண்ணன். ''இஃது எனக்கு அரிதாமோ?'' என்று மாலிகன் சொல்ல, ''ஆம்; இஃது உனக்கு அரியதாயாகும்'' என்று கண்ணன் வற்புறுத்திச் சொல்லவும் அதனை அவன் கேளாமல் அத் திருவாழியை வாங்கிச் சுழற்றி எறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கைவிரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்துக் கொண்டு நின்றான். அப்போது அத்திருவாழி சுழன்று வருவதற்கு இடம் போதாமையால் அதன் வீச்சு இவன் கையில் பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டது என்பது கதை. இவ்வரலாறு எந்தப் புராணத்திலும் காணப்படாதது. வான்மீகி முனிவர் நான்முகன் வரத்தினால் பகவதவதார வரலாறுகளைத் தாமாகவே நேரில் கண்டது போலவே, ஆழ்வார் பெருமக்களும் தாமாகவே கண்டவற்றில் இவ்வரலாறும் ஒன்று என்பதாகக் கொள்வர் பெரியோர். பெரியவாச்சான் பிள்ளையும், இத்திருமொழியின் எட்டாம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் இதைத் தெளிவாக அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது. இந்த வரலாற்றை விஷ்ணுசித்தரும்,

**சீமா லிகன்அவ னோடு**
**தோழமை கொள்ளவும் வல்லாய்**
**சாமா றவனைநீ எண்ணிச்**
**சக்கரத் தால்தலை கொண்டாய்**
**ஆமா றியும் பிரானே''** (2.7:8)

[தோழமை-நட்பு; சாம் ஆறு-செத்துப் போகும் வழி; எண்ணி-ஆலோசித்து; தலை கொண்டாய்-

முடியாது; எனக்கே அசாதாரணமானது'' என்று சொல்ல, அவனும் ''என்னால் முடியாததும் ஒன்று உண்டோ? நீ அவசியம் அப்பயிற்சியைக் கற்பித்தே ஆகவேண்டும்'' என நிர்ப்பந்தித்தான். கண்ணன் அவனை யொழிக்க ''இதுதான் சமயம்'' என்று திருவுள்ளம் கொண்டான். சக்கரப்படையை எடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்றிக் காட்டினான் கண்ணன். ''இஃது எனக்கு அரிதாமோ?'' என்று மாலிகன் சொல்ல, ''ஆம்; இஃது உனக்கு அரியதாயாகும்'' என்று கண்ணன் வற்புறுத்திச் சொல்லவும் அதனை அவன் கேளாமல் அத் திருவாழியை வாங்கிச் சுழற்றி எறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கைவிரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்துக் கொண்டு நின்றான். அப்போது அத்திருவாழி சுழன்று வருவதற்கு இடம் போதாமையால் அதன் வீச்சு இவன் கையில் பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டது என்பது கதை. இவ்வரலாறு எந்தப் புராணத்திலும் காணப்படாதது. வான்மீகி முனிவர் நான்முகன் வரத்தினால் பகவதவதார வரலாறுகளைத் தாமாகவே நேரில் கண்டது போலவே, ஆழ்வார் பெருமக்களும் தாமாகவே கண்டவற்றில் இவ்வரலாறும் ஒன்று என்பதாகக் கொள்வர் பெரியோர். பெரியவாச்சான் பிள்ளையும், இத்திருமொழியின் எட்டாம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் இதைத் தெளிவாக அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது. இந்த வரலாற்றை விஷ்ணுசித்தரும்,

**சீமா லிகன்அவ னோடு**
**தோழமை கொள்ளவும் வல்லாய்**
**சாமா றவனைநீ எண்ணிச்**
**சக்கரத் தால்தலை கொண்டாய்**
**ஆமா றியும் பிரானே''** (2.7:8)

[தோழமை-நட்பு; சாம் ஆறு-செத்துப் போகும் வழி; எண்ணி-ஆலோசித்து; தலை கொண்டாய்-

காயும்நீர் புக்குக் கடம்பேறி, காளியன்
தீய பணத்தின் சிலம்பார்க்கப் பாய்ந்தாடி
வேயின் குழலூதி வித்தக னாய்நின்ற
ஆயன் (2.1:3).

[காயும்-கொதிக்கின்ற; புக்கு-புகுந்து; கடம்பு-கடம்ப மரம்; பணம்-படம்; ஆர்க்க-ஒலிக்க; பாய்ந்து-குதித்து; வேயின் குழல்-மூங்கிலினாலாய குழல்.]

என்று அநுசந்திக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர இன்னும் மூன்று பாசுரங்களில்[5] இந்நிகழ்ச்சி போற்றி யுரைக்கப்பெறுகின்றது.

**17. குருந்தம் ஒசித்தது:** கண்ணனது பால சரிதங்களில் இதுவும் ஒன்று. இந்த வரலாறு இது: கண்ணன் யமுனையில் நீராடி நின்ற கோபியரின் துகில்களை ஒருங்கு வாரிக்கொண்டு, அந்நதிக்கரையில் இருந்த குருந்த மரத்தின் மீது ஏறப்போவதைக் கண்டறிந்தான் அசுரன் ஒருவன். இவன் கம்சனால் ஏவப்பட்டவன். இவன் கண்ணனை நலிவதற்காக அம்மரத்தில் ஆவேசித்துக் கிடந்தான். இதனை அறிந்த கண்ணன் அம்மரத்தை முறித்துப் போகட்டான் என்பது புராண வரலாறு. பெரியாழ்வார் இதனை,

குருந்த மொன்றொசித் தானொடும் சென்று
கூடி யாடி விழாச்செய்து (4.4:7)

[ஒசித்து-முறித்து; விழா-உற்சவம்.]

என்று அநுசந்திப்பார். இந்த வரலாறு பண்டைய தமிழ் நூல்களிலும் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில்,

---

5. பெரியாழ் திரு: 2.10:3; 3.6:4; 3.9:5. இறுதியாகக் குறிப்பிட்ட பாசுரத்தில் 1.9:3லுள்ள அடிகளே திரும்பவும் வருகின்றன.

பரப்புற்ற
கொல்லைப் புனத்துக்
குருந்தொசித்தாற் பாடுதும்

கொல்லையஞ் சாரற்
குருந்தொசித்த மாயவன்

கோகுல மேய்த்துக்
குருந்தொசித்தான் என்பரால்[6]

என வருதல் காண்க. இதில் இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ள பகுதிக்கு ''புனக்கொல்லையைச் சார்ந்தவிடத்து வஞ்சனையால் வந்து நின்ற குருந்தை முறித்த மாயவன்'' என்று அடியார்க்கு நல்லார் பொருள் கூறுவர். 'குருந்தொசித்த' என்று மேற்காட்டிய ஆழ்வார் பாசுரத் தொடருக்கு ''அசுரா விஷ்டமான குருந்து'' என்பது முன்னோர் வியாக்கியானம்.

இந்த வரலாறு சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகத்தின் பாடலும் (209) அதற்கு நச்சினார்க்கினியரின் உரையும் சற்று வேறுவிதமாகச் சுட்டுகின்றன. ''ஒரு நாள் யமுனையாற்றில் (தொழுநையாற்றில்) நீரில் விளையாடிக் கொண்டிருந்த கோபியருடைய துகில்களையெல்லாம் விளையாட்டு நிமித்தம் கவர்ந்து கொண்டு கரையிலுள்ள குருந்த மரத்தில் ஏறி நின்ற கண்ணன், தம்முடைய முன்னோனான பலராமன் ஆங்கு வருதலையறிந்து தன் செயலை அவன் காணின் தமக்கு மிக்க பழியுண்டாகும் என்று நினைத்து, அக்குருந்த மரத்தை முறித்து யமுனையாற்றில் விழச் செய்து, தான் கவர்ந்த துகில்களை நீரில் நின்ற அக்கோபியர் எளிதில் பெறும் வண்ணம் செய்த தன்றித் தானும் நீந்தி வேறிடம் சென்றான்'' என்று சைனர்

---

6. சிலப். ஆய்ச்சியர் குரவை: கூத்துள் படுதல்; பாட்டு-3; உள்வரி வாழ்த்து-1.

கூறுவர். இக்கதை முற்கூறிய புராண வரலாற்றோடு மாறுபடுவது மட்டுமன்றிச் சிந்தாமணிப் பாடலின் உள்ளீடான கருத்தைச் சிறிது மிகைப்படுத்திக் கூறுவது மாகும். ஆயினும், பலராமன் வருதலையறிந்து, கோபியரது மானம் காக்க வேண்டிக் கண்ணன் குருந்தொசித்துத் தன் செயலைத் தமையன் அறியாமல் செய்தான் என்ற அளவி லுள்ள வரலாறு, தமிழ்நாட்டில் பழங்காலத்தில் வழங்கிய தென்றே சொல்லலாம்.

இனி, அகநானூற்றில் மதுரை மருதனிள நாகனாரின் வாக்காகவுள்ள பாடலின் (59) பகுதியைக் காண்போம் அப்பகுதி:

**வடா அது,**
**வண்புனற் றொழுநை வார்மணல் அகன்றுறை**
**அண்ட மகளிர் தண்டலை யுடீஇயர்**
**மரஞ்செல மிதித்த மாஅல் போலப்**
**புன்றலை மடப்பிடி யுணீஇய ரங்குழை**
**நெடுநிலை யாஅமொற்றி நனைகவுட்**
**படிஞிமிறு கடியும் களிறே (4-9).**

[வடா அது - வடக்கின் கண்ணதாகிய; வண்புனல் - நீர்வளம் அறாத; தொழுநை - யமுனை; அண்டர் மகளிர் - ஆயர் மகளிர்; உடீஇயர் - உடுத்திக் கொள்ள; மரம் செல - குருந்த மரம் வளைய; மாஅல் - கண்ணன்; புன்தலை - மெல்லிய தலை யையுடைய; மடப்பிடி - பெண் யானை; அங் குழை - அழகிய தளிர்களை; உணீ இயர் - உண் ணற்கு; யாஅம் ஒற்றி - யாமரத்தினை வளைத்துத் தந்து; கவுள் - கன்னம்; ஞிமிறு - வண்டு; கடியும் - ஓட்டா நிற்கும்]

இதில், "வடதிசையின்கண் உள்ள யமுனை யாற்றின் துறையிலே நீராடி நின்ற கோபியர் தழையை உடுத்துத் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளற்பொருட்டு

(குருந்த) மரத்தை வளைத்துக் கொடுத்த திருமாலைப் போல, களிறு தன் பெண் யானை உண்ணும்படி யாமரத்தை வளைத்துக் கொடுத்துத் தன் கன்னத்து மத நீரில் படியும் வண்டுகளைக் கடியா நிற்கும், கணவர் சென்ற வழியின்கண்; அவர் இது கண்டு திரும்புவர்'' என்று — தலைவனது பிரிவின்கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழி கூறியதாக அப்புலவர் பாடுதலால் அறியலாம். இவ்வடிகளுள் ''அண்டர் மகளிர் தண்டலை உடீஇயர் - மரச்செல மிதித்த மாஅல்'' என்றதன் வரலாற்றுப் பகுதி அகநானூற்றின் பழைய உரைகாரர் எழுதியுள்ள செய்தி:

> 'ஆயர் பெண்கள் குளியா நின்றார்களாக அவர் இட்டு வைத்த துகிலெல்லாம் பின்னை எடுத்துக் கொண்டு (கண்ணன்) குருந்த மரத்து ஏறினானாக, அவ்வளவில் நம்பி மூத்தபிரான் (பலராமன்) வந்தராக, அவர்க்கு ஒரு காலத்தே கூட மறைதற்கு மற்றொரு வழியின்மையின் ஏறி நின்ற குருந்த மரத்துக் கொம்பைத் தாழ்த்துக் கொடுத்தான். அதற்குள்ளே அடங்கி மறை வாராக, அவர் போமளவும் தானையாக உடுக்கத் தாழ்த்தார் என்பாரு முளர். ஒற்றி - வளைத்து'' என்று வருதல் காண்க.

இதனால், கோவியர் துகில்களைக் கண்ணன் கவர்ந்த பின் எதிர் வந்த பலதேவன் காணாவகை அம் மகளிர் ஒருங்கு மறையும்படி அவன் குருந்த மரக் கொம்பை வளைத்துக் கொடுத்தான் என்பதே சங்க காலத்து வழங்கிய சரிதமாதல் தெரியலாம். இங்ஙனமே சிலப்பதிகாரம், சிந்தாமணியில் வரும் தொடர்களும் இக்கதையையே கொள்ளும்படி பொருள் கோடல் வேண்டும்.

**18. கோவர்த்தனத்தைக் குடையாக எடுத்தது:** கண்ணனுடைய அதிமானுஷ்ய சேஷ்டிதங்களைக் கண்டு ஆயர்கள் அனைவரும் 'இவனே நம் குலக்கொழுந்து.

இவன் கட்டளைப்படியே ஒழுகவேண்டும்' என்று அறுதியிட்டனர். இங்ஙனமிருக்கையில் இடையர்கள் ஆண்டு தோறும் நடத்துவதுபோல் வழக்கப்படி நடத்த வேண்டிய இந்திர பூசையின் நாள் வந்தது. பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றும் பூசைக்கு வேண்டிய பொருள்களும் சேகரிக்கப்படுவதைக் கண்டு கண்ணன், "ஓ பெரியோர்களே, நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் சீவிக்கின்றோமோ அதற்கே பூசை செய்வது பொருத்தம்; இக்கோவர்த்தன மலையே பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் நல்கிக் காப்பாற்றுகின்றது. ஆகவே, பூசையனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள்" என்று கூற, இடையர்களும் இதைக் கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணனும் தானே ஒரு தேவதை உருவங் கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருளினான். இந்திரன் சினங்கொண்டு ஏழு மேகங்களையும் ஏவிக் கல்மாரி பெய்வித்தான். ஏழு நாட்கள் விடாத மழை. கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லா உயிர்களையும் காத்தருளினன். இந்நிகழ்ச்சியை விஷ்ணுசித்தர்,

**மலையை எடுத்து மகிழ்ந்துகல் மாரி**
**காத்துப் பசுநிரை மேய்த்தாய் (2.3:7).**

*[மாரி - மழை; நிரை - கூட்டம்]*

என்று அநுசந்தித்து மகிழ்கின்றார். பிறிதொரு பாசுரத்திலும் இந்நிகழ்ச்சியில் ஆழங்கால் பட்டு மகிழ்கின்றார்.

**ஆனாயர் கூடி அமைத்த**
**விழவை அமரர்தம்**
**கோனார்க்(கு) ஒழியக் கோவர்த்**
**தனத்துச்செய் தான்மலை (4.2:4)**

*[அமரர்தம் கோன் - இந்திரன்]*

என்றது காண்க. ஒரு பதிகம் முழுவதும் (3.5) இம்மலை சிறப்பிக்கப் பெறுகின்றது. வேறு பாசுரங்களும் உள்ளன.[7]

இக் கூறியவை யாவும் கண்ணன் சிறுவனாக இருந்த போது ஆற்றிய தீரச் செயல்கள்; இனி, அவன் வளர்ந்த பிறகு ஆற்றிய தீரச்செயல்களிலும் ஆழ்வார் ஆழங்கால் படுவதைக் காண்போம்.

19. ஏழ்விடை அடர்த்தது: கும்பன் என்னும் இடையர் தலைவனது மகள் நப்பின்னை; இவள் நீளாதேவியின் அம்சம். பின்னையை மணம் செய்து கொள்வதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அசுர ஆவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணன் ஏழு திருவுருக் கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணம் செய்து கொண்டான். இந்த நிகழ்ச்சியைப் பெரியாழ்வார்,

**நப்பின்னைதன் திறமா நல்விடை ஏழ்அவிய**
**நல்ல திறல்உடைய நாதனும் ஆனவனே!** (1.6:7)

[நப்பின்னைதன் திறமா - நப்பின்னைப் பிராட்டிக்காக; விடை - எருது; அவிய - முடியும்படியாக; திறல் - மிடுக்கு]

என்றும்,

**ஆயர் மடமகள் பின்னைக்கு ஆகி**
**அடல்விடை ஏழினையும்**
**வீயப் பொருது வியர்த்துநின் றானை** (4.1:4)

[ஆயர் மகள் - ஆயருடைய பெண் பிள்ளை (நப்பின்னை); பின்னைக்கு ஆகி - நப்பின்னைக்காக; அடல் விடை - வலிய எருது; வீய - முடியும்படி யாக; பொருது - போர் செய்து; வியர்த்து - வேர்வையுடன்]

என்றும் அநுசந்தித்து அகமகிழ்கின்றார்.

---

7. பெரியாழ். திரு. 1.5:2; 2.9:6; 3.4:4.

**20. உருப்பிணி திருமணம்:** விதர்ப்ப தேசத்தில் குண்டினபுரம் ஒரு பெருநகர். அங்குள்ள அரசன் பீஷ்மகன். அவனுக்கு உருக்மி என்ற மகனும், உருக்குமிணி என்ற மகளும் இருந்தனர். உருக்குமிணி பெரிய பிராட்டியாரின் அவதாரம். இவளுக்கு வயது வந்ததும் கண்ணன் அவளைத் தனக்குத் திருமணம் புரிவிக்க வேண்ட, அவளுடைய தமையன் அவளைச் சேதி நாட்டு அரசன் சிசுபாலனுக்குக் கொடுக்க விரும்பினான். சின்னாள் கழிந்தபின் உருக்குமிணிக்குச் சுயம்வரம் கோடிக்கப் பெற்றது. எல்லா நாட்டு மன்னர்களும் குண்டினபுரம் வந்து சேர்ந்தனர். கண்ணனும் பலராமனும் சில யாதவ வீரர்களுடன் அங்கு வந்து சேர்ந்தனர். திருமணத்திற்கு முதல் நாளன்று உருக்குமிணியைக் கண்ணன் கடத்திக் கொண்டு போய் விட்டான். தந்தவக்ரகன் முதலிய பல அரசர்கள் போர் செய்ய எதிர்த்தனர். கண்ணனும் பலராமனும் அவர்களைப் புறமுதுகு காட்டி ஓடும்படி செய்தனர். பிறகு உருக்குமிணிப் பிராட்டியின் தமையன் உருக்குமி தன் தங்கையை மீட்டுப் போகும் நோக்குடன் கண்ணனை எதிர்த்துப் போரிட, கண்ணன் அவனைத் தோற்கடித்து, அவனைப் பிடித்துத் தன் தேர்க்காலில் கட்டி, அப்பால் அவனது தலையைச் சிரைத்திட்டு அவமானப்படுத்தி அனுப்பினான். உருக்குமிணியை விதிப்படித் திருமணம் செய்து கொண்டான். இந்த நிகழ்ச்சியில் ஆழ்வார்,

> உருப்பிணி நங்கையைத்
> தேர்ஏற்றிக் கொண்டு
> விருப்புற்று அங்குஏக
> விரைந்து எதிர்வந்து
> செருக்கு உற்றான்
> வீரம்சிதையத் தலையைச்
> சிரைத்திட்டான் (3.9:3)

[விருப்புற்று-ஆசை கொண்டு; ஏக-செல்ல; செருக்கு-கர்வம்; சிதைய-கெடும்படி.]

என்றும்,

உருப்பிணி நங்கைதன்னை
மீட்பான்தொடர்ந் தோடிச்சென்ற
உருப்பனை யோட்டிக்கொண்டிட்டு
உறைத்திட்ட உறைப்பன் (4.3:1)

[நங்கை-சிறந்தவள்; மீட்பான்-திருப்பிக் கொண்டு செல்ல; உருப்பன்-'ருக்மன்'; ஓட்டிக்கொண்டிட்டு-ஓட்டிப்பிடித்துக் கொண்டு; உறைத்திட்ட-பரிவப்படுத்தின; உறைப்பன் - மிடுக்கையுடைய கண்ணன்.]

என்றும் ஆழங்கால் பட்டுத் தன்னையே மறக்கின்றார்.

21. பஞ்சவர்க்குத் தூதன் : பாண்டவ தூதனாகக் கண்ணன் துரியோதனனிடம் சென்று 'அறம் வழுவிய உறவினர்களை வருத்திப் பலத்தாலே வாழ வேண்டும் என்று எண்ணியிருப்பது தகாது; இருவர்க்கும் உள்ள பாகங்களைப் பிரித்துக் கொண்டு இருவரும் ஒத்து வாழுங்கள்' என்று முதலில் சொல்ல அதற்குத் துரியோதனன் சிறிதும் இசையாமையால் 'பத்து ஊர்களையாவது கொடு' என்று வேண்ட, அவன் அதற்கும் இணங்காமல் 'நான் ஊசி குத்தும் நிலமும் கொடேன்; பாண்டவர்கட்குத் தருமம் உண்டு; அவற்றின் பலன் சுவர்க்கமும் உண்டு; அவர்கள் அவற்றை அநுபவிக்கலாம்; அரசு எங்களுடையதே' என்று மறுத்து விட்டான். இதனால் சினமடைந்த கண்ணன் போரைத் தொடங்குவித்துப் பார்த்தனுக்கு தேர்ப்பாகனாகிப் போரில் வெற்றியும் கண்டான். இந்த நிகழ்ச்சியில் உள்ளத்தைப் பறிகொடுத்த ஆழ்வார்,

சீரொன்று தூதாய்த் துரியோ தனன்பக்கல்
ஊரொன்று வேண்டிப் பெறாத உரோடத்தால்
பாரொன்றிப் பாரதம் கைசெய்து பார்த்தற்குத்
தேர்ஒன்றை ஊர்ந்தாற்கு (2.6:5)

என்றும்,

பஞ்சவர் தூதனாய்
பாரதம் கைசெய்து (3.9:5)

[கைசெய்து-அணிவகுத்து.]

என்றும்,

பஞ்சவர் தூதனாய்
பாரதம் கைசெய்து (1.9:3)

என்றும் அநுசந்தித்து மகிழ்கின்றார்.

22. **பார்த்தன் தேரில் பாகனாய் நின்றது :** பாண்டவர் துரியோதனாதியர் என்ற இரு வகுப்பினரையும் சந்து செய்விப்பதற்காகக் கண்ணன் துரியோதனாதியரிடம் தூதாகச் சென்று, "பாண்டவர்களும் நீங்களும் பகைமையை விட்டிடுங்கள்; அரசில் இருவருக்கும் பாகம் உண்டு; ஆதலால் சமமாகப் பிரித்துக் கொண்டு சமாதானமாக ஆட்சி புரிந்து வாழுங்கள்" என்று பலவாறாக அருளிச் செய்ய, அவர்கள் அதற்குச் சிறிதும் உடன்படாமல் "வலிமை இருந்தால் போரிட்டு வெற்றி கொள்ளட்டும்; இந்த நாவலந்தீவு வீரர்க்கே உரியது" என்று மிக்க செருக்குடன் சொல்லி விட்டனர். கண்ணன் சினங்கொண்டு பாண்டவர் பட்சபாதியாயிருந்து அவர்கட்கு வெற்றி யுண்டாகும்பொருட்டுப் "பார்த்தன் செல்வத் தேர் ஏறு சாரதியாகி, எதிர்ந்தார் சேனை செருக்களத்துத் திறல் அழியச் செற்றான்" (பெரி. திரு. 2.10:8). இந்த நிகழ்ச்சியை ஆழ்வார்,

தாரித்து நூற்றுவர்
தந்தைசொற் கோள்ளாது
போருய்த்து வந்து
புகுந்தவர் மண்ணாள
பாரித்த மன்னர்பட
பஞ்சவர்க்கு அன்று
தேருய்த்த கைகளால் சப்பாணி (1.7:6)

[தாரித்து - அங்கீகரியாமல்; உய்த்து - நடத்துவதாக வந்து; மண்ஆள-அரசு ஆள; பாரித்த-முயற்சி செய்த; தேர்உய்த்த-தேரை ஓட்டின.]

என்றும்,

நாந்தகம் ஏந்திய நம்பி சரண்என்று
தாழ்ந்த தனஞ்செயற் காகித் தரணியில்
வேந்தர்கள் உட்க விசயன் மணித்திண்டேர்
ஊர்ந்தவன் (1.10:4)

[நாந்தகம்-வாள்; தனஞ்செயன்-பார்த்தன்; தரணி-பூமி; உட்க-கலங்கும்படி; மணித்திண் தேர்-அழகிய வலிய தேர்; ஊர்ந்தவன்-செலுத்தினவன்.]

என்றும்,

மலைபுரைதோள் மன்னவரும்
மாரதரும்[8] மற்றும்
பலர்குலைய நூற்றுவரும்
பட்டழிய பார்த்தன்
சிலைவளையத் திண்தேர்மேல்
முன்னின்ற செங்கண்
அலவலை. (2.1:2)

[புரை-ஒத்த; நூற்றுவர்-துரியோனாதியர்; பட்டு-மரணமடைந்து; பார்த்தன் - அருச்சுனன்; சிலை-வில்; திண்தேர்-வலிய தேர்; செம்கண்-சிவந்த கண்; அலவலை-அருச்சுனன் வெற்றியைப் புகழ்பவனான கண்ணன்.]

---

8. **மாரதர் :** தான் ஒரு தேரின் மேலிருந்து கொண்டு பல்லாயிரம் தேர் வீரர்களோடு பொருது வெல்லும் வல்லமையுடையவர் அதிரதர்; தான் ஒரு தேரின் மேலிருந்து பதினோராயிரம் தேர் வீரர்களுடன் பொருபவர் **மகாரதர்;** ஒரு தேர் வீரரோடு தாமும் ஒருவராய் நின்று எதிர்க்க வல்லவர், **சமரதர்;** அங்ஙனமே பொருது தம் தேர் முதலியவற்றை இழந்து விடுபவர் **அர்த்தரதர்.**

என்றும் ஈடுபாடு கொண்டு தன்னை மறந்த நிலையில் இருப்பர்.

**23. நரகாசுரவதம்:** எம்பெருமான் வராக அவதாரம் செய்து பூமிதேவியைக் கோட்டாற் குத்தி எடுத்த பொழுது, அவனுடைய தொட்டுணர்வால் பூமிதேவிக்கு மகனாகப் பிறந்தவன் **நரகன்**. நல்ல நேரத்தில் பிறக்காதவனாதலால் அசுரத் தன்மை பொருந்தியிருந்தான். இவன் **பிராக் ஜோதிஷம்** என்னும் நகரிலிருந்து கொண்டு சகல பிராணி களையும் நலிந்து வந்தான். தேவர், சித்தர், கந்தர்வர், இயக்கர் முதலியோரின் கன்னிகைகளை வன்முறையால் கவர்ந்து அவர்களை மணம் புணர்வதாகக் கருதி தன் மாளிகையில் சிறை வைத்திருந்தான். வருணனது குடை, மந்தரகிரியின் சிகரமான இரத்தின பர்வதம், தேவர் தாயான அதிதி தேவியின் குண்டலங்கள் இவற்றைக் கவர்ந் தவன். இந்திரனது ஐராவதத்தையும் அடித்துக் கொண்டு போகச் சமயம் பார்த்திருந்தான். இதை முன்னரே தெரிந்து கொண்டு அஞ்சி இந்திரன் கண்ணனைப் பணிந்து முறையிட்டான். இந்திரனது வேண்டுகோளால் கண்ணன் கருடனை வரவழைத்துப் பூமிப்பிராட்டியின் அம்சமான சத்தியபாமையுடன் கருடன் மேலேறி நரகன் வசித்த நகரை யடைந்து திருவாழியைப் பிரயோகித்து அவனது மந்திரியான முரன் முதலிய பல அசுரர்களையும் இறுதியில் அந்த நரகனையும் அறுத்துத் தள்ளி அழித்தொழித்தான். பல திசைகளிலிருந்து கொணர்ந்து சிறைப்படுத்தியிருந்த பதினாயிரத்தொருநூறு கன்னிகைகளையும் ஆட்கொண் டான். பின்னர் அதிதியின் குண்டலங்களை அத்தேவியிடம் சேர்ப்பிக்கும்பொருட்டு சத்யபாமையுடன் கருடன் மீதமர்ந்து தேவலோகம் சென்று ஒப்படைத்தான். இந்த வரலாறு ஆழ்வாரால்,

> **மன்னு நரகன்தன்னைச்**
> **சூழ்போகி வளைத்தெறிந்து**
> **கன்னி மகளிர்தம்மைக்**
> **கவர்ந்த கடல்வண்ணன்** (4·3:3)

[மன்னு-நிலைபெற்றவனாகக் கருதிய; சூழ்போகி-ஆராய்ந்து; எறிந்து-ஆழியால் கொன்று; கன்னி மகளிர்-பதினாறாயிரத்து ஒரு நூறு பேர்.]

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கப்படுகின்றது.

**24. கற்பகத்தருவைக் கொணர்ந்தது:** அதிதி தேவியின் குண்டலங்களைச் சேர்ப்பிப்பதற்கு கண்ணன் சத்தியபாமை யுடன் தேவலோகத்திற்குச் சென்றபொழுது, இந்திராணி சத்தியபாமைக்கு எல்லாவித உபசாரங்களையும் செய்த வள், தேவர்க்கே உரிய பாரிஜாத மலரை மானிடப் பெண் ணாகிய இவளுக்குத் தகாது என்று சமர்ப்பிக்கவில்லை. சத்தியபாமை அந்த மலரை விரும்பி தன் கணவனிடம், "நாதா, இந்தப் பாரிஜாத மரத்தை துவாரகைக்குக் கொண்டுபோகவேண்டும்" என்று விடுத்துவேண்டுகோளைக் கண்ணனின் திருச்செவிசாத்தினாள். கண்ணனும் அந்த மரத்தை வேருடன் பெயர்த்தெடுத்துக் கருடன் தோளின் மீது வைத்தருளினான். அப்போது இந்திராணி தூண்டி விட்டதனால் இந்திரன் மறித்துக் கண்ணனோடு போர் செய்தான். கண்ணன் தனது சங்கநாதத்தாலேயே இந்திரனை அவன் சேனையுடன் பங்கப்படுத்தி, பின்னர் பாரிஜாத மரத்தை துவாரகைக்குக் கொண்டு வந்து சத்தியபாமை வீட்டுப் புழைக்கடைத் தோட்டத்தில் நாட்டியருளினான். இந்த நிகழ்ச்சியை,

> **கற்பகக் காவு, கருதிய காதலிக்கு**
> **'இப்பொழு தீவன்' என்று இந்திரன் காவினில்**
> **நிற்பன செய்து நிலாத்திகழ் முற்றத்துள்**
> **உய்த்தவன் (1.10:9)**

[இந்திரன் காவினில்-இந்திரனுடைய உத்தியா வனத் தில்; காதலி-சத்தியபாமை; கற்பகக்காவு-கற்பகச் சோலை; முற்றம்-வீட்டு முற்றம்; நிற்பன செய்து-இருக்கும்படி செய்து.]

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். இந்திரன் காவு — நந்தவனம். மந்தாரம், பாரிஜாதம், சந்தானம், கல்ப விருட்சம், அரிசந்தனம் — என்ற தேவலோகத்து மலர் தரும் மரங்கள் ஐந்து. இந்த ஐந்தையும் சாதாரணமாகக் கல்பவிருட்சம் என்று வழங்குதலும் உண்டு. இங்கு பாரிஜாதத்தைக் கற்பகம் என்கின்றார். இம்மரங்களில் ஒவ்வொன்றுமே பெருஞ்சோலையாகத் தழைத்திருக்கு மாதலால் 'கற்பகக் காவு' எனப்பட்டது அறிக.

25. **சிசுபாலனைச் சிரமறுத்தது:** சிசுபாலன் பிறந்த பொழுது நான்கு கைகளையும் மூன்று கண்களையும் உடையவனாக இருந்தான். அனைவரும் இதனைக் கண்டு வியப்பு எய்தினர். இந்நிலையில் ஆகாயவாணி, "யார் இவனைத் தொடுகையில் இவனது கைகளிரண்டும் மூன்றாம் விழியும் மறையுமோ, அவனால்தான் இவனுக்கு மரணம்" என்று கூறிற்று. அவ்வாறே பலரும் தொட்டனர்; மறைய வில்லை. கண்ணன் தொட்டவுடனே அவை மறைந்தன. அதனால் "இவனைக் கொல்பவன் கண்ணனே" என்றறிந்த இவனது அன்னை "யாது செய்யினும் என் மகனைக் கொல்லலாகாது" என்று கண்ணனை வேண்ட, அந்த அத்தையின் நன்மொழிக்கு ஒருவாறு இணங்கிய கண்ணன், "அத்தையே, இவன் எனக்கு நூறு பிழை செய்யுமளவும் இவன் பிழையைப் பொறுப்பேன்" என்று கூறியருளினன். பின்பு சிசுபாலன் தனக்குக் கண்ணன் பகைவன் என்பதை இளமையிலேயே அறிந்து அதனாலும் முற்பிறப்பின் வாசனையாலும் வளர்ந்த பகைமையைப் பாராட்டி, எப் பொழுதும் அப்பெருமானுடைய திவ்விய குணங்களையும் திவ்விய சேஷ்டிதங்களையும் நிந்திப்பதையே தொழிலாகக் கொண்டிருந்தான். இவனுக்கு மணம் செய்து கொடுப்ப தென்று உறுதி செய்திருந்த உருக்குமணியைக் கண்ணன் வலியக் கவர்ந்து மணம் புரிந்து கொண்டது முதல் இவன் கண்ணனிடத்து மிக்க வயிரம் கொண்டனன். பிறகு இந்திரப் பிரத்தத்தில் நடந்த இராசசூய யாகத்தில் தர்ம

புத்திரனால் கண்ணபிரானுக்கு 'அக்ரபூசை' (முதல் மரியாதை?) செய்யப்பட்டதைக் கண்டு அழுக்காறு கொண்டு அளவிறந்த வசைச் சொற்களைப் பிதற்றினான். தான் அத்தைக்கு வாக்களித்த 100 பிழைகள் தாண்டியதும் கண்ணனது சக்கராயுதம் சிசுபாலனது தலையைத் துணித்தது; சிசுபாலன் மாண்டான், உடனே அவன் தேசோமயமான திவ்விய உடல் பெற்று எம்பெருமானின் திருவடியை அடைந்து உய்ந்தனன். இந்த வரலாற்றைப் பெரியாழ்வார்,

**பலபல நாழம்சொல்லிப்**
**பழித்தசிசு பாலன்தன்னை**
**அலவலை மைதவிர்த்த**
**அழகன் அலங்காரன். (4.3:5)**

[நாழம்-குற்றம்; பழித்த-திட்டின; அலவலமை-அற்பத் தனம்; தவிர்த்த-போக்கியருளின]

என பாசுரத்தில் அநுசந்தித்து அகமகிழ்கின்றார்.

**26. பார்த்தனது தேர்க்குதிரைகளின் விடாயைத் தீர்த்தருளியது:** ஒரு சமயம் அருச்சுனது தேர்க்குதிரைகள் தண்ணீர் விடாய் கொண்டு இளைத்தன. அவன் பக்கல் பட்சபதியான பார்த்தசாரதி கடினமான இடத்திலும் நீர் நரம்பு ஓடுவதை அறிய வல்லவனாதலால் அங்கு வருணக் கணையைப் பிரயோகிக்கச் செய்து நிலத்தடி நீரை வெளிக் கிளப்பிக் குதிரைகளை விட்டு நீரூட்டிப் புரட்டி எழுப்பிக் கொண்டு போந்து தேரில் பூட்டிக்கொண்டு வந்து பார்த்தன் முன் நிறுத்த இதைக் கண்ட மாற்றரசரெல்லாம் 'பார்த்தன் பக்கல் கண்ணனுக்குப் பட்சபாதம் இருந்தபடி என்!' என்று அதிசயித்து "இனி நாம் இவனை வெல்லுவது என்பது ஒன்று உண்டோ?" என்று குடல் மறுகினர். இந்த நிகழ்ச்சியின் ஈடுபாட்டை,

**மன்னர் மறுக மைத்துனன்**
**மார்க்கொரு தேரின்மேல்**
**முன்னங்கு நின்று மோழை**
**எழுவித் தவன் (4.2:7)**

[மன்னர்-குருநாட்டு அரசர்கள்; மறுக-குடல் குழம்பும் படி; மைத்துனன்மார்-பாண்டவர்கள்; முன் அங்கு நின்று-முன்புறத்திலே நின்று கொண்டு; மோழை-குமிழ்.]

என்ற பாசுரத்தில் கண்டு மகிழலாம்.

**27. மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்தது:** மைத்துனன்மார்காதலி, திரௌபதி. பாண்டவர் மனைவியாகிய திரௌபதி வீட்டுக்கு விலக்காக இருக்கும் போது 'தீமையில் அண்ணனையும் வென்ன துச்சாதனன்' அவளைச் சபையில் மானபங்கம் செய்ய மயிரைப் பிடித்திழுத்ததற்கு அவன் மீதும், இதற்குத் துணையாக இருந்த துரியோதனன் மீதும் கறுக்கொண்டு " இவர்களை உயிர்மாளவித்ததன்றி நான் இவ்விரித்த கூந்தலை முடிப்ப தில்லை" என்று சபதம் பண்ணிக்கொண்டு பன்னிரண்டு ஆண்டு காட்டில் திரித்த காலத்தோடும் பின்னர் நாட்டிற் சேர்ந்த காலத்தோடும் வேற்றுமையின்றி விரித்த தலையும் தானுமாகத் திரிகின்ற படியைக் கண்ட கண்ணபிரான் "நாம் இவள் சங்கற்பத்தின்படியே செயலாற்றி இவளது கூந்தலை முடிப்பித்தாலன்றோ 'சரணாகத ரட்சகன்' என்று நாம் கொண்டுள்ள விருது பிழைகும்" என்றெண்ணி அவ் வண்ணமே செய்யக் கருதித் தூது நடந்தும் தேரூர்ந்தும் பாண்டவர்க்குத் துணை செய்து அவளது சங்கற்பத்தை ஈடேற்றிக் கூந்தலை முடிப்பித்து அப்பாண்டவர்களையும் அரசாளவித்தான். இந்த நிகழ்ச்சியை ஆழ்வார்,

> **மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து**
> **அவர்களை மன்னராக்கி (4.9:6)**

என்ற பாசுரத்தில் அநுசந்திக்கின்றார். இந்த நிகழ்ச்சி,

'அர்ச்சுனக்கு தூத்யசாரத்தியங்கள் பண்ணிற்றும் பிரபத்தி உபதேசம் பண்ணிற்றும் இவளுக்காக'[9]

9. ஸ்ரீவச. பூஷ. 28. (புருடோத்தம நாயுடு பதிப்பு.)

[தூத்ய சாரத்யங்கள்- துரியோதனனிடத்தில் தூது
சென்றதும் அருச்சுனனுக்குத் தேர் ஓட்டியதும்.]

என்று ஸ்ரீவசனபூஷணத்திலும் கூறப் பெற்றுள்ளது.

**28. உத்தரையின் சிறுவனை உய்வித்தது:** துரியோதனன் இறக்கும் தறுவாயில் (நள்ளிரவில்) அசுவத்தாமாவுக்குச் சேனாதிபதிப் பட்டம் கட்டுவித்துப் பாண்டவர்களைப் பரலோகத்து அனுப்புமாறு கோர, கண்ணன் சகாதேவனுக்கு அளித்த வாக்கின்படி ஐவரையும் அவர்தம் பத்தினியையும் கண் காணாவிடத்தில் மறைத்து வைத்தமையால், பாடி வீட்டில் ஒரு கூடாரத்தில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த இளம் பஞ்ச பாண்டவர்களைக் கொன்று அவர்தம் தலைகளைக் கொண்டு வந்து துரியோதனனுக்குக் காட்ட, அவனும் இக் கோரக் காட்சியைக் கண்டு புத்திரசோகத்தால் உயிர் நீத்தான். அசுவத்தாமாவும் முனிவர் குழுவில் சென்று சேர்ந்தான். மக்கள் மரித்ததைக் கேட்ட திரௌபதி புத்திரசோகத்தால் தாக்குண்டு பைத்தியம் பிடித்தவள் போலானாள். இவள் நிலையைக் கண்டு பொறுக்க முடியாத பீமனும் அருச்சுனனும் அசுவத்தாமாவின் இருப்பிடத்தை அடைந்தனர். அருச்சுனன் எடுத்த எடுப்பில் நான்முகன் கணையை அவன்மீது பிரயோகித்தான். அசுவத்தாமாவும் தன் அருகில் கிடந்த தருப்பையை மந்திரித்து நான்முகன்கணையாக ஏவினான். இரண்டு பிரயோகத்தாலும் இப்பூவுலகமே அழிந்து விடும் என்ற நிலைமை தோன்றியது.

தேவர்களும் மூவரும் வந்து நிலைமையைச் சமாளிக்க முயன்றனர். இருவரும் தத்தம் கணையைத் திரும்பப் பெற வேண்டினர். பார்த்தன் இதற்கு ஒருப்பட்டான். அசுவத்தாமா தனக்கு இது தெரியாதென்றும், ஆனால் வேறு ஒருவர் மீது மாற்றி ஏவத் தெரியும் என்றான். பார்த்தன் தான் விடுத்த கணையைத் திரும்பப் பெற்றான். அசுவத்தாமா சிந்தித்துப் பார்த்தான். பாண்டவ வமிசம்

தழைக்க அபிமன்யுவின் மனைவி உத்தரையின் கருப்பத்திலுள்ள குழந்தையே என்று தெரிந்து கொண்டு அதன்மீது திருப்பி விட்டான். கண்ணன் மிகுந்த சினங்கொண்டு பஞ்சாயுதங்களுடனும் தன் மூல உருவுடனும் சென்று அந்த நான்முகன் கணையைத் தவிடு பொடியாக்கினான். சில புராணங்களில் அசுவத்தாமா அபாண்டவாத்திரத்தைப் பிரயோகித்தான் என்றும், அதனால் நீறாயொழிந்ததென்றும், அச்சிசுவை எப்படியும் உயிர்ப்பிக்க வேண்டும் என்று சுபத்திரை பிரார்த்தித்தாள் என்றும், அங்ஙனமே தன் செந்தாமரை போன்ற திருவடியினால் அச்சிசுவை அடி தொடங்கி முடியீறாகத் தொட்டு அருளினான் என்றும், அதனால் அச்சிசு உயிர் பெற்று பேறு காலத்தில் பரீட்சித்து மன்னனாகப் பிறந்தது என்றும் கூறப்பெற்றுள்ளது. இந்த வரலாற்றை ஆழ்வார்,

> மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து
> அவர்களையே மன்னர் ஆக்கி
> உத்தரைதன் சிறுவனையும் உயக்கொண்ட
> உயிராளன் (4.9:6)

[மைத்துனன்மார்-பாண்டவர்கள்; காதலி-திரௌபதி; உத்தரைதன் சிறுவன்-பரீட்சித்து; உயக்கொண்ட-உயிர் பெற்று எழச்செய்த]

என்று இரு நிகழ்ச்சிகளையும் ஒருசேர அநுசந்திக்கின்றார். பிறிதொரு பாசுரத்திலும்,

> மருமகன்றன் சந்ததியை
> உயிர்மீட்டு மைத்துனன்மார்
> உருமகத்தே வீழாமே
> குருமுகமாய்க் காத்தான் (4.8:3)

[மருமகன்- அபிமன்யு; சந்ததி - புத்திரன்; மைத்துனன்மார் - பாண்டவர்கள்; மகத்து - பாரதப்

போராகிற நரமேத யாகத்தில்; வீழாமே-அழிந்து படாமல்.]

என்று இந்நிகழ்ச்சி போற்றப்பெறுகின்றது.

**29. குடக் கூத்து ஆடியது:** பிராமணர்களுக்குச் செல்வம் விஞ்சினால் யாகம் செய்வது போல, இடையர்கட்குச் செல்வம் விஞ்சினால் அதனால் உண்டாகும் செருக்குக்குப் போக்குவீடாக அவர்கள் ஆடுவதொரு கூத்து; இதனைத் தலையிலே அடுக்குக்குடம் இருக்க, இரு தோள்களிலும் இருகுடங்களிருக்க, இரு கையிலும் குடங்களை ஏந்தி ஆகாயத்திலே எறிந்து ஆடுவதொரு கூத்து என்பர். குடக் கூத்தென்பது, கண்ணன் பேரனான அநிருத்திரனைத் தன் மகள் உழை (உஷா) காரணமாக வாணன் சிறை வைத்த போது, அப்பிரான் அவ்வசுரனது சோ (சோணிபுரம்) என்ற நகரிற் சென்று குடங்கொண்டாடியதைக் குறிக்கும் என்பர். இதனை விஷ்ணுசித்தர்,

> **குடங்க ளெடுத்தேற விட்டு**
> **கூத்தாட வல்லஎம் கோவே (2.7:7)**

[ஏறவிட்டு-உயர எறிந்து; கோவே-தலைவனே.]

என்று தம் பாசுரமொன்றில் அநுசந்தித்து மகிழ்கின்றார்.

**30. வைதிகன் பிள்ளைகளை மீட்டுக் கொடுத்தது:** ஓர் அந்தணனுக்கு நான்கு குமாரர்கள். முதல் பிள்ளை பிறந்து பூமியைத் தொட்டதும் காணப் பெறவில்லை. இரண்டாவது, மூன்றாவது பிள்ளைகளின் நிலைமைகளும் அப்படியே. பெற்றவளும் கூட முகத்தில் விழிக்கப் பெறாதபடி இன்னவிடத்திற் போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது மூன்று பிள்ளைகளும் போய்விடுகையாலே நான்காம் பிள்ளையைக் கருவுயிர்க்கும் சமயத்தில் அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து, "இந்தப் பிள்ளையையாயினும் பாதுகாத்துத் தந்தருள வேண்டும்" என்று வேண்டினான். அதற்குக் கண்ணபிரான் அப்படியே

செய்வதாக வாக்குத் தந்தான். ஆனால், அன்று ஒரு வேள்வியில் தீட்சிதனாக இருக்க வேண்டியிருந்ததால் கருவுயிர்க்கும் இடத்திற்கு எழுந்தருள முடியாத நிலையில் இருந்தான். அருகிலிருந்த பார்த்தன் "நான் சென்று காப்பாற்றுவேன்" என்று வாக்குத் தந்து அந்தணனையும் கூட்டிக் கொண்டு போய்க் கருவுயிர்க்கும் இல்லத்தைச் சுற்றிக் காற்று கூட நுழைய வொண்ணாதவாறு 'சரக் கூடம்' அமைத்துக் காத்துக் கொண்டு நின்றான். அன்று பிறந்த குழந்தையும் வழக்கபடி மாயமாய் மறைந்தது.

அந்தணன் கோபங் கொண்டான். அருச்சுனனை இடைமறித்து "அதமனே, உன்னாலே யன்றோ என் பிள்ளை போம்படி ஆயிற்று; கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்?" என்று நிந்தித்து அவனைக் கண்ணபிரானருகே இழுத்துக் கொண்டு வந்தான். கண்ணன் அதுகண்டு முறுவலித்து "அவனை விடு; உனக்குப் பிள்ளையை நான் கொண்டு வந்து தருகின்றேன்," என்று அருளிச்செய்து அந்தணனையும் தன்னுடன் கொண்டு தேரில் ஏறி, அருச்சுனனைச் செலுத்தச் சொல்லி, அத்தேருக்கும் இவர்களுக்கும் திவ்விய ஆற்றலைத் தனது சங்கற்பத்தால் கற்பித்து இவ்வண்டத் துக்கு வெளியே நெடுந்தூரம் அளவும் கொண்டு சென்று அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தன் நிலமான பரமபதத்தில் தானே புகுந்து, அங்கு நாச்சிமார் தங்கள் சுவாதந்திரம் காட்டுவதற்காகவும் கண்ணபிரானது திவ்விய சௌந்தரியத்தைக் கண்டு களிப்பதற்காகவும் அழைப்பித்து வந்த அப்பிள்ளைகள் நால்வரையும் அங்கு நின்றும் ஆதி உருவத்தில் ஒன்றும் குறையாமல் கொண்டு வந்து கொடுத்தருளினன் என்பது வரலாறு. இந்த இதிகாசத்தைப் பெரியாழ்வார்,

**தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக**
**தனியொரு தேர்கடவித் தாயொடு கூட்டியஎன**
**அப்ப!** (1.6:7)

*[தனமிகுசோதி-தன்னுடைய நிரவதிக சோதியாகிய பரமபதம்; கடவி-நடத்தி]*

என்றும்,

**பிறப்பகத்தே மாண்டொழிந்த**
**பிள்ளைகளை நல்வரையும்**
**இறைப்பொழுதில் கொண்டு கொடுத்(து)**
**ஒருப்படுத்த உறைப்பன் (4 8:2)**

*[பிறப்பகம்-கருவுயிர்த்த இடம்; மாண்டு-இறந்து; இறைப் பொழுது-நொடிப்பொழுது; ஒருப்படுத்த-ஒப்புக் கொள்ளச் செய்த.]*

என்றும் இரண்டு பாசுரங்களில் அநுசந்தித்து மகிழ்கின்றார். இந்த வரலாற்றைத் திருமங்கை மன்னன் தம் பெரிய திருமொழியிலும் (5.8-2) நம்மாழ்வார் திருவாய்மொழியிலும் (3.10:5) குறிப்பிட்டுள்ளனர்.

இங்ஙனம் பெரியாழ்வார் அநுசந்தித்த கண்ணனின் தீரச்செயல்களைக் கண்டு மகிழ்ந்தோம்; பெரியாழ்வாரின் அநுபவத்தைப் பெற்றோம். இந் நிலையில்,

**குன்றி னால்குடை கவித்ததும், கோலக்**
**குரவை கோத்த துவும்குட மிட்டும்**
**கன்றி னால்விள வெறிந்ததும் காலால்**
**காளி யன்தலை மிதித்ததும் முதலா**
**வென்ற சேர்பிள்ளை நல்வினை யாட்டம்**
**அனைத்தி லும்அங்கென் உள்ளமும் குளிர**
**ஒன்றும் கண்டிடப் பெற்றிலன்; அடியேன்**
**காணு மாறினி யுண்டெனில் அருளே.**
**(பெரு. திரு-9)**

என்ற குலசேகராழ்வார் பாசுரத்தையும் நினைந்து போற்றுகின்றோம்.

# 9. பிருந்தாவனத்தில்-வேணுகோபாலன்

கண்ணன் வளர்ந்த இடமான ஆயர்பாடியிலுள்ள நந்தகோபன் முதலாய ஆயர்கள் கண்ணனுக்கு அங்கு அடிக்கடி நேரிட்ட பேரிடர்களை உற்பாதங்கள் எனக்கருதி அவ்விடத்தை விட்டுக் கன்றுகாலி முதலிய எல்லாப் பொருள்களுடனும் **பிருந்தாவனம்**[1] சென்று அங்குக் குடியேறினர். பிருந்தாவனம் என்பதற்கு நெருஞ்சிக்காடு என்பது பொருள். கண்ணன் அவதரித்ததும் இவ்விடம் அந்நிலை மாறி வளம் கொழிக்கும் '**விரஜபூமி**' (மேய்ச்சல் நிலம்)யாக மாறிவிட்டது. வடஇந்தியாவில் சத்திரப் பிரதேசத்தில் உள்ள இந்த '**விரஜபூமி**' 108 சதுர மைல் பரப்புடையது. இதில் பல புண்ணியத் தலங்களும் தீர்த்தங் களும் உள்ளன. இதன் நடுவில் தூய பெருநீர் யமுனை பெரு வெள்ளமிட்டுப் பாய்ந்து எங்கும் பசுமைக் காட்சி வழங்கும் மருத வளத்தை அளிக்கின்றது. விரஜபூமியில் கண்ணன் திருவடி படாத இடமே இல்லை எனலாம். திருவாய்ப்பாடி (நந்த கோகுலம்), வடமதுரை (மதுரா), கோவர்த்தனம், இராதை அவதரித்த இராதாபர்காம் என்ற ஊர், கண்ணன் திருவிளையாடல்கள் புரிந்த பிருந்தா

---

1. பிருந்தாவனம் — வடமதுரையிலிருந்து (மத்ரா—இருப்பூர்தி நிலையம்) சுமார் 10 கி. மீ. தொலைவிலுள்ளது. வடமதுரையிலிருந்து பிருந்தாவனத்திற்குப் பேருந்து வசதி உண்டு.

வனம் ஆகிய புனிதமான இடங்கள் யாவும் இந்த விரஜபூமியில் அடங்கியுள்ளன.[2]

பிருந்தாவனம் கண்ணன் குழலூதிக் கோபியருடன் 'இராசக்கிரீடை' (குரவைக்கூத்து) நிகழ்த்திய இடமாகும். இங்குக் காளியன் மடு, கோபியரின் துகிலுரித்த கட்டம், கேசி என்ற அசுரனைக் கொண்ட இடம் (கேசிகட்டம்), கோபியரின் பக்திப் பரவசத்தைக் கண்ட அக்ரூரர் கண்ணீர் மல்க விழுந்து விழுந்து புரண்ட இடம், குழலூதிக் கோபியரின் உள்ளத்தைக் கவர்ந்த வனம் (பான்சி வனம்), மற்றும் சேவாகுஞ்சம், பக்தவிலோசனம் முதலானவைகள் உள்ளன. சில நாட்களில் நள்ளிரவில் இன்றும் கண்ணனின் குழலோசையைக் கேட்பதாக அங்குள்ளோர் கூறுகின்றார். பெரும்பாலான கண்ணனின் தீரச் செயல்கள், திருவிளையாடல்கள் முதலியவை ஆயர்பாடியிலும், பிருந்தாவனத்திலும், கோவர்த்தனத்திலும் நடைபெற்றன.

பிருந்தாவனத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கண்ணனின் பல திருக்கோயில்கள் உள்ளன. பெரும்பாலான திருக்கோயில்கள் வைணவத்தின் ஒரு பிரிவினரான சைத்தன்ய மார்க்கத்தினராலும், மற்றொரு பிரிவினராகிய நிம்பார்க்க மார்க்கத்தினராலும் எழுப்பப் பெற்றவையாகும். பிருந்தாவனத்தில் வங்காளிகள் அதிகமாகக் குடியேறியுள்ளனர். பக்தர்களும் பகவர்களும் ஆசாரியர்களும் இப்பூமியில் ஏதேனும் ஒரு பிறவி எடுக்க அவாக் கொண்டனர். இதயத்தில் ஆன்மா இருப்பதுபோல்

---

2. 1974-திசம்பரில் குருட்சேத்திரத்தில் (அரியானா) நடைபெற்ற அனைத்திந்திய கீழ்த்திசை மாநாட்டின்போது நானும் என் ஆராய்ச்சி மாணவர் திரு. ந. கடிகாசலமும் அரிய நண்பர் பண்டித திரு. வி. நடேசனாரும் வடமதுரை பிருந்தாவனம் இவை இரண்டை மட்டிலும் சேவித்தோம்.

'விரஜபூமி'யின் இதயமான பிருந்தாவனத்தில் கண்ணன் என்றும் மகிழ்ந்து இனிது மருவியுள்ளான் என்று கூறுவர் பெரியோர்.

பிருந்தாவனத்தில் **அரங்கமந்திர்** (ஸ்ரீரங்கஜீ மந்திர்): இத் திருக்கோயில் யமுனைக் கரையில் நிமிர்ந்து நின்று காட்சி தருகின்றது. இது தமிழகப் பாணியில் அமைந்தது. இங்கும் பழைமையான பல திருக்கோயில்கள் இருப்பினும் அரங்க மந்திரமே ஒரு திவ்விய தேசமாகத் திகழுகின்றது. ஐந்து திருச்சுற்றுகளும் (பிராகாரங்களும்) ஐந்து கோபுரங் களும், ஐந்து மதில்களும் உள்ள இத்திருக்கோயிலின் அமைப்பு திருவரங்கம்,காஞ்சிபுரம் திருக்கோயிலமைப்பைத் தந்துள்ளது. திருவரங்கமே சிறிய அளவில் தோற்றம் தரும் முறையில் அமைந்துள்ளது என்று சொல்லலாம். திருக் கோயிலின் கடைசி வெளிச்சுற்றினுள் இத்திருக்கோயிலின் கைங்கரியத்திற்காக சுமார் 30 வைணவக் குடும்பங்கள் தொன்னாட்டினின்றும் சிறப்பாகக் காஞ்சிப் பகுதி யினின்றும் வந்தவர்கள் குடியிருக்கின்றனர்.

அரங்கமந்திர் 1849-ல் (விக்கிரம ஆண்டு) பிரதிஷ்டை செய்யப் பெற்றது.[3] பாஞ்சராத்ர ஆகம விதிப்படி ஆறு காலத் திருவாராதனமும் திருவிழாக்களும் நடை பெற்று வருகின்றன. கருவறையில் ஆண்டாள், அரங்க மன்னார் சந்நிதியும் உட்சுற்றில் திருவேங்கடமுடையான், இராமன், திருவரங்கன் சந்நிதிகளும், ஆழ்வார் ஆசாரியரின் சந்நிதிகளும் உள்ளன. தமிழகக் கோயில்களில் இருப்பவை போன்ற வாகனங்களும் அழகிய தேரும் உள்ளன. சைத்திர கிருஷ்ண திருதியை முதல் பத்து நாட்கள் பெருந்திருவிழா (பிரம்மோற்சவம்) சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

---

3. இதற்கு முன்னிருந்து ஏற்பாடு செய்தவர் **கோவர்த்தனம் அரங்காச்சாரியார்;** ஸ்ரீபெரும்புதூருக்கும் காஞ்சிக்கும் இடையேயுள்ள அகரம் என்ற சிற்றூரில் (1809-ல் ஐப்பசி புனர்வசு) பிறந்தவர்.

இத்திருக்கோயிலில் காலை மாலை வேளைகளில் நிகழும் ஆழ்வார்களின் அருளிச் சொல் முழக்கம் செவிக்கினிய விருந்தாக அமைகின்றது.

கண்ணன் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஆழங்கால் படுவோம். இவை யாவும் பெரியாழ்வார் பக்தி உள்ளத்தில் முகிழ்த்துப் பாசுரங்களாக மலர்ந்து படிப்போரைப் பக்திப் பரவசமாக்குகின்றன. ஒரு நாள் யசோதைப் பிராட்டி கண்ணனை நோக்கி, "இற்றைக்கு (விசாகம்) ஏழாவது நாள் நீ பிறந்த நட்சத்திரம் (திருவோணம்) வருகின்றது. அன்று சிறப்பான மங்கள காரியங்களைச் செய்வதற்கு இன்று ஊரில் உள்ள முக்கிய மான பெண்களை அழைத்து உற்சவத் தொடக்கம் செய்வித்தேன்; மங்கலப்பாட்டுகளையும் பாடுவித்தேன்; நீ பிறந்த நாளன்று தேவைப்படும் பொருள்களையும் இப்பொழுதே சித்தப்படுத்தி வைத்துள்ளேன். ஆகையால் நீ சாதித் தொழிலாகிய மாடு மேய்த்தலைத் தவிர்த்து உற்சவமூர்த்திபோல் அலங்கரித்துக் கொண்டு இல்லத்தி லேயே இருப்பாய்" என்று வேண்டுகின்றாள். இந் நிகழ்ச்சியை ஆழ்வாரும் யசோதையாகத் தன்னை அநுகரித்துக் கொண்டு அநுசந்திப்பதை,

> திண்ணார் வெண்சங் குடையாய்! திருநாள்திரு
> வோணம் இன்றுஎழு நாள்;முன்
> பண்ணேர் மொழியாரைக் கூவி முளையட்டிப்
> பல்லாண்டு கூறு வித்தேன்;
> கண்ணாலம் செய்யக் கறியும் கலத்தது,
> அரிசியும் ஆக்கி வைத்தேன்;
> கண்ணா! நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின் போகேல்
> கோலம் செய்திங் கேஇரு (3.3:9)

[திண்ஆர் - திண்மை பொருந்திய; திருநாள் - பிறந்த நாள்; கூவி - அழைத்து; முளை அட்டுதல் - நவ தானியங்களைக் கொண்டு பாலிகை வைத்தல்; பல்லாண்டு - மங்களா சாசனம்; கண்ணாலம் - திருக்கல்யாணம்; ஆக்கி - சேமித்து; நாளை

தொட்டு - நாளை முதல்; கோலம் செய்து - அணி செய்து கொண்டு]

என்ற பாசுரத்தில் கண்டு மகிழலாம். இதனைப் பின்பற்றியே கண்ணன் வீட்டிலேயே இருக்கின்றான். ஏழு நாளும் கடந்த பின்னர் பண்டு போலக் காட்டிற்குச் சென்று ஆங்கு ஆநிரை மேய்த்த மகிழ்ச்சிப் பெருக்காலே தன்னை பல்வேறு விதமாக அணி செய்து கொண்டு குழலூதுவது, இசை பாடுவது என்பவற்றை மேற்கொள்பவனாய் தன் தோழன்மாருடன் பெரிய ஓலக்கமாகத் திருவாய்ப்பாடி திரும்பும் கோலத்தைக் கண்டு இடைப் பெண்கள் காமுறுகின்றனர். ஆழ்வார் தம்மை அப்பெண்களாகப் பாவித்துக் கொண்டு இனியராகின்றார். இதை ஒரு திருமொழியில் (3.4) அநுசந்திப்பதைக் கண்டு மகிழலாம்.

தோழிமார்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகின்றனர். "தோழிகாள்! இந்த ஊரில் நந்தகோபன் பிள்ளை ஒருவன் இருப்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவன் நல்ல நல்ல ஆடைகளைத் திருவரையில் உடுத்திக் கொண்டு கச்சும் கத்தியுமாக அழகியவும் பரிமளமுள்ளனவுமான மலர் மாலைகளை அணிந்து கொண்டு பல மயில் தோகைக் குடை நிழலில் மாலை நேரமாக இப்பொழுதில் தன் தோழன்மாருடன் இடைச்சேரி ஏற வந்து கொண்டிருக்கின்றான். அவன் வரும் அழகைக் கண்டு களிக்க விரும்பி வழியில் அவனை எதிர் கொண்ட பெண்களில் வளையிழவாதார் ஒருவரும் இலர். நீங்களாவது விழிப்புடன் இருந்து உங்கள் கைவளையல்களை பாதுகாப்பாக நோக்கிக் கொள்ளுங்கள்" என்று மங்கை ஒருத்தி தன் தோழிமார்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றாள்.[4] (2)

---

4. அழகனைக் கண்ட மாத்திரத்தில் அழகிகட்குக் காதல் கரை புரண்டு ஓடும். அவனை அநுபவிப்பது அரிது. அதனால் கணத்துக்குக் கணம் உடல் இளைத்து கைவளைகள் கழன்று விழும் என்று கூறுவது அகப்பொருள் மரபு.

"ஆகவே நீங்கள் யாவரும் அவன் செல்லும் வழியை விட்டு ஒதுங்கி நில்லுங்கள்" என்பது குறிப்பு.

ஒரு பெண்பிள்ளையின் தாய் சொல்லுகின்றாள்: "கண்ணன் காட்டில் கன்றுகளை மேய்த்துவிட்டுத் தன்னே ராயிரம் தோழர்கள் உடைவாள், சுண்டுவில், பூச்செண்டு, கோல், உத்தரீயம், ஆகியவற்றைக் கண்ணனுக்கு வேண்டும் போது தருவதற்காகத் தாங்கிக்கொண்டு வர, கண்ணன் உயிர்த் தோழன் ஒருவனது தோளை ஒரு திருக்கையினால் ஊன்றிக் கொண்டும் மற்றொரு திருக்கையினால் சிதறிப் போன பசுக்களின் கூட்டம் திரும்பி வருவதற்காக ஊத வேண்டிய சங்கை ஏந்திக் கொண்டும் வாடிய முகத்துடன் வந்து கொண்டிருக்கின்றான். அவனுடைய திருமேனி அழகையும் சமுதாய சோபையையும் என் மகள் காண நேரிடுகின்றது. எல்லோரையும்போல் பொதுவாகத்தான் பார்த்தாள்; பிறகு உற்று நோக்கினாள். இதனையே காரணமாகக் கொண்டு ஆய்ச்சேரியிலுள்ளவர்கள் இரு வருக்கும் அடியோடில்லாத ஒரு சம்பந்தத்தைக் கற்பித்துச் சொல்லுகின்றனர். இது தகுமோ?" என்று முறையிடு கின்றாள் (3).

காட்டிலிருந்து திரும்பும் கண்ணபிரான் வரும் தெருவி லிருக்கும் ஆயர் மங்கையொருத்தி அழகெலாம் திரண்ட கண்ணனைக் காண்கின்றாள். இந்த அழகனைத் தன் தோழியும் கண்டு களிக்கவேண்டும் எனக் கருதி வீட்டினுள் இருப்பாள் ஒரு தோழியை நோக்கித் "தோழி! இதுகாறும் நாம் கண்டவர்களில் ஒருவரையும் ஒப்பாகச் சொல்ல முடியாத ஒரு பேரழகன் வந்து கொண்டிருக்கின்றான். அவனை உடனே வந்து கண்டு மகிழ்க" என்று அழைக் கின்றாள். அவளோ, "அவன் யார்? எக்குடியிற் பிறந்தவன்?" என்பன போன்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு வரத் தாமதிக்கின்றாள். உடனே இவள், "ஒருவன் இந்த இடைச் சேரியில் வந்து பிறந்து பற்பல அற்புதச் செயல்களைச் செய்துள்ளான் என்று நாம் கேள்வி

யுற்றோமல்லவா? அந்தக் கண்ணனே இவன்!'' என்று மறுமொழி கூற, அதற்கு அவள், ''அவன் அவ்வளவு அழகனோ?'' என்று மீண்டும் வினவ, அதற்கு இவள், ''பேதாய்! இவன் அழகனல்லனாகில் யான் இவ்வாறு வேறுபாடு அடைவேனோ? பாராய் தோழி! என் இடுப்பில் துகில் நழுவுகின்றது; கையிலும் வளையல்கள் நிற்கவில்லை; என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதூகலித்து ஆகுலம் செய்கின்றது. இதற்கு மேல் என்னாகவேண்டும்?'' என்கின்றாள் (4).

இன்னோர் ஆய்ச்சி 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' (நா.திரு. 1:5) என்று உறுதியுடன் நின்ற ஆண்டாளைப் போன்றவள். ''இடைப் பிள்ளைகள் எல்லாம் தனக்குக் குடைபிடிக்கும்படியாக வர, தனது சுருண்ட திருக்குழல்களை எடுத்துக்கட்டி பீலிக் கண்களால் அணி செய்து கொண்டு இடைப்பிள்ளைகளின் குழுவில் முன்புறத்தில் நின்று கொண்டு பாடலும் ஆடலுமாகக் கண்ணன் வரக் கண்டேன். இக்கண்ணனைத் தவிர்த்து மற்றொரு சப்பாணியனுக்கு என்னை உரிமைப்படுத்த நினைத்தீர்களாகில் குடிகெட்டுவிடும். நான் 'கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப் போய் செய்யும் தவந் தான் என்?'' (நா. திரு. 13:9)என்று இருக்குமவள். ஆகவே, அவனுக்கே என்னைத் தாரைவார்த்துக் கொடுங்கள். இப்படிச் செய்வீர்களாயின், சிந்தயந்தி[5] போலத் தானாகவே முடிந்து போவேன்; பிறகு எந்நாளும் உங்களுக்குத் தீராத மனக்கவலையாக முடியும்'' என்று வெட்டொன்று துண்டு இரண்டாகச் சொல்லுகின்றாள். (5)

---

5. சிந்தயந்தி: ஓர் ஆய்மகள்: இவள் தாய்மார்களின் காவலுக்கு அகப்பட்டுக் கண்ணனைப் பெறமாட்டாமல் இருந்தவிடத்திலேயே உள்ளேயுருகி நைந்து முடிந்து போயினள்.

இன்னோர் ஆயமங்கை வேறொரு பக்கத்தில் சதியாலோசனை செய்கின்றாள். கண்ணனின் பவளவாய் முறுவலைக் காணவேண்டும் என்பதுதான் திட்டம். இந்தப் பெண்கள் வயதில் முதிர்ந்திராவிட்டாலும் துணிவில் முதிர்ந்தவர்கள் என்பதாகத் தங்களைத் தாங்களே மதிப்பிட்டுக் கொண்டவர்கள். இவர்களில் ஒருத்தி தோழியைப் பார்த்து,

> **அந்தம் ஒன்றில்லாத ஆயப்பிள்ளை**
> **அறிந்தறிந்து இவ்வீதி போதுமாகில்**
> **பந்துகொண் டானென்று வளைத்து வைத்துப்**
> **பவளவாய் முறுவலும் காண்போம், தோழி!** (6)

*[அந்தம்-அலங்கார விஷயங்களில் எல்லை; அறிந்து அறிந்து-தன் தன்மையையும் என் தன்மையையும் அறிந்து; முறுவல்-புன்சிரிப்பு]*

என்று பகர்கின்றாள். அந்த ஆய நம்பியின் அழகுக்கும் விளையாட்டுத் தனத்திற்கும் முடிவே இல்லை. ''நமது இதயத்தை அந்த முகம் ஈர்க்கின்றதென்பதை அவன் இப்படியா ஆய்ந்து ஆ ய் ந் து அறிந்துகொள்ள வேண்டும்? அவன் இத்தெரு வழியே வருவதற்குத் தகுதியே இல்லை. அப்படியிருந்தும் அவன் மானம் கெட்டு இத் தெருவழியே வரப்போகின்றான். அப்போது எவ்வகையினாலாவது வளைத்துக்கொள்ள வேண்டும்'' என்கின்றாள். ''கூட்டத்தில் அஃது எப்படி முடியும்?'' என்று யாராவது ஒருவர் வினவலாமல்லவா? அதையும் மானசீகமாக எண்ணி எதிர்பார்த்துப் பேசுகின்றாள் இந்த மங்கை. ''நாங்கள் விளையாடுகின்றபோது எங்கள் பந்தைப் பறித்துக் கொண்டு போனாய் அன்றோ?'' என்ற ஒரு பொய்யான காரணம் போதுமல்லவா? ''நாமே நம் கையிலுள்ள பந்தை அவன் மடியில் எறிந்து விட்டுக் குற்றம் சாற்றுவோம்'' என்பது குறிப்பு. ''அப்படி அவனை வளைத்து வைத்துக்கொண்டு எங்களை யாராக நினைத்தாய்? எங்கள் வீதியல்லவோ இது? என்று நாம் சொன்னால்

அந்தக் குறும்பனுக்குப் புன்சிரிப்பு வந்துவிடும். அப்போது அவன் திருப்பவளத்தில் முத்துச்சுடர் போன்ற இளநகை தவழும். அதைக்கண்டு அநுபவிக்கலாமல்லவா?'' என்கின்றாள். என்ன அற்புதமான யோசனை? (6)

கண்ணனின் வடிவழகில் ஈடுபட்டு உணர்ச்சியற்று தம்பகம்போல் திகைத்து நிற்பாள் ஓர் ஆய மங்கையின் தாய் பேசுகின்றாள்: ''பற்பல பசுத்திரளின் பின்னே பீலிக் குடைகளாகின்ற சோலையின் கீழ்த் தன் திருமேனி பளபளக்கத் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டும் திருக்கண்கள் மிளிர வேய்ங்குழலை ஊதிக்கொண்டும் அதற்குத்தக்க பாட்டுக்களைப் பாடிக்கொண்டும் வளைந்த தடிகளை வீசி ஆடிக்கொண்டும் இடைப் பிள்ளைகளுடன் மகிழ்ந்து வருகின்ற கண்ணனின் வடிவழகில் சொக்கி என் மகள் அறிவு அழிந்து நிற்கின்றாள்'' என்கின்றாள் (7). இந்த அநுபவங்களில் ஆழ்வார் தம்மை இடைப்பெண்களாகவே பாவித்துக் கொண்டு பேசிக் களிப்படைகின்றார்.

**வேணுகானத்தின் பெருமை:** ஒரு நாள் கண்ணன் பிருந்தாவனத்தில் நின்று குழலூதுகின்றான். அந்த இசையோசையைச் செவிமடுத்தவர்கள், அசேனங்கள் உட்பட, மகிழ்வுற்றபடியை ஆழ்வார் தனித்தனியே பேசி அத்திருக்குழலோசையின் சிறப்பினை அநுபவித்து மகிழ்கின்றார். இந்த அநுபவம் ஒரு நாடகம் போல் வெளியிடப் பெறுகின்றது. களம் பிருந்தாவனம். ஆழ்வார் ஓர் இடைப பெண்ணாகித் தம்மைப் போன்றவர்கள் கண்டதையும் கேட்டதையும் அநுபவித்ததையும்,

**நாவ லம் பெரிய தீவினில் வாழும்**
**நங்கை மீர்கள் இதோர் அற்புதம் கேளீர்** (3;6:1)

*[அம்-அழகிய; பெரிய - விசாலமான; நாவல் தீவு-சம்புத்தீவு]*

என்று பேசத் தொடங்குவது போல நமக்கு நேர்காட்சியாகிவிடுகின்றார். கண்ணனின் குழலோசை 'வாருங்கள்!'

என்று அழைக்க உறங்கிக் கொண்டிருந்த பெண்கள் தங்கள் கட்டுப்பாடுகளை யெல்லாம் மீறிக் கண்ணன் குழலூதும் இடத்திற்கு வந்து விடுகின்றனர். வந்தவர்கள் ஒரு கயிற்றில் ஒழுங்குபடத் தொடுத்த பூக்கள் போல வரிசை யாக நின்று கண்ணனைச் சூழ்ந்துகொண்டு "நாம் நமது காதலை இங்ஙனம் வெளிப்படையாக்கினோமே" என்று வெள்கி, அவன் முகத்தை எதிர் நோக்கமுடியாமல் தலை கவிழ்ந்து நிற்கின்றனர். இதோ இந்த முதல் காட்சி.

இடஅணரை இடத்தோளொடு சாய்த்து
இருகை கூடப் புருவம்நெறிந் தேறக்
குடவயிறும்பட வாய்கடை கூடக்
கோவிந்தன் குழல்கொ(டு) ஊதின போது (2)

[அணர் - மேல் வாய்புறம்; ஒல்கி - ஒடுங்கி; ஓடு- (பிறழ்ந்து பிறழ்ந்து) ஓடுகிற,]

இந்தக் காட்சியைத் தெளிவாக்குவோம்.

காட்டில் பல இடங்களிலும் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் வெகுதூரம் விலகிப் போய் விடாமல் திரும்பி வந்து சேர்வதற்காகக் குழலோசையை எழுப்புகின்றான். அவன் குழலூதும்போது அவனது மேல்வாய்க் கட்டையின் இடப்பக்கம் இடத்தோள் பக்கமாகத் திரும்புகின்றது; இரண்டு கைகளும் குழலோடு கூடி துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன; புருவங்கள் நெறித்து மேலே கிளர்கின்றன. கண்கள் துளைகள் தோறும் ஓடுவதுபோல் நோக்குகின்றன. வயிறு குடம் போலக் குமிழ்த்துத் தோன்றுகின்றது; வாய் குவிகின்றது. வேறு மெய்ப்பாடு களும் தோன்றுகின்றன.

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்ப
குறுவெயர்ப்புருவங் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொ(டு) ஊதின போது (3.6:8)

*[தடவி-துளைகளைத் தடவிக் கொண்டு; பரிமாற-இங்கும் அங்கும் செல்ல; கோட-வக்கரிக்க; கொப்பளிக்க-குமிழ்க்க; கூடலிப்ப-மேல் சென்று வளைய]*

*குழல் ஊதுகின்றபோது கண்ணனின் கைவிரல்கள் துளைகளை மூடவும் திறக்கவும் செயற்படுகின்றன; கண்கள் ஒரு வகையாக மேல் நோக்கி வக்கரிக்கின்றன; திருப்பவளம் பூரிப்பாலே குமிழ்க்கின்றது; குருவியர்வை அரும்பின புருவங்கள் மேல் கிளர்ந்து வளைகின்றன. இவை வேறு மெய்ப்பாடுகள்.*

*பசுக்களுக்காக எழுப்பப் பெற்ற ஓசை கேட்ட பாவையர்கள் பசுக்களுக்குமுன் வந்து சேர்கின்றார்கள்.*

**மடம யில்களோடு மான்பிணை போலே**
**மங்கை மார்கள் மலர்க்கூந்தல் கவிழ**
**உடைநெ கிழவோர் கையால் துகில்பற்ற**
**ஒல்கி யோடரிக்கண் ஓடநின் றனரே!** (3.6:2)

*[ஒல்கி-துவண்டு; அரிக்கண்-ரேகை படர்ந்த கண்.]*

*கண்ணனின் அன்புக்கடல்-அழகின் முழுநிறைவுடன் கூடிய ஆற்றல்-கீதமாக வடிவெடுத்து அந்த உள்ளங்களைக் களவாடிக் கொண்டது. 'என்னை நோக்கி ஊதினான்! என்னை நோக்கி ஊதினான்!' என்று அந்த இசையைத் தேக்கிக் கொண்டு நிற்கின்ற இளமங்கையரில் சிலர் மயில்களைப் போலக் கண்ணைப் பறிக்கும் உருவமுள்ள வர்கள்; சிலர் மான்களைப் போல் மருண்டு மருண்டு பார்க்கும் பார்வையிலே ஆழங்காண முடியாத அழகை மறைத்து வெளியிடுபவர்கள்; இப்போது இவர்கள் யாவரும் தங்களையும் தங்கள் திருமேனி அழகுகளையும் மறந்து கண்ணன் குழலோசையுடன் ஒடுங்கி ஒன்றிப் போயுள்ளனர். சிறிது நேரத்திற்கு முன்னர்தான் தம் இல்லங்களில் பூக்களால் தங்களை அணிசெய்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூந்தல்கள் அவிழ்ந்து தொங்குகின்றன. ஓடி வந்த*

அவசரத்தில் குலைந்த கூந்தலைக் கட்டிக் கொள்ளவும் தோன்றவில்லை; குலைந்த ஆடையை ஒரு கையால் பற்றிக் கொண்டு ஒதுங்கி நிற்கின்றனர். கண்களோ நாணத்தைக் கடந்து அந்த அழகிய கண்ணன் வடிவத்தின்மேல் ஓடு கின்றன! என்ன இனிய இசை! என்ன தத்துவ உண்மை! கோபாலன் பசுக்களைத் தேடுகின்றான்: பரமான்மா சீவான்மாக்களைத் தேடுகின்றது— என்பது ஆழ்வார் பெற வைக்கும் குறிப்பு. இது மற்றோர் காட்சி.

மேலும் சில காட்சிகளைக் காண்போம். கண்ணன் குழலோசை உம்பர் உலகையும் எட்டுகின்றது. அங்குள்ள இளமங்கையர் தங்களிருப்பிடத்தில் நிற்க மாட்டாமல் கண்ணன் இருக்குமிடத்தில் கூட்டம் கூட்டமாக வந்து கூடுகின்றனர். அவர்கள் மனம் நீர்ப்பண்டமாக உருகு கின்றது. கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர்த் துளிகள் சொட்டுகின்றன; கூந்தல்கள் அவிழ்கின்றன; நெற்றி வியர்க்கின்றது. தங்கள் காதுகளைக் குழலோசை வரும் பக்கம் திருப்பிக் கொண்டு மயங்கிக் கிடக்கின்றனர் (3.6:3). இது பிறிதோர் காட்சி.

காட்டுக்குள்ளே இயல்பாக உலாவிக் கொண்டு கண்ணன் எழுப்பும் புல்லாங் குழலோசை மேனகை, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி ஆகிய உம்பர் உலக நடனமாதர்களின் செவிக்கும் எட்டுகின்றது. அவர்களின் நடையழகும் பாட்டழகும் கண்ணனின் நடையழகு குழலோசை இவற்றின் முன் தோற்றுப் போகவே, 'இனி நாம் ஆடுவதாவது, பாடுவதாவது?' என்று நாணங் கொண்டு தாமாகவே அத்தொழில்களைத் துறக்கின்றனர்.

மேனகை யோடு திலோத்தமை அரம்பை
உருப்பசி யர்அவர் வெள்கி மயங்கி
வானகப் படியில் வாய்திறப் பின்றி
ஆடல் பாடலவை மாறினர் தாமே (3.6:4)

[வெள்கி-நாணி; வானகப் படியில்-வானுலகிலும் பூவுலகிலும்; மாறினர்-விட்டொழித்தனர்.]

கானவித்தைக்குத் தும்புருவும் நாரதரும் பேர் பெற்றவர்கள். அவர்களும் கண்ணனின் குழலோசையைக் கேட்டதும் அதில் ஈடுபட்டுத் தமது வீணைகளை மறக்கின்றனர். கின்னர மிதுனங்கள் என்று புகழ் வாய்ந்த பேர்களும் இக்குழலோசையைக் கேட்டதும், தாம் தோற்றதாகக் கொண்டு, "இனி நாங்கள் எங்கள் கின்னரந் தொடுவதில்லை; இது எங்கள் அப்பன் ஆணை" என்று உறுதியாக உரைத் தொழிகின்றனர் (3.6:5). இதோ பாருங்கள் ஆகாய சஞ்சாரிகளும் கீதவாத்திய விநோதர்களுமான கந்தர்வர்கள் படும் பாட்டை!

**அம்பரம் திரியும் காந்தர்ப்ப ரெல்லாம்**
**அமுத கீதவலை யால்சுருக் குண்டு**
**நம்பரம் அன்றென்று நாணி மயங்கி**
**நைந்து சோர்ந்துகை மறித்துநின் றனரே! (3.6:6)**

[அம்பரம்-ஆகாயம்; கந்தர்ப்பர்-கந்தர்வர்; கை மறித்து-கையைத் திருப்பிக் கொண்டு.)

பரம போக்கியமான கண்ணனின் குழலோசையாகின்ற வலையிலே கட்டுப்பட்டு விடுகின்றனர். அவர்கள் தம்முடைய கலைச் செருக்கெல்லாம் மறந்தொழிகின்றது. "இதுகாறும் நாமும் சிறிதும் வெட்கமின்றிப் பாடித் திரிந்தோமே!" என்று மனம் நைந்து, "இனி இசைக் கருவிகளையே கையினால் தீண்டோம்" என்று சங்கற்பம் செய்து கொள்ளுகின்றனர் (3.6:6). இது வேறோர் காட்சி.

கண்ணன் குழலோசையைக் கேட்ட தேவர்களும் அவர்களின் தேவியரும்,

**செவியு ணாவின் சுவைகொண்டு மகிழ்ந்து**
**கோவிந்த னைத்தொடர்ந் தென்றும் விடாரே!**

என்று காட்டும் ஆழ்வார்,

புவியுள்நான் கண்டதோர்
அற்புதம் கேளீர்! (3.6:7)

என்று சொல்லி ஒரே வலையில் விண்ணும் மண்ணும் கட்டுண்டு கிடக்கும் அற்புதத்தை விளங்க வைக்க முயலு கின்றார். நாமும் நம் மனத்திரையில் வானோர் யாவரும் ஆய்ப்பாடியில் வந்து திரண்டிருப்பதையும் கூட்டத்தின் மிகுதியால் ஒருவரையொருவர் நெருக்கிக் கொண்டு நின்று அக்குழலோசையைத் தம் செவிகளால் பருகிய வண்ணம் அக்கண்ணபிரான் செல்லும் இடங்களுக்கெல்லாம் தாமும் பின் தொடர்ந்து அவனை நொடிப் பொழுதும் விட்டகலாமல் இருப்பதைக் கண்டு மகிழ்கின்றோம். இதுவும் ஓர் அரிய காட்சி. இப்பாசுரத்திற்கு, ''செவிக்கு நாவுண்டோ என்னில்: 'செவியுணா நீட்ட' என்னக் கடவதிறே; சேதந மாதியாலே சொல்லுகிறது; அன்றிக்கே, செவிக்கு உணவாயிருந்துள்ள இனிதான கானரசத்தைப் புசித்து என்னவுமாம்; 'செவிக் குணவு இல்லாத போழ்து' (குறள்-412) என்றானிறே'' என்ற சீயர் உரையும் சுவைத்து மகிழத்தக்கது.

கண்ணனின் கானமிழ்தம் தம் செவியில் பட்டதும் நிலைத்திணைகளும் இயங்கு திணைகளும் பெருமாற்றங் களை அடைகின்றன. கோவிந்தன் குழலூதிக் கொண்டு நிற்கும் பக்கங்கள் பல. அந்த இசையைக் கேட்டவுடனேயே ஒரு பக்கத்தில் மரங்கள் மகரந்த தாரைகளைப் பெருக்கு கின்றன; வேறொரு பக்கத்தில் மலர் மாரிகளைப் பெய்கின்றன; வேறொரு பக்கத்தில் அவை கிளைகளைத் தாழ்த்தி நிழலை விளைவிக்கின்றன; தம்மில் தாமே உருகியும் நிற்கின்றன; அஞ்சலி பண்ணுவதுபோலக் கொம்புகளைக் கூப்பா நிற்கின்றன. அவன் நிற்கும் பக்கங் களையெல்லாம் நோக்கி இங்ஙனம் வழிபாடுகள் நடத்து கின்றன.

**மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்;**
**மலர்கள் வீழும்; வளர்கொம்புகள் தாழும்;**
**இரங்கும்; கூம்பும்; திருமால் நிற்கின்ற**
**பக்கம் நோக்கி அவைசெய்யும் குணமே (3.6:10)**

*[மது-தேன்; கூம்பும்-குவிக்கும்.]*

என்று பேசுவார் ஆழ்வார். இது மற்றோர் காட்சி.

குழலிசையினைக் கேட்ட பறவைகளின் செயல்கள் இவை: பறவைகள் தாம் இருக்கும் கூடுகளை விட்டோடி வந்து, காட்டில் வெட்டி வீழ்த்தப் பெற்ற கிளைகள் போல் ஆடாது அசையாது நிலத்தில் விழுந்துகிடக்கின்றன. அங்ஙனமே வயிறார மேய்ந்து விட்டு வந்த பல பசுக் கூட்டங்களும்மெய் மறந்து கால்களைப் பரப்பிக் கொண்டும் தலையைத் தொங்க விட்டுக் கொண்டும் உணர்வற்ற பொருள்கள் போல் திகைத்து நிற்கின்றன. செவியையும் அசைக்க முடியவில்லை; அசைத்தால்கூட இசையை அநுபவிப்பதற்குத் தடையாகும் என்ற எண்ணம் போலும்!

**பறவையின் கணங்கள் கூடு துறந்து**
**வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்**
**கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்**
**கவிழ்ந்து இறங்கிச் செவிஆட்ட கில்லாவே (3.6:8)**

*[கணங்கள்-கூட்டங்கள்; படுகாடு-வெட்டி விழுந்த காடுகள்; கறவை-பசுக்கள்; கவிழ்ந்து-தொங்க விட்டு.]*

என்று பேசுவர் ஆழ்வார். இப்படியும் ஒரு காட்சி.

காளமேகம் போல நின்று கான மழையைப் பொழி கின்றான் கண்ணன். சிவந்து மலர்ந்த தாமரைப் பூவை வண்டுகள் சூழ்ந்து கொண்டன போல், தலைமயிர் இருண்டு சுருண்டு விளங்குகின்றது. இந்த முகமலரிலிருந்து குழலின் வழியாகப் பெருகி வரும் கீதம் இன்னும் எப்படிப்பட்ட விநோதமான சுவைஞர்களை அழைத்து வருகின்றது பாருங்கள்:

திரண்டெ ழுதழை மழைமுகில் வண்ணன்
செங்கமல மலர்சூழ் வண்டினம் போலே
சுருண்டிருண்ட குழல் தாழ்ந்த முகத்தான்
ஊது கின்ற குழலோசை வழியே,
மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்தபுல் லும்கடை வாய்வழி சோர
இரண்டுபா டும்துலுங் காப்புடைப் பெயரா
எழுதுசித் திரங்கள் போலநின் றனவே! (3.6:9)

[முகில்-மேகம்; மலம்-தாமரை; மான்கணங்கள்-மான் கூட்டங்கள்; மருண்டு-அறிவழிந்து; இரண்டு பாடும்-முன்னும் பின்னும்; துலுங்கா-அசையாமல்]

மனிதர் காட்டு வழியில் அகப்பட்டுக் கள்ளர் கையில் அடியுண்டு அறிவழியப் பெறுதல் போல், மான் கணங்கள் இக்குழலோசையாகின்ற வலை வைத்த வழியிலே அகப்பட்டு சுவையநுபவத்தினால் மெய் மறந்து அறிவழிந்து போகின்றன; மென்று தின்பதற்காக வாயில் கவ்வியிருந்த புற்களும் உறங்குகின்றவன் வாய்ப்பண்டம் போல் தன்னடைவே கடைவாய் வழியாக வெளியில் நழுவி விழுகின்றன; அதுவுமின்றி, நின்றவிடத்தில் நின்றும் ஒரு மயிரிழையளவும் அசைய மாட்டாமலும் திகைத்து நிற்கின்றன. இப்படி ஒரு காட்சி.

விருந்தாவனம் எங்கும் செவிகளாய்க் கண்ணனின் வேணுகானத்தை கேட்டுக் கொண்டுள்ளது. எங்கும் கண்களாய் அவனது அழகைப் பருகிக் கொண்டுள்ளது. அந்த அழகும் குணமும் கீதமாக ஓடி இயற்கை எல்லாவற்றையும் தன் வயமாக்கி விடுகின்றன! "நாக்கின் சுவையைச் செவியிலே பிறப்பித்துப் பகுத்தறிவில்லாத பிராணிகளையும் வசீகரித்து விடுகின்றது. உயிர்க் குலத்தைச் 'சகோதர தர்மம்' என்னும் தெய்வீக பாசத்தால் பிணித்து விடுகின்றது அன்புக் கண்ணனது அருட்கீதம். சராசரங்களையெல்லாம் ஒருங்கே தழுவி அருள் செய்

கின்றது. பரலோகத்தையும் இந்த இகலோகத்திலே கொண்டு வந்து விடுகின்றது; மறுமையிலுள்ள பேரின்பத்தையும் இம்மை இன்பமாகக் காட்டி விடுகின்றது. இந்த அற்புதத்தில் வேற்றுமைகள் யாவும் மறைந்தொழிகின்றன. வேற்றுமைகளிலும் ஒற்றுமையை உணர்த்தி விடுகின்றது" என்று விஷ்ணுசித்தர் உபதேசிப்பது நம் சிந்தனைக்கு விருந்தாக அமைந்து விடுகின்றது.

கண்ணன் தரிசனமளிக்கும் கோலங்களில் மூன்று பக்தர்களின் உள்ளங்களைச் சிறப்பாகக் கவருகின்றன. ஆயர்பாடிச் சிறுவனாக வருவது ஒன்று; பசுக்களுக்கும் இடைப்பெண்களுக்கும் தோழனாகத் தோன்றுவது மற்றொன்று; வேணுகோபாலனாகத் தோற்றமளிப்பது பிறிதொன்று. இந்த மூன்று கோலங்களையும் பெரியாழ்வார் நேர்காட்சிகளாக அநுபவித்து மகிழ்பவர். ஆயினும் இசையுலகின் அதிசயமான தத்துவங்களோடு வேதாந்தத்தின் பெரிய பெரிய தத்துவங்களும், சரித்திர முடிவுகளான சித்தாந்தங்களோடு பல்வேறு கலைகளின் பொருளும், கவிஞர்களின் புதிய புதிய கனவுகளும், வேணுகோபாலனின் குழலிசையிலே, விதையில் அடங்கிய ஆலமரம் போல, அடங்கியுள்ளன என்பது கண்ணன் அடியார்களின் கொள்கையாக மலர்ந்துள்ளது என்று கருதலாமல்லவா?

# 10. அர்ச்சாவதார அநுபவம்

அர்ச்சாவதாரம் என்பது அன்பர்கள் எதைத் தனக்குத் திருமேனியாகக் கொள்ளுகின்றனரோ அதனையே இறைவன் தனக்கு வடிவமாகக் கொண்ட நிலையாகும். இந்த அவதாரம் தொலைவினால் மனத்திற்கும் எட்டாத பரமபதம் திருப்பாற்கடல்கள் போன்றும், தற்போது சேர்ந்து இன்பந் துய்த்தற்கியலாத இராமகிருஷ்ண அவதாரங்கள் போன்றும் அல்லாமல் எப்போதும் நம் அருகில் நிலைபெற்றுக் கண்ணால் கண்டு களிப்பதற்கு இடந்தரும் இறைவனின் நிலையாகும். இதனை,

> 'பூகத ஜலம் போலே அந்தர் யாமித்வம்; ஆவரண ஜலம் போலே பரத்துவம்; பாற்கடல் போலே வியூகம்; பெருக்காறு போலே விபவம்; அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவ தாரம்' [1]
>
> [பூகதம் - பூமிக்குள் இருக்கின்ற; ஆவரணம் - மூடிக் கொண்டிருப்பது]

என்று ஸ்ரீவசன பூஷணம் விளக்கும்.

பகவான் நம் இதயத்திலேயே இருப்பினும், அவனைப் பற்ற வேண்டும் என்று விருப்பமுண்டாகில் அந்த இருப்பு (அந்தர்யாமித்துவம்) கட்புலனுக்குத் தோன்றாமையின் பயன்பட்டிலது; நீர்வேட்கையுற்றவன், மிகத் தொலைவு

1. ஸ்ரீவச. பூஷ. 42 (புருடோத்தமநாயுடு பதிப்பு).

சென்று பருகாதவாறு தான் நிற்கும் நிலத்தின் அருகிலேயே நீர் இருப்பினும் அந்நீர் அவ்வமயம் பருகுவதற்குப் பயன் படாதது போன்றுள்ளது. லீலா விபூதியைக் கடந்து இருக்கும் பரமபதம் இவ்வண்டத்துக்குப் புறம்பே இருக்கும் ஆவரண நீர் போன்றுள்ளது. இவ்வண்டத்திலேயே இருக்கும் வியூகம் ஒருவராலும் காண முடியாத பாற்கடல் போன்றுள்ளது. அவ்வக் காலங்களில் தோன்றி மறையும் அவதாரங்கள் (விபவம்) அச் சமயத்தில் உள்ளவர்க் கல்லாமல், பிற்காலத்தவர்கட்குப் பயன்படாத பெருக்காறு போன்றுள்ளது. அர்ச்சாவதாரமோ, இவற்றைப் போன்றல் லாமல், கால தேசங்களின் வேறுபாடில்லாமல், சந்நிதி களிலும் இல்லங்களிலும் என்றும் ஒருபடித்தாய், யாவருடைய கண்களுக்கும் புலனாகுமாறு காட்சியளித்துக் கொண்டு, நீர்விடாய் கொண்டவன், அவ்விடாய் தணியு மாறு பருகுவதற்கேற்பப் பெருக்காற்றில் தேங்கிய மடுக்கள் போன்றுள்ளது. ஆதலின், இவற்றுள் அர்ச்சாவதாரமே சேதநருக்கு நலம் அளிப்பது என்றாகின்றது.

**'சௌலப்பியத்திற்கு எல்லை**
**நிலம் அர்ச்சாவதாரம்'** [2]

என்று பேசும் முமுட்சுப் படியும். சௌலப்பியம் என்பது எளியனாக இருக்கும் இருப்பு. இது கண்ணுக்கு விஷயமா காதிருக்கும் ஈசுவரன், தன் திவ்விய மங்கள விக்கிரகத்தை, சேதநன் தன் கண்களாலே பற்றுதற்கேற்ப எளியனாக இருத்தலாகும்.

எல்லா ஆழ்வார்களும் இந்த அர்ச்சாவதாரத்தில்தான் அதிகமாக ஈடுபட்டுப் பேசுவர். சுருங்கக் கூறினால் நாலாயிரத்தின் பாசுரங்கள் யாவும் இந்த அர்ச்சாவ தாரத்தைப் பற்றியனவேயாகும். இந்த அவதாரத்தை மங்களா சாசனம் செய்வதற்காகவே அவதரித்த திருமங்கை ஆழ்வார் நூற்றெட்டு திவ்விய தேசங்களில் வடக்கே

2. முமுட்சு - 139.

வதரியிலிருந்து தெற்கே திருக்குறுங்குடி வரையிலுள்ள எண்பத்தாறு திவ்விய தேசங்களில் சேவை சாதிக்கும் எம்பெருமான்களின்மீது பாடியுள்ளார். இவற்றுள் பெரியாழ்வார் சில திவ்விய தேசங்களை முழுப் பதிகங்களாலும் சிலவற்றை உதிரிப் பாசுரங்களாலும் மங்களாசாசனம் செய்துள்ளார். இவற்றைக் காண்போம்.

**முழுப் பதிகங்கள் :** இந்த ஆழ்வார் முழுப் பதிகங்களாக மங்களா சாசனம் செய்துள்ளவை : 1. திருக்கோட்டியூர், 2. திருவெள்ளறை, 3. திருமாலிருஞ்சோலை, 4. திருவரங்கம், 5. கண்டம் என்னும் திருப்பதி ஆகியவையாகும். இவற்றை ஒவ்வொன்றாக அநுபவிப்போம்.

**1. திருக்கோட்டியூர்* :** இத் திவ்விய தேசம் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள சிற்றூர். இந்த ஊர் எம்பெருமான் இரண்டு பதிகங்களால் (1.2; 4.4) மங்களா சாசனம் செய்யப் பெற்றுள்ளார். முதல் பத்து இரண்டாவது திருமொழி (1.2) திருக்கோட்டியூர் பற்றியது என்பதை,

**செங்நெல் ஆர்வயல் சூழ்திருக் கோட்டியூர்**
**மன்னு நாரணன் நம்பி பிறந்தமை**
**மின்னு நூல்விட்டு சித்தன் விரித்தமை**
**பன்னு பாடல்வல் லார்க்குஇல்லை பாவமே (1.2:10)**

என்ற பல சுருதிப் பாசுரத்தால் தெளிவாகும். இந்த ஊர் எம்பெருமான் செளமிய நாராயணனைச் சேவிக்கும் போது அவன் கண்ணனாகக் காட்சியளிக்க, ஆழ்வார் உடனே அந்த அவதார சேஷ்டிதங்களில் ஈடுபட்டுப் பாசுரங்கள் அருளிச் செய்து இனியராகின்றார்.

இத் திவ்விய தேசத்தில் மூன்று தளத்தில் எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ளனர். முதல் தளத்தில்

---

* 1965 - செப்டம்பரில் சேவித்தது (என் இளைய மகனுடன்).

எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருப்பாற்கடல் நாதன்; இவர் சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றார். இவர் பள்ளி கொண்டிருக்கும் பாற்கடல் வெண்மை நிறமுடையது. அதன் மீது அவருக்குப் படுக்கையாக இருக்கும் ஐந்து தலை அனந்தன் தங்க நிறமுடையவன். அரவணையின்மீது அறிதுயில் கொண்டிருப்பவர் நீலமணி போன்றவர். இவர் தேவர்களின் நடுவிலிருந்ததால் 'ஸ்தித நாராயணன்' என்ற திருநாமத்தால் வழங்கப் பெறுவர். அனந்தன்மீது சயனித்திருப்பதால் இவரைப் பெரியாழ்வார் 'உரக மெல்லணையான்' என்று மங்களா சாசனம் செய்கின்றார்.

**உரகமெல்லணை யான்கையிலுறை**
**சங்கம்போல்மட அன்னங்கள்**
**நிரைகணம்பரந் தேறும்செங்கம**
**லவயல்திருக் கோட்டியூர்**
**நரகநாசனை நாவிற்கொண்டழை—**
**யாதமானிட சாதியர்**
**பருகும்நீரும் உடுக்கும்கூறையும்**
**பாவஞ்செய்தன தாங்கொலோ** (4.4:4)

[உரகம் - பாம்பு; நிரைகணம் - திரளான கூட்டம்; பரந்து - பரவி; நரகநாசன் - எம்பெருமான்; கூறை - ஆடை]

என்பது பாசுரம். இவர் மூலவர். உற்சவர் — திருவிழா நாயகர் — சௌமிய நாராயணன். இவருக்கு மாதவன் என்ற திருநாமமும் உண்டு. நித்திய உற்சவர் குளிர்ந்துறை கோவிந்தன்[4] என்பது ஆழ்வாரின் மங்களாசாசனம். நரகநாசன்[5] என்று மங்களாசாசனம் செய்யப் பெற்றவரே பலிபேரர் (வேள்வி மூர்த்தி).

4. பெரியாழ். திரு. 4.4:8
5. ஷை. 4.4:9

நடுத்தளத்தில் இருப்பவர் நின்ற நாராயணன்; இவர் பெரிய பிராட்டியாருடனும் பூமிப்பிராட்டியாருடனும் சேவை சாதிக்கின்றார். இப்பெருமான் நின்றநம்பி என்றும் உபேந்திரன் என்றும் திருநாமம் பெறுவர். இந்தத் தளம் இந்திரலோகம். இந்தத் தளத்தில் மூலைக்கு இரண்டாக எட்டு விமானங்களின் உட்கூடும் காணப்பெறுகின்றது. மேல்தளம் பரமபதம் என்ற திருநாமம் பெறுகின்றது. இங்கு, பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் இருபுறமும் இருக்கும் நிலையில் பரமபதநாதன் வீற்றிருக்கும் திருக் கோலத்தில் சேவை சாதிக்கின்றார்.

2. **திருவெள்ளறை***: இது திருச்சி — துறையூர் நெடுஞ் சாலையில் உள்ளது. சாலையிலிருந்து திருவெள்ளறைக்கு ஒரு கிளைச்சாலை உள்ளது; கைகாட்டியும் வழிகாட்டி நிற்கின்றது. ஒன்றரை கி. மீ. தொலைவு நடந்து சென்றால் இத் திருத்தலத்தை அடையலாம். திருக்கோயில் சுமார் 100 அடி உயரமுள்ள ஒரு சிறு குன்றின் மீதுள்ளது. வெள்ளறை — வெண்மையான பாறைகளாலியன்ற மலை. (அறை — பாறை). இத் திருத்தலம் உய்யக் கொண்டார், எங்களாழ்வான் இவர்களின் பிறப்பிடம். பெரியாழ்வார் ஒரு திருமொழியால் (2·8) மங்களாசாசனம் செய்துள்ளார்.

இந்தத் திருத்தலத்தில் அர்ச்சையாய் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானைக் குழந்தைக் கண்ணனாகப் பாவித்து யசோதைப் பிராட்டி அக்குழந்தையை நீராட்டிக் குழல்வாரிப் பூச்சூட்டின பிறகு அவனுக்குப் பிறர் கண் ணெச்சில் வாராதபடி காப்பிடக் கருதியவள் அவனை அந்தி வேளையில் காப்பிட்ட படியை ஆழ்வாரும் அநுபவிக்க எண்ணி தம்மை அப்பிராட்டியாகப் பாவித்து அவள்

---

* 1965 - செப்டம்பரில் என் இளைய மகன் எஸ். இராமகிருஷ்ணனுடன் (இப்போது டாக்டர் இராம கிருஷ்ணன் M. D. ஆக கேரளத்தில் பந்தளம் என்ற இடத்தில் பணியாற்றுபவன்) சே த்தது.

பேச்சாலே அவனைக் காப்பிட அழைத்து இனியரா கின்றார். ''இந்திரன், நான்முகன், சிவன் மற்றுமுள்ள தேவர்கள் மந்திரமாமலர் கொண்டு மறைந்து நிற்கின் றனர்'' இதுவே அந்தி வேளையாகும் (1); நான் உன்னைக் கூவி அழைப்பதால் பசுக்கள் எல்லாம் கன்றுகள் இருக்கு மிடத்தில் வந்து கறப்பாரின்றிக் கத்துகின்றன; அந்தி வேளையில் நாற்சந்தியில் நில்லாதே (2); மகளிர் அட்டசிறு சோற்றையும் கட்டின மணல் வீட்டையும் அழித்திட்ட போது உன்னை அதட்டினேன்; இப்போது ஒன்றும் செய்யேன் (3); நீ கண்ணில் மண்ணைத் தூவி உடைத்தாய் என்று எண்ணற்ற பிள்ளைகள் முறையிடுகின்றனர்; ஆதலால் நீ அங்குப் போகாமல் இங்கு வா (4); இவ்வூரில் தீம்பு செய்யும் பிள்ளைகள் எண்ணற்றவர்கள். அவர்கள் செய்யும் தீம்புகளை உன்மேல் ஏற்றிச் சொல்லு கின்றனர்; ஆதலால் அவர்களிடம் செல்லாமல் இங்கே வா (5); கஞ்சன் உன்னைக் கொல்லுவதற்குக் கருநிற செம்மயிர்ப் பூதனையை அனுப்பிய செய்தியை எல்லோரும் அறிவர்; அவன் வேறு யாரையாவது உன் மீது ஏவக்கூடும்; ஆதலால் நீ அங்கு நிற்பதற்கு அஞ்சுகின்றேன் (6); பார்த்தால் சிறுவன் போலுள்ளாய்; நீ செய்யும் செயலோ மனிதர்களால் செய்ய முடியாதவை; உனது உண்மையான சொரூபத்தை என்னால் அறியக் கூடவில்லை; இப்போது படுத்து உறங்கும் நேரம் (7); செல்வனே, நீ இருக்கின்ற இடம் கண்டார்க்கு நடுக்கத்தை விளைவிக்கவல்ல துர்க்கையின் இருப்பிடமாகும்; ஆகவே நீ அங்கு நில்லாமல் விரைந்தோடி வா (8); நீ நாற்சந்தியில் செருக்குடன் விளையாடித் திரிதல் கூடாது. அது துட்ட தேவதைகள் வசிக்கும் இடம்; நான் சொல்வதைச் சிலகாலமாவது கேள் (9); உனக்குக் காப்பிட அந்தி விளக்கு ஏற்றுகின்றேன். நீ அவ்விடத்தை விட்டுக் கடுக ஓடிவருவாயாக'' என்று வேண்டுகின்றார் ஆழ்வார்.

3. **திருமாலிருஞ் சோலைமலை:*** மதுரையிலிருந்து வடக்கே 12 கல் தொலைவிலிருக்கும் **அழகர் கோயில்** என வழங்கும் திருத்தலமே இந்தத் திவ்விய தேசமாகும். திருக்கோயிலுக்கு முன்னதாக ஒரு சோலை சூழ்ந்துள்ளது. இந்தச் சோலைக்கு வடக்கிலும் மேற்கிலும் நீண்டுயர்ந்த மலைச் சிகரங்கள் இருப்பதையும் சோலையும் மரங்கள் அடர்ந்து இருண்டு இருப்பதையும் காணமுடிகின்றது. இந்தச் சோலையின் நடுவில்தான் திருக்கோயில் உள்ளது. இந்தத் திவ்விய தேசத்தைப் பெரியாழ்வார் மூன்று திருமொழிகளால் மங்களாசாசனம் செய்துள்ளார். (4.2; 4·3; 5·3;) திவ்விய தேசத்துக்கு வந்ததும் புறச் சூழ்நிலை,

**குலமலை கோலமலை**
**குளிர்மா மலை கொற்றமலை**
**நிலமலை நீண்டமலை**
**திருமாலிருஞ் சோலை யதே (4.3:5)**

[குலம்-தொண்டக்குலம்; கோலம்-அழகு; மா-பெரிய; கொற்றம்-வெற்றி; நிலம்-மரம் முளைக்கப் பாங்கான நிலம்]

என்ற பெரியாழ்வார் பாசுரத்தை நினைக்கச் செய்கின்றது.

இனி, திருமொழிகளில் ஆழங்கால் படுவோம். இந்த மலையில் சிலம்பாறு பாய்கின்றது. கோயிலுக்கு வடபுறமாகவுள்ள வழியில் இரண்டு கல் தொலைவில் உள்ளது இந்த ஆறு; 'நூபுரகங்கை' என்பது இதன் வடமொழிப் பெயர் நூபுரம் — சிலம்பு. இதன் உற்பத்தி நம் கண்ணுக்குப் புலனாவதில்லை. யானைத் துதிக்கைபோல் அமைந்திருக்கும் கோமுகியின் வழியாக மாதவி மண்டபத்துக்கு வருவதுதான் நம் கண்ணில் படுகின்றது. இந்தத் தீர்த்தத்தில் அயச் சத்தும் தாமிரச் சத்தும் இருப்பதாகவும்

---

* 1948-மே, 1965-செப்டம்பர், 1969-ஜூன் — சேவித்தது.

இதில் நீராடுபவர்க்குத் தீராத நோய்கள் எல்லாம் தீருவதாகவும் சொல்லுகின்றனர். திருமால் உலகளந்த காலத்தில் திரிவிக்கிரமனின் திருவடி சத்தியலோகத்தை எட்டினபொழுது நான்முகன் தன் கைக் கமண்டலத் தீர்த்தத்தால் கழுவி விளக்கியதாகவும், அந்த எம்பெருமானின் காற்சிலம்பினின்று தோன்றியதனால் 'சிலம்பாறு' என்று பெயர் பெற்றதாகவும் புராண வரலாறு வழங்கி வருகின்றது.

இவ்விடத்தில் திருக்கண்ணபுரம் சுவாமி என்ற ஒரு வைணவப் பெரியார் 'சிலம்பாறு' என்பதற்கு சுவையாகப் பணித்த விளக்கமும் நம் நினைவிற்கு வருகின்றது. 'சிலம்பொலி ஞெகிழி குன்றாம்' என்ற சூளாமணி நிகண்டின்படி 'சிலம்பு' என்ற சொல் குன்றினையும் குறிக்கும். கின்னர மகளிர் திருமாலிருஞ் சோலைத் தாழ்வரையில் வந்து தங்கி நம்மாழ்வாரது திருவாய் மொழிப் பாசுரங்களை இசையுடன் ஓதினதாகவும் 'மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ' என்று கூவின ஆழ்வாரது பாசுரங்களைச் செவிமடுத்த குன்றும், உருகிப் பெருகாநிற்கும் என்றும், அங்ஙனம் குன்றே உருகிப் பெருகினமையால் அது 'சிலம்பாறு' என்று பெயர் பெற்றதாகவும் கூறுவர். பெரியாழ்வாரின்,

> **சிலம்பார்க்க வந்து தெய்வ**
> **மகளிர்கள் ஆடும்சீர்ச்**
> **சிலம்பாறு பாயும் தென்திரு**
> **மாலிருஞ் சோலையே (4.2:1)**

என்ற பாசுரப் பகுதியே இப்பெரியாரை இங்ஙனம் நினைக்கத் தூண்டியிருக்க வேண்டும்.

'சிலம்பாறு' என்ற இந்த ஆறு திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுந்தரராசனின் திருவடிகளை வருடிக் கொண்டு பாய்ந்து பெருகி வயல்களை வளப்படுத்தும் காட்சி அநுபவிக்கத்தக்கது. நீரின் சுவை இனிமையாக

இருப்பதால் இந்த ஆற்றைத் 'தேனருவி' என்று மக்கள் பெயரிட்டு வழங்குகின்றனர். மக்கள் மனக் கருத்தையே பிரதிபலிப்பதைப் போல் பெரியாழ்வாரும்,

வான்நாட்டி னின்றும் மாமலர்க்
கற்பகத் தொத்துஇழி
தேன்ஆறு பாயும் தென்திரு
மாலிருஞ் சோலையே (4.2:4.)

[வான்நாடு-உம்பர் உலகு; தொத்து-கொத்து; இழி-பெருகும்]

என்று பாடியுள்ளமை நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த மலையிலிருந்தபடியே பெரியாழ்வாரின் திரு மொழிகள் இரண்டையும் (4.2; 4.3) வாய் வெருவப் பாடி பாடிப் பாசுரங்களின் சுவையிலும் நாம் நேரில் காணும் காட்சியிலும் ஆழங்கால் பட்டு ஆனந்தம் அடைய முடிகின்றது.

மலையின் இயற்கைக் காட்சியில் ஈடுபட்டுள்ள நம் மனம்,

அறுகால் வரிவண்டுகள் ஆயிர
நாமம் சொல்லிச்
சிறுகாலைப் பாடும் தென்திரு
மாலிருஞ் சோலையே (4.2:8)

என்ற பாசுரப் பகுதியை எண்ணுகின்றது. மலையருவிகள் சந்தனக் கட்டைகளையும் இரத்தினக் கற்களையும் உருட்டிக் கொண்டு வருவதைப் பெரியாழ்வாரின்,

ஈட்டிய பல்பொருள்கள்
எம்பிரானுக்கு அடியுறைஎன்று
ஓட்டருந் தண்சிலம்பா
றுடைமாலிருஞ் சோலையதே (4.3:9)

[ஓட்டரும்-ஓடிவாரா நின்ற]

என்ற பாசுரப்பகுதியை நினைவுகூரச் செய்கின்றது. இவருடைய அருமைத் திருமகளாரும்,

**சந்தொடு காரகிலும் சுமந்து**
**தடங்கள் பொருது**
**வந்திழி யும்சிலம் பாறுஉடை**
**மாலிருஞ் சோலை (நாச். திரு 9:10)**

*[சந்து-சந்தனக் கட்டை; கார் அகில்-அகிற்கட்டை; தடங்கள்-குளங்கள்; பொருது-அழித்து; இழியும்--பெருகும்]*

*என்று குறிப்பிடுவதும் நம் எண்ணத்தில் முகிழ்த்து நம்மை மகிழ்விக்கின்றது.*

*பொதுவாக ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் முதல் இரண்டு அடிகளில் எம்பெருமானின் பெருமையையும் இறுதி இரண்டு அடிகளில் திவ்வியதேசத்தின் வளங்களையும் எடுத்துரைப்பது மரபாக இருந்து வருகின்றது. பெரியாழ்வாரும் இந்த மரபையொட்டியே திருமொழிகளை அமைக்கின்றார். முதலில் திருமாலிருஞ் சோலைபற்றிய முதல் திருமொழியை (4,2) நோக்குவோம். முதலில் திவ்விய தேசத்தின் வளங்களைக் காண்போம். தேவ மாதர்கள் தங்கள் பாதச் சிலம்புகள் ஒலிக்கும்படி அன்ன நடை நடந்து வந்து சோலைமலையின் நூபுரகங்கையில் நீராடுவர் (1). சோலைமலையில் எல்லா இடங்களிலும் மங்களாசாசன ஒலி பரவி நிற்கும் (2). எப்போதும் போய் எம்பெருமானின் திருவடிகளை வணங்கும் திருமாலடியார்களின் பாவக்காட்டு வழியை விலக்கும் (3). உம்பர் உலகில் கற்பகத்தருவின் பூங்கொத்தில் பெருகு தேன் சோலைமலையில் ஆறாக ஓடும் (4). ஊடல் கொண்டு பெண்யானை ஓடத்தொடங்க அது கண்ட ஆண்யானை வேறு உபாயங்களால் நிறுத்த முடியாமல், 'கடல் வண்ணன் மீது ஆணை' என்று சொல்ல அப்பேடை அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டு ஓடுவதை நிறுத்திக் கொள்ளும் (5). நான்முகன் முதலிய தேவர்களும் சனகர் முதலிய முனிவர்களும் ஆபத்துக் காலத்தில் ஆணையாயிருக்குமென்று கருதி சேவித்துக் கொண்டு தங்கும் மலை (6). நான் மாடக்*

கூடலுக்குத் தலைவனான மாறனால் கொண்டாடப் பெற்ற மலை (7). அறுகால் சிறுவண்டுகள் அதிகாலையில் அழகரின் ஆயிரம் திருநாமங்களை ஆளத்தி வைத்துப் பாடும் இடம் (8). எம்பெருமானின் திருப்பவளத்திற் கொப்பாக கண்டவிடமெங்கும் சிதறிப் பறக்கப் பெற்ற தாழ்வரையையுடையது இம்மலை (9). கண்டபடி திரியும் பெண்யானைகள் இரவில் ஆண்யானைகளுடன் புணர்ந்து களித்துத் திரியும் மலை (10).

இம்மலையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? பிராணிகளை அலைக்கழித்தும் அவற்றை அஞ்சும்படி செய்தும் கொன்றும் திரிந்து கொண் டிருந்த அரக்கர்களை பூண்டோடு அழியும்படி செய்த இட்சுவாகு வமிசத்துக்கு விளக்காய் நிற்கும் பெருமாள் (1). வலிய ஆண்மையுடையவனும் சங்கரனிடம் வாளைப் பெற்றவனுமான இராவணனுடைய தலைகளையும் அவனு டைய தங்கை சூர்ப்பணகையின் மூக்கையும் அறுப்புண்டு போகச் செய்தவன் (2). கருணையில் எம்பெருமானை ஒத்தவர்களும் அவனிலும் மேம்பட்டவர்களுமான மகாத் மாக்களை வருத்தும் கொடியவர்களை எமபுரிக்கு அனுப்பு கின்றவன் (3). ஆண்டுதோறும் இடையர்கள் கூடி இந்திர னுக்கு எடுக்கும் விழாவை அவனுக்குச் சேரவொட்டாமல் கோவர்த்தன மலைக்குச் சேரும்படி செய்த வித்தகன் (4). பொய்கைக் கரையில் கஜேந்திராழ்வானின் கைங் கரியத்தை ஏற்றவன்; கம்சனுடைய குவலாயாபீடம் என்ற யானையை முடித்தவன் (5). கம்சன் ஏவின சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களை நொறுக்கித் தள்ளியவன். கூனியிட்ட சாந்தை அணிந்து கொண்ட திருத் தோள்களையுடையவன் (6). குருநாட்டு மன்னர்கள் குழம்பும்படிப் பாண்டவர்கட்குத் துணையாகத் தேரோட்டி நீர் நரம்பில்விட்ட வருணக்கணை வழியே உண்டான நீரைக் குமிழி யெழச் செய்து குதிரைகட்கு நீரூட்டிப் புரட்டி எழுப்பிக்கொண்டு சென்ற வித்தகன் (7).

திருமலையை அணுகாத அரசர்களை கடும்வெயில் காயும் காட்டில் சிற்றடி வழியாக ஓட்டி வெற்றி கண்டவன் (8). நாத்திகர்களைக் கண்டால் அவர்களின் உறுப்புகள் சிதறும்படி அடித்துக் கொன்று அவர்களின் உடலினின்று புறப்படும் சிவந்த குருதியைக் கொண்டு மாலை நேரத்தில் எம்பெருமானுக்கு ஆராதனமாகச் சமர்ப்பிக்கும் வைணவ பூதங்கள் சேவிக்கும் இடம்; எம்பெருமானும் எழுந்தருளி யிருக்கும் இடம் (9). எண்ணிலடங்காத தேவிமார்கள் எட்டுத் திக்குகளிலும் திகழ அவர்களின் நடுவே பெருமை தோற்ற எழுந்தருளியவன் (கண்ணபிரான்) (10).

அடுத்த திருமொழியும் (4.3) இத்தகைய வார்ப்பிலே அமைந்தது. சோலை மலை எப்படிப்பட்டது? திரு மாலிருஞ் சோலை மலையிலுள்ள கொன்றை மரங்கள் நரம்பும் இதழுமாகப் பூக்களைச் சொரிகின்றமை முறிந்த பொன் மோதிரங்களையும் பொற்காசுகளையும் வாரி வழங்கும் வள்ளல்கள் போன்றவை (1). மலையிலுள்ள மலைப்பாம்பு முழுமதியத்தைப் பார்த்து அதனைத் தனக்கு நல்ல உணவாகக் கருதிப் படமெடுத்துக் கிளர்ந்து கிட்டிச் சிவந்த ஒளியையுடைய சிவந்த நாக்கினால் அளையும் (மலையின் உயர்ச்சியைக் காட்டியவாறு) (2). புன்னை, சுரபுன்னை, வேங்கை, கோங்கு மரங்கள் மலர்களால் நிறைந்து ஒழுங்குபட நின்று அந்த மலைக்குப் பொன்னரி மாலைகள் சுற்றினாற் போலே இருக்கும் (3). குறமாதர்கள் இடையர்களுக்குள் கோவிந்த நாமம் பெற்றவனைக் குறிஞ்சிப் பண்ணோடு கூடின பாட்டுகளை இசையுடன் பாடிக் கூத்தாடுவர் (4). பாடுவதற்காகப் பிறந்த வண்டுத் திரள்கள் பண்கள் பாடிக் கொண்டு தேனைப் பருகுவதற்குப் பாங்காகச் சோலைகள் வாடாமல் வரை ஊற்றுகளையுடையது (6). பொன்களைக் கொழித்துக் கொண்டு வரும் தெளிந்த அருவிகளில் மக்கள் திரள் திரளாக வந்து சூழ்ந்து கொண்டு நீராடுவர் (7). தேவர்களும் அவர்களின் தலைவனான இந்திரனும்,

இரவும் பகலும் திரியும் சந்திர சூரியர்களும் வலம் வந்து கொண்டிருப்பர் (8). பல்லாயிரம் சுனைகளும் பல்லா யிரம் தடாகங்களும் பல்லாயிரம் பூஞ்சோலைகளும் நிறைந்தது (10).

இந்த மலையில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? உருக்குமிணிப் பிராட்டியைத் தன் தேரில் கொண்டு போகும்போது அத்தேரைத் தொடர்ந்து ஓடி உருக்குமன் என்பவனை எட்டிப் பிடித்துத் தேர்த்தட்டில் இருத்தி அவமானப் படுத்திய மிடுக்கையுடையவன் (1). கஞ்சன், காளியன், குவலயாபீடம், இரட்டை மருதமரம், அரிஷ்டாசுரன் — இவர்களுடைய வஞ்சனையாலேயே தாம் தாம் முடியும்படி செய்த வித்தகன் (2). நரகனைக் கொல்லும் வகைகளை ஆராய்ந்து அவனைத் தப்பிப் போக முடியாதபடி வளைத்துக் கொண்டு திருவாழியாலே நிரசித்து, அவன் சிறையில் அடைத்து வைத்திருந்த பதினாயிரத்தொரு கன்னியர்களை ஆட்கொண்ட தீரன் (3). மாவலின் மகன் வாணனுடைய மகள் உஷை இருந்த சிறைக்கூடத்தை அரணோடே அழித்த சூரன் (4). காதில் கேட்க முடியாதபடி திட்டிக் கொண்டிருந்த சிசுபாலனுக்கு இறுதிக் காலத்தில் தன் அழகைக் காட்டி பகைமையைப் போக்கிய புண்ணியவான் (5). பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதியின் மனக் குழப்பத்தையெல்லாம் திருவுளத்திற் கொண்டு அவள் அவமானப்பட்டபோது அத்துன்பங்களை யெல்லாம் நூற்றுவர் மனைவியரின்மீது சுமத்திய அற்புதன் (6). இவ்விடத்தில் சுமார் 40 ஆண்டுகட்கு முன் ஒரு காலட்சேபத்தில் கேட்ட நிகழ்ச்சியை நினைவு கூர் கின்றேன்.

நிகழ்ச்சி : துச்சாதனன் திரௌபதியின் துகிலுரி கின்றான். வண்ணப் பொற்சேலைகள் வளர்கின்றன. பாகவதர் கூறுகின்றார்: "கோலி டெக்ஸ்டைல்ஸ், அரவிந்த் டெக்ஸ்டைல்ஸ்......... இப்படிப் பல ரக டெக்ஸ்டைல்ஸ்

துணிகள் வந்து கொண்டிருக்கின்றன. இவையெல்லாம் நாம் பார்த்த துணி ரகங்கள்தாம். ஆனால் கிருஷ்ணா டெக்ஸ்டைல்ஸ் துணி வருகின்றது. துணிச் சந்தையில் கிடைக்காத ரகம்; யாரும் இதுகாறும் பார்க்காத ரகம். இத்துணி துரியோதனனின் மனத்தைக் கவர்கின்றது. ஐந்து மீட்டர் வீதம் 100 துண்டுகளைக் கிழிக்கச் செய்கின்றான். திரௌபதி அவமானப்படுத்தப்படும் சபையில் 100 ஆசனங்களை போடச் செய்கின்றான். தன் மனைவி தம்பிமார் மனைவியர்களை இத்துணிகளை உடுத்திக் கொண்டு வந்து ஆசனங்களில் வரிசையாக அமரச் செய்து அவமானச் செயலைக் காணச் செய்கின்றான். தொலைவிலிருந்தாலும் கண்ணனுக்கு இது பொறுக்குமா? உஸ்... என்று ஓர் ஒலி கேட்கின்றது. 100 பேர்கள் உடுத்திய சேலைகளும் மறைகின்றன. நல்ல வேளையாக உள் பாவாடை அவர்கள் மானத்தைக் காக்கின்றது. கண்ணனுக்கும் இது தெரியும்! பெண்கள் யாராக இருந்தாலும் அவமானப்படுத்தக்கூடாது என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன? துரியோதனனுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற கண்ணனின் உக்திதான் இது!

தங்க மயமான காதணிகளையுடைய பிராட்டிக்காகக் கணைகளைத் தொடுத்து அரக்கப் பூண்டுகளை அழித்தவன் (7). தீயைக் கக்கும் அம்புகளைத் தொடுத்து இலங்கை நாதன் மீது பாய்ந்து அவன் புரிந்த அநீதியைக் குலைத்தவன் (8). இரணியாட்சன் பாயாகச் சுருட்டிக் கொண்ட பூமியை வராக அவதாரங் கொண்டு அண்டபித்தியினின்றும் தன் எயிற்றினால் பிரித்தெடுத்தல், வாமன அவதாரங் கொண்டு மகாபலியினால் தன் வசமாக்கிக் கொள்ளப்பட்ட பூமியை அங்கையில் நீரேற்று வாங்கிக் கொண்டு திரிவிக்கிரமனாகி அதனை மூன்றடியால் அளந்து அருளியவன்; மீண்டும் அவாந்தரப் பிரளயத்தில் அழிந்து போகாமல் அந்தப் பூமியை திருவயிற்றில் வைத்து நோக்கி, பிரளயம் கழிந்ததும் வெளிப்படுத்தியவன். இவையனைத்தையும்

விளையாட்டாகவே செய்தவன் (9). ஆயிரம் திருத்தோள் களைப் பரப்பிக் கொண்டு, ஆயிரம் திருமுடிகளும் விளங்கும் படியாகவும் பரந்த ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடன் மீது சயனித்தருளினவன் (10).

இங்ஙனம் இரண்டு திருமொழிகளினால் எம்பெருமான் திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் இருப்பை அநுபவித்த ஆழ்வார் எம்பெருமான் தன்னைப் பிரிந்து போகாதிருக்க அவரை வளைத்துக் கொள்ளு கின்றார். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு சிறிது தொலைதூரத்தில் உள்ள திருமாலிருஞ்சோலை மலை எம்பெருமான்மீது இவர் தனி ஈடுபாடு கொண்டதை இதனால் (5.3) அறிகிறோம்.

"பரத்துவம், அந்தர்யாமித்துவம், வியூகம், விபவம், அர்ச்சாவதாரம் என்று சொல்லப் படுவனவும், உன்னுடைய பிரவேசம் உள்ளனவுமான இடங்களிலெல்லாம் தட்டித் திரிந்து உன்னைச் சேவித்து, பலவகைத் துன்பங்களுக்கு இடமான இந்த உடலில் விருப்பை ஒழித்துக் கொண்ட அடியேன் இனி ஒரு நொடிப்பொழுதும் உன்னை விட்டு அகலேன்" (5.3:1). "மாலிருஞ்சோலை எம்பெருமானே! நான் உன்னைச் சூழ்ந்து கொண்டேன். நீ என்னைப் பிரிய ஒருப்படேன்; நீ உனக்குள்ள மாயையினால் ஒளித்துக் கொண்டால் 'உன் பிராட்டியின் மேல் ஆணை'" (2). "மகரந்தம் உள்ள அரவிந்தத்தின் சுவையறிந்த வண்டு மீண்டும் ஒரு முள்ளிப் பூவைத் தேடி ஓடாதவாறு போல், உன்னுடைய கைங்கரியச் சுவையறிந்த அடியேன், இனி மற்றொருவன் வாசலைத் தேடி ஓடமாட்டேன்; அப்படி என்னை நீ ஓடவிட்டால் அஃது உன் மேன்மைக்கே குறை யாக முடியும். ஆதலால் அடியேனை நெறி காட்டி நீக்காது திருவுள்ளம் பற்றியருளவேண்டும்" (3).

"பாண்டவரின் பட்சபாதியே! பலகாதத் தொலைவும் அலைந்து திரிந்த எனக்கு அவ்விடங்களில் ஒதுங்குவதற்கு நிழலும் கண்டதில்லை; விடாய் போக்குவதற்கு நீரும்

கண்டதில்லை; நின் திருவடி நிழலொழிய மற்றோர் உயிர்ப்பிடத்தை நான் வேறெங்கும் காண்கின்றேன் இல்லை'' (4). மெய்யடியார்கள் பகவத் விஷயத்தில் ஆழங்கால் படவேண்டும் என்று நினைக்கும்போதே, 'காலாழும், நெஞ்சழியும், கண்சுழலும்' (பெரிய. திருவந். 34) என்கின்றபடியே எல்லா இந்திரியங்களுக்கும் சோர்வு பிறக்குமாதலால், அந்த நிலையை இந்த ஆழ்வார் ''வைத்த அடியை எடுத்து வைத்து நடக்கத் தொடங்கினால், கால் கிளம்புவதில்லை; ஆனந்தக் கண்ணீர் இடைவிடாது பெருகுகின்றது; உடலும் கட்டழிந்து நடுங்கா நிற்கின்றபடியால் வாய் திறந்து பேச முடியவில்லை; மயிர்க் கூச்செறிதல் ஓய்கின்றதில்லை. உன்னைத் தோளால் அணைக்க முயன்றால் தோள்கள் இயங்க முடியாமல் வல்லமையற்றுச் சோர்வுடன் கிடக்கின்றன; நெஞ்சும் பிச்சேறிக் கிடக்கின்றது'' என்று கூறுகின்றார் (5). ''உருத்திரன், நான்முகன், இந்திரன் மற்றுமுள்ள தேவர்கள் சம்சாரமாகின்ற நோய்க்கு மருந்தறிய வல்லவரல்லர். உன்னையொழிய வேறொருவருக்கும் பிறவி நோயின் மருந்தை அறிவதற்குரிய திறமை இல்லை; ஆதலால் நீயே அந்த நோயைப் போக்கி நின் கோயில் வாசலைக் காக்க வல்ல அடியவனாக அமைத்தருள வேண்டும்'' (6). ''சம்சாரம் என்ற ஆழங்காண முடியாத கடலில் நெடுநாள் அழுந்திக் கிடந்து வருந்தினேன்; பின்னர் நினது பேரருளினால் இக் கரை ஏறின அடியேனை மீண்டும் அக்கடலில் தள்ளாமல் 'அஞ்சேல்' என்று அபயம் அளித்தல் வேண்டும்'' (7).

''கணக்கிட முடியாத கால முழுவதும் சம்சாரத்தில் அகப்பட்டுக் கொண்டேன். அதில் நின்றும் விடுபட்டு ஞானம் பெற்ற இன்றுமுதல் உன்னைப் போக விடுதல் ஒல்லுமோ? என் நெஞ்சு நின் திறத்தில் ஈடுபட்டுள்ளமையை அறிகின்றாயன்றோ? (8). 'பழுதே பல பகலும் போயின வென்று அஞ்சி, அழுதேன்; அரவணை மேற்கொண்டு தொழுதேன்' (முதல் திருவந். 16) என்ற பொய்கையார்

வாக்கு ஈண்டு அநுசந்திக்கத் தக்கது. "கருவறையிற் கிடந்த அன்று முதற்கொண்டே உனக்குப் பணி செய்யவேண்டும் என்று பேரவாக் கொண்டிருந்தேன். பிறந்த பிறகு நெடு நாள் சம்சாரத்தில் அழுந்தி நின்று அநுபவத்தை இழந் திருந்தேன். தெய்வாதீனமாக இன்று இத்திருமலையைக் கிட்டி உன்னைக் காணப் பெற்றேன். இனி உன்னை விட்டு ஒருநாளும் பிரியேன்" (9).

4. **திருவரங்கம்*** : சோழநாட்டுத் திருப்பதிகளுள் இது தலையாயது. வைணவர்களால் **கோயில்** என்றே வழங்கப் பெறுவது. திருச்சியிலிருந்து 4 கி. மீ. தொலைவி லுள்ளது. திருச்சியிலிருந்து எல்லாவித வாகன வசதிகளும் கிடைக்கும். திருவரங்கம் பெரிய நகரமாதலின், சத்திரங்கள், தங்கும் விடுதிகள், இராமநுச கூடங்கள் முதலியவை இங்கு உள்ளன திருத்தலப் பயணிகள் ஏதாவ தொன்றில் தங்க ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

இந்தத் திவ்விய தேசத்தைப் பெரியாழ்வார் மூன்று திருமொழிகளால் (4.8; 4.9; 4.10) மங்களாசாசனம் செய்துள்ளார். வழக்கம் போல் இந்த ஆழ்வார் பாசுரங் களின் முதல் இரண்டு அடிகளில் எம்பெருமான் பெருமை யையும், இறுதி இரண்டு அடிகளில் திவ்விய தேசத்தின் வளத்தையும் சிறப்பித்துப் பேசுகின்றார். முதலில் ஊர் வளத்தைக் காண்போம். 'கங்கையிற் புனித மாய காவிரியில்' (திருமாலை-23) **பெரியபெருமாளின்[7]** திருக்கண்

* 1948 ஜூன் மாதத்திலும், 1969 ஜூன் மாதத்திலும் அதன் பிறகு பல முறையும் சேவிக்கும் பேறு பெற்றேன். ஒரு முறை வசந்தோற்வத்தின்போது திரு. R. கிருட்டிண சாமி ரெட்டியார் (சிதம்பர விலாஸ் பேருந்து) என்னைச் சேவிக்க வைத்தது நினைவிற்கு வருகின்றது.

7. பெரிய பெருமாள்—அரங்கநாதன்; பெருமாள்—இராமன்; இளைய பெருமாள்—இலக்குவன்; பிள்ளைப் பெருமாள்—குழந்தைக் கண்ணன்.

நோக்கான திருமுகத்துறை முதலான பல துறைகளில் வைணவப் பெருமக்கள் திரள் திரளாகக் குடைந்து நீராட, அதனால் அக்காவிரி முழுவதும் அலை மோதப் பெறுகின்றது. அந்த அலைகளினால் தாமரை மலர்களின் நாளங்கள் அலைக்கப்பட, அதனால் அப்பூக்களினின்றும் தேன் பெருக, அத்துடன் சேர்ந்த தீர்த்தத்தை உடையது (1). முத்தீ வளர்த்து ஓம்பும் வைதிகர்களும் செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வைணவர்களும் வாழும் ஊர் (2). திருவரங்கத்தைச் சூழ்ந்து பெருகும் காவிரி நீரில் பெரிய பெருமாள் திருமுகம் போன்ற செந்தாமரை மலர்களும், அவரது திருமேனி போன்ற கருநெய்தல் பூக்களும் ஒன்றுக்கொன்று எதிர்நோக்கி மலரும் இடம் (3). தேன் மாறாத மலர்களையுடைய சோலைகளையுடையது (4). இச்சோலையை,

> வண்டினம் முரலும் சோலை,
> மயிலினம் ஆலும் சோலை,
> கொண்டல்மீது அணவும் சோலை,
> குயிலினம் கூவும் சோலை,
> அண்டர்கோன் அமரும் சோலை. (திருமாலை-14)

என்று வருணிப்பர் தொண்டரடிப் பொடிகள். இந்த ஆழ்வாரும், குரவ மலர்கள் அரும்பு விட்டு நிற்கவும், கோங்கு மரங்கள் அலரா நிற்கவும், குயில்கள் களித்துக் கூவும்படியாகவும் உள்ள சோலைகளால் சூழப்பட்ட ஊர் என்பர் (5).

செவிக்கினிய பண்ணையுடைய வண்டுகள் திரள் திரளாகக் கூடி மலரும் நிலையிலுள்ள தாழை மடலினுள் உரசிக் கொண்டு புகுந்து, அங்குப் புரண்டு, அதிலுள்ள வெண்ணிறச் சுண்ணங்களை தம் உடலில் பூசிக் கொண்டு (சிவனடியார்கள் போல?) 'தென்னதென' என்று ஆளத்தி வைத்துப் பாடுகின்றன (6). ஓரிருவரால் தழுவ முடியாத பெரிய சந்தன மரங்களை பெரிய மலைகளினின்றும்

வேருடன் பிடுங்கி இழுத்துக் கொண்டு வந்து 'இவற்றைத் திருவுள்ளம் பற்ற வேண்டும்' என்று இரப்பதுபோல் இரைச்சலிடும் காவிரி தான் கொணர்ந்த மணப் பொருளை பெரிய பெருமாளுக்குச் சமர்ப்பித்துத் திருவடிகளை வருடுவதுபோல் தொழுகின்றது (7). பெரிய சிறகுகளை யுடைய வண்டுகள் மாலைப் பொழுதில் எம்பெருமான் திருக்குணங்களைப் பாடிக் கொண்டு மல்லிகைப் பூவாகிய வெளுத்த சங்கை ஊதி நிற்கும் இடம் (8). இவ்விடத்தில்,

மல்லிகையே வெண்சங்கா
    வண்டூத வான்கரும்பு
வில்லி கணைதெரிந்து
    மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய
    மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப்
    பொழுது.[2]

என்ற புகழேந்தியின் நளவெண்பாப் பாடல் நினைத்தல் தகும்.

அழகுக் கடவுளின் முழுமை நிறைந்த அவதாரம் என்று கண்ணனைப் போற்றுகின்ற ஆழ்வார்,

குன்றாடு கொழுமுகில்போல்
    குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடு கணமயில்போல்
    நிறமுடைய நெடுமால்[3]

[கொழுமுகில்-நீர் நிறைந்த மேகம்; குவளை-நீலோற்பலம்; குரை-ஒலிக்கும்; கணமயில்-மயில் கூட்டம்]

என்றவாறு அப்பெருமானை இயற்கை எங்கும் காண்கின்றார். விண்ணிலும் மண்ணிலும் காண்கின்றார்; காட்டி

2. நளவெண்பா-99.
3. பெரியாழ். திரு. 4.8:9

லும் நாட்டிலும் காண்கின்றார்; குன்றிலும் கடலிலும் காண்கின்றார்; பூவிலும் மயிலிலும் காண்கின்றார். இத்தகைய இயற்கை அழகு நிறைந்த ஊர்தான் திருவரங்கம் என்பது இவர்தம் கொள்கை.

குன்றூடு பொழில்நுழைந்து
கொடிஇடையார் முலைஅணவி
மன்றூடு தென்றல்உலாம்
மயில்அரங்கம் என்பதுவே.[4]

[பொழில்-சோலை; கொடி இடையார்-கொடிபோன்ற இடையையுடைய மகளிர்; அணவி-படர்ந்து]

என்ற அடிகளில் இக்கொள்கை வெளிப்படுவதைக் கண்டு மகிழலாம். தென்றல் உலவுவதை அற்புதமாகச் சித்திரிக்கும் அழகு எண்ணி எண்ணி அநுபவிக்கத்தக்கது.

இத்திருமொழியில் நுவலப்பெறும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? சாந்தீபினியின் புத்திரனைக் கடலிலிருந்து மீட்டுக் கொடுத்தவன்.[5] (1) பிறந்த இடத்திலேயே மாண்டொழிந்த வைதிகனின் நான்கு பிள்ளைகளையும் தேடிக்கொணர்ந்து கொடுத்தவன்[6] (2). பண்டு பாரதப் போரில் பாண்டவர்களின் பட்சபாதியாக இருந்து அவர்கட்கு யாதொரு நலிவும் நேராதபடி காத்தருளியவன் (3). பணிப்பெண் மந்தரையின் சொற்களைக் கேட்டு கைகேயி தசரதன் சம்பராசுரனுடன் நடத்திய போரின் போது கொடுத்த வரத்தைப் பொருத்தமாகக் கேட்க, அவற்றின்படி தாயரையும் அரசையும் துறந்தவன் (4). கடவுளிடம் பெற்ற வரங்களினால் தருக்குடன் பல அக்கிரமங்களைப் புரிந்த இராவணனைக் கொன்று உலகத்தை வாழ்வித்தவன் (5). கீழுலகத்திலுள்ள அசுரப்

4. ஷை - 4.8:9.
5. வைணவ உரை வளம் - பாசுரம் 4-பக். 29.
6. ஷை - பாசுரம் 1-பக். 24.

பூண்டுகள் கிளம்பவொண்ணாதபடி அழித்தவன்; பகைவர் களைத் தொலைத்தலையே இயல்பாக உடையவன் (6). பிறருக்குத் தீங்கு இழைப்பதையே தொழிலாக வுடைய அசுரர்களின் செங்குருதி நிலத்தில் பரவிக் குமிழியிட்டு அலை யெறியும்படி அவர்களைப் பிணமாக்கியவன் (7). வராக மாய் அவதரித்துப் பூமியையும் நரசிங்கமாய் அவதரித்து இரணியனையும் கீண்டருளினவன் (8).

இராமகிருஷ்ண அவதார சேஷ்டிதங்களால் திருஅரங் கத்தை அநுபவித்த ஆழ்வார் மனநிறைவு பெறாமல் மீண்டும் ஒரு திருமொழியால் இத்திருப்பதியை அநுபவிக் கின்றார். இத்திருமொழியும் முன் திருமொழி போன்ற வார்ப்புடையது. இறுதி இரண்டு அடிகளில் காட்டப்பெறும் திவ்விய தேச வளத்தைக் காண்போம். பெரிய பெருமானின் திருமேனி நிறம், பெரிய பிராட்டியாரின் திருக்கண்களின் நிறம் இவற்றையொத்த அழகு பொருந்திய கருநெய்தற் பூக்கள் காற்றால் அசைந்து கொண்டிருக்கும் இடம் திரு வரங்கம் (1). திருவரங்கத்தைச் சூழ்ந்துள்ள திருக்காவிரியில் எம்பெருமானது திருஉந்திக்கமலம் போன்ற பல தாமரை மலர்கள் ஓங்கி விளங்குகின்றன. இவற்றோடொத்த அழகிய பூக்கள் பிற இடங்களில் இல்லை (4). அன்னம் முதலிய பறவைகள் நீர்ப்பூ முதலிய பூக்களில் பொருந்தி யிருந்து தங்கள் சாதிக்குத் தலைவனான பெரிய திருவடியின் புகழைச் சொல்லினால் வரும் சுவை தோன்றப் பேசா நிற்கப்பெற்ற இடம் (5). பச்சை மாமலைபோல் மேனி யனான அழகிய மணவாளன் சாய்ந்தருளப் பெற்றமையால் அத்திருமேனியின் நிழலீட்டாலே கருத்துத் தோன்றுகின்ற திருவனந்தாழ்வானுடைய படங்களின்மீது செழுமணிகள் ஒளிர்வது — ஒரு நீலமலையின்மீது பல இளஞ்சூரியர்கள் உதித்தாற்போல் தோன்றுகின்றது (7).

செழிப்புப் பொருந்திய தாமரை மலர்கள் மேலுலகை அளப்பதாக உயர்ந்த திரிவிக்கிரமனின் திருவடி போல் உயர வளர்ந்து விளங்க, வரம்பு சேர்ந்து விளைந்து

நிற்பதும் கதிரையுடையதுமான செந்நெல் தாள்களை நீட்டித் தலைவணங்கி நிற்கப் பெற்ற இடம் (8). அன்னப் பேடை தன் கணவனான ஆண் அன்னத்துடன் செந் தாமரை மலரின்மீது ஏறி அம்மலரை அசைத்து ஊசலாடி ஒன்றோடொன்று புணருவதால் சுண்ணமாகிய சிவந்த பொடியில் மூழ்கி விளையாடும் நீர்வளத்தையுடைய இடம் (9). திருவாளன் திருக்கண்கள் வளரும் இடம் (10).

இத்திவ்விய தேசத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமான் எப்படிப்பட்டவன்? சித்திரகூடத்தில் வந்து பிரபத்தி பண்ணின பரதாழ்வானுக்கு பாதுகைகளை ஈந்து, அதன் பிறகு போருக்கு உரிய செயல்களை முடித்துக் கொண்டு பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளி அரசோச்சியவன் (1). சேதநர் செய்த பிழைகளைக் கணக் கிட்டு அதற்குத் தக்கவாறு தண்டனை வழங்குவதற்காகச் சீற்றமுற்றிருக்கும் எம்பெருமானை எதிர்த்துச் சில பேச்சுக் களைப் பேசி மயக்கி அக்குற்றவாளிகளை வாழ்விக்கக் கடவளான பிராட்டி எம்பெருமானுடைய திருவுள்ளத்தைச் சோதிக்கக் கருதியோ வேறு ஏதேனும் ஒரு காரணம் கொண்டோ தம் அடியார் திறத்துச் சில குற்றங்களை எம்பெருமானிடத்துக் கூறுவாளாகில் அதனைக் கேட்டு எம்பெருமான் 'இப்படிப்பட்ட குற்றங்களை உன் அடியார் செய்யத் துணிவரேயன்றி என் அடியார் ஒருகாலும் செய்யமாட்டார்கள்' என்பன்; அதற்குமேலும் பிராட்டி. 'நீர் இங்ஙனம் சொல்லலாகாது; அவர்கள் குற்றவாளிகள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லையே' என்று வற்புறுத்திச் சொல்லில், அதற்கு எம்பெருமான் 'உன்னடியார் செய்யும் குற்றங்கள் உனக்குப் பொல்லாங்காகத் தோன்றினாலும், என்னடியார் செய்யும் குற்றங்கள் எனக்குக் குணமாகவே தோன்றக் கடவன; இனி நீ ஒன்றும் எதிர்த்துப் பேச வேண்டா' என்று வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறுவன். இத்தகையவனும் வீடணற்காக இலங்கையை நோக்கித் தன் மலர்ந்த திருக்கண்களை வைத்தருளின

வனுமான எம்பெருமான் பெரிய பெருமாள் (2). இரட்டை மருத மரங்கள், குவலயாபீடம், பிரலம்பன், கேசி, சகடாசுரன், சாணூரன், முஷ்டிகன் என்பவர்கள்—ஆகியோரை முடித்துப் புகழ்பெற்றவன் (3). துவாரகையில் பதினாயிரத்தொரு நூறு தேவிமார் கைங்கரியம் பண்ண அவர்களின் நடுவே நாயகனாய் வீற்றிருப்பவன் (4). கங்கையில் ஆமையாய், பிறகு கங்கையாய், ஆழ்ந்த கடலாய், பூமியாய், மலைகளாய், நான்முகனாய், நான்கு வேதங்களாய், யாகங்களாய், தானாய் அறிதுயில் கொண்டிருப்பவன் (5).

பாண்டவர்களின் தேவி திரௌபதியின் விரித்த கூந்தலை முடிப்பித்து, அவர்களை அரசாள்வித்தருளி, உத்தரையின் சிறுவனை உயிர்பெறச்செய்து, எல்லா உயிர்கட்கும் தலைவனாக எழுந்தருளியிருப்பவன் (6). வாமன மாணியாய் எழுந்தருளி மகாபலியின் செருக்கை அடக்கி, அவனது பூமியைத் தன்னுடையதாக்கி, கணநேரத்திற்குள் பாதளத்தை அவனுடைய இருப்பிடமாக்கி இந்திரனுடைய குறையை முடித்தவன் (7). இரணியனை முடித்துப் பிரகலாதனுக்கு அருள்புரிந்த வித்தகன் (8). மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், தசரதராமன், பலராமன், கண்ணன், கல்கி—அவதாரங்கள் எடுத்துப் பல விரோதிகளை முடித்தவன் (9). பெரிய திருவடிக்குத் தலைவன்; லீலா விபூதியை ஆள்பவன்; நாந்தகவாளையுடையவன்; நான்மறைகளை ஆள்பவன்; புறமுதுகு காட்டாத சேனைகளையுடையவன்; வள்ளண்மைமிக்கவன்; இரவு, பகல் இவற்றுக்கு நியாமகன்; ஏழு உலகத்தையும் காப்பவன்; பெரிய பிராட்டியாரை ஆளுபவன் (10).

மூன்றாம் பதிகத்தில் (4.10) சரம தசையில் கருமங்களுக்கேற்றவாறு யமகிங்கரர்கள் தன்னை நலியும்போது அந்த வருத்தத்தினால் எம்பெருமான் திருவடிகளை நினைக்கவும் ஒன்று சொல்லவும் இயலாத நிலை ஏற்படக்

கூடுமாதலால், அப்போது சொல்லவேண்டியவற்றை தற்போதே சொல்லுகின்றார்.

''எய்ப்பென்னை நலியும்போது அப்போது உன்னை நினைக்கவும் கூடாமல் போகும்; அதனால் அப்போது சொல்லவேண்டியவற்றை இப்போதே சொல்லுகின்றேன்'' (1, 2). ''நின்திரு நாமங்களையெல்லாம் இப்போதே அநுசந்தித்துவிட்டேன்; இதுவே ஏதுவாக நீ காக்க வேண்டும்'' (3). இவ்வாறே எல்லாப் பாசுரங்களிலும் அருளிச்செய்து 'அஞ்சல்' என்று சொல்லித் தன்னைக் காக்கவேண்டும் என்று வேண்டுகின்றார்.

**5. கண்டம் கடிநகர்:** தேவப்பிரயாகை என்று இன்று வழங்கப் பெறும் இடமே கண்டம் கடிநகர். இது வதரிக்குப் போகும் வழியில் கடல் மட்டத்திற்கு மேல் 1700 அடி உயரத்தில் இமயமலையில் உள்ளது. வட நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. அரித்துவாரத்திலிருந்து 59 கல் தொலைவிலுள்ளது. இந்த இடத்தில்தான் விஷ்ணு கங்கையும் பாகீரதியும் ஒன்று சேர்ந்து கங்கையாக ஓடத் தொடங்குகின்றது. விஷ்ணு கங்கை என வழங்கும் **அழங்கா நந்தா** என்ற நதி **அழகாபுரி** என்ற இடத்திலும், **பாகீரதி** கங்கோத்ரியிலும் தொடங்குகின்றன. பூமியின் அடியிலிருந்து **சரசுவதி** என்ற நதியும் தேவப்பிரயாகையில் சேர்வதாக ஐதிகம். இதனால் இந்த இடம் '**திரிவேணி**' என்றும் வழங்கப் பெறுகின்றது.

கடிநகர் எம்பெருமானைப் — புருடோத்தமனைப் — பெரியாழ்வார் ஒரு திருமொழியில் (4.7:11 பாசுரங்கள்) மங்களாசாசனம் செய்துள்ளார். **புருடோத்தமனை நீலமேகப் பெருமாள்** என்று வழங்குவதும் உண்டு. நின்ற திருக் கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றார். தாயார் **புண்டரீகவல்லி.** பெரியாழ்வார் இப்பெருமானை,

மூன்றெழுத் ததனை மூன்றெழுத் ததனால்
மூன்றெழுத் தாக்கிமூன் றெழுத்தை
ஏன்றுகொண் டிருப்பார்க்கு இரக்கம்நன் குடைய
எம்புரு டோத்தமன் இருக்கை
மூன்றடி நிமிர்த்து மூன்றினில் தோன்றி
மூன்றினில் மூன்றுரு ஆனான்
கான்தடம் பொழில்சூழ் கங்கையின் கரைமேல்
கண்டம் என்னும் கடிநகரே (4·7:10)

*[மூன்று எழுத்து-பிரணவம்; மூன்று எழுத்து ஆக்கி-அ உ ம ஆக்கி; ஏன்று கொண்டு-தஞ்சமாக நினைத்து அநுசந்தித்து; மூன்று அடி-மூன்றுபதம்; கான்-நறு நாற்றம்; தட-பெரிய; பொழில்-சோலை]*

*என்ற பாசுரத்தால் மங்களாசாசனம் செய்கின்றார்.*

*கண்டம் என்னும் கடிநகர் எங்குள்ளது? நறு நாற்றம் கமழும் பெரிய சோலைகளினால் சூழப்பெற்ற கங்கையின் கரைமேல் உள்ளது. அங்குக் கோயில் கொண்டிருப்பவர் யார்? புருடோத்தமன் என்ற திருநாமம் கொண்ட எம்பெருமான். அவன் தன்மை யாது? அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றெழுத்துகளை தன் சங்கற்பத்தினால் மூன்று வேதங்களினின்றும் தோற்றுவித்தவன்; இந்த மூன்று எழுத்துகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே எழுத்தாக 'ஓம்' என்ற பிரணவ மந்திரமாகச் செய்தவன்; இந்த மூன்று எழுத்துகளாலான பிரணவத்தை மூன்று சொற்களாய் மூன்று பொருள்கட்கு வாசகமாக இருக்கும் அகார, உகார, மகாரங்களான மூன்று எழுத்துகளாகப் பிரித்தவன்; இவற்றுள் அகாரம் சீவான்மாவுக்குள்ள பகவானுக்கு அடிமைத் தன்மையைக் (பகவத் சேஷத்துவம்) கூறுவதாலும், உகாரம் தேற்றப் பொருளைக் கூறி அந்த அடிமைத் தன்மை பரமபத நாதனாகிய நாராயணன் பக்கலின்றி வேறு ஒருவர் பக்கல் வகிக்கத் தகாதது*

என்பதைத் தெளிவிக்கையாலும், மகாரம் ஞானத்தைக் கூறுவதாலும் இறைவன் ஒருவனுக்கே அடிமைப்பட்டிருத்தலுக்கு (அநந்யார்ஹ சேஷத்துவம்) உரிய ஆன்மா தேகத்தினின்றும் வேறுபட்டது என்பதைப் புலப்படுத்துவதாக இருப்பதாலும் இம்மூன்று எழுத்துகளையுமே தமக்குத் தஞ்சம் என்று கொண்டிருப்பவர்களின் பக்கல் தம் பேரருளைக் கிட்டச் செய்பவன்; பிரணவ பதத்தை **நம:** பதத்துடனும் நாராயண பதத்துடனும் கூட்டி இம் மூன்று பதங்களில் **ஓம்** என்பதில் இறைவன் ஒருவனுக்கே அடிமைப் பட்டிருத்தல் (அநந்யார்ஹ சேஷத்துவம்) என்ற நிலையையும், **நம:** என்பதில் இறைவன் ஒருவனையே உபாயமாகப் பற்றியிருத்தல் (அநந்யார்க சரண்யத்துவம்) என்ற நிலையையும் **நாராயணாய** என்பதில் அவன் ஒருவனையே இனிய பொருளாகக் கொண்டிருத்தல் (அநந்ய போக்கியத்துவம்) என்ற நிலையையும் தோற்றுவித்தவன்; இவற்றிற்கு எதிர்த் தட்டாகத் தலைமை நிலையையும் (சேஷித்துவம்), தஞ்ச நிலையையும் (சரண்யத்துவம்), அடையப்படும் நிலையையும் (பிராப்யத்துவம்) கொண்டு திகழ்பவன்.

பாசுரங்கள் தோறும் கங்கையின் தன்மையும், எம்பெருமான் பெருமையும் நுவலப் பெறுகின்றன. ஏதேனும் ஒரு குளத்தில் ஒருவர் நீராடுகையில் **'கங்கை, கங்கை'** என்று உச்சரித்தாலே அவர்தம் பெருப்பெருத்த பாவங்களையெல்லாம் அழிக்கவல்லது கங்கை நதி (1); கங்கை முதலில் ஓங்கி உலகளந்த உத்தமனாகிய எம்பெருமானின் திருவடியை நான்முகன் தன் கம்ண்டல நீரால் கழுவிப் பாதபூசை செய்ததனால் அவன் கையிலும் எம்பெருமான் திருவடியிலும் தொடங்கி, அந்த நீர் கங்கையாகப் பெருக்கெடுக்கும்போது அது பசுமை நிறமுடைய திருத்துழாயையும் பின்னர் அது சிவபெருமானின் திருச்சடையில் தங்கி இழிந்ததால் கொன்றை மலரையும், மலை வழியாக இழிந்தமையால் பல்வேறு

இரத்தினங்களையும்[6] கொண்டு ஓடுகின்றது (2, 3); இமய மலை முதல் கடலில் கலக்கும் வரையில் அதன் இருகரை களிலும் உள்ள உலக மக்கள் ஆரவாரித்துக் கொண்டு நீராடுவதனால் அவர்தம் பாவங்களையெல்லாம் போக்கும் பெருமையுடையது (4); நீராடுவோரின் எழுபிறப்புகளிலும் திரண்ட பாவங்களைக் கண நேரத்தில் போக்கும் தன்மையது (5); அருந்தவ முனிவர்கள் தாம் மேற்கொண்ட வேள்வி முடிந்த பிறகு, வேள்வியின் முடிவில் செய்ய வேண்டிய நீராடலைச் செய்ய (அவப்பிரதம் என்ற நீராடல்) அதனால் வேள்வி நிலத்திலுண்டான கலப்பை முதலிய எல்லாத் துணைக் கருவிகளையும் அடித்துக் கொண்டு வரும் சீர்மையது (6); தேவேந்திரனின் பட்டத்து யானை யாகிய ஐராவதத்தின் மதநீரும், இளந்தேவமாதர்கள் நீராடுவதால் அவர்கள் அணிந்திருந்த சாந்தும், அவர்கள் தலையில் செருகியிருந்த கற்பகப் பூக்களும் ஒன்று சேர்ந்து வரும் நீரையுடையது (7); வேள்வி நிலத்திலிருந்து யாகப் பசுக்களைக் கட்டுந்தறிகளைத் (யூபஸ்தம்பங்கள்) திரள் திரளாக அடித்துக் கொண்டு வருகையில் யாகப்புகையையும் உட்கொண்டதால் அந்தப் புகையின் மணமும் கொண்டு இலங்குவது (8); சோலைகளின் வழியே வருவதால் பூக்களின் நறுமணமும் நீரில் கமழ்வது (10); மந்தரம்

6. நான்முகன் எம்பெருமானின் திருவடியைக் கழுவுங் கால் அந்த ஸ்ரீபாத தீர்த்தம் கங்கையாகப் பெருக்கெடுத்து ஆகாய கங்கையாக உம்பர் உலகில் நின்றது. சூரியகுலத் தோன்றலாகிய **பகீரதன்** என்ற மாமன்னன் கபில முனிவரின் கண்ணின் சினத்தீய்க்கு இலக்காகி உடலெரிந்து சாம்பராகி நற்கதி இழந்த அறுபதினாயிரம் சகரபுத்திரர்கள் நற்கதி பெறும் பொருட்டு நெடுங்காலம் தவமியற்றி, மேலுலகத்தி லிருந்து பூமிக்குக் கொணர்கையில் அவனது வேண்டு கோளால் சிவபெருமான் அந்நதியைத் தன் முடிமீது ஏற்றுச் சிறிது சிறிதாக பூமியில் விட்டனன் என்பது புராண வரலாறு.

முதலிய மலைகள் சலிக்கும்படியாகவும், பூமி பிளவுபட்டு இடிந்து விழும்படியாகவும், இரு கரையிலுள்ள மரங்கள் வேருடன் சாய்ந்து முறியும்படியாகவும், ஒன்றாலும் கலங்காத கடலும் கலங்கும்படியாகவும் வெள்ளப் பெருக்கு இழியும் தன்மையுடையது (9). இதனால் 'பொங்கொலி கங்கை' என்று இதற்குத் திருநாமம் சூட்டுகின்றார் ஆழ்வார் (11).

ஆழ்வார் எம்பெருமானின் பெருமையில் ஈடுபடுவதிலும் நாம் ஆழங்கால் படுவோம். வைணவ தத்துவங்களின் கருவூலமாகத் திகழும் எம்பெருமானின் சிறப்பை (10-வது பாசுரம்) மேலே கண்டோம். மேலும் இங்குக் காண்போம். இராமாவதாரம், திரிவிக்கிரமாவதாரம், பலராமவதாரம், கிருஷ்ணாவதாரம் என்ற அவதார எம்பெருமான்களும் அர்ச்சாவதாரமாக வேறு சில திவ்விய தேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களும் கண்டம் கடிநகர் புருடோத்தம எம்பெருமானாக இருந்து சேவை சாதிப்பதை ஆழ்வார் திருவுள்ளம் எண்ணிக் களிக்கின்றது. இக்களிப்பை "எம்புருடோத்தமன் இருக்கை...கண்டம் என்னும் கடிநகரே" என்று பாசுரங்கள் தோறும் காணச் செய்கின்றார் ஆழ்வார்.

கண்டம் கடிநகரில் திருக்கோயில் கொண்டு சேவை சாதிக்கும் எம்பெருமான் சூர்ப்பணகையின் மூக்கையும் அவளுடைய அண்ணன் இலங்கை வேந்தன் இராவணனின் தலைகளையும் அறுத்தொழித்து அயோத்தி நகர் திரும்பிப் பதினாயிரம் ஆண்டு அரசாண்டு தன் புகழ் நிலவச் செய்தவன் (1); மாவலி கையில் நீரேற்று மூவடிமண்பெற்று உலகளக்கத் தொடங்கின போது சந்திர சூரியர்கள் 'இது வென் புகுந்தது இங்கு? அந்தோ!' என்றாற்போல அஞ்சி நடுங்கும்படி விம்மி வளர்ந்தோங்கி 'ஓங்கி உலகளந்தவன்' (2). போர் செய்யும் எண்ணத்துடன் எதிர்த்து வந்த அசுரர்களின் தலைகளைப் பாஞ்சசந்நியத்தைத் திருப்பவளத்தில் வைத்து முழக்கியும், அழல் உமிழ் ஆழி

கொண்டெறிந்தும் உருட்டியருளியவன் (3); அசுரர்களும் அரக்கர்களும் இந்திரன் முதலிய தேவர்களை அமைதியாக இருக்க வொட்டாமல் அலைத்து அடர்த்து எதிர்த்துப் போர்செய்ய வந்த காலத்தில், அவர்கள் பக்கத்தில் துணையாக நின்று அசுரர்கள் மீது நாந்தகம் என்ற வாளை வீசியெறிந்து அவர்களை எம்புரம் கிட்டச் செய்தவன் (4); கலப்பை, உலக்கை, வில், திருவாழி, திருச்சங்கு, மழு, வாள் ஆகியவற்றைப் போர்க்கருவிகளாகவுடையவன் (5); இந்திரன் பசிக் கோபத்தால் திருவாய்ப் பாடியில் கல்மாரி பொழிந்து, ஆயர்களையும் ஆநிரைகளையும் அலைக்கழித்தபொழுது கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்து அவர்தம் இடர்களைப் போக்கியவன் (6); கண்ணனைக் கொல்லும் பொருட்டு, தான்மேற்கொண்ட வில் பெருவிழாவிற்காகக் கம்சன் அழைத்த போது அவன் வழியில் நிறுத்தியிருந்த குவலயாபீடம் என்ற யானையையும், அதன்மீது இவர்ந்திருந்த பாகனையும் கொன்றொழித்து, வழியில் மற்போருக்குத் தயாராக நின்ற சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களை வானுலகத்திற்கனுப்பி, ஆயுதசாலையிலிருந்த வில்லைப்பிடித்து முறித்தும், உயர்ந்த அரசு கட்டிலின்மீது அமர்ந்திருந்த கம்சன்மீது பாய்ந்து, அவனைக் கொன்றொழித்து அற்புத விளையாட்டுகளைப் புரிந்தவன் (7); துவரையை அரசாண்டபொழுது பாண்டவர்க்குத் துணையாக நின்று கௌரவர்களை அழியச் செய்து பாண்டவர்கட்கு அரசைக் கொடுத்தருளியவன் (8); வடமதுரை, சாளக்கிராமம், துவாரகை, அயோத்தி, பதரி ஆகிய இடங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவன் (9).

உதிரிப் பாசுரங்கள்: ஒரு பாசுரத்தில் பல திவ்விய தேசங்களை அடக்கிப் பாடுவதும் உண்டு.

**வடதிசை மதுரை சாளக் கிராமம்**
**வைகுந்தம் துவரை அயோத்தி**
**இடம்உடை வதரி இடவகை உடைய**
**எம்புரு டோத்தமன் இருக்கை (4.7:9)**

இப்பாசுரப் பகுதியில் மதுரை, சாளக்கிராமம், வைகுந்தம், துவரை, அயோத்தி, வதரி என்று ஆறு திவ்விய தேசங்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. சைவ நாயன்மார்களின் திருப்பதிகங்களிலும் தலத்துக்கு ஒன்று அல்லது பல பதிகங்களும், ஒரே பதிகத்தில் பல தலங்களை அடக்கியும் பாடும் மரபுகளைக் காணலாம். இவற்றை அவர்கள் ஊர்த் தொகை என்று வழங்குவர். மூவர் தேவாரங்களிலும் இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன. இனி பெரியாழ்வார் குறிப்பிட்ட ஆறு தலங்களைப் பற்றியும் சிறிது அறிவோம்.

**6. மதுரை (வட):** சென்னை-தில்லி இருப்பூர்தி வழியில் ஒரு நிலையம்; தில்லியிலிருந்து முன்னதாகவே 170 கி. மீ. தொலைவிலுள்ளது. மதுரை நகர் நிலையத்திலிருந்து சுமார் 3. கி. மீ. தொலைவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடும் யமுனை நதிக்கரையில் உள்ளது. இது கண்ணன் அவதாரம் செய்த திருத்தலம். முத்திதரும் நகரங்கள் ஏழினுள் இதுவும் ஒன்று. கண்ணுக்கு மதுரமாயிருத்தலாலும் மது என்ற அசுரனை அழித்த இடமாதலாலும் இதற்கு மதுரை என்று பெயர் வந்ததாகக் கூறுவர். பாசுரங்களில் 'வடமதுரை' என்று வழங்கப் பெறும் (4.7:9).

யமுனைநதியின் தென்கரையில் திருத்தலப் பயணிகள் வசதியாக நீராடுவதற்கு நல்ல படித்துறையொன்று அமைக்கப்பெற்றுள்ளது. இங்குள்ள பண்டாக்கள் பொய்யும் புனைசுருட்டுமாகக் கண்ணன் பிறப்பைப் பற்றிக் கூறும் செய்திகளை நம்பவேண்டியதில்லை. கண்ணனைப் பற்றிய பழங்கால இடங்கள் யாவும் இஸ்லாமியர்களின் படையெடுப்பின்பொழுது அழிக்கப்பெற்றன. ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திருக்கோயில்கள் ஒன்றுகூட இன்று இல்லை. பிற்காலத்தில் எழுந்த கட்டடங்களும் பாழடைந்து கிடக்கின்றன. கண்ணனுக்குரிய கேசவ தேவர்

மந்திர் என்ற திருக்கோயில் இன்று இல்லை. அந்த இடத்தில் ஒரு மசூதி உள்ளது.

இன்று இந்த மசூதியைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் ஒரு பெரிய கட்டடம் பல கோடி ரூபாய் செலவில் எழும்பியுள்ளது. இங்குக் கண்ணனுக்குத் தனிக் கோயில் மிக அழகான முறையில் பளிங்குக் கற்களால் கட்டப்பெற்றுள்ளது. இக்கோயிலில் உள்ள கண்ணனின்சிலை கண்டாரை ஈர்க்கும் பாங்கில் உள்ளது. இச்சிலை வடிவம் தான் ஆண்டாள் குறிப்பிடும் "மாயன்; வடமதுரை மைந்தன்"[7] என்று நினைந்து வழிபடலாம்.

7. சாளக்கிராமம் : இது நேபாளத்தில் காட்மாண்டு என்னும் தலைநகருக்கு 60 கல் தொலைவில் மேற்குத் திசையில் கண்டகி நதிக்கரையில் உள்ளது. முக்தி நாராயணன் கோயிலுக்குப் போகும் வழியில் உள்ளது. குறுகிய மலையிடுக்குகளிலுள்ள ஒற்றையடிப் பாதை வழியாகத்தான் இத்திருத்தலத்தை அடைதல் வேண்டும். சிறுத்தைப் புலிகள் நடமாடும் இடம். இத் திருத்தலத்திற்குப் போகிறவர்கள் நேபாள அரசிடம் இசைவு பெறுதல் வேண்டும். 50 பேருக்குக் குறைவான எண்ணிக்கையுள்ள திருத்தலப் பயணிகட்கு இசைவு வழங்கப் பெறமாட்டாது. ஒரு பாசுரத்தால் (4.7:9) மங்களா சாசனம் செய்துள்ளார்.

8. வைகுந்தம் : இதைத் 'திருநாடு' என்றும், 'பரமபதம்' என்றும், 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' (திருவாய் 2.8:4) என்றும், 'நித்திய விபூதி' என்றும் வழங்குவர் வைணவப் பெருமக்கள். ஆழ்வார்கள் 'பெரு நிலம்', 'பெரு விசும்பு', 'உம்பர் உலகு', 'விண்ணகம்', 'நாரணன் உலகு', 'இன்ப வீடு', 'அமரர் உலகம்', 'வானோர் கடிநகர்' என்றெல்லாம் பன்னி உரைப்பர்.

---

7. திருப்பாவை-5.

இந்த விளக்கம் வைணவ ஆகமங்களிலும் வேறு வைணவ நூல்களிலும் நுவலப்பெறும் நித்திய விபூதி பற்றிய விளக்கத்துடன் ஒத்துள்ளது.[8] இந்த உலகின் ஆனந்தம் அளவிறந்து ஒப்பற்றதாக இருக்கும் பான்மையது. இங்குத் திவ்விய கற்பகச் சோலைகள், நானாவித மலர்கள் நிறைந்த திவ்விய பூங்காக்கள், திவ்விய இளமரக்காக்கள், திவ்விய செங்குன்றங்கள், நீராடும் திவ்விய தடாகங்கள் முதலியவை நிறைந்து இருக்கும். இங்கு மிகவும் இடமகன்ற நிரதிசய ஆனந்தமயமான திருமாமணி மண்டபம் ஒன்று உண்டு. உபய விபூதியிலுள்ளவர்களும் ஒரு மூலையில் அடங்கும்படியான மிக விசாலமானது. இங்குள்ள பொருள்கள் யாவும் சுத்த சத்துவத்தாலானவை. இங்குக் காலம் நடையாடாது; காலை - மாலை, பகல் - இரவு, இன்று - நேற்று என்ற நிலைகள் இங்கு இல்லை. முன் - பின் என்ற நிலைதான் உண்டு. வீடுபேறு அடைவதற்கேற்ற உபாயங்களைக் கையாண்டு அவன் திருவருளைப் பெற்ற முமுட்சுகள்தாம் இந்த நீள் விசும்பினை அடைதல் முடியும். இவர்கள் இப்பூவுலகிற்குத் திரும்பி வருதல் இல்லை. பிரளய காலத்தில் இவர்கட்கு அழிவு இல்லை. இறைவன் திருவுள்ளப்படி எந்த உருவத்தையும் இவர்கள் மேற்கொள்வர்[9]. பெரியாழ்வார் ஒரு பாசுரத்தால் (4.7:9) மங்களா சாசனம் செய்துள்ளார்.

9. **துவரை :** இது துவாரகை. மேற்கிந்திய இருப்பூர்தி வழியில் ஜாம்நகருக்கும் ஒக்காவிற்கும் இடையிலுள்ள ஒரு நிலையம். எல்லா வசதிகளும் கொண்ட ஒரு சிறிய நகரம் (ஒக்காவிலிருந்து 18 கல் தொலைவிலுள்ளது).

---

8. Subbu Reddiar, N. Dr: Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar - P. 585.

9. இந்த உலகைப் பற்றிய முழு விவரங்களையும் வடநாட்டுத் திருப்பதிகள்-வைகுந்தநாதன் (14-வது கட்டுரை) காண்க.

நகரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவி லுள்ளது. நிலையத்தில் தோங்கா கிடைக்கும். அதன் மூலம் நகருக்குச் செல்லலாம். இராமாநுச கூடத்தில் தங்கலாம். திருக்கோயில் கடலுக்கு அருகில் கோமுதி நதி கடலுடன் கலக்குமிடத்தில் உள்ளது. இந்த இடத்தில் நீராடுவதற்கு ஒரு சிறிய கட்டணம் செலுத்தவேண்டும். நீராடி ஈர ஆடையுடன் கண்ணனைச் சேவிக்கலாம். கண்ணனை மிக அருகில் நின்று சேவிப்பதற்கும் ஒரு சிறிய கட்டணம் உண்டு. இந்த மூர்த்தி நின்ற திருக்கோலத்தில் உள்ளது. இங்கு வரும்போது பார்த்தனும் துரியோதனனும் கண்ணனைக் காண வந்த நிகழ்ச்சி நம் மனத்தில் எழும். குசேலர் கண்ணனைக் கண்ட நிகழ்ச்சியும் நம் நினைவிற்கு வாராமற் போகாது. ஒரு பாசுரத்தால் (4.7:9) மங்களா சாசனம்.

10. **அயோத்தி**[10] **:** இந்தத் திவ்விய தேசம் வாரணா சிக்கும் லக்னோவிற்கும் இடையில் கிழக்கு இருப்பூர்தி வழியில் உள்ள ஒரு நிலையம். ஊருக்குப் போவதற்குத் தோங்காக்கள் (ஒரு வகையான குதிரை வண்டிகள்) கிடைக்கும். சரயூநதியில் தீர்த்தமாடலாம். இராமனைச் சேவிக்கலாம். நாட்டுக்கோட்டை நகரத்தார் விடுதியில் பாதுகாப்புடன் தங்கலாம். ஒரு பாசுரத்தால் (4.7:9) மங்களா சாசனம்.

11. **வதரி :** இஃது இமயமலையில் கடல் மட்டத் திற்கு 10,380 அடி உயரத்தில் உள்ளது. அரித்துவாரத்தி லிருந்து 202 கல் தொலைவு. பதரி என்பது வடமொழியில் இலந்தை மரத்தின் பெயராகும். வதரிநாதன் எழுந்தருளி யிருக்கும் திருமலை முழுவதும் வதரியாகும்; அவன் எழுந்தருளியிருக்கும் இடம் வதரிகாச்ரமம் ஆகும். இலந்தைப் பழம் பெரிய பிராட்டியாரின் திருவுகப்பிற்

---

10. இத்திருத்தலத்தைச் செப்டம்பரில் (1968) சேவித் தேன். விவரம் வடநாட்டுத் திருப்பதிகள் - அயோத்தி நகர்க் கோமான் (மூன்றாவது கட்டுரை) காண்க.

குரியது. திருக்கோயில் முழுவதையும் சூழ்ந்த நிலையில் ஒரு பெரிய இலந்தை மரம் உள்ளதென்றும், கலியுகத்தில் அது மக்கட் கண்ணுக்குப் புலனாகாது என்றும் கூறுவர். இந்த மரத்தின் அடியில்தான் வதரி நாராயணன் சடை முடி கொண்ட தவசி வடிவில் இரு திருக்கைகளிலும் திருவாழி, திருச்சங்கு தாங்கிய நிலையிலும், மற்ற இரு கைகளிலும் அபய முத்திரையுடனும், பத்மாசனத்தில் இருந்த திருக்கோலத்தில் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம் கொண்டு சேவை சாதிக்கின்றான். ஒரு பாசுரத்தால் மங்களா சாசனம்.

**12. திருப்பேர் நகர்**[11] : 'பேரில் கிடந்தானை' (2.6:1) என்பது ஆழ்வார் மங்களா சாசனம். இத்திருத்தலம் திருச்சியிலிருந்து கீழ்த்திசையில் 22 கி. மீ. தொலைவில் உள்ளது. நாங்கள் அன்பில் அழகிய நம்பியைச் சேவித்துக் கொண்டு கொள்ளிடத்தைக் கடந்து இச்சந்நிதியை அடைந்தோம். 'அப்பக்குடத்தான் சந்நிதி' (கோயிலடி) என்றும் வழங்கி வருகின்றது. கல்லணைவரை திருச்சி யிலிருந்து பேருந்து வசதி உண்டு. அணையைத் தாண்டி வந்தால் கும்பகோணத்திலிருந்து திருவையாறு வழியாகக் கல்லணைக்கு வரும் பேருந்தில் சென்று இவ்வூரில் இறங்கலாம்.

**13. குடந்தை**[12] : கொங்கும் குடந்தையும் கோட்டி யூரும் பேரும் (2.7:2) என்பது மங்களா சாசனம்.

---

11. 1965 - செப்டம்பரில் இப்போது பந்தளத்தில் (கேரளம்) பணியாற்றும் என் இளைய மகன் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் M. D.யுடன் இதைச் சேவிக்கும் பேறு பெற்றேன். அப்போது அவன் 3ஆம் படிவத்திலிருந் தான்.

12. 1968 - ஜூன் திங்கள் என் துணைவி, மூத்தமகன் டாக்டர் எஸ். இராமலிங்கம், இளைய மகன் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன் இவர்களுடனும், மீண்டும் 1981-ல் மகா மகத்தின்போது என் துணைவியுடனும் இத்திருத் தலத்தைச் சேவிக்கும் பேறு பெற்றேன்.

கும்பகோணத்தில் உள்ளது. சார்ங்கப்பாணிப் பெருமாள் கோயில் என வழங்கப் பெறுவது. ஊர் நடுவே நடு நாயகம் போல் அமைந்துள்ளது. குடந்தையிலுள்ள எல்லாக் கோயில்களை விடவும் பெரியது. பதினொரு மாடங் களையுடைய கோபுரத்தைக் கொண்டது. பெருமாள் சந்நிதியும் முன் மண்டபங்களும் ஓர் இரதம்போல் அமைக்கப் பெற்றுள்ளன. மண்டபத்தின் நான்கு பக்கங் களிலும் சக்கரங்கள், இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகள் உள்ளன. இதனை நோக்கியே திருமங்கை யாழ்வாரும் இத்திருக்கோயில் எம்பெருமானைப் பற்றி மங்களாசாசனம் செய்துள்ள திருஎழுக் கூற்றிருக்கை என்னும் பிரபந்தத்தை 'இரதபந்தம்' என்ற சித்திரக் கவியாக அமைத்தனர் போலும். இது சரணாகதி தத்துவத்தை விளக்கும் பாசுரமாகும்.

14. **வேங்கடம்:** 'வேங்கடத் தெந்தாய்' (2.7:1) என்பது மங்களா சாசனம். இஃது இன்று ஆந்திர மாநிலத்தில் சேர்ந்துள்ளது.[13] பதினோராம் நூற்றாண்டில் தான் பெரும் புகழ் அடையத் தொடங்கியது. இராமாநுசர் திருவேங்கடமுடையான்பால் காட்டிய அக்கறையும் அவர் சொந்தப் பெருமையும் சிறப்புமாகச் சேர்ந்து திருக்கோயிலின் புகழை மிகவும் உயர்த்தி விட்டது. இராமாநுசர் திருமலைக்கு மூன்று முறை வந்ததாக அவர் வரலாற்றால் அறிகின்றோம். திருமலையில் இன்று நடைபெறும் வழிபாட்டு முறைகள் யாவும் இராமாநுசர்

---

13. 1948-மே மீ ஒருமுறை என் துணைவியுடன் (மக்கட் பேறு இல்லாத காலம்) சேவித்தேன். 1960-ஆகஸ்டு முதல் 1977-அக்டோபர் வரை அவன் திருவடி வாரத்தில் தமிழ் தொண்டாற்றினேன். அவன் இப்போது என் இதயத்தில் நிரந்தரமாகவே குடியேறியுள்ளான். 1983இல் கட்டி முடித்த 'வேங்கடம்' என்ற என் குடிசையிலும் வாழ்ந்து வருகின்றான்.

வகுத்தவையே என்று 'திருமலையொழுகு' என்ற நூலால் அறிகின்றோம். திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி[14] என்ற முதல் உரை வகுத்த திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருப்பதியைச் சேர்ந்தவர். வேங்கடத்தெம்மான் ஆழ்வார்களில் பதின்மரின் மங்களாசாசனம் பெற்றவன். இவை 'பதின்மர் செந்தமிழ்' என்று திருவேங்கடக்கலம்பக ஆசிரியரால் போற்றப் பெற்றுள்ளது. இவற்றுள் பெரியாழ்வார் வாக்கில் இடம் பெற்றவை ஏழு பாசுரங்கள்.

15. **கோவர்த்தனம்:** வடமதுரையிலிருந்து 14 கல் தொலைவு. அழகான தாழ்வான மலை. மலையின் நீளம் 7 கல்; சுற்றளவு சற்றேறக்குறைய 14 கல் தொலைவு. வல்லப நெறி புழக்கத்தில் உள்ளது. மலையின்மீது சிரீநாதர் ஆலயம் உள்ளது. இப்போது சிலை இல்லை. இஸ்லாமிய படையெடுப்பால் நேரிட்ட விளைவு இது. சிலை உதயபூரில் உள்ளது. கண்ணன் மாடு மேய்த்த இடம்; குடையாகக் கவித்து கல்மாரி காத்தான். பெரியாழ்வார் மங்களா சாசனம் (2.10:4; 3.5). சாலை உண்டு. இது **108 திருப்பதி** களில் சேரவில்லை.

16. **கண்ணபுரம்**[15]**:** நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. திருப்புகலூரிலிருந்து ஆற்றைக் கடந்து 1 கல் தொலைவு நடக்க வேண்டும். திருப்புகலூரிலிருந்து மாட்டு வண்டி, குதிரை வண்டிகள் கிடைக்கும். பெரியாழ்வார் மங்களா சாசனம் (1.6:8).

---

14. ஆறாயிரப்படியின்-தமிழாக்கம். நானும் டாக்டர் வரதாச்சாரியும் சேர்ந்து முடித்தது. 5 தொகுதிகளாக வெளி வர வேண்டிய இப்பனுவல் 'அவன் அருளால்' வெளி வருதல் வேண்டும்.

15. 1968 திசம்பரில் குடும்பத்துடன் சேவிக்கும் பேறு பெற்றேன்.

**17. ஆய்ப்பாடி:** வடமதுரையிலிருந்து 4 கல் தொலைவு. சிறிய ஊர். நந்தகோபன் கண்ணனை வளர்த்த இடம். பெரியாழ்வார் மூன்று பாசுரங்களால் (2.2:5, 2.3:7, 3.4:10) மங்களாசாசனம் செய்துள்ளார். இன்று அந்தத் திருக்கோயில் காணப் பெறவில்லை.

**18. திருப்பாற்கடல் :** வடதுருவத்திற்கு அப்பால் இருப்பதாகச் சொல்லப் பெறுகின்றது. மனிதர்கள் சென்று சேவிக்க முடியாத இடம், யோகியர், முனிவர், சூக்கும சரீரத்தையுடைய மனிதர்கள் சென்று சேவிக்கலாம். பெரியாழ்வார் மங்களாசாசனம் (4.10:5; 5.1:7; 5.2:10: 5.3:7; 5.4:9, 10)

**19. வில்லிப்புத்தூர்[16]:** இருப்பூர்தி நிலையம். மதுரையிலிருந்து நல்ல பேருந்து வசதிகள் உண்டு. சத்திரங்கள், உணவு விடுதிகள் உண்டு. பெரியாழ்வார் ஒரே பாசுரத்தில் (2.2:6) மங்களாசாசனம் செய்த திவ்வியதேசம்.

---

16. 1965-செப்டம்பரில் என் இளைய மகன் டாக்டர் இராமகிருஷ்ணனுடன் (M.D) இத்திவ்விய தேசத்தைச் சேவிக்கும் பேறு பெற்றேன்.

# 11. அந்தர்யாமித்துவ அநுபவம்

அந்தர்யாமித்துவத்தை ஸ்ரீவசனபூஷணம்,

**'பூகத ஜலம் போலே அந்தர்யாமித்வம்'**[1]

*[பூகதம்-பூமிக்குள்ளே இருக்கின்ற.]*

என்று கூறும். எம்பெருமான் நம் இதயத்தில் இருப்பினும், அவனைப் பற்ற வேண்டும் என்னும் விருப்பம் உண்டாகில், அந்த இருப்பு கட்புலனுக்குத் தோன்றாமையின் பயன் பட்டிலது; நீர் வேட்கையுற்றவன், மிக்க தொலைவு சென்று பருக வேண்டாதவாறு தான் நிற்கும் நிலத்தின் அடியிலேயே நீர் இருப்பினும், அந்நீர் அவ்வமயம் பருகுவதற்குப் பயன் படாது போன்றுள்ளது. இதனை நம்மாழ்வார்,

**கட்கிலீ! உன்னைக்**
**காணுமாறு அருளாய்.**[2]

என்று பேசுவர்.

பெரியாழ்வாருக்கு இந்த அநுபவம் எளிதில் கிட்டியது. இவருடைய தாய் தந்தையர் இவருக்கு இட்ட பிள்ளைத் திருநாமம் 'விஷ்ணுசித்தன்-விஷ்ணுவை எப்பொழுதும் தம் மனத்தை விட்டு அகலாது வைத்துக் கொண்டிருப்பவன்' என்பது. இவரும் திருப்பூந்தொண்டில் நந்தவனத்தைச் சீர் செய்யும்போதும், பூச்செடிகட்கு நீர் பாய்ச்சும்போதும்,

1. ஸ்ரீவச. பூஷ. 42.
2. திருவாய். 7.2:3.

பூக்களையும் திருத்துழாயையும் கொய்யும்போதும் அவற்றை மாலையாகத் தொடுக்கும்போதும் எம்பெருமான் வடபத்திர சாயியைச் (ஆலிலைப் பள்ளியான்) சதா நினைத்த வண்ணம் இருப்பார்; கனவு வந்தாலும் அதில் இந்நிகழ்ச்சிகளே குமிழியிட்டெழும். அர்ச்சாவதார எம் பெருமான்கள் அனைவருமே இவர் மனத்தில் அந்தர் யாமியாய் எழுந்தருளியிருப்பர். தம் அந்தர்யாமித்துவ அநுபவத்தை,

**உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை;**
**ஓவா தே'நமோ நாரணா!' என்று**
**எண்ணா நாளும் இருக்குஎசு சாம**
**வேத நாண்மலர் கொண்டுன பாதம்**
**நண்ணா நாள்அவை தத்துறு மாகில்**
**அன்றெ னக்கவை பட்டினி நாளே.**
**(பெரியாழ். திரு. 5.1:6)**

[உண்ணாநாள்-உண்ணாதொழிந்தபோது; ஓவாதே-இடைவிடாமல்; எண்ணா-அநுசந்திக்கப் பெறாத; நாள் மலர்-அப்போதலர்ந்த புதிய மலர்; நண்ணா-கிட்டப்பெறாத.]

என்று கூறுவர். 'தாரக போஷக போக்கியங்களெல்லாம் எம்பெருமான் திருவடிகளே' என்பதை இங்குத் தெளிவாக்கு கின்றார். "'இவ்வுலகத்தில் உள்ளார் அனைவரும் ஒரு பொழுது உண்ணாதொழிந்தால், பசியினால் மிகவும் தளர்ந்து வருந்துவர்; அடியேனது இயல்பு அப்படியன்று. திருமந்திரத்தை அநுசந்திக்கப் பெறாத நாளும், 'தொழுது முப்போதும் உன்னடி வணங்கித் தூமலர் த் தூய்த்தொழுது' (நாச். திரு. 1:9) ஏத்தப்பெறாத நாளுமே அடியேனுக்கு உண்ணாநாள். இவ்விரண்டும் அடியேனுக்கு வாய்க்கப் பெற்ற நாள் உண்டு களிக்கப்பெற்ற நாளாகும்' என்கின்றார். " 'சோற்றால் வயிற்றை நிரப்பினநாள் உண்டநாள்; அப்படி நிரப்பாத நாள் பட்டினிநாள்' என்ற

எண்ணம் என்றும் அடியேனிடத்தில் இல்லை. நான் வயிறார உண்டபோதிலும், திருமந்திர அநுசந்தானமும், ஸ்ரீபாதசேவையும் தட்டுப்படாதாகில் அந்நாள் எனக்குப் பட்டினி நாளே'' என்பது கருத்தாகும். இதனையே,

**நண்ணுவா ரிடரைக்**
**களைவானே!** (5.1:8)

*[நண்ணுவார்-தியானிப்பவர்.]*

என்று பிறிதொரு பாசுரத்தில் குறிப்பிடுவர்.

இந்த ஆழ்வாரின் அந்தர்யாமித்துவ அநுபவம் பல பாசுரங்களில் குமிழியிடுகின்றன. இவற்றில் ஆழங்கால் படுவோம்.

**அரவத்து அமளியி னோடும்**
**அழகிய பாற்கட லோடும்**
**அரவிந்தப் பாவையும் தானும்**
**அகம்படி வந்து புகுந்து**
**பரவைத் திரைபல மோதப்**
**பள்ளிகொள் கின்ற பிரானை** (5.2:10)

*[அரவத்து அமளி-பாம்புப் படுக்கை; அரவிந்தப் பாவை-பெரிய பிராட்டியார்; அகம்படி-உடம் பாகிய இடம்; பரவை-கடல்.]*

என்பது பாசுரம். இந்தப் பதிகத்தின் தொடக்கத்தில் 'பைக் கொண்ட பாம்பணையோடும்—மெய்க் கொண்டு வந்து புகுந்து வேதப் பிரானார் கிடந்தார்' (5.2:1) என்று அருளிச் செய்ததையொட்டி இறுதிப் பாசுரத்தில் முத்தாய்ப் பாக்குகின்றார். எம்பெருமானுக்குத் திருப்பாற்கடலிலும் திருவனந்தாழ்வானிடத்தும் மிக்க அன்பாதலால் அவற்றை விட்டுப் பிரிந்து வர மாட்டாமல் அவற்றையும் உடன் கொண்டு எழுந்தருளினன். இதில் மற்றுமுள்ள நித்தியசூரி களும் அடங்குவர் என்று கொள்ளத் தக்கது. இதில் **வியூக நிலை** எம்பெருமான் எழுந்தருளியிருப்பது பேசப் படுகின்றது.

இதே கருத்தை இன்னொரு பாசுரத்தில் சற்று வேறு விதமாக அநுபவிக்கின்றார்.

**அனந்தன்பாலும் கருடன்பாலும்**
**ஐதுநொய்தாக வைத்துஎன்**
**மனந்தனுள்ளே வந்துவைகி**
**வாழச்செய்தாய்; எம்பிரான்**
**நினைந்தென்னுள்ளே நின்றுநெக்குக்**
**கண்கள் அசும்பொழுக**
**நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்**
**நேமி நெடியவனே.** (5.4:8)

*[அனந்தன்-ஆதிசேடன்; கருடன் - பெரிய திருவடி; நொய்தாக - அற்பமாக; வைகி - பொருந்தி; நினைந்து நின்று-அநுசந்தித்துக் கொண்டு; நெக்கு-சிதிலமாக்கப் பெற்று; அசும்பு - கண் நீர்; சிரமம் தீர்ந்தேன்-இளைப்பாறப் பெற்றேன்; நேமி-திரு வாழி.]*

என்பது பாசுரம். எம்பெருமான் தன்னை அநுபவிக்கும் அந்தரங்க அடிமைகளான நித்திய சூரிகள் அனைவரிடத்தும் அன்பைக் குறைத்து தம்மைப் போக்தாவாகக் கொண்டு அந்த அன்பு முழுவதையும் தம் ஒருவர் பக்கலில் அமைத்தருளின பேருதவியைப் பேசுகின்றார். இதில், 'சென்றால் குடையாம்; இருந்தால் சிங்காதனமாம்' (முதல் திருவந். 53) என்பதுபோல் பலவிதப் பணிவிடைகளையும் செய்யவல்ல திருவனந்தாழ்வானிடத்திலும், உவந்து ஏறுதற்குரிய பெரிய திருவடியினிடத்துமே அன்பு குறைந்ததென்றால் மற்றையோரிடத்தது எப்படி என்பதைச் சொல்லத் தேவை இல்லை. இப்படி "என்னை வாழச் செய்தாய் எம்பிரான்" என்று கூறிய ஆழ்வாரை நோக்கி, "ஆழ்வீர்! இன்று வாழ்ந்ததாகக் கூறும் நீர் நெடு நாளாக இவ்விருள்தருமா ஞாலத்தில் திரிந்து அலமந்து மிகவும் இளைத்தீரே" என்று வினவுவதாகக் கொண்டு பின்

இரண்டு அடிகளில் அதற்கு விடை கூறுகின்றார். "ஐயனே! உன்னை இன்று நெஞ்சார நினைத்து, பிறகு 'நெஞ்சழியும்' (பெரிய. திருவந். 34) என்றபடி மனத்தின் தளர்ச்சியும் பெற்று, கண்களும் நீர் மல்கப் பெற்று, பிறகு, இவ்வாறான பயன்கள் பிறக்கைக்காக நீ செய்தருளின நன்றிகளைச் சிந்தித்துக் கொண்டே சகல தாபங்களும் தீரப் பெற்றேனாகையால் என் சிரமத்தைப்பற்றி உனக்குச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை" என்கின்றார்.

இதற்கு அடுத்த பாசுரத்தில் எம்பெருமான் தம்முடைய போகத் தானங்களையும் துறந்து தம்முடைய நெஞ்சையே தமக்கு உரிய இடமாக அங்கீகரித்ததாகச் செப்புகின்றார்.

**பனிக்கடலிற் பள்ளிக்கோளைப்**
**பழகவிட்டு ஓடிவந்துஎன்**
**மனக்கடலில் வாழவல்ல**
**மாயமணாள நம்பி**
**தனிக்கடலே தனிச்சுடரே**
**தனியுலகே என்றென்று**
**உனக்கிடமா யிருக்க என்னை**
**உனக்குரித் தாக்கினையே (5.4:9)**

[பனிகடல்-குளிர்ந்த திருப்பாற்கடல்; பள்ளிகோளை-பள்ளிகொள்ளுதலை; பழகவிட்டு - பழகியதாக விட்டு(மறந்துவிட்டு); உரித்து-சொந்தமாக ]

"திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளுதலை விட்டு அங்கிருந்து ஓடிவந்து என் இதயமாகிய கடலில் வாழவந்து விட்டாய். குளிர்ந்த திருப்பாற்கடல், ஒப்பற்ற ஆதித்திய மண்டலம், ஒப்பற்ற பரமபதம் இவை உனக்கு ஏற்ற இடங்களாக இருந்தும் அவற்றைத் துறந்து விட்டு மிகவும் நீசனான அடியேனை உனக்கு உரிய வசிக்கும் இடமாக்கிக் கொண்டனையே! இஃது என்ன சௌசீல்யம்!" என்கின்றார். அடுத்து,

வடதடமும் வைகுந்தமும்
மதில்துவ ராபதியும்
இடவகைகள் இகழ்ந்திட்டென்பால்
இடவகை கொண்டனையே (5.4:10)

[வடதடம்-திருப்பாற்கடல்; வைகுந்தம்-பரமபதம்; துவாரபதி-துவாரகை.]

என்கின்றார். 'இடவகைகள் இகழ்ந்திட்டு' என்றதில் நோக்கு: ஒருவன் தன் மனைவியை மறந்து மற்றொருத்தியைக் காதலித்தானாகில், பின்பு ஒரு காலத்தில் மனைவியை விரும்பி அவளுடன் புணரக் கருதக் கூடும். ஆனால் அவனே அவளிடத்துச் சில குற்றங் குறை காரணமாக அவளை இகழ்ந்து விட்டிட்டானாகில் மீண்டு ஒருகாலும் அவளை நெஞ்சில் நினையான்; அதுபோல எம்பெருமான் திருப்பாற்கடல் (வியூகம்), பரமபதம் (பரத்துவம்), துவாரகை (அர்ச்சை) முதலிய இடங்களைத் தானே அறிவு பூர்வமாக இகழ்ந்து விட்டு வந்தனனாதலால் இனி அவ்விடங்களை ஒருகாலும் நினைக்கவும் மாட்டான் என்பது ஆழ்வாரின் திருவுள்ளக் கருத்தாகக் கொள்ளலாம். பிறிதொரு பாசுரத்திலும் 'உருப்பொலிந்த நாவினேனை உனக்குரித்தாக்கினையே' (5.4:7) என்கின்றார்,

இவர்தம் அந்தர்யாமித்துவ அநுபவம் இன்னொரு விதமாகவும் வெளிப்படுகின்றது.

கடல்கடைந் தமுதம்கொண்டு
கலசத்தை நிறைத்தாற்போல
உடலுருகி வாய்திறந்து
மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன் (5.4:4)

[கடல்-திருப்பாற் கடல்; உருகி-உருகப் பெற்று; மடுத்து-உட்கொண்டு; நிறைத்து-தேக்கி.]

என்பது பாசுரம். "கடலைக்கடைந்து எடுத்த அமுதத்தினை கலசத்தினுள் நிறைத்தது போல உன்னை நான் என்னுள்ளே நிறைத்துக் கொண்டேன்" என்கின்றார். சம்சாரமாகிய

கடலினுள் ஈசுவரனாகிய அமுதத்தைத் தேர்ந்தெடுத்து ஆன்மாவாகின்ற கலசத்தில் ஆழ்வார் நிறைத்துக் கொண்டனர் என்பது கருத்து. பகவதநுபவாதிசயத்தினால் ஆன்மா வெள்ளக்கேடு படாமைக்காக இட்டகரை போன்ற சரீரமும் உருகப் பெற்றது. எனவே, இவ்வாழ்வாருக்கு பகவத் விஷயத்தில் ஆழங்கால் படுதல் அற்புதம் என்பது போதரும். 'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்து உகும்' (திருவாய் 9.6:2) என்று உருவற்ற நெஞ்சே உருகுகின்றதென்றால் உடலுருகுவதற்குச் சொல்ல வேண்டுமா?

> **ஆரா அமுதே அடியேன்**
> **உடலம் நின்பால் அன்பாயே**
> **நீராய் அலைந்து கரைய**
> **உருக்கு கின்ற நெடுமாலே (5.8:1)**

என்ற திருவாய்மொழி ஈண்டு அநுசந்திக்கத் தக்கது. 'உடலும் நெஞ்சும் உருகப் பெற்றதாகில், பின்னை இவ்வமுதத்தைத் தேக்கிக் கொள்வது எங்ஙனே?' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, 'விட்டுசித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலன்' என்பராதலால் 'அவ்வமுதம் வியாபித்தவிடமெங்கும் திருவுள்ளம் வியாபிக்கும் எனக் கொள்ளீர்' என்று பட்டர் அருளிச் செய்தனராம்.

ஆழ்வாரின் அந்தர்யாமித்துவ அநுபவம் இன்னொரு விதமாகவும் வெளிப்படுகின்றது.

> **பொன்னைக்கொண்டு உரைகல்மீதே**
> **நிறமெழ உரைத்தாற்போல**
> **உன்னைக்கொண்டுஎன் நாவகம்பால்**
> **மாற்றின்றி உரைத்துக்கொண்டேன்**
> **உன்னைக்கொண்டு என்னுள்வைத்தேன்**
> **என்னையும் உன்னில்இட்டேன் (5.4:5)**

*[நிறம் எழ-நிறம் அறிய: நாஅகம்பால்-நாவினுள்; என்னுள்-நெஞ்சினுள்; உன்னில் இட்டேன்-உனக்கு அடிமையாக்கினேன்.]*

முன்னர் எம்பெருமானுக்கு அமுதம் எடுத்துக்காட்டாகக் கூறின ஆழ்வார். இங்குப் பொன்னை எடுத்துக்காட்டாக்கு கின்றார். ''உலகில் பொன்னைத் தேர்ந்தெடுப்பவர்கள் அதனை உரை கல்லில் இட்டு உரைத்துப் பார்ப்பர்; அதுபோல் பொன் போன்ற உன்னை அற்பசாரங்களில் மண்டின என் நாக்காகிய உரைகல்லில் இட்டு உரைத் தேன்; நல்ல பொன்னைக் கெட்ட உரைகல்லில் இட்டு உரைத்தால் அப்பொன்னினுடைய மாற்று குறைவது போல், நீ என் சழக்கு நாக்கில் இட்டு உரைக்கப்பட்ட மையால் மாற்று அழியப் பெற்றாய்'' என்கின்றார். 'உன்னைக் கொண்டு... உரைத்துக் கொண்டேன்'— என்ற இரண்டாம் அடி நைச்சியாநுசந்தானம்; அதாவது தாழ்வை வாய்விட்டுக்கூறுதல். ''யோகியர்க்கும் அரியனான உன்னை என் நெஞ்சினுள் அமைத்தேன் (அந்தர்மியாத் துவம்); நீசனான அடியேனையும் உனக்கு சேஷப் படுத்தினேன்; அதாவது அடிமையாக்கினேன்'' என்கின்றார் மூன்றாம் அடியில் இஃது ஆன்ம சமர்ப்பணம்.

—நன்றாக.

நான் உன்னை அன்றிலேன்
　　கண்டாய் நாரணனே!
நீஎன்னை அன்றி
　　இலை (நான். திருவந்.7)

என்ற திருமழிசையாழ்வார் கூறுகின்றபடி 'நாராயண சப்தார்த்தம்' இங்கு விவரிக்கப்பட்டதாகும்.

அடுத்த பாசுரத்திலும் ஆழ்வாரின் அந்தர்யாமித்துவ அநுபவம் தொடர்கின்றது.

உன்னுடைய விக்கிரமம்
　　ஒன்றொழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால்
　　சுவர்வழி எழுதிக்கொண்டேன் (5.4:6)

[விக்கிரம்-வீரச்செயல்; ஒழியாமல்-தப்பாமல்; சுவர் வழி-சுவரில் ஓவியம் எழுதுவதுபோல்.]

என்பது பாசுரம். முன் பாசுரத்தில் 'உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்' என்பதனை இப்பாசுரத்தில் வைத்த முறையைச் செப்புகின்றார். 'மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா' என்று திருமொழியைத் தொடங்கினமை யால், அந்த மல்லவதம் முதலிய சிறுச் சேவகங்களை யெல்லாம் தம் நெஞ்சில் நன்கு அமைத்ததாகப் பேசு கின்றார். 'ஒன்றொழியாமல்' என்பதன் கருத்து: வியாசர், வான்மீகி முதலிய முனிவர்கட்கும் விஷயமாகாத விக்கிர மங்கள் தமக்கு விஷயமான படியைக் குறிப்பதற்காக சீமாலிகன் வரலாறும் (2. 7: 8), இராமனைப் பிராட்டி மல்லிகை மாலையில் கட்டின நிகழ்ச்சியும் (3.10:2) மற்ற முனிவர்களின்றி இவ்வாழ்வார் ஒருவருக்கே ஞான விஷய மாயினவாறு கருதத் தக்கவை. ஆழ்வார் எம்பெருமானால் 'மயர்வற மதி நலம்' அருளப்பெற்றமையால் அவனுடைய விக்கிரமங்கள் அனைத்தையும் குறையறக் கண்டு அநுபவித் தமை அறியத்தக்கது.

ஆழ்வாரின் அந்தர்யாமித்துவ அநுபவம் இன்னொரு திருமொழியாலும் (5.2) அறிய முடிகின்றது. இத் திருமொழியின் ஒவ்வொரு பாசுரமும் 'பண்டன்று பட்டினம் காப்பே' என்று முடிகின்றது. பட்டினம் என்பது இராஜதானி என்பது பொருள். ஆன்மா எம்பெருமானின் இராஜதானி யாகின்றது. எம்பெருமான் ஆழ்வார்க்குத் தன்மீது அமைந்த அவாவின் மிகுதியைப் பல வகைகளால் அறிந்து அவருடைய திருவுள்ளத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டருளினபடியையும் அதனால் ஆழ்வார் இனி நோய்கள் முதலியவை தம்மை அணுகவொண்ணாதபடி அவற்றை ஒறுத்தருளினபடியையும் கூறுவது இத்திருமொழி. இனி பாசுரங்களில் ஆழங்கால் படுவோம்.

ஆழ்வார் பேசுகின்றார் : "வேள்விக்காக நெய் வைத்திருக்கின்ற குடத்தை எறும்புகள் முற்றுகையிட்டுக் கொண்டிருப்பதுபோல, என்னை வசப்படுத்தி என் உடலையே இருப்பிடமாகக் கொண்டு நிலைத்து வாழும் நோய்களே! இனி உங்களுக்கு இங்கு இடம் இல்லை. எம்பெருமான் தனது அரவத்து அமளியோடும் பள்ளிக் கொண்டிருக்கின்ற இடமாயிற்று என் உடல். இந்த எம்பெருமானுடைய பட்டினமாகிய இவ்வான்மா பழைய நிலைமையை உடையதன்று; இப்போது அவனால் காக்கப் பெறுகின்றது. நீங்கள் பிழைக்க வேண்டுமானால் என்னை விட்டு வேறிடத்திற்குப் போய்விடுங்கள்" (1). "பாம்பணை யோடு வந்து புகுந்து கிடந்தார்" என்பதனால் நிரந்தரமாக எழுந்தருளினமை தெளிவாகும்.

"வலிய பாவங்களின் மூலமாக வளர்ந்த நோய்களே! உங்களுக்குக் கூட ஒரு வல்வினை வந்துள்ளது. இங்கு சிங்கப்பிரான் எழுந்தருளியிருப்பதை வந்து நோக்குங்கள். உறைப்பான காவல் பெற்ற என்னிடம் இனி நீங்கள் தங்க முடியாது. அவமானங்களுக்கு ஆளாகாதபடி பிழைத்துப் போய்விடுங்கள். இனி இங்குத் தலை காட்டாதீர்கள்" (4).

"நெடுநாட்களாகத் தங்கியிருந்து அடியேனை வருந்தச் செய்கின்ற நோய்களே, உங்கட்கு ஒரு வார்த்தை: நீங்கள் இப்போது குடியிருக்கும் எனது உடல் கண்ண பிரான் எழுந்தருளுகைக்கு இடமான திருக்கோயிலாயிற்று. முன்னைய நிலைமைக்கும் இன்றைய நிலைமைக்கும் வேறு பாடு காணுங்கள். சம்சார சாகரத்தில் ஆழங்கால் படச் செய்த கொடிய வினைகளே!" என்று அந்த நோய்களுக்குக் காரணமாகிய பாபங்களை நோக்கி, "உங்கட்கு உறுதியாக ஒன்று சொல்லுகின்றேன். இனி உங்கட்கு இங்கு ஒருவித பற்றும் இல்லை. கண்ணன் காவலில் என்னை நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது" (6).

இங்ஙனம் நோய்களையும் வல்வினைகளையும் நோக்கிப் பேசின ஆழ்வார் இந்திரியங்களை விளித்துப் பேசுகின்றார்:

**மாணிக் குறளுரு வாய**
**மாயனை என்மனத் துள்ளே**
**பேணிக் கொணர்ந்து புகுத**
**வைத்துக்கொண் டேன்பிறி தின்றி**
**மாணிக்கப் பண்டாரம் கண்டீர்;**
**வலிவன் குறும்பர்கள் உள்ளீர்!**
**பாணிக்க வேண்டா; நடமின்,**
**பண்டன்று பட்டினம் காப்பே (5).**

[மாணி-பிரமச்சாரி; உரு-வடிவு; மாயன்-எம்பெருமான்; பேணி-ஆசைப்பட்டு; மனம்-நெஞ்சம்; புகுத - புகுந்திருக்கும்படி; பிறிது - வேற்றுமை; குறும்பர்-இந்திரியங்கள்; பாணிக்க-தாமதிக்க]

என்பது பாசுரம். இதில், ''வாமனனாய் அவதரித்தவனும், மாணிக்க நிதி போன்ற இனியனுமான எம்பெருமானை இன்று என் இதய கமலத்தில் நிலைநிறுத்திக் கொண்டேன். ஆகவே, பொல்லாத இந்திரியங்களே! இனி நீங்கள் இங்கு நசை வைக்கவேண்டியதில்லை; தாமதிக்காமல் வெளியேறுங்கள்'' என்கின்றார். இந்திரியங்கள் அசேதநமாயினும் கொடுமை புரிவதில் சேதநரிலும் விஞ்சி இருத்தலால் 'குறும்பர்கள் உள்ளீர்' என்று உயர்திணையாகக் கூறினர். 'உள்நிலாவிய ஐவர்' (திருவாய். 7.1:1) என்று நம்மாழ்வாரும், 'கோ ஆய் ஐவர்' (பெரி. திரு. 7.7:9) என்று திருமங்கை மன்னனும் இந்திரியங்களை மரியாதைப் பன்மையுடன் விளித்தமை ஈண்டு நினைக்கத்தக்கது. எம்பெருமானை 'மாணிக்கப் பண்டாரம்' என்றது—அது போல பெறுதற்கரியவன் என்பதை விளக்குகைக்காக.

இனி, பொதுநிலையில் பெற்ற அந்தர்யாமித்வ அநுபவத்தைக் காண்போம்.

'துப்புடையாரை' (5.2) என்ற திருமொழியில் 'எல்லையில் வாசல் குருகச் சென்றால் எற்றி நமன்தமர் பற்றும் போது, நில்லுமின் என்னும் உபாயம் இல்லை' (3) என்ற

குறை தீர இன்று அச்சங் கெட்டபடியை அருளிச் செய்கின்றார். "யமலோகத்திலுள்ளவன் சித்திரகுப்தன் என்ற கணக்கப்பிள்ளை. அவன் இப்பூவுலகிலுள்ள எல்லா ஆன்மாக்களின் பாபங்களைக் கணக்கிட்டு எழுதுவதற்காக நியமிக்கப் பெற்றவன். அவன் தன் தெய்விகத் தன்மையால் சூரியன், சந்திரன், வாயு, அக்கினி, ஆகாயம், பூமி, வருணன், இதயம், யமன், பகல், இரவு, காலை, மாலை, அறம் என்ற பதினான்கு பேர்கள் சாட்சியாக ஒவ்வொருவரும் செய்த தீவினைகளையும் எழுதிவைப்பதுபோல் ஒரு சுவடியில் என் தீவினைகளையும் எல்லாம் எழுதி அதன்மேல் யமனுடைய பொறி ஒற்றி (Seal அல்லது முத்திரை) அதனைப் பாதுகாப்பாக வைத்திருந்தான். இதனை எமதூதர்கள் எடுத்துச் சுட்டுவிட்டு ஓடி ஒளிந்துகொண்டனர். இதற்குக் காரணம், எம்பெருமானுக்கு நான் அடியனானதுதான்" என்கின்றார் (2).

"திருமாலே, உன்னை 'நாராயணா!' என்று கூப்பிடுகின்றேனேயன்றி, நன்மை தீமை என்ற ஒன்றையும் அறிகின்றேன் அல்லன். என்பால் இயல்பாகவுள்ள அற்பத்தனத்தினாலும் உன்னைக் குறித்து வஞ்சகச் சொற்களைக் கூறிப் புகழவும் செய்யவில்லை. உன்னை இடைவிடாமல் மனனம் செய்யத்தக்க வழிகளில் ஒன்றையும் அறிந்தவன் அல்லன். ஒரு நொடிப்பொழுதும் ஒழிவின்றி 'நமோ நாராயணாய' என்று சொல்லிக் கொண்டிருக்கின்றேன். ஒரே ஒரு மிடுக்கு என்பால் உண்டு. அஃது என்னவெனில்: உன் திருக்கோயிலில் வாழும் வைணவன் என்ற நிலைதான்" என்கின்றார் (3).

அடுத்து,

வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை
மெத்தை யாக விரித்துஅதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காண லாங்கொலென் றாசையி னாலே

**உள்ளஞ் சோர உகந்தெதிர் விம்மி**
**உரோம கூபங்க ளாய்கண்ண நீர்கள்**
**துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்;**
**சொல்லாய் யான்உன்னைத் தத்துறு மாறே. (7)**

*[வெள்ளை வெள்ளத்தின் மேல்-பால் மயமான பெருக்கில்; பாம்பு - அனந்தாழ்வன்; கள்ள நித்திரை-யோக நித்திரை; எதிர்விம்மி-மாறாகக் கலாங்கி; உரோம கூபங்கள் - மயிர்க்குழிகள்; துள்ளம்-துளிதுளியாக; அணை-படுக்கை; துயில்-உறக்கம்; தத்துறும் ஆறு-கிட்டும் வழி]*

*என்பது பாசுரம். "திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் மீது சயனித்துக்கொண்டு அறிதுயில் கொள்ளும் நிலையை நேரில் காணலாம் என்ற ஆவலடியாக நெஞ்சு அழியப் பெற்று, சிறந்த பேரன்பின் காரணமாக வாய் திறந்து பேச வொண்ணாதபடி ஏங்கி உடம்பெல்லாம் மயிர்க் கூச்செறியும்படி 'நமது எண்ணம் தலைக்கட்டப் பெறவில்லையே' என்ற மனச்சோர்வால் கண்ணீர் துளித்துளியாக சோரப் பெறுகையால், இதுவே சிந்தையாய் படுக்கையில் சாய்ந்தால் கண்ணுறங்கப் பெறாத அடியேன் உன்னை எவ்வாறு கிட்டுவேன்? அந்த வழியை அருளிச் செய்வாய்" என்கின்றார்.*

**பாலாழி நீகிடக்கும் பண்பேயாய் கேட்டேயும்**
**காலாலும் நெஞ்சுழலும் கண்சுழலும்**
—(பெரி. திருவந். 34)

*என்றாற்போல எம்பெருமானை நினைத்தவண்ணம் இருப்பதால் இஃது அந்தர்யாமித்துவ அநுபவமாகின்றது.*

*"உலகங்கட்குக் காரணமானவனே! உன்னையே தியானிப்பவர்களின் துன்பங்களைப் போக்குபவனே! மது என்ற அசுரனை நிரசித்தவனே! கஜேந்திரனுடைய துயர்*

தீர்த்தவனே! குன்றம் ஏந்தி குளிர் மழை தடுத்து ஆயர் கட்கும் ஆநிரைகட்கும் அபயம் அளித்தவனே! குவலயா பீடத்தை முடித்த பிரானே! துதிக்க முடியாத அளவற்ற புகழுடையவனே! எமக்குத் தலைவனே! அடியேன் நின்னை நாடோறும் அநுசந்திக்கையாகின்ற நன்மையை அருள வேண்டும்'' (8) என்பதில் பலநிலை எம்பெருமான்கள் இவர்தம் சிந்தையில் அந்தர்யாமியாக எழுந்தருளி யிருப்பதைக் காண முடிகின்றது.

''இரட்சகன் என்று நம்பத் தகுந்தவனே! வாயார நின்புகழ் பாட வல்லவர்கட்கு இரட்சகனே! நரசிம்மனாக அவதரித்தவனே! நித்திய சூரிகட்குத் தலைவனே! கால தத்துவத்தை ஆள்பவனே! திருவாழியை ஏந்திக் கொண்டு கஜேந்திரனை முதலை வாயினின்று விடுவித்தவனே! பாற்கடலைக் கடைந்து தேவர்கட்கு அமுதளித்தவனே! எம்பெருமானே! அடியேனை ஆட்கொண்ட தேன்போல் இனியவனே! ஏழையேன் இடரைக் களைந்தருள வேண்டும்'' (9) என்பதிலும் அந்தர்யாமித்துவ அநுபவம் பிச்சேறி நிற்பதைக் கண்டு மகிழலாம். ஏனைய திருமொழி களைவிட இத் திருமொழியில் எம்பெருமானுடைய திருநாமங்கள் சிறப்பாக அருளிச் செய்யப் பெற்றிருப் பதனால் சகஸ்ரநாம அருச்சனைக்குச் சமமாகப் பிரபத்தி பண்ணுதலாகக் கொள்வது ஏற்கும். இங்ஙனம் 'விட்டு சித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலனைக்' கண்டு மகிழ்கின்றோம்.

# 12. பாசுரங்களில் அகப்பொருள் கலப்பு

கண்ணபிரானுடைய திருவவதாரம் தொடங்கி அவனுடைய எல்லாத் திருக்குணச் சேஷ்டிதங்களையும் பிறர் பாவனை கொண்டு அடைவே அநுபவித்து மகிழ்ந்த ஆழ்வார் மற்றை ஆழ்வார்களைப் போலவே இவரும் பெண் பாவனையில் — நாயக - நாயகி பாவனையில் (தலைவன் — தலைவி உறவு) அநுபவிக்கத் திருவுள்ளம் கொள்ளுகின்றார். அந்த அநுபவம் அப்பொழுதே தமக்குக் கைகூடப் பெறாமையாலே ஆற்றாமை மீதூர்ந்து தளர்ந்து தானான தன்மையழிந்து ஓர் ஆய மகளின் தன்மையை அடைகின்றார். அப்பொழுது தாம் படும்பாட்டைத் தம் வாயாற் சொல்ல வலியின்றித் தம் தாயார் சொல்லும் பாசுரங்களாக நடைபெறுகின்றன இரண்டு திருமொழிகள். தலைவன் — தலைவி உறவே ஏனைய எட்டு உறவுகளிலும் தலைசிறந்தது; உயிராயது. இந்த முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும், சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாசுரங்கள் யாவும் அகப்பொருள் பற்றியவை. வைணவப் பெருமக்கள் சங்க கால நெறியையொட்டி ஓர் அகப் பொருள் தத்துவத்தை அமைத்துக் காட்டிய பெருமையைப் பெறுகின்றனர். புருடோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்கு முன்னர் உலகிலுள்ள ஆன்மாக்கள் யாவும் பெண் தன்மையினை அடைந்து நிற்கும் என்பது அவர்கள் கண்ட தத்துவமாகும். இத்தத்துவமே ஆழ்வார்க்குத் தலைமகளாகும் தன்மை அமைவதற்கு ஏதுவாகின்றது.

வைணவர்களிடையே நிலவும் ஐதிகம் ஒன்று உண்டு. தண்டகாரண்ய முனிவர்கள் இராமபிரானது பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆய மங்கையர்களாகிக் கண்ணனைக் கூடினர் என்பதுதான் அந்த ஐதிகம். ஆழ்வார்கள் அப்படியின்றி அப்பொழுதே பெண்மை நிலையை அடைந்து எம்பெருமானாகிய புருடோத்தமனை அநுபவிக்கக் காதலிக்கின்றனர். ஆண், பெண் நிலையை அடைதல் கூடுமோ எனில்: கூடும். கூறுவேன்:

> கண்ணில் காண்பரேல்
> ஆடவர் பெண்மையை
> அவாவும் தோளினாய்![1]

[காண்பரேல்-காண்பார்களாயின்; பெண்மையை-பெண் தன்மையை; அவாவும்-விரும்பும்].

என்பது விசுவாமித்திரரின் கூற்று. தாடகைவதம் தொடங்குவதற்கு முன் இராமனது தோளின் வலிமையை உற்று நோக்குகின்றான். அவனது தோளின் அழகு அவரது கண்ணை வசீகரிக்கின்றது. அதன் சிறப்பு நோக்கி, 'ஆடவரும் மனத்தால் மகளிர் தன்மையை அடைந்து அத் தோளினால் தழுவப் பெறல் வேண்டும் என்று காதல் கொள்ளுமாறு உள்ளவனே!' என்கின்றார். ஈண்டு முற்றத்துறந்த முனிவராகிய விசுவாமித்திரரும் இராமன் அழகில் துவக்குண்டு ஈடுபட்டதைக் காட்டியவாறு.

திருவரங்கப் பெருமானைக் கிட்ட வேண்டும்படியான ஆசை உண்டாகின்றது திவ்விய கவிக்கு. ஆற்றாமை மீதூர்ந்து தளர்கின்றார்; அத்தளர்ச்சியாலே தாமான தன்மை அழிந்து ஆண், பெண் ஆகும் படியான நிலைமை தோன்றி ஒரு பிராட்டி நிலையை அடைகின்றார். பேசுகின்றார்:

---

1. பாலகாண். தாடகைவதை-41.

'வாராக வாமனனே! அரங்கா!
வட்ட நேமிவல
வாராக வாவுன் வடிவு
கண்டான் மன்மதனுமட
வாராக ஆதரம் செய்வன்' [2]

[வாராக - வராக அவதாரம் செய்தவன்; நேமி - சக்கராயுதம்; ராகவர் - ரகுகுல திலகனே; வடிவு - திருமேனி அழகு]

என்பது பாசுரம். "அழகிற் சிறந்த ஆண் பாலான மன்மதனும்[3] புருடோத்தமனான நின் திருமேனி அழகினைக் கண்டு தான் பெண் உருக்கொண்டு நின் அழகின் நலனை அநுபவிக்க எண்ணுவானாயின், (பெண் பாலான என் போன்ற மடமங்கையர்க்குப் பிழைக்கும் வழி என்னே)" என்பது இதன் கருத்து.

இன்னும்,

'கண்ணனுக்கே
ஆம்அதுகாமம்: அறம்பொருள் வீடுஇதற்(கு)
என்று உரைத்தான்
வாமனன் சீலன் இராமாநுசன்
இந்த மண்மிசையே [4]

[கண்ணன் - எம்பெருமான்; ஆம் அது - உண்டாகும் அது; அறம் பொருள் வீடு - தர்ம அர்த்த மோட்சங்கள்; இதற்கு என்று - இந்தக் காம புருஷார்த்தத்திற்கு சேஷ பூதங்கள் என்று; வாமனன் சீலன் - வாமன அவதாரம் செய்த

2. அஷ். பிரபந்: திருவரங்கத் தந்தாதி - 60.

3. மந்மதன் - வடமொழிப் பெயர்; (ஆசை நோயால்) மனத்தைக் கலக்குபவனென்று பொருள்படும்.

4. இராமா. நூற். - 40.

பெருமானோடு ஒத்த சீலத்தையுடையவரான யதிராசர்; மண்மிசை - இந்த உலகத்தில்]

என்ற இராமாநுச நூற்றந்தாதிப் பகுதியின் பொருளும் காண்க. "காமம் என்பது பகவத் விஷய காமம்; விஷயாந்தரங்களைப் பற்றின காமம் சிற்றின்பமாதலால் அது புருஷார்த்தமன்று; பேரின்பமாகிய பகவத் விஷய காமமே காமம். இதுவே புருஷார்த்தம். மற்ற மூன்று புருஷார்த்தங்களும் காம புருஷார்த்தத்திற்குச் சேஷப் பட்டவைகள்; காமமே பிரதான சேஷியான புருஷார்த்தம் என்று உலகத்தார் எல்லார்க்கும் உபதேசித் தருளினார் எம்பெருமானார்" என்பது இதன் பொருள். திருமங்கை மன்னனின் "காமத்தின், மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்" (பெரிய திருமடல் - 21) என்ற அருளிச் செயலும் கண்டு நோக்கத் தக்கது — இவற்றால் ஆடவர் பெண் தன்மை அடைவதை அறியலாம்.

ஆழ்வார்களாகிய ஞானச் செல்வர்களிடத்தில் சில சமயம் ஞானம் தலைதூக்கி நிற்கும்; சில சமயம் பிரேமம் (காதல்) தலைதூக்கி நிற்கும். இந்த இரண்டு நிலைகளி லிருக்கும் பொழுதும் அவர்கள் பாசுரங்கள் அருளியுள்ளனர். இதனை,

**ஞானத்தில் தம்பேச்சு;**
**பிரேமத்தில் பெண்பேச்சு** [5]

என்று ஆசாரிய ஹிருதயம் என்ற நூல் குறிப்பிடும். அதாவது, ஞானநிலையில் இருக்கும்பொழுது அவர்கள் தாமான தன்மையில் நின்று பேசுவர். பிரேம நிலை யிலிருக்கும் பொழுது பிராட்டி நிலையையடைந்து வேற்று வாயாலே பெண் பேச்சாகப் பேசுவர். இந் நிலையில் ஆழ்வார்களின் ஆண்மைப் பெயர் நீங்கி ஆழ்வார் நாயகி என்ற பெண்மைப் பெயரால் வழங்கப் பெறுவர்.

---

5. ஆசா. ஹிரு. - 118.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக்கும் பொழுது அவர்கள் தோழி, தாய், மகள் என்ற மூவருள் ஒருவர் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுக நிகழ்த்துவர். இந்த மூன்று நிலைகட்குத் தத்துவமும் உண்டு.

> 'சம்பந்த உபாய பலங்களில் உணர்த்தி துணிவு பதற்றம் ஆகிய பிரஜ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி, தாயார், மகள் என்று பேர்' [6]
>
> [பிரஜ்ஞாவஸ்தை - மூன்று காலங்களையும் அறியும் அறிவின் நிலை]

என்பது ஆசாரிய ஹிருதய ஸ்ரீ ஸூக்தி. இதன் காரணமாகப் பாசுரங்களும் தோழி சொல்வதுபோல வடிவெடுத்துத் **தோழி பாசுரம்** என்றும், தாய் சொல்வதுபோல் அமைந்து **தாய்ப் பாசுரம்** என்றும், மகள் பேசுவதுபோல் உருக் கொண்டு **மகள் பாசுரம்** என்றும் வழங்கப் பெறும். இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுகள் நிகழ்ந்து பாசுரங்கள் வெளி வந்தாலும் பாசுரங்கள் பேசுபவர்கள் ஆழ்வார்களேயாவர். இஃது அந்தந்தப் பதிகங்களின் பல சுருதிப் பாசுரங் களால் தெளிவாகும். ஓர் ஆறானது பல வாய்க்கால் களாகப் பெருகினாலும் அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்கும் என்பதை அறிந்தால், ஆழ்வார்களின் சொல் மாலைகள் மூன்று நிலைமைகளாக வழிந்து புறப் பட்டாலும், அவை ஆழ்வார்களின் பாசுரங்களாகவே தலைக்கட்டி நிற்கும் என்பது தெளிவாகும்,

இங்ஙனம் மூன்று நிலைகளிலும் திருமொழிகள் நடை பெறுவதற்கு உள்ளுறை (ஸ்வாபதேசார்த்தம்) கண்டவர்கள் வைணவப் பெருமக்கள்.

**தோழி :** தோழியாகப் பேசுவதற்குக் கருத்து — தலைமகனையும் தலைமகளையும் இணக்கிச் சேர்ப்பவள்

---

6. ஆசாரி, ஹிரு - 133.

தோழி. திருமந்திரத்தில் (ஓம் + நமோ + நாராயணாய) 'ஓம்' என்ற பிரணவத்தினால் எம்பெருமானோடு இந்த ஆன்மாவுக்குச் சொல்லப்பெற்ற அநந்யார்ஹ சேஷத்துவம் (மற்றவருக்கில்லாமல் எம்பெருமானுக்கே உரியதாயிருக்கும் அடிமைத் தன்மை) முதலிய சம்பந்தங்களை உணருகையே அவ்வெம்பெருமானோடு இவ்வான்மா சேருகைக்கு ஏது வாகையாலே அச்சம்பந்த ஞானமாகின்ற பிரஜ்ஞாவஸ்தையே தோழி என்பது. இங்ஙனம் ஆன்மாக்கள் யாவும் ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமை என்ற உணர்வுடன் கூடிய மனநிலை தோழி கூற்றாக வெளியிடப் பெறுகின்றது என்பது கருத்து.

**தாய்:** பெண் பிள்ளையைப் பெற்று வளர்ப்பவள் தாய். அப்பெண் தக்க வயதை அடைந்ததும் பேராண் மைக்கு இருப்பிடமாகவுள்ள தலைவனிடம் கழிபெருங் காதலையுடையவளாகின்றாள். அவன் இருக்கும் இடத்தைப் போய்ச் சேரவேண்டும் என்று பதறுகின்றாள். ஆனால் அவளது பதற்றத்தைத் தடுத்து நிறுத்துகின்றாள் தாய். தலைவனே தலைவி இருக்கும் இடத்திற்கு வர வேண்டும் என்பது நடைபெற வேண்டிய ஒழுங்குமுறை என்றும், அங்ஙனமின்றித் தலைவியே தலைவனிருக்கும் இடத்திற்குப் புறப்படுவது குல மரியாதைக்குச் சிறிதும் பொருந்துவதன்று என்றும் நினைப்பவள் தாய். திரு மந்திரத்தில் நம: பதத்தில் கூறப்பெற்ற உபாயமாகிய அறிவு நிலையைக் (பிரஜ்ஞாவஸ்தையை) குறிப்பவள் தாய். தாய் பாவனையில் பேசுகின்ற பாசுரங்கள் ஈசுவர பாரதந் திரியத்தையும் அவனே உபாயமாகின்ற கருத்தையும் தெரிவிக்கின்றன.

**மகள்:** பெற்றோர் அல்லது உறவினர் கூட்டாமலேயே தலைவனுடன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து, தலைவனு டைய ஒப்புயர்வற்ற வனப்பு முதலியவற்றில் ஈடுபட்டு இருப்பவள் மகள்; குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல்

'அவனைக் கிட்டியல்லது உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்' என்னும் பதற்றத்தை உடையவள் இவள். காலக் கழிவினை இவளால் பொறுக்க முடிவதில்லை. திருமந்திரத்தின் பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் எல்லோருக்கும் தலைவனாய் (சேஷியாய்) அறுதியிடப் பெற்றவன் எம்பெருமான். எல்லோருக்கும் புகலிடமாக இருப்பவனும் அவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை உணரப் பெற்ற பின்பு, 'நாராயணாய' என்ற சொல்லினால் கூறப் பெற்றுள்ள எம்பெருமானுடைய சொரூபம் ரூபம் குணம் விபூதி முதலியவற்றின்[7] சேர்க்கையாலுள்ள பெருமையை நினைந்து மகிழ்பவள் இவள். எம்பெருமான் சாத்தியோபாயமாக இருந்தால் தான் செய்த சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகின்ற பேறு கிடைக்கக் கூடும் என்று பொறுத்திருக்கலாம். ஆனால் அவன் சித்தோபாயமாக இருப்பவன். அதனால் அவனைத் தாமதித்து அநுபவிப்ப தற்குக் காரணம் இல்லை; 'அவனே உபாயம்' என்ற கோட் பாட்டையும் மீறித் தான் நினைத்த பேற்றினை உடனே பெறவேண்டும் என்ற பதற்றத்தை உடையவளாக இருக் கின்றாள் இவள். இந்த மனநிலைதான் 'மகள்' (தலைவி) என்று குறிப்பிடப் பெறுகின்றது. மகள் பாவனையில் பேசும் பாசுரங்கள் யாவும் இந்த நிலையினையே குறிக்கின்றன.

வேதாந்தங்களில் குறிப்பிடப் பெறும் பக்தி இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்பதை அறிகின்றோம். இவர்கள் மாதவன்மீது கொள்ளும் காமம்

---

7. சொரூபம்—ஈசுவரனின் திவ்வியாத்தும சொரூபம்; ரூபம்—பகவானுடைய திவ்விய மங்கள விக்கிரகம்; குணம்—ஆன்ம குணம், விக்கிரக குணம்; ஆன்ம குணங்கள்—ஞானம், சக்தி முதலியன; விக்கிரக குணம்—அழகு, மென்மை முதலியன; விபூதி—நியமிக்கப்படும் பொருள் (ஐசுவரியம்).

'பகவத் விஷயகாமம்' என்று வழங்கப் பெறுகின்றது. மங்கையர் மீது கொள்ளும் காமம் 'விஷயகாமம்'. முன்னது பின்னதினின்றும் வேறுபட்டது. ஆயினும் சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்த பகவத் விஷயகாமத்திற்கும் கூறப்பெறும். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல பகவத் விஷயாநுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம், பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இந்த ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப் பெறுகின்றன என்று சமயச் சான்றோர்கள் பணிப்பர்.

காதல் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே, பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப்பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமாகிய வேப்பிலை உருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தை வெளியிற் பூசிக் கொடுத்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சருக்கரைப் பாகு பூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பதுபோலவும், சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலைநாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய காமத்தினையுடையவர்கட்குக் காட்டப்பெறும் உக்தி முறையாக இறையனார் களவியல் உரையிலும் கூறப் பெற்றுள்ளமை[8] ஈண்டு ஒப்புநோக்கி உணர்தல் தகும். பக்தி நிலையை உணர்த்துவதற்கேற்ற ஓர் இலக்கிய மரபே இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை.

இதன் அடிப்படையில் பெரியாழ்வார் திருமொழியிலுள்ள இரண்டு திருமொழிகள்[9] விளக்கம் பெறுகின்றன.

---

8. இறை. கள. சூத். 2இன் உரை காண்க.

9. பெரியாழ். திரு. 3.7; 3.8.

(1) முதல் திருமொழி 'நற்றாய் இரங்கல்' என்ற துறையைச் சார்ந்தது. தலைமகனைக் (இங்கு எம்பெருமானை) களவொழுக்கத்தில் புணர்ந்த தலைமகள் அவன் பிரிந்த நிலையில் ஆற்றாது வருந்தி வாய் பிதற்றிக் கண்ணீர் சொரிந்து மேனி மெலிந்து வடிவம் வேறுபடுகின்றாள். இவ் வேறுபாட்டை மட்டிலும் காணும் தாய் 'இதற்குக் காரணம் என்னோ?' என்று கவன்று அவளது உயிர்த் தோழியை வினவ, அவள் உண்மையான காரணத்தைக் கூற, அது கேட்ட தாய் இவ்வளவு இளமையையும் செயலின் பெருமையையும் கூறி முறையிடுவது போல் அமைந்தது இத் திருமொழி.

தாயின் நிலையை அடைகின்றார் பெரியாழ்வார். வயது வந்த பெண்ணானாலும் இன்னும் அன்பு மிகுதியால் தாயாருக்கு தன் மகளின் இளமையே தோற்றுகின்றது. "தலைவனை வசப்படுத்த உடல் அழகு, பேச்சு அழகு, உடையழகு ஆகிய மூன்றும் வேண்டும். என் செல்லக்குட்டிக்கு இந்த மூன்றும் இல்லையே. உடல் புழுதி படிந்த நிலையில் உள்ளது; சொல்லும் திருத்தமற்ற குதலைச் சொல்லாக உள்ளது; ஆடையையும் நன்றாக உடுக்கத் தெரியவில்லை. மணற் சோறாக்கும் சிறிய துாதையும் சிறு சுளகையும் கூட விட்டொழிக்க முடியாத நிலையிலுள்ளாள். இத்தகைய 'சிறு விளையாட்டி' பையரவு அணைப் பள்ளியானோடு கைகலவி உண்டானது எப்படியோ?" என்று இரங்குகின்றாள் (1).

தன் மகளின் இளமை நிலையை இன்னொரு விதமாகவும் எடுத்துரைக்கின்றார் அன்புள்ளம் கொண்ட திருத் தாயார். "வாயிலே பற்களும் இன்னும் சரியாக முளைக்கவில்லை; கூந்தலும் சேர்த்து முடிக்கும் அளவு வளர்ந்து கூடவில்லை. இந்தப் பருவத்தில் சில தலைவணக்கமில்லாத கீழான பெண்பிள்ளைகளுடன் நட்புப் பூண்டாள்; அதன் பயனாகத் தாய்க்கடங்காத பொல்லாத

இணக்கத்தை (களவுப் புணர்ச்சியை)ச் செய்து விட்டாள். 'அம்மா, எங்குச் சென்றாய்? யாரோடு இணங்கி வந்தாய்?' என்று நான் வினவினால் தன் செயலை மறைப்பதற்காக கபடமற்ற சொற்கள் போல் தோற்றும்படி பேசுகின்றாள். ஆனால் 'கண்ணா; மணிவண்ணா' என்று வாய் வெருவிக் கொண்டு அந்த மாயன்மீது மாலுறுகின்றதை வெளிப் படுத்திவிடுகின்றாள்—'எங்கள் அப்பன் குதிருக்குள்ளே இல்லை' என்று சொல்லி அப்பன் குதிருக்குள் இருப்பதைக் காட்டுவது போல்' '' என்கின்றாள் (2).

இவ்விடத்தில் பரகால நாயகி (திருமங்கை யாழ்வார்) யின்,

> **முள்ளெயிற் றேய்ந்தில,**
> **கூழை முடிகொடா**
> **தெள்ளியள் என்பதோர்**
> **தேசிலள்'** [10]

[முள் எயிறு-முளைக்கும் பற்கள்; ஏய்ந்தில-நிரம்ப வில்லை; கூழை-தலைமயிர்; முடிகொடா-முடிக்கப் போதும்படி வளரவில்லை; தெள்ளியள்-தெளிந்து வார்த்தை சொல்ல வல்லவள்].

என்ற பாசுரம் ஒப்பு நோக்கத் தக்கது.

'தோழிமாரோடு விளையாடச் சென்றவளுக்கு இவ்வளவு பிரமை ஏற்பட்டுவிட்டதே!' என்று வியப்புறு கின்றாள். உள்ளுக்குள்ளே மன நிறைவுதான்: ஆனால் ஊர் என்ன நினைக்கும்? ஊர் வாயை மூடமுடியுமா? 'அவள் விருப்பப்படிதான் நடந்து கொண்டேன். தரையிலே நடக்கவிடாமல் ஒக்கலில் கொண்டு திரிந்தேன். இப்படி யெல்லாம் பாராட்டி, சீராட்டி வளர்க்கப் பெற்றவள் எனக்கும் தெரியாமல் தன் நெஞ்சை ஒளித்து வைத்தாளே!

10. பெரி. திரு. 8.2:9

இதை எவரிடம் சொல்லுவேன்? ஐயோ! நீங்கள் எல்லாம் உங்கள் தாய்மாருக்கு அடங்குவதில்லையா?' என்று சில இளம்பருவப் பெண்களோடு சேர்ந்து கொண்டு வருந்து கின்றாள்.

வெளியில் செல்லவிட்டால் தீ நட்பு நேர்ந்துவிடுகின்றது என்று எண்ணி முற்றத்தில் விளையாடச் சொன்னால் நேரிடும் விளைவுகளைச் சொல்லுகின்றாள்:

**பொங்கு வெண்மணல் கொண்டு**
**சிற்றிலும் முற்றத் திளைக்கலுறில்**
**சங்கு சக்கரம் தண்டு**
**வாள்வில்லும் அல்லது இழைக்கலுறாள்**
**கொங்கை இன்னும் குவிந்து**
**எழுந்தில; கோவிந்தனோடு இவளைச்**
**சங்கை யாகி என்உள்ளம்**
**நாள்தொறும் தட்டுளுப்பு ஆகின்றதே.**[11]

[பொங்கு-நுண்ணிய; சிற்றில்-கொட்டகம்; இன்னம்-இன்று அளவும்; குவிந்து-முகம் திரண்டு; சங்கை ஆகி-ஐயுற்று; உள்ளம்-நெஞ்சம்; தட்டுளுப்பு-தடுமாற்றம்]

என்பது பாசுரம். "இவள் முற்றத்தில் சிற்றில் இழைத் தாலும் எம்பெருமானது சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் ஆகிய பஞ்சாயுதங்களை இழைக்கின்றாள்; சிற்றில் இழைப்பதில்லை. முலைகளோ இன்னும் திரண்டு முகம் காட்டவில்லை. இந்த நிலையில் இவள் இளமையை நோக்கினால், 'தலைமகனோடு இவள் இணங்கினாள்' என்று சொல்ல முடியவில்லை; இவள் செய்யும் படிகளைப் பார்த்தால் அவ்விணக்கம் ஐயுறும்படியாக உள்ளது. ஆகையால் ஒன்றையும் அறுதியிட முடியாமல் என் நெஞ்சு தடுமாறுகின்றது'' என்கின்றாள். உள்ளுறையில்

11. பெரியாழ். திரு. 3.7:3

சிற்றில் போகத்தானமாகிய உடலையும் குடியிருப்பதாகிய வீடு முதலியவற்றையும் குறிக்கின்றது. உள்ளுறையில் முலை பக்தியைக் குறிக்கின்றது (3)

"இளம்பருவம் அறியாமை நிறைந்தது; கண்ட பொருள்களின்மீது ஆசைப்படுவது. இளம் பருவத்தை யுடைய என் மகளை அவளுடைய தோழிகள் வெளியில் விளையாட்டுக்கென்று கூட்டிச் சென்று ஒரு பெரிய அநர்த்தத்தை விளைவித்து விட்டனர். இதை யான் யாரிடம் சென்று முறையிடுவேன்? அவர்கள் செய்ததுதான் என்ன? சர்வேசுவரன் என்று மேல் வேடம் பூண்டுள்ள ஓர் ஆழமான கீழாற்றில் இவளைத் தள்ளிக் கரையேறமாட்டாது அலமரும்படி செய்து விட்டனர். இந்த அலமாப்புக்கு என் மகள் சிறிதும் உரியள் இலள். இவள் இளம் பருவத்தினள். அட்டில் கலத்தில் இடப்பெறும் அகப்பை சோற்றின் சுவையை அறியமுடியாது என்கின்ற இவ்வளவு அறிவும் இவளுக்கு இல்லையே; இத்தகைய இளம் பருவத்தவளை தோழிகள் படுத்தும் பாடு என்னே!" என்று தனக்குள்ளேயே முறையிட்டுக் கொண்டு வருந்துகின்றாள். கீழாறு (மோழை) தன்னுள் இறங்கியவர்களை மீண்டு வெளியேற வொண்ணாதபடி அகப்படுத்திக்கொள்வது போல, எம்பெருமானும் தன்னைச் சேர்ந்தவர்களைப் புறம்பு போகாதபடி பற்றறுத்தலால், இந்த உருவகம் இங்கு அற்புதமாக அமைகின்றது (4).

"என் மகள் தனிமையாகக் காரியங்களை நடத்திக் கொண்டால் குறையில்லை. பல்லோரும் அறிய விளம்பரம் செய்வது போல் எம்பெருமானுடைய திருத் துழாய் மாலையை சூட்டிக்கொண்டதோடு நில்லாமல் 'அவன் எங்குள்ளான்? அவன் எங்கு உள்ளான்?' என்று தேடித் திரிகின்றாள். இவ்விடத்துள்ள அனுகூலர்கள் எனக்குச் சொல்லியது: 'இவ்வாறு இவள் வெளிப்படையாகத் திரிவதைத் தடுத்து நாம் நோக்காதொழியில் இக்குடிக்குப்

பெருங்கேடு விளையும்; எந்த வேளையில் என்ன கேடு விளையப் போகின்றதென்று எதிர்பார்க்கும் பாவிகள் ஒருவரா? இருவரா? எண்ணற்றவர்கள். ஆகையால் நாம் இவளை விடுதலைப் பறவைபோல் திரியவிடலாகாது; இவள் தானே தலைவனிடம் போய்ச் சேர்ந்தாள் என்று பேர் ஆகாமல், இவளை நீங்கள் கொண்டுபோய் அவனுக்கு உரிய அந்தப்புரத்தில் விட்டு, அங்கிருந்தும் இவள் பதறிப் பதறி ஓடமுடியாதபடி படுகாவலிடுங்கள்' என்று இதனையே திருப்பித் திருப்பிச் சொல்லுகின்றார்களே யொழிய, 'இவளை வீட்டினுள் நிறுத்தி அடக்குங்கள்' என்று சொல்லவல்லார் யாவரும் இல்லையே'' என்கின்றாள். 'தலைவனுடைய வேண்டுகோளின்படி தலைவியைக் கொடுத்தல் உலகியற்கையாக இருக்க, இவளை நாமாக வருந்திக் கொடுக்க நேரிட்டதே' என்று அனுகூலர்கள் மனம் குழம்புகின்றனர் என்பது உளங் கொள்ளத் தக்கது. (5)

திருத்தாயார் சில பெண்களை நோக்கி மேலும் பேசுகின்றாள்:

பட்டங் கட்டிப் பொற்றோடு
  பெய்திவள் பாடக மும்சிலம்பும்
இட்ட மாக வளர்த்தெடுத்
  தேனுக்கு என்னோ(டு) இருக்கலுறாள்;
பொட்டப் போய்ப்புறப் பட்டு
  நின்றிவள் பூவைப்பூ வண்ணா! என்னும்;
வட்ட வார்குழல் மங்கை
  மீர்! இவள் மால்உறு கின்றாளே (6).

[பட்டம்-நெற்றிப்பட்டம்; பொன்தோடு-காதணி; பாடகம்-கழலணி; பெய்து-இட்டு; இட்டம்-இஷ்டம் (விருப்பம்); எடுத்தேனுக்கு-வளர்த்தேனுக்கு; பொட்ட-திடீரென்று; போய்-கைவிட்டு].

என்பது பாசுரம். ''உலகில் பெண்கள் சிறப்பாக அணிகளைச் செய்து பூட்டுகின்ற தாய்மாரை விரும்பிக் கலந்து பிரியாதிருத்தல் வழக்கமாக இருப்பது. என் பெண் ஒருத்தி மாத்திரம் இறைப்பொழுதும் என்னோடிருக்க ஒருப்படாமல் தெருத்தெருவாக த்திரிந்து, 'பூவைப் பூவண்ணா!' என்று எம்பெருமானது அடையாளங்களைச் சொல்லி அழைத்து மயங்குகின்றாளே!'' என்று சில பெண்களை நோக்கிக் கூறுகின்றாள். **மங்கைமீர்!**-'இப்படித் தாய்ச்சிறகின்கீழ் அடங்காப் பெண்ணைப் பெறாத பூர்த்தி உண்டன்றோ உங்களுக்கு!' என்ற கருத்துத் தோன்றும்; 'உங்களது பெண்களின் படியும் இவ்வாறு தானோ?' என்று வினவியதாகவும் கொள்ளலாம். 'பொரு அற்றாள் என் மகள்; உம் பொன்னும் அஃதே'[12] என்று திருமங்கை ஆழ்வார் பரகாலநாயகி நிலையில் தாய்ப் பாசுரமாக கூறியதும் இக்கருத்து பற்றியதே. (என் மகள்—என் பெண்; பொரு அற்றாள்—ஒப்பு இல்லாதவள்; உம் பொன்னும்—உங்கள் பெண்ணின்படியும்; அஃதே — இவ்வண்ணம் தானோ?)

**பாடகம்** - பாத கடகம் என்ற வடசொற் சிதைவு. **சிலம்பு** - நூபுரம்; **இட்டம்** - இஷ்டம். **வளர்த்தெடுத்தேனுக்கு என்னோடு** - வளர்த்தெடுத்த என்னோடு. **பூவைப் பூவண்ணா! :** உறவினர்கள் செய்த திருமணமாகில் புரோகிதரின் வாக்கினால் கணவன் பெயரை அறியலாம்; இயற்கைப் புணர்ச்சியாகையால் நிறம் மட்டிலும் தான் அறியமுடியும் — என்ற குறிப்புப்பொருள் காணலாம்.

திருத்தாயார் மேலும் தொடர்ந்து பேசுவது: ''மங்கைமீர், பெண் தன்மைக்கு ஏற்ற குணங்களில் ஒன்றுக்கும் (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு) ஒரு கேடும் விளையாதபடி ஒழுங்குபட நிற்பவள் என் அருமைச் செல்வி. அத் திருக்குணங்களுக்கு கெடுதி விளைந்ததாக

12. திருநெடுந்-19

ஒருவர் ஒரு பேச்சு எழுப்பினால்கூட அதைக் கேட்டுச் சகியாதவள் என் திருமகள். இப்படிப்பட்டவள் இன்று செய்த செயலை நோக்கினால் முன்பு தான் நின்ற நிலையைப் பார்த்தால் அது எதிர்த்தட்டாக உள்ளது. இன்றளவும் அடக்கத்துடன் ஒடுங்கியிருந்த இவள் இன்று காம்பைவிட்டு நீங்கின அகப்பைபோல் தாயாகிய என்னை விட்டு அகன்று சிறிதும் நாணமின்றித் தெருவுக்கே வந்து விட்டாள். வந்தவள், கண்ணன் பெயர்களைக் கூவி அழைத்து அவன் வரக் காணாமையால் மயக்கமுறுகின்றாள். இதுதான் முன்பு நின்ற நிலைக்குச் சிறிதும் பொருந்து மாறில்லை'' என்கின்றாள். (7)

திருத்தாயார் தன் மகளைப்பற்றி இங்ஙனம் கவலைப் பட்டுக் கொண்டிருக்க, மகள் என்ன செய்கின்றாள்? என்பதைக் காண்போம்.

**காறை பூணும் கண்ணாடி**
**காணும்தன் கையில் வளைகுலுக்கும்**
**கூறை யுடுக்கும், அயர்க்கும், தன்**
**கொவ்வைச் செவ்வாய் திருத்தும்,**
**தேறித் தேறி நின்று**
**ஆயிரம்பேர்த் தேவன் திறம்பிதற்றும்;**
**மாறில் மாமணி வண்ணன்**
**மேலிவள் மாலுறு கின்றாளே (8).**

[காறை - கழுத்தணி; கூறை - புடவை; அயிர்க்கும் - தளர்ச்சியடைகின்றாள்; திருத்தும் - ஒழுங்கு படுத்துவாள்; தேறித் தேறி - மிகவும் தெளிந்து; பிதற்றும் - வாய் வெருவுவாள்; மாலுறுதல் - மோகித்தல்]

என்பது பாசுரம். எம்பெருமான் வரவை எதிர்பார்த்திருக்கும் மகள் ஏதாவது ஒன்றைச் செய்து அவனை அடைய வேண்டும் என்ற உறுதி கொள்கின்றாள். 'அவன் மனம் இழுப்புண்ணுமாறு தன்னை அணி செய்து கொண்டால் அவன் தானே வந்து மேல் விழுவன்' என்று

முதன் முதலாக அவன் கண்டு மகிழ்ந்து கட்டிக் கொள்ளு மிடமான கழுத்தைக் கண்டிகை முதலிய அணிகளால் அலங்கரித்துக் கொள்ளுகின்றாள். நகையும் கழுத்துமான அந்த சேர்த்தியழகைக் கண்ணாடியில் பார்த்துக் கொள் கின்றாள், 'அவன் உகக்கும்படி வாய்த்திருக்கின்றதோ இல்லையோ?' என்று. உடம்பு பூரிக்கின்றது, ஏதோ காணாதது கண்டதுபோல்! தன் கைகளில் உள்ள வளையல்களைக் குலுக்கிப் பார்க்கின்றாள்; இனி அவை தொங்கிப் போகாமல் கைக்குப் பொருத்தமாக இருக்கு மென்று எண்ணம். ஆடையணிந்து கொள்வதில் பொறுப் பற்று இருந்தவள் இப்போது அழகான புடவையை அழகாக உடுத்திக் கொள்ளுகின்றாள்; அது மணமகள் வீட்டிலிருந்து வந்ததாகவே எண்ணம். எவ்வளவு நேரமாக ஈடுபடுகின்றாள் ஆடை அணிகளைத் திரும்பத் திரும்ப ஒழுங்கு செய்து கொள்வதில்! இந்த நிலையில் மறதியும் (அறிவிழந்த நிலை) உண்டாகின்றது. 'அந்த நகையை அணிந்து கொண்டோமோ? இந்த நகையை அணிந்து கொள்ளவில்லையோ?' என்று அடிக்கடித் தொட்டுப் பார்க்கின்றாள்; கண்ணாடியிலும் நோக்குகின்றாள். கண்ணாடி என்று அறியாமல் அதில் தோன்றும் காறை யையும் தொட்டுப் பார்க்க முயல்கின்றாள். இப்படி அறிவிழந்தவள் திடீரென்று எதையோ நினைவுபடுத்திக் கொண்டவள்போல கொவ்வைப்பழம்போல் சிவந்திருக் கின்ற தன்னுடைய திருப்பவழத்தையும் கண்ணாடியில் நோக்குகின்றாள். இப்போது நம்பிக்கை அலங்காரங் களில் இல்லை; இயற்கையழகில்தான். ஆனால் பல தடவை பார்த்துக் கொள்ளுகின்றாளே; அந்தச் சிவப்பை இன்னும் எப்படி அதிகப்படுத்தலாம் என்ற எண்ணமா? அல்லது இளநகையிலேயே அந்த வாயை இன்னும் அழகு செய்து கொள்ள விரும்புகின்றாளா?

இங்ஙனம் கலங்கித் தெளிந்து கொண்டிருக்கும் காதலியை விட்டு மீண்டும் வெளியே மற்றப் பெண்களிடம்

பேசிக் கொண்டிருக்கும் தாயிடம் வருவோம். "'நம் குடிக்கு இவள் ஒரு பெண்தானே!' என்று அன்பு மிகுதியால் கையிலிருந்த செல்வத்தையெல்லாம் செலவிட்டு இவளுக்குச் செய்ய வேண்டிய மங்கல காரியங்களை எல்லாம் செய்து இவளை நாம் காத்து வருவதனால் நமக்குச் சிறிதும் பயன் இல்லை. இது மட்டுமா? நம் குடிக்கே பெருத்த பழிகளையும் விளைவித்து விட்டாள்" என்று கலங்கிப் பேசின தாயை நோக்கி உறவினர்கள், "தம் வயலில் வளர்ந்த நாற்றை அவ்வயலுக்குரியவர் தம் விருப்பப்படி விநியோகித்துக் கொள்வது போல, இவளை சுவாமியாகிய அவன் தான் செய்ய நினைத்தவற்றைத் தடையின்றிச் செய்து கொள்ளுமாறு மேக வண்ணனாகிய கண்ணனிடத்தில் இவளைக் கொண்டு சேர்த்து விடுங்கள்" என்கின்றனர் (9) மேலும் அவர்கள், "மருத்துவன் தான் செய்யும் மருந்தில் பதம் பார்த்துச் செய்யாவிடில் அது கை தவறுவதுபோல, இவள் பதம் பார்த்து நாம் செய்யாமையாலே இவள் கைகழிந்தாள் என்ற அபவாதம் பரவி விடும். இதற்கு முன்னதாகவே இவளை உலகளந்தருளின கண்ணனிடம் சேர்த்து விடுதலே தகுதி" என்று கூறுகின்றனர் (10).

(2) இரண்டாம் திருமொழி (3.8) அக இலக்கியத் துறையாகிய 'உடன் போக்கு' என்ற துறையில் நடைபெறுகின்றது. எம்பெருமான்மீது தன் மகள் கழிபெருங்காதல் கொண்டு அவனோடு கலவி உண்டாயிற்று என்பதைத் தாய் நன்கு அறிந்தும், 'உலக அபவாதம் உண்டாகும் முன் இவளை உலகளந்தான் பக்கல் கொண்டு போய்ச் சேர்த்து விடுமாறு உறவினர்கள் சொல்லியும் அவனிடம் கொண்டு சேர்க்காததாலே, அவனே ஒரு நாள் இரவில் வந்து ஒரே படுக்கையில் அன்னையுடன் துயில் கொண்டிருந்த இவளை எழுப்பித் திருவாய்ப் பாடிக்கே கொண்டு போய் விடுகின்றான். கண் விழித்த திருத்தாயார் படுக்கையில் மகளைக் காணாமல் பல வகையாகக் கதறி அழுகின்றாள்.

இந்தத் தாயின் நிலையினைக் கூறுவது இந்த இரண்டாம் திருமொழி.

திருத்தாயார் பேசுகின்றாள்: ஓர் அழகான தாமரைத் தடாகம். அதில் செந்தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கு கின்றன ஒருநாள் அந்தப் பூக்களின் மேல் பனி சொரிகின்றது. இதழும் மகரந்தமும் உதிர்ந்து விடுகின்றன 'ஆ என்ன குளிர்ச்சி! என்ன மலர்ச்சி! என்ன சிவப்பு! என்ன நறுமணம்!' என்று வியப்பெய்தும்படி யிருந்த அந்தப் பொய்கை எப்படியாகி விட்டது! அப்படி அழகழிந்து வெறித்துப் போயிருக்கின்றது என் மகள் இருந்த வீடு" என்கின்றாள்.

**நல்லதோர் தாமரைப் பொய்கை**
**நாள்மலர் மேற்பனி சோர**
**அல்லியும் தாதும் உதிர்த்திட்டு**
**அழகழிந் தாலொத்த தாலோ?**
**இல்லம் வெறியோ டிற்றாலோ?**
**என்மகளை எங்கும் காணேன்;**
**மல்லரை அட்டவன் பின்போய்**
**மதுரைப் புறம்புக் காள்கொலோ? (1)**

[பொய்கை-குளம்; நாள்மலர்- அப்போது அலர்ந்த பூ; சோர-பெய்ய; அல்லி-உள்ளிதழ்; தாது-மகரந்தம்; வெறிஓடிற்று - வெறிச்சென்றுள்ளது; மல்லர்-சாணூரன், முஷ்டிகன்]

என்பது தாயின் பேச்சு அமைந்த பாசுரம். இத்திரு மாளிகையில் பெண் பிள்ளை இருந்தது ஓரடி நிலமானாலும் வீடுமுழுதும் அவளே இருந்ததாகத் தாய்க்குத் தோற்றிக் கிடந்தபடியால் 'இல்லம் வெறிச் சோடிற்றாலோ?' என்கின்றாள்.

ஐயங்களெல்லாம் இரண்டு இடங்களைப் பற்றிப் பிறக்குமாதலால், இங்குக் கம்சன் இருப்பிடமான

மதுரையில் புகுந்தாளோ? அன்றி, அதனருகிலுள்ள திருவாய்ப்பாடியிற் புகுந்தாளோ? என்று ஐயமுறுகின்றாள். ஒருவருக்கொருவர் பண்ணுகின்ற காதல் விளையாட்டு களினால் இருவரும் மயங்கி மெய்மறந்து கம்சன் நகரில் புகுந்தார்களாகில் தீராத் துன்பம் விளையுமே! என்ற ஐயந்தான் திருத் தாயார் நெஞ்சினுள் நடமாடுகின்றது. பெரிய திருமொழியில் 'கள்வன் கொல்? யானறியேன்' (3.7:1) என்ற திருமொழி இதனுடன் ஒரு புடை ஒத்திருக்கும்.

அடுத்து, "பொருந்திய ஞானம் சிறிதும் இல்லாத இடையர்களிடம் ஓர் அரிய குணம் உண்டு. தீயவையா யுள்ள தங்கள் கன்றுகளை 'உங்களுடையவை' என்று பிறருக்குக் காட்டி நல்லவையாயுள்ள அவர்கள் கன்றுகளைத் தங்களுடையனவாக்கிக் கொள்வார்கள்; பிறருடைய அழகிய கன்றுகளை உடையவர்களறியாமல் களவு வழியால் நிலை பெயர்த்துக் கொண்டு போதலும் உண்டு. இப்படி என் மகளைத் திருடிக் கொண்டு போய்விட்டான். இவ்வாறு அவன் செய்த தீமையானது எங்கள் குலத்துக்கு நிரந்தர மான பழிப்பை விளைவிக்குமோ?" என்கின்றாள் (2).

"கண்ணபிரான் என் மகளைக் கிறி செய்துகொண்டு கொண்டு போனமை பற்றி இனி சிந்தித்துப் பயன் இல்லை. புக்ககத்துத் தலைவர்கள், இவளுக்குத் திருமணச் சடங்கு களாகச் செய்ய வேண்டிய மங்கள காரியங்களை ஒன்று விடாமல் செய்து சீர்மை குன்றாமல் அலங்காரங்களையும் அமைத்து மணமாளிகையில் எல்லோருக்கும் அழைப்பு விடுத்து 'இவளைக் கண்ணனுக்குத் தேவியாகத் தருகின்றோம்' என்று வெளிப்படையாகச் சொல்லிப் பிறகு திருமண நாளன்று சாதிக்கேற்ற ஆசார முறையின்படி மணவறையில் அலங்கார பீடத்தின்மேல் அரசங்கிளையை (அரசாணியை) இவளை வலம் வரும்படி செய்வித்து திருமணத்தின் அறிகுறியாக ஊரெங்கும் அலங்கரித்து இவ்வகைகளால் கொண்டாட்டமும் கோலாகலமுமாக

இருப்பார்களோ? அன்றி,'கொண்டாட்டம் ஏதுக்கு?' என்று உதாசீனப்படுத்துவார்களோ?'' என்று ஐயுறுகின்றாள் திருத்தாயார். (3).

''எனக்கு ஒரே ஒரு மகள்தான். அவளைப் பெரிய பிராட்டியாரைப் போல் உலகோர் அனைவரும் புகழும்படி வளர்த்தேன். இப்படி வளர்த்த இவளை எம்பெருமான் தானே நேரில் வந்து கைப்பற்றிக் கொண்டு போய் விட்டான்'' என்று எண்ணாதவற்றையெல்லாம் எண்ணி,

ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு போனான்!

[நிறைந்த-பரவின; திருமகள்-இலக்குமி; பெரிய பிராட்டியார்; செங்கண்மால்-சர்வேசுவரன்]

என்று பலபடியாகப் புலம்புகின்றாள். செங்கண்மால்! என் மகளை இப்படி ஒருவரும் அறியாமல் கைக்கொண்டு போவதற்கு பல இரவுகளில் கண் விழித்ததால் 'செங்கண் மாலாயினன்' போலும் என்ற தொனிப் பொருளும் தோற்றுகின்றது.

பெருமக ளாய்க்குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற அசோதை
மருமக ளைக்கண் டுகந்து
மணாட்டுப் புறஞ்செய்யும் கொ(ல்)லோ?

[பெருமகள்-யசோதை; மணாட்டுப்புறம்-மணவாட்டிக்குச் செய்யக்கடவதான சீர்மைகள்]

என்று தொடர்ந்து பேசுகின்றாள். ''போனது போகட்டும். அதைப்பற்றி நினைத்துப் பயன் இல்லை. போன இடத்தில் இவளுக்கு மாமியாரான யசோதைப் பிராட்டி இவளுடைய அழகு, கழிபெருங்காதல் முதலிய அருங்குணங்களைக் கண்டு 'பெறாப் பேறு பெற்றோம்' என மகிழ்ச்சியுற்று

திருமணப் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய சீர்மைகளைச் செய்வாரோ? அன்றி, இலௌகிகத்துக்குத் தக்க அளவு மனப்பூர்வமாக இல்லாதபடி செய்வாரோ?'' என்று ஐயுறுகின்றாள். திருவாய்ப்பாடியிலுள்ளார்க் கெல்லாம் தலைவரான நந்தகோபருடைய தேவியானமை பற்றி யசோதை 'பெருமகள்' எனப்பட்டாள். பெரும்பிள்ளை: 'என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்' (2.2:6) என்றது காண்க. கூரத்தாழ்வான் திருநாட்டுக் கெழுந்தருளினபோது எம்பெருமானார் இப்பாசுரத்தை நாவினால் நவிற்றிக் கதறியழுதார் என்ற ஐதிகம் ஒன்று உண்டு (5).

மாமியார் சீராட்டுதலைப் பற்றி ஐயுற்ற திருத்தாயார் மாமனார் சீராட்டுதலைப்பற்றி ஐயுறுகின்றாள் திருத்தாயார்.

**தம்மாமன் நந்தகோ பாலன்**
**தழீஇக்கொண் டென்மகள் தன்னை**
**செம்மாந் திரேய்என்று சொல்லிச்**
**செழுங்கயற் கண்ணும்செவ் வாயும்**
**கொம்மை முலையும் இடையும்**
**கொழும்பணைத் தோள்களும் கண்டிட்டு**
**இம்மக ளைப்பெற்ற தாயார்**
**இனித்தரி யாரென்னும் கொ(ல்)லோ (5)**

*[தம்மாமன்-மாமனாராகிய நந்தகோபாலர்; தழீஇக் கொண்டு-தழுவிக் கொண்டு; செம்மாந்திரு-செவ்வனே நில்; கயல்-மீன்; வாய்-திருப்பவழம்; கொம்மை-பெருத்திருக்கின்ற; பணை-மூங்கில்]*

என்பது பாசுரம். ''என் மகளின் மாமனாரான நந்தகோபர் இவளையழைத்துத் தழுவி முத்தமிட்டு (இன்று மேனாட்டார் செய்வது போல!) 'பெண்ணே, நாணத்தால் தலைகவிழ்ந்து தரையைக் கீறிக்கொண்டு நிற்காமல்

செவ்வனே நேராக நில்' என்று சொல்ல, அவளும் அங்ஙனமே நிற்க, அழகிய மீன்போன்ற கண்களையும் கொவ்வைப்பழம் போன்று சிவந்த திருப்பவழத்தையும், கச்சுக்கு அடங்காமல் பெருத்திருக்கின்ற முலையையும், இடையின் அழகையும் பருத்த மூங்கில் போன்ற தோள்களையும் நன்றாக உற்று நோக்கி, 'இப்பெண்பிள்ளையைப் பெற்ற திருத்தாயார் இவளைப் பிரிந்த பின்பு உயிர் தரித்திருக்க மாட்டாள்' என்று சொல்லுவரோ?'' என்று ஐயுறுகின்றாள் (5).

தொடர்ந்து பேசுகின்றாள் திருத்தாயார்: ''என் மகள் வேடரையும் மறக்குலத்தாரையும்போல் தண்ணிய (கீழான) குலத்தில் பிறந்தவள் அல்லள். பெருங்குலத்தில் தோன்றியவளான இவளைக் களவுவழியால் கொண்டு போனாலும் போனவிடத்திலாவது திருமண விழாவை யாகிலும் முறைவழுவாமல் உலகோர் முறைப்படி செய்வானாகில் ஒருவாறு என் குறை தீரும். இவளை இங்கிருந்து கடத்திக் கொண்டு போகிறபோது இருவரும் நெஞ்சு பொருந்தும்படி கூடுகையாகிற யாழோர் கூட்டத்தையே (கந்தர்வ விவாகம்) சாத்திர முறைப்படி செய்யப் பெறுகின்ற திருமண் விழாவாக நினைத்து வேறு வகையான திருமணச் சடங்குகளை வெளிப்படையாகச் செய்யா தொழிவனோ? அன்றி திருவாய்ப்பாடியிலுள்ளாரையும் அதைச் சேர்ந்த மதுரை முதலிய நகரங்களிலுள்ளாரையும் அழைப்பித்து விழா நடத்துவனோ? இரண்டு தலையிலுமுண்டான குடிப்பிறப்பைப் பாராமல் ஒருவித சாத்திர மரியாதையுமின்றி தனக்கு வேண்டியபடி செய்து கொள்வனோ?'' என்று தன் ஐயத்தை வெளிப்படுத்துகின்றாள் (6).

மேலும் தொடர்ந்து பேசுபவை:

''உலகில் குற்றமே கண்ணாயிருப்பவர் எப்படிப்பட்ட பொருள்களிலும் ஏதாவது ஒரு குறையைக் கூறுவது

வழக்கம். அதுபோல கண்ணனும் என் மகளிடத்துக் காணப்படும் உருவ குணங்களில் ஏதாகிலும் ஒரு குறையைக் கூறித் தாழ்வு நினைத்து, 'இவளை வாசல் பெருக்குகின்ற தொழிலில் விடுங்கள்' என்று புறத்தொழிலில் நியமித்து விடுவனோ? அன்றி முன்னமே பட்டம் கட்டிக்கொண்டு அந்தப்புறத் தலைவியராக இருப்பவர்களோடு சேர்த்து இவள் கருத்தின்படி 'இவள் இடைக்குலத்துத் தலைவி' என்று (தன் மனைவியானமை தோற்ற) பட்டம் கட்டி அந்தப்புரக் காவலில் வைப்பனோ?'' என்றும் ஐயுறு கின்றாள் (7).

அடுத்து, திருத்தாயார் தன் மனவருத்தத்தை அண்டை வீட்டிலுள்ள பெண்ணொருத்தியிடம் இவ்வாறு சொல்லு கின்றாள்: ''நங்காய், நற்குடியில் பிறந்தவர்கள் பெண்களை முறைப்படி வரைந்து கொண்டு வெளியில் இட்டுச் செல்லுவதில்லை என்ற ஒரு சம்பிரதாயம் உண்டு. அங்ஙனம் செய்திலன் கண்ணபிரான்! இது செய்யா தொழியினும் ஒழிக! உலகில் சாமானிய மக்கள் செய்யும் முறைகள் சில உளவே, அவற்றையும் செய்திலன். இவளைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோனதும் போகாததுமாயிருக்க, இவளைத் தயிர் கடையவோ நியமிப்பது? இவ்வாறு எந்த நாட்டில் நடக்கும்? இளம் பருவத்தாளான என் மகள் இடம் வலம் கொண்டு தயிர்கடைய நேரிடும்போது இடைதுவண்டு உடல் இளைத்துப் பெருமூச்சு விட்டு இவ்வகை வருத்தங் களோடு தொடங்கின செயல் தலைக்கட்டுமளவும் இடை விடாமல் கடைக்கயிற்றையே பிடித்து வலித்து இழுத்தலால் தளிர் போன்ற இவளுடைய தடங்கைகள் தழும்பேறப் பெறாதோ?'' என்று வருந்திக் கூறுகின்றாள் (8).

அடுத்து, தயிர்கடையும் பேச்சு இன்னும் தொடர் கின்றது: ''பெண்ணே, கண்ணபிரான் என் மகளைத் தயிர் கடையும் தொழிலில் நியமித்து விட்டானாகில், அதனால் என் மகளுக்கு ஏற்படும் தொல்லைகளை அளந்து கூற

முடியாது. கண்ணபிரான் திருமாளிகையில் கறவைக் கணங்கள் பலவாகையால் அவை அளவற்ற பாலைத் தரும். பின்பு அதைத் தோய வைத்துத் தயிராக்கிக் கடைவதற்கு பின்மாலைப் பொழுதிலேயே (வைணவர்களின் நடைமுறைப் பேச்சு இது!)-அதாவது அதிகாலையிலேயே—எழுந்திருக்கவேண்டும். இவ்வாறு உறக்கத்தை ஒழித்து எழுந்து தயிர்கடைவதற்கு என் மகள் எங்ஙனே வல்லவளாவாள்? குளிர நோக்கும்படியான கண்ணபிரான் என் மகளை அறமற்ற இழிதொழில்களில் ஏவி அவளது பெருமைகளைக் குலைப்பனோ? அன்றி, பெருமைக்குத் தக்கவாறு திருவுள்ளம் பற்றுவனோ?' என்று ஐயுறுகின்றாள் (9).

இங்ஙனம் பலபடியாகப் புலம்பி உருகிப் பெருமூச்சு விட்டுக் கொண்டே விழித்துக் கொள்கின்றார் பெரியாழ்வார் தியானம் கலைந்து. இந்தத் திருத்தாயார் யார்? அந்த ஒரு மகள் யார்? தாயார் யாரும் இல்லை, விஷ்ணுசித்தர்தான்! பக்திப் பெருங்காதலில் இழிந்து போன அவர் உள்ளமே அந்த 'ஏகபுத்திரி'. அல்லது தன் வளர்ப்பு மகளைக் குறித்தே இப்படி ஒரு சூசகமான கனவு கண்டாரா? என்று நம்மைச் சிந்திக்க வைக்கின்றது!

# 13. சமுதாயக் கண்ணோட்டம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்தையும் (கி.மு. 500—கி. பி. 200) நீதி நூல் காலத்தையும் (கி.பி 100-500) அடுத்துத் தெளிவாகக் காணப் பெறுவது பக்தி இயக்கக் காலம் (கி.பி 600-900) ஆகும். கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சமயப் பெரியார்களான நாயன்மார்களும் வைணவப் பெரி யாழ்வார்களான ஆழ்வார்களும் ஊர் ஊராகச் சென்று தத்தம் சமயங்களைப் பரப்பி வந்தனர். நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த (அரசியல் ஆதரவால்?) பௌத்த சமண சமயங்களை எதிர்த்து மக்களைத் திரட்டுவதற்குக் கலை நயத்துடன் கூடிய பக்திப் பாடல்கள் நன்முறையில் பயன்பட்டன. ஆழ்வார்களில் பலர் இசையோடு பாசுரங் களைப் பாடிக் கோயில்தோறும் இறைவனை வழி பட்டனர்.

'பண் ஆர் தமிழ்' (திருவாய், 9-8:1) 'செயிரில் சொல் இசைமாலை' (3,2:11) 'பால் ஏய் தமிழர் இசைக்காரர், பத்தர் பரவும் ஆயிரத்தின்' (1.5:11) என்ற திருவாய் மொழியில் வரும் சொற்றொடர்களும் 'விழுமிய இசையி னொடு ஒலி சொலும் அடியவர்' (பெரி. திரு. 8.7.10) என்ற பெரிய திருமொழித் தொடரும் இப்பாசுரங்கள் இசையுடன் பாடப்பெறுவன என்பதை வலியுறுத்தும். திருவாய் மொழி முழுமைக்கும் பெரிய திருமொழியில் கிட்டத்தட்ட

முக்கால் பங்கு அளவிற்கும் பண்-தாளக் குறிப்புகள் அமைந்திருத்தல் கவனத்திற்குரியது.

குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித்திரிவனே
(கண்ணிநுண் - 2)

என்ற மதுரகவிகளின் பாசுரப் பகுதியும்,

பண்ணார் பாடல் இன்கவிகள்
யானாய்த் தன்னைத் தான்பாடி
தென்னா என்னும் என்அம்மான்
திருமா லிருஞ்சோ லையானே
(திருவாய் 10.7:5)

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கும் ஆழ்வார்கள் இசையோடு பாடினர் என்பதைப் புலப்படுத்தும். இசை மக்களை ஒன்றாகப் பிணைக்கும் பெருவிசை என்பதை நாம் அறிவோம்.

பக்திநெறி: சமணர்களும் பௌத்தர்களும் புலனடக்கத்தையும் உண்ணா நோன்பு, இன்ப வெறுப்பு முதலியவற்றையும் மக்களிடையே வற்புறுத்திக் கொண்டிருந்தனர். துறவறத்தையே பெருமையோடு பேசி அதனை மக்களிடையே பெயரளவில் பரப்ப முனைந்தனர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்தியைப் போற்றினர்; பக்தி நெறியை மக்களிடையே வளர்க்க முனைந்தனர்; அதற்கு இசைவாக இருக்கும் ஆடல், பாடல் முதலான கலைகளைப் போற்றிப் பாராட்டினர். இல்லறநெறியைப் பின்பற்றி அதில் இன்பமுற்றிருந்தாலும், எந்தத் தொழிலை மேற்கொண்டிருப்பினும் உள்ளத்தை இறைவனுக்கே வைத்து வாழ்க்கை நடத்தினால் அதுவே போதும் என்றனர். பல வகைக் கலைகளையும் வளர்க்கும் பண்ணைகளாகத் திகழ்வதற்கு அவர்களுடைய பக்தி இயக்கம் துணையாக அமைந்தது. மக்களிடையே அவர்களின் இயக்கம் பரவு

வதற்குத் தமிழ்ப் பாடல்கள் இசையோடு அமைந்து பெருந் துணைபுரிந்தன.

பெரியாழ்வார் திருமொழியில் பக்திநெறியின் சிறப்பினை விளக்கும் பாங்கில் ஒரு திருமொழி (4.5) அமைந்துள்ளது. இதில் 'பத்தராய் இறந்தார் பெறும் பேற்றை' ஆழ்வார் பல்வேறு பாங்கில் விளக்குகின்றார். எம்பெருமானின் ஆயிர நாமங்களை நவிற்றுவதற்கு வாய்ப்பில்லாது போயினும் திருமண்காப்பின்போது நவிற்றப்படும் பன்னிரண்டு திருநாமங்களையாவது நவிற்றுவது பயன்தருவது. இந்தப் பன்னிரண்டு திருநாமங்களாவன: கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு, மதுசூதனன், திரிவிக்கிரமன், வாமனன், சிரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பனவாகும்.[1] இவை பெரியாழ்வார் திருமொழியில் (2.3)—காது குத்தலைக் கூறுவது—காட்டப் பெற்றுள்ளன. பக்தியின் பெருமையை விளக்கும் திருமொழியில் (4.5) கேசவன், நாராயணன், மாதவன், இருடீகேசன், மதுசூதனன், கோவிந்தன் என்ற ஆறு திருநாமங்கள் மட்டிலுமே குறிப்பிடப் பெற்றுள்ளன. இத்திருமொழியில் ஆழங்கால் பட்டு உய்வது நம் கடமை.

பக்தியின் பெருமையைப் பற்றிப் பாரதியார்,

**பக்தியினாலே — இந்தப்**
**பாரினி லெய்திடும்**
**மேன்மைகள் கேளடீ !**

**சித்தந் தெளியும் — இங்கு**
**செய்கை யனைத்திலும்**
**செம்மை பிறந்திடும்.**

**வித்தைகள் சேரும், — நல்ல**
**வீரர் உறவு**
**கிடைக்கும் மனத்திடைத்**

1. திருவாய் 2.7 (பன்னிரு திருநாமப் பாட்டு காண்க.)

தத்துவம் உண்டாம் — நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி
உறுதி விளங்கும். [2]

என்று பேசுவார். இதனைத் தொடர்ந்து ஆறு பாடல்கள் வருகின்றன. இவை யாவும் இகத்தில் ஏற்படும் பலன்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன. பெரியாழ்வார் இவற்றைக் குறிப்பிடாமல் பக்தர்களாய் வாழ்ந்து இறப்பவர் பெறும் பேற்றை மட்டிலும் குறிப்பிட்டிருந்தாலும் யாவும் பெற வாய்ப்புண்டு என்பதை உபலட்சணமாகக் கொள்ளலாம். இனி, பெரியாழ்வார் கூறுவனவற்றைக் காண்போம்.

அகப்பற்று, புறப்பற்றுகளை வளரச் செய்ய வழி வகுப்பதான சம்சாரத்தில் ஆழங்கால்பட்டுப் 'பழுதே பல பகலும்' போக்கினாலும் உயிர் முடியும் அளவிலாகினும், இந்தச் சம்சாரத்தில் நெஞ்சைப் பறிகொடுக்காது எம்பெருமான் திருநாமங்களை வாய்விட்டு நவிற்றுபவர்கள் மேலுலகத்தில் பெறும் பரிசுகளைச் சொல்லித் தலைக் கட்ட நம்மால் இயலாது என்கின்றார்.

ஆசை வாய்ச்சென்ற சிந்தையர் ஆகி
அன்னை அத்தன்என் புத்திரர் பூமி
வாச வார்குழ லாளென்று மயங்கி
மாளும் எல்லைக்கண் வாய்திற வாதே
கேச வா!புரு டோத்தமா! என்றும்
கேழ லாகிய கேடிலீ என்றும்
பேசு வாரவர் எய்தும் பெருமை
பேசு வான்புகில் நம்பர மன்றே (1).

[ஆசைவாய்-ஆசையுள்ள இடம்; அத்தன்-தந்தை; பூமி-நிலம்; என் குழலாள்-என் மனைவி; மயங்கி-மோகமுற்று; மாளும் எல்லை-இறக்கும் தருணம்;

2. பா. க : வேதா. பாடல்கள் — பக்தி — (1)

கேழல்-வராகம்; கேடு இலீ-அழிவில்லாதவன்; எய்தும்-அடையக்கூடிய; நம்பரம்-நம்மால் பேசித் தலைக்கட்டுதல்]

என்பது ஆழ்வார் பாசுரம். வாழ்நாள் முழுவதையும் எம்பெருமான் திருநாம சங்கீர்த்தனத்தாலேயே பொழுது போக்கினவர்களின் பெருமையை எம்பெருமானாலும் பேசித் தலைக்கட்ட முடியாது.

'தீண்டாவழும்பும் செந்நீரும் சீயுநரம்புஞ் செறி தசையும், வேண்டா நாற்றமிகும் உடலை' (திருவ. கலம். 17) என்று திவ்விய கவியின் பாசுரப்படி பற்பல நிலைகட்குக் காரணமாக இருக்கும் இந்த உடம்பின் வேதனைக் கனத்தினால் மயக்கமுற்று மரணமடைவதற்குமுன் வாயினால் எட்டெழுத்து மந்திரத்தை அநுசந்தித்துக்கொண்டு முடிமேல் கைகூப்பித் தொழுபவர்கள் பரமபதம் போய்ச் சேர்வார்கள் என்பதிலும் இறையும் ஐயமில்லை; அப்படிப் போய்ச் சேர்ந்த பிறகு சில நித்திய முக்தர்கள் 'நாங்கள் உத்திரவாதம் செய்கின்றோம்' என்று தங்களை ஈடுகாட்டினாலும் இவர்களை அவ்விடத்திலிருந்து இந்தப் பிரகிருதி மண்டலத்திற்கு அனுப்ப வல்லார் யாரும் இல்லை என்கின்றார் (2). இதனால் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி, வழுவிலா அடிமை செய்துகொண்டிருப்பர்' (திருவாய் 3.3:1) என்பதற்குச் சிறிதும் ஐயம் இல்லை.

நினைவுப் பிசகாக எங்கேனும் ஏதாவதொரு பொருள் வைக்கப்பெற்றிருந்தால், 'அதைச் சொல்லு சொல்லு' என்று எப்படிப்பட்ட அன்பர்கள் கேட்டு வற்புறுத்தினாலும் அவர்கட்கு மறுமாற்றம் சொல்லுகைக்கும் வாயைத் திறக்கமாட்டாதபடி மரணநிலை வந்து கிட்டுவதற்கு முன்னர், இதயம் என்ற ஒரு சந்நிதியை ஏற்படுத்தி அந்தச் சந்நிதியில் மாதவன் (திருமால்) என்ற தேவதையை எழுந்தருளச் செய்து அதன்மீது 'பக்தி' என்கிற மலரை

இடவல்லார்க்கு யமபடர்களால் வரும் துன்பத்தினின்றும் எளிதில் தப்பித்துக் கொள்ளலாம். இக்கருத்தை விளக்கும் ஆழ்வார் பாசுரம்:

சோர்வி னால்பொருள் வைத்ததுண் டாகில்
சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து
ஆர்வி னாவிலும் வாய்திற வாதே
அந்த காலம் அடைவதன் முன்னம்
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாத வன்என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு
அறவ தண்டத்தில் உய்யலு மாமே (3).

[சோர்வு-நினைவுப் பிசகு; சுற்று இருந்து - சூழ்ந்து கொண்டு; அந்தகாலம்-இறுதிக் காலம்; மார்வம்-இதயம்; ஆர்வம்-பக்தி; அறவ தண்டம்-யமலோகத்தில் படும் வேதனை]

இந்தப் பாசுரத்தைப் பன்முறை ஓதி ஓதி உளங்கரைதல் வேண்டும்.

உயிர் உடலை விட்டு நீங்குவதற்கு முன்னர், மேல் முகமாக மூச்சு கிளம்புதலும் நெஞ்சு இடிந்து விழுதலும், காலும் கையும் விதிர் விதிர்க்கப் பெறுதலும் நிகழ்தலைக் காணலாம். பிறகு நெடுந்தூக்கம் (மரணம்) சம்பவிக்கும். இதற்கு முன்னர் சகல வேதங்களுக்கும் காரணமாகின்ற 'ஓம்' என்ற பிரணவத்தை[3] உச்சரிக்க வேண்டிய முறையில் உச்சரித்து[4] கடல் நிறவண்ணனாகிய எம்பெருமானை

---

3. முமுட்சுப்படி-33.

4. பிரணவத்திற்கு ஒரு மாத்திரையும் உண்டு; இரண்டு மாத்திரையும் உண்டு; மூன்று மாத்திரையும் உண்டு. ஒன்று இரண்டு மாத்திரைகளை உடையதாகப் பிரணவத்தை உச்சரிப்போர் கீழான பலனையே அடைவர்; அதனை மூன்று மாத்திரை உள்எழ வாங்குபவர்கட்கு பரமபதம் உண்டு என்று ஸ்ரீபாஷ்யம் தெளிவுபடுத்துகின்றது (ஈக்ஷதி கர்மாதி கரணம்).

ஆச்ரயித்தால் வைகுந்தத்தில் அடியார் குழாங்களை உடன் கூடவும் பெறலாம் என்கின்றார் (4). மரணகாலம் கிட்டும் போது, பார்க்கும் இடமெங்கும் யமபடர்கள் தென்படுவதாக நினைத்து அதனால் உண்டாகும் அச்சத்தினால் கிடந்த நிலையிலேயே சிறுநீர் பெருக்குவர்; வாயில்விட்ட பொரிக் கஞ்சி உள் இழிய மாட்டாது கழுத்தை அடைத்துக் கடைவாய் வழியாகப் பெருகும்; இப்படிப்பட்ட நிலைகளை அநுபவித்துக் கொண்டு கிடக்கும்போது, எம்பெருமானின் திருநாமம் உச்சரிக்க வாய்க்காது மாளப்பெற்றால், யமலோகம் செல்ல நேரும்; செல்லும் வழியில் செந்நாய்கள் துடையைக் கவ்வும்; யமகிங்கரர்களும் சூலம் கொண்டு குத்துவர்; இடுப்பிலிருந்து ஆடையும் நழுவிவிடும். இப்படிப் பல துன்பங்களை அநுபவிக்க நேருமாதலால், இவற்றுக்கெல்லாம் இடம் அறும்படி முந்துற முன்னமே எம்பெருமானை ஏத்தினால் இடர்ப்பாடு ஒன்றும் ஏற்பட நேராது என்கின்றார் (5).

பிராணம், அபாநம், வியாநம், உதாநம், சமானம் என்ற பஞ்ச பிராணன்களும் உடலைவிட்டு ஒழிந்த பின்பு அருகிலுள்ள உறவினர்கள் அந்தப் பிணத்தின் மூக்கில் கையை வைத்துப் பார்த்து 'ஆவி நீங்கிற்று' என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்டு அவ்வுடலில் ஆசையை விட்டு விடுவார்கள். எவரேனும் வந்து 'அவர்க்குத் திருமேனி எப்படி உளது?' என்று வினவினால் அதற்கு அவர்கள் வாய்விட்டு மறுமொழி சொல்லமாட்டாமல் 'உயிர் போயிற்று' என்பதைக் கையை விரித்துக்காட்டி விடுவர். இப்படி உறவினர்கள் ஒரு மூலையிலிருந்து கொண்டு தலைகவிழ்ந்து புலம்பும்படியான நிலை நேரிடுவதற்கு முன்னர் திருப்பாற்கடல் நாதனை நெஞ்சால் நினைத்துக் கொண்டு பிரபத்தியை அநுட்டிப்பவர்கள் நிரந்தரமாக அநுபவிக்கக் கூடிய பேற்றைப் பெறுவார்கள் என்கின்றார் (6).

ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கும்போது உறவினர்கள் திரள் திரளாகக் கூடுவர். இறந்தவன் குற்றங்கள் பல கிடக்க, அவற்றையெல்லாம் விட்டுவிட்டு சிறிது நன்மையாக தோன்றும்படியானவற்றை மட்டிலும் சொல்லி ஒப்பாரிப் பாடல்களைப் பாடிப்பாடி ஒரு பாடையில் படுக்கவைப்பர்; புத்தாடையால் பிணத்தை மூடுவர். பிறகு நரிக் கூட்டத்திற்கு ஒரு பாகுக்குடத்தைப் பச்சையாகக் கொடுப்பதுபோல் பிணத்தைச் சுடுகாட்டிற்குச் சுமந்து செல்வர். இவ்வாறு எடுக்கும் நிலை ஏற்படுவதற்கு முன்னர், கௌத்துவத்தையுடைய எம்பெருமான் பக்கலில் சேர்ந்த நெஞ்சையுடையவர்களாயின் யமபுரம் செல்வதைத் தவிர்த்து பரமபதம் சென்று உய்யலாம் என்கின்றார் (8).

ஈரநெஞ்சு அற்றவர்களான யமதூதர்கள் தயை—தாட்சண்யமின்றி எருதுகளை அதட்டி ஓட்டுபவர்கள் போல் வந்து வலிவுள்ள பாசக்கயிற்றினால் கட்டி அடித்துத் தலைகீழாக யமபுரத்திற்கு இழுத்துச் செல்வதற்கு முன்னர், அந்தத் தென்னவனின் மன்னனான எம்பெருமான் 'இன்னவன் இனையான்' என்று சொல்லி அவற்றை நெஞ்சாலும் மனனம் பண்ணி உள்ளத்து இருள் அற அப்பெருமானை நோக்கி உடல் உள்ள அளவும் 'மதுசூதனனே!' என்று அவனுடைய திருநாமங்களையே சொல்லிக் கொண்டிருப்பவர்கள் பரமபதம் சென்றடைந்து நித்திய சூரிகளின் கைங்கரியத்தைத் தாம் பெறுவதற்கு மன்றாடி நிற்பர் என்கின்றார் (7). இதனைக் கூறும் ஆழ்வார் பாசுரம்:

தென்ன வன்தமர் செப்ப மிலாதார்
    சேஅ தக்குவார் போலப் புகுந்து
பின்னும் வன்கயிற் றால்பிணித் தெற்றிப்
    பின்முன் னாக இழுப்பதன் முன்னம்

இன்ன வன்இனை யானென்று சொல்லி
எண்ணி யுள்ளத்து இருள் அற நோக்கி
மன்ன வன்மது சூதனன் என்பார்
வான கத்துமன் றாடிகள் தாமே (7).

[தென்னவன்-எமன்; தமர்-கிங்கரர்கள்; சே-எருது; பின்முன்-தலைகீழாக; உள்ளம்-நெஞ்சு; வான் அகம்-வைகுந்தம்]

என்பது. இதனைப் பன்முறைப் படித்து ஆழ்வார் சித்திரிக்கும் காட்சியையும் அதனைத் தவிர்க்கும் முறை யையும் உள்ளத்தில் இருத்துதல் வேண்டும்.

மரணப் படுக்கையிலிருக்கும்போது வாயு விகாரத்தினால் வாய் ஒருக்கடுத்து வலிக்கும்; நெடுநாளாக உணவு அற்றுக் கிடப்பதனால் உள்ளிழிந்துள்ள கண்கள் மருள மருள விழிக்கும்; இந்த விகாரங்களைக் கண்ணுறும் தாயர், தந்தையர், மனைவியர் முதலானோர் மூலைக் கொருவராக அமர்ந்து கொண்டு கண்ணீர் பெருக்கிக் கதறிக் கதறி அழுவர்; பிலாக்கணம் பாடுவர். இப்படிப்பட்ட நிலையில் 'உயிர் நீங்கிற்று' என்று சிலர் வந்து மார்பில் நெருப்பைக் கொட்டுவர். உடல் வலிவுற்று இருக்கும் காலங்களைக் கொன்னே கழித்தவர்கள் இறுதிக் காலத்தில் படும்பாடு இதுவாகையால் அப்போது எம்பெருமானின் திருநாமங்களை அநுசந்திக்கும் பேறு பெறாமல் யமகிங்கரர்களின் நலிவுக்கு ஆட்படவேண்டி வரும். ஆதலால் உடல் கட்டுக் குலைவதற்கு முன்னமே எம்பெருமானை எல்லாவித உறவினனாகப் பற்றப் பெற்றால் யம தண்டனைக்குத் தப்பிப் பிழைக்கலாம் என்கின்றார்.

வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப
வார்ந்த நீர்க்குழிக் கண்கள் மிழற்ற
தாயொரு பக்கம் தந்தை யொருபக்கம்
தார மும்ஒரு பக்கம் அலற்ற

தீயொரு பக்கம் சேர்வதன் முன்னம்
செங்கண் மாலொடும் சிக்கெனச் சுற்ற
மாயொரு பக்கம் நிற்கவல் லாருக்கு
அறவ தண்டத்தில் உய்யலும் ஆமே (9)

[வலிப்ப-வலிக்க; வார்ந்த-பெருகா நின்ற; அலற்ற-கதறிஅழ; சிக்கெனச் சுற்றம்-நிருபாதிக பந்து; அறவதண்டம்-யமதண்டனை]

என்பது இக்காட்சிகளை நம்மனத்தில் நிறுத்தும் அற்புதப் பாசுரம். பாசுரத்தைப் பன்முறைப் பாடிப்பாடி அநுசந்திக்க வேண்டும். இங்ஙனம் பலகோணங்களில் பக்தியின் பெருமை மபேசப் பெறுகின்றது.

பிள்ளைகட்குத் திருநாமம் இடுதல்: இல்வாழ்க்கையின் இன்றியமையாத பகுதி மனைமாட்சி; அவ்வாழ்க்கைக்கு முத்தாய்ப்பு வைத்த மாதிரி அமைவது நன்மக்கட்பேறு. இதனை வள்ளுவப் பெருந்தகை,

மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.[5]

என்று போற்றுவர். இல்வாழ்வில் பிள்ளைகட்குத் திருநாமம் இடுதல் ஒரு முக்கிய சடங்காக நடைபெற்று வருவதை அறிவோம். ஒவ்வொருவரும் தத்தம் விருப்பத்திற்கேற்பப் பெயரிட்டு மகிழ்கின்றனர். அரசியல் தலைவர்கள், சமூகத் தொண்டர்கள், சமயப் பெரியார்கள், சினிமா நட்சத்திரங்கள் போன்றவர்களின் பெயர்களைச் சூட்டுதல் இன்று நாகரிகமாகவே வழங்கி வருகின்றது. தவிர, தனித் தமிழில் பெயர்களை இடுதலும் தமிழ்ப் பற்றாளர்களின் பழக்கமாகி வருகின்றதையும் காண்கின்றோம். ஆயினும், எம்பெருமானின் திருநாமங்களை இட்டு மகிழ்வதையும் ஒரு சிலரிடம் மரபாக இருந்து வருவதையும் பார்க்கின்கிறோம். எம்பெருமானின் மேன்மையைக் காட்டிலும் அவனைக்

5. குறள்-60

குறிக்கும் திருநாமத்தின் மேன்மை உயர்ந்ததாகும் என்ற சாத்திர உண்மையைக் கண்டறிந்தவர்கள் இவர்கள். கோவிந்த நாமத்தால் திரௌபதிக்கு புடவை சுரந்ததும், க்ஷத்திரபந்தின் வரலாற்றில் 'கோவிந்த' நாமத்தின் பங்கும், முத்கலன் வரலாற்றில் 'கிருஷ்ணாய' என்பதன் செயலும் அஜாமிளன் வரலாற்றில் 'நாராயணன்' என்ற திருநாமத்தின் மகிமையும் இவர்கட்கு அற்றுபடியான செய்திகள்.

எம்பெருமானின் திருப்பெயரைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணமின்றியே சொன்னாலும் தம் குழந்தைகட்கு இப்பெயரை இட்டு அழைக்கினும், பரிகாசமாகவோ இழிவாகவோ பொருளுணர்ச்சியின்றியோ சொல்லினும் அஃது இரட்சண்யமாகிய தன் காரியத்தினின்றும் தவறாது. எம்பெருமான் திருநாமத்தைப் பரிகாசமாயும், ஏளனமாயும் அடிக்கடிக் கூறிக் கொண்டிருந்த சிசுபாலன் போன்றார்க்கும் நற்கதி கிடைத்த தென்பதையும் அறிகின்றோம்.

பலபல நாழம் சொல்லிப்
பழித்தசிசு பாலன் தன்னை
அலவலை மைதவிர்த்த அழகன் (4.3:5)

[நாழம் - குற்றம்; அலவலைமை - அற்பத்தனத்தை; தவிர்த்த-போக்கின]

என்று இந்நிகழ்ச்சியைப் போற்றி மாலிருஞ்சோலை அழகனையும் போற்றியுரைப்பர் ஆழ்வார்.

இசைவாணர்கள் ஒரு பாட்டைப் பாடி முடிக்கும் பொழுது தங்கள் ஆலாபனத்திற்கேற்ப யாதாவது ஒரு சொல்லைச் சொல்லி முடிக்கும் வழக்கத்தை நாம் அறிவோம். அது பொருளற்ற சொல்லாயிருப்பினும் இருக்கலாம். ஆனால், சிலர் அங்கு 'இராமா' என்ற சொல்லை உணர்ச்சியின்றியே சொல்லி முடிக்கின்றனர். அவர்கட்கும் நன்மை ஏற்படத்தான் செய்கின்றது. இதனாலும் பிள்ளைகட்கு எம்பெருமான் பெயர்களையிட்டு

என்கின்றார். 'பிச்சை புகினும் எம்பிரான் திருநாமமே நச்சுமின்' (4.6:3) என்று அறிவுறுத்துகின்றார். இங்கு வியாக்கியானத்திலுள்ள ஒரு கதை அறியத்தக்கது. ஓர் அந்தணன் தன் மகனுக்கு நாமகரண காலத்தில் 'ஐசுவரியம் தரவல்லான் ஒருவனுடைய பெயரை இப்பிள்ளைக்கு இட வேண்டும்' என்றெண்ணிக் குபேரன் பெயரை இடு என்றதும் "'ஜளிபிளீ' என்ற பேரிட்டழைத்து ஜீவிப்பதற் காட்டிலும் நாராயணன் என்ற திருநாமத்தைச் சாத்திப் பிச்சை புக்காகிலும் ஜீவிக்க அமையும் என்றார் ஓர் ஆஸ்திகர்," (ஜளிபிளீ-குபேரன் பெயர்).

விஷ்ணு சித்தர் மேலும் உபதேசிக்கின்றார்:

**மானிடசாதியில் தோன்றிற்றோர்**
**மானிட சாதியை**
**மானிடசாதியின் பேரிட்டால்**
**மறுமைக் கில்லை**
**வானுடை 'மாதவா கோவிந்தா'**
**என்றழைத் தக்கால்**
**நானுடை நாரணன்**
**தம்அன்னை நரகம்புகாள்** (4.6:4)

[மானிடசாதி-வினைப் பயனை அநுபவிக்கப் பிறந்த சாதி; மறுமைக்கு-வீடுபேறு அடைகைக்கு; வான்-பரமபதம்]

என்பது பாசுரம். சீவான்மா கருமங்களுக்கிணங்க தேவயோநி முதலிய பல யோநிகள்தோறும் பிறக்கக் கடவன்; நல்வினை தீவினையாகிய இரண்டையும் அநுபவிப் பதற்கும், புதிதாகப் பெறுகைக்கு மென்றே மானிட யோநியில் பிறப்பது? இப்படி வினைக்கு வசப்பட்டு மானிட சாதியிற் பிறக்கும் பிராணியை இம்மைப் பயனை விரும்பி வினைவயத்ததான மானிட சாதியின் பெயரிட்டழைப்பின் இவ்வுலகில் சில சிறிய பலன்கள் கிடைக்கினும் மறு உலகப்

பேற்றுக்கு யாதொரு வழியும் இல்லை; இங்ஙனமின்றி எம்பெருமான் திருநாமங்களாகிய 'மாதவன்', 'கோவிந்தன்' என்பன போன்ற பெயர்களிட்டால் மறுமையில் அப்பேறு பெறக் குறை இல்லை.

ஆழ்வார் 'நாடும் நகரும் அறிய மானிடப் பேரிட்டு கூடி யழுங்கிக் குழியில் வீழ்ந்து தவறிப்' போகாமல் இருக்குமாறு எச்சரிக்கின்றார்; எச்சரித்தவர்,

> **குலமுடைக் 'கோவிந்தா**
> **கோவிந்தா'வென் றழைத்தக்கால்**
> **நலமுடை நாரணன்**
> **தம்மன்னை நரகம்புகாள் (4.4:5)**

*[குலம்-இடைக்குலம்.]*

என்றும்,

> **சாடிறப் பாய்ந்த 'தலைவா**
> **தாமோதரா' என்று**
> **நாடுமின், நாரணன்**
> **தம்மன்னை நரகம்புகாள் (4.6:6)**

*[சாடு-சகடாசுரன்; பாய்ந்த-உதைத்த.]*

என்றும் எம்பெருமான் பெயர்களையே இடுமாறு அறிவுறுத்துகின்றார். அன்றியும், 'மண்ணிற் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு' மகிழாமல் 'கண்ணுக் கினிய கருமுகில் வண்ணன் நாமமே நண்ணுமின்' (4.6:7) என்று அறிவுரையும் பகர்கின்றார். இன்னும்,

> நம்பி பிம்பிஎன்று
> நாட்டுமானிடப் பேரிட்டால்
> நம்பும் பிம்பும்எல்லாம்
> நாலுநாளில் அழுங்கிப்போம் (4.6:8)

*[நாடு மானிடர்-தாழ்ந்த மானிடர்; அழுங்கி-அழிந்து]*

என்று ஏசுகின்றார். 'நம்பி' என்றால் 'குறைவற்றவன்' (பூரணன்) என்னும் பொருளையுடையது ாற்றி 'இப்

பெயரை நமது பிள்ளைக்கு இட்டால் ஒரு குறையுமின்றிப் பூரணனாயிருப்பான்' என்று நினைத்து அப்பெயரை இடுகின்றவர்களைக் குறித்து ஏளனம் செய்கின்றார். 'பிம்பி' என்பதற்கு இங்கு ஒரு பொருளும் இல்லை. இச் சொல் எப்படிப் பொருளற்றதோ அப்படித்தான் 'நம்பி' என்கின்ற சொல்லும் பொருளற்றது என்பது ஆழ்வார் கருத்து. ஆகவேதான், நம்பிக்கு எதிர்த் தட்டாக ஒரு 'பிம்பியை' அருளிச் செய்கின்றார். இங்ஙனம் வெறுப்புத் தோற்றச் சொல்லுகின்ற இடங்களிலெங்கும் மற்றொரு சொல் பொருளின்றி வழங்கப்பெறுவது உலகியற்கை. ஒருவன் ஒரு கடையில் 'உப்பு உளதோ?' என்று கேட்டால் அதற்குக் கடையிலுள்ளவன் வெறுப்புக் கொண்ட காலத்தில் " 'உப்பும்' இல்லை; 'பப்பும்' இல்லை" என்று கூறுவதை நாம் காண்கின்றோமன்றோ? அதுபோலவே இங்கும் 'நம்பி' என்னும் பெயரில் வெறுப்புக் கொண்ட ஆழ்வார் 'பிம்பி' என்ற மற்றொரு பொருளில்லாப் பெயரைக் கூட இணைத்துக் கூறுகின்றார். ஆகவே,

**செம்பெருந் தாமரைக்**
**கண்ணன்பேரிட் டழைத்தக்கால்**
**நம்பிகாள்! நாரணன்**
**தம்மன்னை நரகம்புகாள் (4.6:8)**

*[நம்பிகாள்-(அறிவினால்) குறைவற்றவர்களே.]*

என்கின்றார். மேலும் கூறுவார் :

**ஊத்தைக்குழியில் அமுதம்பாய்**
**வதுபோல், உங்கள்**
**மூத்திரப் பிள்ளையை**
**என்முகில்வண்ணன் பேரிட்டு**
**கோத்துக் குழைத்துக்**
**குணாலமாடித் திரிமினோ**
**நாத்தகு நாரணன்**
**தம்மன்னை நரகம்புகாள் (4.6:9)**

[ஊத்தை - அசுத்தமான; மூத்திரம் - அசுத்தமான; கோத்துக் குழைத்து-கூடிக் கலந்து; குணாலக் கூத்து-தலைகீழாக ஆடும் கூத்து.]

எம்பெருமானுடைய உயர்ந்த திருநாமத்தைக் கேவலமான மானிட மக்களுக்கிடுவது, அசுத்தமாகிய ஓர் எச்சிற்குழியில் அமுதத்தைப் பாய்ச்சுவதை ஒக்கும் என்கின்றார். ஊத்தைக் குழியில் அமுதம் பாய்ந்தால் அமுதமும் அசுத்த மாகித் துய்ப்பதற்கு அருகதையற்றுப் போகும். எம்பெருமானுடைய திருநாமமோ தனக்கு யாதொரு கேடும் இல்லாதபடி தான் புகுந்தவிடத்தையும் பரிசுத்த மாக்கி விடும் என்று திருநாமத்தின் மகிமையை எடுத்துக் காட்டுகின்றார் ஆழ்வார். இங்ஙனம் பலபடியாகப் பிள்ளை கட்கு எம்பெருமான் திருநாமங்களை இடும் இன்றியமை யாமையை விளக்குவர் விஷ்ணுசித்தர்.

எம்பெருமான் பேரருள் சுரத்தல் நினைத்துப் பார்க்க முடியாதது. பிள்ளையுலக ஆசிரியர் கூறுமாப் போலே, 'என் ஊரைச் சொன்னாய்; என் பெயரைச் சொன்னாய்; என் அடியாரை நோக்கினாய்; அவர்கள் விடாயைத் தீர்த்தாய்; அவர்கட்கு நிழலைக் கொடுத்தாய்' என்று ஏறிட்டுக் கொண்டு மடிமாங்காய் இட்டு* மக்கள்மீது கருணை சுரப்பான். ஆகவே, எம்பெருமான் பெயர்களாகிய கேசவன், நாராயணன், வாசுதேவன் போன்றவற்றையும் அவன் உகந்த ஊர்களாகிய சீரங்கம், திருமலை, திருவேங் கடம், கடிகாசலம் போன்ற பெயர்களையும் தம் பிள்ளை கட்கு இட்டு உய்யுமாறு அறிவு கொளுத்துகின்றார் விஷ்ணுவையே தம் சித்தத்தில் வைத்திருக்கும் ஆழ்வார்.

**அகத்திணை மரபுகள் :** உலகியல் வழக்காகவும் நாடக வழக்காகவும் சித்திரிக்கப்பெறும் சங்ககால இலக்கிய

---

* மாங்காய் இடாமலே வாளா வழி போகின்றவன் மடியிலே மாங்காயை மறைத்துக் கொண்டு சென்று 'மாங்காயைக் களவு கண்டாய்' என்று கூறுதல்.

அகத்திணைக் கூறுகள் ஆழ்வார் பாசுரங்களில் இடம் பெற்றுத் திகழ்கின்றன. அவை கூறும் மெய் விளக்கக் கருத்துகள் ஒரு புறமிருக்க, ஏனையவை உலகியலை யொட்டிச் சமுதாய நடைமுறைகளைப் பின்பற்றி அமைக்கப் பெற்றுள்ளன. இங்ஙனம் ஆழ்வார்கள் அமைத்துப் பாடியுள்ள காதல் துறைகளுள் தூது, அறத் தொடுநிலை, கட்டுவிச்சி குறி பார்த்தல், வெறி விலக்கு, உடன்போக்கு முதலியவை அற்புதமாக அமைந்துள்ளன. இவற்றுள் எல்லாம் ஆழ்வார்களின் சமுதாயக் கண் ணோட்டத்தைக் காணலாம். பெரியாழ்வார் திருமொழி யில் 'நற்றாய் இரங்கல்' (3.7), தலைவன் பின் சென்ற மகளைக் குறித்துத் தாய் பலபடி உன்னி ஏங்குதல் (3.8) என்ற திருமொழியில் இவை காணப்பெறுகின்றன. இவற்றின் விளக்கம் இந்நூலில் பிறிதோரிடத்தில் தரப் பெற்றுள்ளது.[6]

**நாட்டுப் பாடல்களின் தாக்கம் :** பக்தி இயக்கக் காலத்தில் தோன்றிய ஆழ்வார்களின் பாசுரங்கள் யாவும் பொது விருப்பானவை. நாட்டு மக்கள் யாவரும் இந்த இயக்கத்தில் பங்கு கொண்டமையால் ஆழ்வார்களின் சமுதாயக் கண்ணோட்டம் நாட்டுப் பாடல்களின் பாணியைப் பின்பற்றிப் பாசுரங்களை அமைக்கும் அளவிற்குப் போயுள்ளது. பெரியாழ்வார் திருமொழியில் (3.9) வருகின்ற **'உந்தி பறத்தல்'** என்ற திருமொழியில் பாசுரந்தோறும் 'பாடிப்பற' என்றது 'உந்திப் பறத்தல்' என்பதைக் குறிக்கும்; இறுதிப் பாசுரத்தில் 'உந்தி பறந்த' என்று வருவதைக் காணலாம். **உந்தி பறத்தல்** என்பது, மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று. இது பிங்கலந்தை நிகண்டால் அறியப்பெறுகின்றது. இது பெண்பிள்ளைகள் கூட்டமாகக் கூடி விளையாடுவதொரு விளையாட்டு என்ற அளவே புலப்படுகின்றது; மணிவாசகர் அருளியுள்ள

---

6. 12-வது கட்டுரையில். ஆண்டுக் கண்டு கொள்க.

'திருவுந்தியாரில்' (பாடல்-11) வரும் 'கொங்கை குலுங்க நின்று உந்தீ பற' என்ற தொடரால் இவ்விளையாட்டு கொங்கை குலுங்க நின்று ஆடப்படுவதென்று தெரிகின்றது. சோபன மடித்தல், கும்மியடித்தல் போன்ற ஒருவகை விளையாட்டு எனக் கொள்ளத் தோன்றுகின்றது.

இவ்விளையாட்டை ஆடும் மகளிர் பறவை போல் நிலத்தில் இருந்து பாதங்கள் மட்டும் படிய, இரு கைகளை யும் முடக்கியிருந்து, பின் விரைந்தெழுந்து, இரு கைகளை யும் இரு பக்கங்களில் சிறகுபோல் நீட்டிப் பறவைகள் பறப்பது போலப் பாவனை செய்து ஓடி வேறோர் இடத்தில் முன்போல் அமர்ந்து, பின்னும் அவ்வாறே ஆடப்படும் என்று கொள்ளல் பொருந்தும். ஏனைய விளையாட்டுப் பாடல்கள்போல இவ்விளையாட்டுப் பாடலும் 'உந்திப் பாட்டு' எனக் கொள்ளல் பொருந்தும். இவ்விளையாட்டை இன்னொரு விதமாகவும் கொள்ளலாம். இவ்விளையாட்டில் பறந்து சென்று தொடுகின்றவள் இறைவன் புகழைப் பாட, தொட இருக்கின்றவள் அதன் விளைவைக் கூறுவதாக ஒவ்வொரு பாட்டும் முடிந்துள்ளது.

பெரியாழ்வார் திருமொழியில் ஆழ்வார் இரண்டு ஆயமங்கையரின் நிலையை எய்தி ஒருத்தி கண்ணபிரானின் குணச்சிறப்புகளையும் மற்றொருத்தி இராமபிரானுடைய குணச்சிறப்புகளையும் பாடி உந்தி பறத்தல் விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.

பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் கைசெய்து
நஞ்சுமிழ் நாகம் கிடந்தநற் பொய்கைபுக்கு
அஞ்சனப் பணத்தின்மேல் பாய்ந்திட்டு அருள்செய்து
அஞ்சன வண்ணனைப் பாடிப்பற
அசோதைதன் சிங்கத்தைப் பாடிப் பற (3.9:5).

[கைசெய்து-அணிவகுத்து; பொய்கை-மடு; பணம்-படம்]

இது கிருஷ்ணாவதாரப் பற்றுடைய ஒருத்தியின் பாசுரம்.

முடிஒன்றி மூவுல கங்களும் ஆண்டுஉன்
அடியேற்கு அருள்என்று அவன்பின் தொடர்ந்த
படியில் குணத்து பரதநம்பிக்கு அன்று
அடிநிலை ஈந்தானைப் பாடிப் பற
அயோத்தியர் கோமானைப் பாடிப் பற (3.9:6).

*[முடி-திருமுடி; ஒன்றி-சூடி; படி இல்-ஒப்பற்ற; அடி-நிலை-பாதுகை]*

*இஃது* **இராமாவதாரப்** *பற்றுடைய மற்றொருத்தியின் பாசுரம். இப்படிப் பாசுரங்கள் மாறி மாறி வருகின்றன இத்திருமொழியில்.*

**தாலாட்டுப் பாடல்கள்:** *குழந்தையைத் தொட்டிலில் இட்டுப் பாட்டுப்பாடித் தாலாட்டி உறங்க வைப்பது தாய் மாருக்கு இன்பமயமான செயலாகும். அப்போது பாடும் தாலாட்டுப் பாட்டு தொன்று தொட்டுக் குடும்பங்களில் வீட்டுப் பெண்களின் கலையாக இருந்து வருகின்றது. தமிழ் இலக்கியத்தில் மிகப்பழைய தாலாட்டுப் பாட்டாகக் கிடப்பவை, பெரியாழ்வாரின்* **'மாணிக்கம் கட்டி'** *(1.3:1) என்ற பெரியாழ்வார் திருமொழியின் பத்துப் பாசுரங்களும் குலசேகராழ்வாரின்* **'மன்னுபுகழ் கௌசலைதன்'** *(பெருமாள் திருமொழி-8)என்ற பெருமாள் திருமொழிப் பத்துப் பாசுரங் களும் ஆகும். இங்குப் பெரியாழ்வார் திருமொழியில் ஒரு பாசுரத்தை மட்டிலும் காட்டுவேன். யசோதைப்பிராட்டி யானவள் தன்னுடைய வளர்ப்புப் பிள்ளையாகிய கண்ண பிரானைத் தொட்டிலில் கண்வளரச் செய்து தாலாட்டின படியை அவளைப் போலவே ஆழ்வார் தாமும் அநுபவித்துப் பேசும் திருமொழி இது. ஒரு பாசுரம்:*

மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே தாலேலோ (1.4:1).

[கட்டி-இருபக்கத்தில் கட்டியும்; இடை-நடுவில்; ஆணிப் பொன்-மாற்றுயர்ந்த பொன்; வண்ணம்-அழகிய; பேணி - விரும்பி; விடுதந்தான்-அனுப்பினான்; மாணி-பிரமச்சாரி; வையம்-உலகம்]

என்பது. அடுத்து வரும் பாசுரங்களில் முறையே சிவன் மாதளம்பூக் கோவையென்கின்ற அரைவடத்தையும் (2), தேவேந்திரன் அரைச்சதங்கையையும் (3), தேவதைகள் பலர் கூடிப் பல திருவாபரணங்களையும் (4), குபேரன் ஐம்படைத்தாலியையும் (5), வருணன் முத்துகளாலும் பவழங்களாலும் தொடுக்கப்பட்ட மாலைகளையும் (6) கொண்டு வந்துள்ளனர். பெரிய பிராட்டியார் திருத்துழாய் மாலையும் (7), பூமிப் பிராட்டியார் கச்சுப்பட்டை பொன்னாற் செய்த உடை வாள் கரைகட்டிய சேலை, தங்க மயமான தோள்வளைகளையும், இரத்தினம் இழைத்த வயிரச்சுட்டியையும் அழகிய பொற்பூ ஆகியவற்றையும் (8) அனுப்பியுள்ளனர். துர்க்காதேவி கஸ்தூரி, கர்ப்பூரம், சந்தனம் முதலிய மணப்பொடிகளையும், மஞ்சள் பொடி, கண் மை, சிந்தூரம் முதலியவற்றையும் கொண்டு வந்துள்ளாள் (9). நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் பக்தி இலக்கியங்களில் கலந்து வரும்போது பக்தி இலக்கியங்கள் புதுப்பொலிவையும் புதுவேகத்தையும் பெற்று இலங்குவதைக் காணலாம்.

இங்ஙனம் இந்த ஆழ்வார் பாசுரங்களில் சமுதாயக் கண்ணோட்டத்தைக் காண முடிகின்றது.

# 14. பாசுரங்களில் படிமங்கள்

"படிமம் (Imagery) என்பது சொற்களால் கவிஞன் புலன்கட்குக் கவர்ச்சியுடையதாகச் செய்யும் ஒருவகை உத்தியாகும். புலன்களின்மூலம் படிப்போரின் எழுச்சிகளையும் அறிவினையும் கிளர்ந்தெழச் செய்தல் இயலும்; இதனைக் கருதியே கவிதையில் படிமம் கையாளப் பெறுகின்றது" என்று கூறுவர் பர்ட்டன் என்ற ஆங்கிலத் திறனாய்வாளர் **கவிதைத் திறனாய்வு** என்ற தமது நூலில். மேலும் அவர் கூறுவார்: "புலன்கட்கு முறையீடு செய்வதற்கேற்பப் படிமங்கள் வகை செய்யப்பெறுகின்றன; கட்புலப்படிமங்கள்; செவிப்புலப் படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நாற்றப் புலப் படிமங்கள், நொப்புலப் படிமங்கள், இயக்கப்புலப் படிமங்கள், மரபுவழிப் படிமங்கள் என்பவை இவையாகும்" என்று. எண்ணத்திற்கும் புலன் காட்சிக்கும் குறியீடுகளாக இருப்பவை சொற்களாகும் என்பதை நாம் அறிவோம். ஒரு கவிதையைப் படிக்கும்போது சொற்கள் அல்லது சொற்கோவைகள் சிலபல படிமங்களை நம் மனக் கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. புலன்களின் மட்டத்தில் தூண்டல்கள் (Stimuli) செய்வதைப் போலவே, படிமங்களும் கருத்துநிலைச் செயலில் (Ideational level) நம் புலன்களைத் தூண்டி நம்மிடம் கவிதையநுபவத்தை எழுப்பிக் கவிதையைத் துய்த்து மகிழ்வதற்குத் துணையாக அமைகின்றன. மேலும் சில சொற்கள் 'கட்டுண்ட' படிமங்களையும் (Tied images), 'விடுதலை'ப் படிமங்களையும் (Free images) எழுப்பிவிடுகின்றன. இவையும் கவிதையை

நுகர்வதற்கு இன்றியமையாத கூறுகளாகவே (Sine qua non) அமைகின்றன.

நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் திருமொழியிலுள்ள பாசுரங்களில் இத்தகைய படிமங்கள் அமைந்திருப்பதால் பாசுரங்களைப் பயில்வோரின் மனத்தில், இவை தோன்றிக் கவிதையநுபவத்தைக் கிளர்ந்தெழச் செய்கின்றன; படிப்போரைப் பக்திக் கொடுமுடிக்கு இட்டுச் செல்கின்றன. 'சீதக்கடலுள் அமுதன்ன தேவகி' (1.3:1), 'மைத் தடங்கண்ணி யசோதை' (1.2:12), 'மாணிக்குறளன்' (1.3:1), 'வெள்ளிப் பருமலைக் குட்டன்' (1.7:5), 'கைந்நாகத்து இடர்கடிந்த கனல் ஆழிப்படையுடையான்' (4.9:11) என்பன போன்ற சொற்கோவை எழுப்பும் படிமங்களை எண்ணி மகிழலாம். இனி, சிறப்பாக ஒவ்வொரு புலனையும், பொதுவாகப் பல புலன்களையும் கவரும் படிமங்களைக் கண்டு மகிழ்வோம்.

**கட்புலப் படிமங்கள்** (Visual images): பல்வேறு படிமங்களிடையேயும் கட்புலத்தைக் கவரும் உருக்காட்சிகளே அதிகமாக உள்ளன. இவையே படிப்போரின் மனத்தில் நிலையான பதிவினை விளைவிக்கின்றன. கட்புல நரம்பு ஏனைய புலநரம்புகளைவிடத் தடித்திருப்பதே இதற்குக் காரணம் எனக் கருதலாம். இதன் காரணமாகவே இக் காலக் கல்வியில் கட்புல-செவிப்புலத் துணைக் கருவிகள் அதிகமாகப் பயன்படுத்தப் பெறுகின்றன. பள்ளிகளில் சுற்றுலா அமைத்து மாணாக்கர்களைப் பல்வேறு இடங்கட்கு இட்டுச்சென்று பல்வேறு காட்சிகளை நேரில் காணச் செய்கின்றனர். விட்டு சித்தன் பாசுரங்களில் கட்புலனைக் கவரும் ஒரு சில படிமங்களைக் கண்டு மகிழலாம்.

**மின்னுக் கொடியும் ஓர்வெண்**
**திங்களும் சூழ்பரி வேடமுமாய்**
**பின்னல் துலங்கும் அரசிலையும்**
**பீதகச் சிற்றாடை யொடும்**

மின்னிற் பொலிந்ததோர் கார்முகில்
போலக் கழுத்தினில் காறையொடும்
தன்னிற் பொலிந்த இருடீ
கேசன் தளர்நடை நடவானோ (1.8:3)

[மின்கொடி-கொடிமின்னல்; பரிவேடம்-சந்திரனைச் சுட்டிச் சில காலங்களில் காணப்படும் ரேகை (ஊர் கோள்); பீதகம்-பொன்]

*மின்னுக்கொடி, வெண்திங்கள், பின்னல், அரசு இலை, பீதகச் சிறு ஆடை, கார்முகில், காறை-இவை யாவும் கட்புலப் படிமங்கள்.*

கதிரா யிரமிரவி கலந்தெறித்
தால்ஒத்த நீள் முடியன் (4.1:1)

*இதில் கதிர், இரவி, நீள் முடியன் இவை கட்புலப் படிமங்கள்.*

வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த்திருச்
சக்கரம் ஏந்து கையன் (4.1:7)

*இதில் வெள்ளை விளிசங்கு, வெஞ்சுடர்த் திருச்சக்கரம், ஏந்து கையன்-இவை கட்புலப் படிமங்கள்.*

எறிப்புடைய மணிவரைமேல் இளஞாயிறு
எழுந்தாற்போல் அரவ ணையின்வாய்
சிறப்புடைய பணங்கள் மிசைச் செழுமணிகள்
விட்டெறிக்கும் திருவ ரங்கமே (4.9:7)

*இதில் மணிவரை, இளஞாயிறு, பணங்கள், செழுமணிகள், திருவரங்கம்—இவை கட்புலப் படிமங்கள்.*

**செவிப்புலப் படிமங்கள்** (Auditory images): *காதினால் மட்டிலும் கேட்டு உள்ளத்தைப் பறிகொடுக்கச் செய்யும் படிமங்கள் இவை. விட்டுசித்தன் பாசுரங்களில் இத்தகைய படிமங்களைக் கண்டு மகிழலாம்.*

ஓடஓடக் கிண்கிணிகள் ஒலிக்கும்
ஓசைப் பாணி யாலே
பாடிப்பாடிப் வருகின் றாயைப்
பற்பநாபன் என்று இருந்தேன்
ஆடிஆடி அசைந்து அசைந்திடு
அதனுக்கேற்ற கூத்தை ஆடி
ஓடிஓடிப் போய்வி டாதே
உத்தமா! நீமுலை உணாயே (2.2:10)

[கிண்கிணி-பாதச் சதங்கை]

இதில் கிண்கிணிகள் ஒலித்தல், ஓசைப்பாணி, பாடிப்பாடி வருதல் என்பன செவிப்புலப் படிமங்கள்.

வெண்ணெய் விழுங்கி வெறுங்க லத்தை
வெற்பிடை யிட்டதன் ஓசை கேட்கும் (2.9:1)

[வெற்பு-கல்]

இதில் 'வெற்பிடை இட்டதன் ஓசை' செவிப்புலப் படிமம்.

தொடர்சங் கிலிகை சலார்பிலார் என்னத்
தூங்கு பொன்மணி ஒலிப்ப
படுமும் மதப்புனல் சோர வாரணம்
பையநின் று ஊர்வதுபோல்
உடன் கூடிக் கிண்கிணி ஆரவா ரிப்ப
உடைமணி பறைகறங்க
தடந்தா ளிணைகொண்டு சார்ங்க பாணி
தளர்நடை நடவானோ? (1.8:1)

[சங்கிலிகை தொடர்-இரும்புச் சங்கிலியின் தொடர்; தூங்கு-தொங்குகின்ற; சோர-பெருக; வாரணம்-யானை; கிண்கிணி-கால்சதங்கை; உடை மணி-இடுப்பில் கட்டிய மணி; கறங்க-ஒலிக்க]

இது பெரியாழ்வார் யசோதைப் பிராட்டி நிலையிலிருந்து கொண்டு கண்ணனின் தளர்நடையை அநுபவிக்கும்

பாசுரம். வாரணம் பைய ஊர்தல், தளர்நடை நடத்தல், மும்மதப் புனல் சோர்தல் இவை இயக்கப் படிமங்கள். இரும்புச் சங்கிலி 'சலார்பிலார்' என ஒலித்தல், தூங்கு பொன்மணி ஒலித்தல், கிண்கிணி ஆரவாரித்தல், உடை மணி பறைபோல் ஒலித்தல் ஆகியவை செவிப்புலப் படிமங்களாகும். இக்கலவைப் படிமம் கண்ணனின் தளர் நடையை நேர் காட்சியாகக் காட்டுகின்றது.

**சுவைப் புலப் படிமங்கள்** (Gustatory images): நாவினால் பெறும் அநுபவத்தைத் தரும் பாசுரங்கள் அதிகமாகவே காணப்பெறுகின்றன. இறைவனே 'ஆரா அமுதனாக' இருக்கும்போது அவனைப் பற்றிய பாசுரங்களில் இத் தகைய படிமங்கள் இருப்பதில் வியப்பில்லை. விஷ்ணுசித்தர் யசோதைப் பிராட்டியின் நிலையிலிருந்து கொண்டு பிள்ளைப் பெருமாளைக் குழல் வாரிக்கொள்ள அழைக் கின்றார். அப்போது பேசும் பாசுரம் இது:

**திண்ணக் கலத்துத் திரையுறிமேல் வைத்த**
**வெண்ணெய் விழுங்கி விரைய உறங்கிடும்**
**அண்ணல்** (2.5:3)

[திண்ணக்கலம்-கெட்டியான பாத்திரம்; திரை உறி-பின்னுதலையுடைய உறி; விரைய-விரைவாக]

இதில் 'வெண்ணெய் விழுங்குதல்' சுவைப் புலப் படிமம்.

**பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத்து உண்டிட்டு**
**உறங்குவான் போலே கிடந்த இப் பிள்ளை** (1.3:5)

இதில் 'முலைசுவைத்து உண்ணல்' சுவைப் புலப் படிமம்.

**என்சிறுக் குட்டன் எனக்கோர்**
**இன்னமுது எம்பிரான்.** (1.5:2)

இதில் 'எனக்கோர் இன்னமுது' என்பது சுவைப்புலப் படிமம்.

**நாற்றப்புலப் படிமங்கள்** (Olfactory Images): *மூக்கினால் முகர்ந்து அநுபவிக்கக் கூடிய படிமங்களாக அமைந் திருப்பவை இவை.*

**பாலொடு நெய்தயிர்ஒண் சாந்தொடு சண்பகமும்**
**பங்கயம் நல்லகருப் பூரமும் நாறிவர (1.6:9)**

*செங்கீரைப் பருவத்தில் வரும் ஒரு பாசுரம். இதில் நெய் பால் தயிர்...கருப்பூரம் நாறுதல் நாற்றப் புலப் படிமங்கள்.*

**மருவி மணம்கமழ் கின்ற**
**மல்லிகைப் பூச்சூட்ட வாராய் (2.7:2)**

*இதில் மல்லிகை மணம் கமழ்தல் நாற்றப்புலப் படிமம்.*

**மலமுடை யூத்தையில் தோன்றிற்**
**றோர்மல வூத்தையை**
**மலமுடை யூத்தையின் பேரிட்டால் (4.6:1)**

*இதில் மலமுடை ஊத்தை, மலஊத்தை இவை நாற்றப் புலப் படிமங்கள்.*

**ஊத்தைக் குழியில் அமுதம்**
**பாய்வதுபோல் உங்கள்**
**மூத்திரப் பிள்ளையை (4.6:9)**

*இதில் ஊத்தைக்குழி, மூத்திரப் பிள்ளை நாற்றப்புலப் படிமங்கள்.*

**நொப்புலப் படிமங்கள்** (Tactile images): **தொடுதலால்** *அநுபவிக்கக் கூடிய படிமங்கள் இவை.*

**சித்திர கூடத்திருப்பச்**
**சிறுகாக்கை முலைதீண்ட (3.10:6)**

*இதில் 'முலைதீண்டல்' நொப்புலப் படிவம்*

**என்னைப் புறம்புல்குவான் (1.10:1)**

*இதில் 'புறம்புல்குதல்' நொப்புலப் படிமம்.*

**இயக்கப் புலப் படிமங்கள் (Kinesthetic images):** ஒரு பொருள் அல்லது மனிதனின் இயக்கத்தை விளக்குவது இந் நிலைப் படிமம் ஆகும்.

**ஓடுவார் விழுவார் உகந்தா லிப்பார்**
**நாடுவார் நம்பிரான் எங்குத் தான்என்பார்**
**(1.2:2)**

இது கண்ணன் பிறந்ததைக் கேட்டு ஆயர்பாடி மக்கள் குதூகலித்ததைக் காட்டுவது. இதில் ஓடுதல், விழுதல் முதலியவை இயக்கப்புலப் படிமங்கள்.

**காயும்நீர் புக்குக் கடம்பேறிக் காளியன்**
**தீயப ணத்தில் சிலம்பார்க்கப் பாய்ந்தாடி**
**வேயின் குழலூதி வித்தக னாய்நின்ற**
**ஆயன்வந் தப்பூச்சி காட்டு கின்றான் (2.1:3)**

*[காயும்நீர்-கொதிக்கின்ற நீர்; கடம்பு-கடம்பமரம்; பணம்-படம்; ஆர்க்க-ஒலிக்க; வேய்-மூங்கில்]*

சிறுபிள்ளைகள் பூச்சிகாட்டி விளையாடுவதைப் போல, பிள்ளைப் பெருமாளும் அக்காலத்தில் பூச்சிகாட்டி விளையாடியதை அக்காலத்துப் பெண்கள் கண்டு அநுபவித்து உகந்ததைப் பெரியாழ்வாரும் யசோதை நிலையிலிருந்து கொண்டு அந்த விளையாட்டை அநுபவித்து இனியராவதைக் காட்டும் பாசுரம் இது. நீர்புகுதல், கடம்பு ஏறுதல், பணத்தில் பாய்ந்தாடுதல் இவை இயக்கப்புலப் படிமங்கள். வேயின் குழலூதுதல் செவிப்புலப் படிமம். இக் கலவைப் படிவம் சிறுவன் கண்ணனின் விளையாட்டினை நம் மனத் திரையில் எழச்செய்து நம்மை மகிழ்விக்கின்றது. இந்த விளையாட்டை,

**காளியன் பொய்கை, கலங்கப் பாய்ந்திட்டுஅவன்**
**நீள்முடி ஐந்திலும் நின்று நடம்செய்து**
**மீளஅவ னுக்கருள் செய்த வித்தகன் (3.9:7)**

[பாய்ந்திட்டு-குதித்து; நீள்முடி-நீண்ட படம்; மீள-
இளைத்துச் சரண்புகுந்த பிறகு]

என்ற பாசுரத்தில் மீண்டும் குறிப்பிடுவதைக் காணலாம். பொய்கை கலங்கல், பாய்ந்திடல், நீள்முடியில் நடனம் செய்தல் இவை இயக்கப்புலப் படிமங்களாகும்.

கண்ணன் பிருந்தாவனத்தில் குழலூதிய செயலைக் காட்டுகின்றார் பெரியாழ்வார். ஊதிய திறத்தை,

**சிறுவி ரல்கள் தடவிப்பரி மாறக்**
**செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிக்கச்**
**குறுவெ யர்ப்புரு வம்கூட லிப்பக்**
**கோவிந்தன் குழல்கொ டூதின போது (3.6:8)**

[பரிமாற-பரவ; கோட-வளைய; கொப்பளிக்க-
குமிழ்க்க; கூடலிப்ப-கிளர்ந்து வளைய.]

என்ற பாசுரப்பகுதி காட்டுகின்றது. கண்ணன் குழல் ஊதுவதை நேரில் காண்பது போன்ற நிலையை உண்டாக்கு கின்றது பாசுரம். கண்ணனின் சிறுவிரல்கள் புல்லாங்குழலின் துளைகள் தோறும் தடவுதல், கண்கள் வளைந்து காட்டுதல், வாய் குமிழ்த்தல், புருவம் கிளர்ந்து வளைதல் இவை சிறு சிறு இயக்கங்களைக் காட்டும் இயக்கப் புலப் படிமங்களாகும்.

அற்புதமான புல்லாங்குழல் ஓசையைக் கேட்டவர்கள், கேட்டவைகள் இவர்களிடம் உண்டான விளைவையும் காட்டுகின்றன பாசுரங்கள்.

**பறவையின் கணங்கள் கூடு துறந்து**
**வந்து சூழ்ந்து படுகாடு கிடப்ப**
**கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்**
**கவிழ்ந்து இறங்கிச்செவி யாட்டகில் லாவே**
**(3.6:8)**

[கணம்-கூட்டம்; துறந்து-விட்டொழித்து; படுகாடு-வெட்டி வீழ்ந்த காடுபோல: கிடப்ப-மெய் மறந்து கிடக்க; கவிழ்ந்து-தொங்க விட்டுக் கொண்டு; ஆட்டகில்லா-அசைக்க மாட்டா]

இதில் பறவைகள் கூடு துறத்தல், அவை சூழ்தல், படுகாடு கிடத்தல் இவையும் கறவை மாடுகள் கால் பரப்பிடுதல், கவிழ்ந்து இறங்குதல், செவியாட்டா திருத்தல் இவையும் இயக்கப் புலப் படிமங்களாகும்.

**மருண்டுமான் கணங்கள் மேய்கை மறந்து**
**மேய்ந்த புல்லும் கடைவாய்வழி சோர**
**இரண்டு பாடும் துலுங்கா புடைபெயரா**
**எழுதுசித் திரங்கள் போல நின்றனவே (3.6:9)**

[சோர-நழுவிவிழ; பாடு-பக்கம்; துலுங்கா-அசையாமல்; புடைபெயரா-அடியைப் பெயர்த்து இடமாட்டாமல்.]

இதில் மேய்ந்த புல் கடைவாய் வழி சோர்தல் இயக்கப்புலப் படிமங்களாகும்.

**மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்**
**மலர்கள் வீழும்; வளர்கொம்புகள் தாழும்**
**இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற**
**பக்கம் நோக்கிஅவை செய்யும் குணமே (3.6:7)**

[பாயும்-பெருக்கும்; வீழும்-வீழா நிற்கும்; தாழும்-தாழா நிற்கும்; இரங்கும்-உருகும்; கூம்பும்-குவியும்.)

இதிலும் மதுதாரை பாய்தல், மலர்கள் வீழ்தல், கொம்புகள் தாழ்தல் போன்றவை இயக்கப்புலப் படிமங்கள் ஆகும்.

**படிமங்களின் கலவை:** பெரும்பாலும் படிமங்கள் தனித்து வருதல் அருமை; அவை கலவையாகவே பாசுரங்களில் அமைந்து அவற்றிற்கு மெருகூட்டுகின்றன. மேலே

இரண்டு கலவைப் படிமங்களைக் காட்டினேன். இன்னும் இரண்டு காட்டுவேன்.

மாயச் சகடம் உதைத்து மருதிறுத்து
ஆயர்க ளோடுபோய் ஆநிரை காத்துஅணி
வேயின் குழலூதி வித்தக னாய்நின்ற
ஆயர்கள் ஏற்றினைப் பாடிப்பற (3.3:9)

*[இறுத்து-இற்று விழும்படிபண்ணி; அணி-அழகிய]*
இதில் சகடம் உதைத்தல், மருது இறுத்தல், ஆயர்களோடு போதல்-இவை இயக்கப்புலப்படிமங்கள். குழலூதுதல், செவிப்புலப்படிமம். இக்கலவைப் புலப்படிமங்கள் ஆநிரை மேய்த்தானை நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்து கின்றது.

குன்றாடு கொழுமுகில்போல்
குவளைகள்போல் குரைகடல்போல்
நின்றாடு கணமயில் போல்
நிறமுடைய நெடுமாலூர்
குன்றூடு பொழில்நுழைந்து
கொடியிடையார் முலையணவி
மன்றூடு தென்றல்உலாம்
மதிலரங்கம் என்பதுவே (4.8:9)

*[குன்று-மலை; முகில்-மேகம்; குரை-ஒலிக்கின்ற; கணம்-திரள்; நிறம்-வடிவழகு; நுழைந்து-புகுந்து; அணவி-வியாபித்து; உலாம்-உலவுகின்ற]*

இதில் குன்றாடு முகில், நின்றாடுமயில், தென்றல் பொழிலில் நுழைதல், அது கொடி இடையார் முலை அணவுதல், மன்றூடு தென்றல் உலவுதல், நின்று ஆடுமயில் கணம், மலைகளிலுள்ள சோலைகளிலே தென்றல் நுழைதல்—இவை இயக்கப்புலப் படிமங்கள்; குரைகடல் செவிப்புலப்படிமம்; கொழு முகில், நிறம் உடைய நெடுமால், கொடி இடையார் முலை-இவை கட்புலப் படி

மங்கள். இவை கலந்த கலவைப் படிமம்மதில் அரங்கத்னைத நம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது.

பாட்டின்பம் - பக்தி அநுபவம்: இந்தப் படிமங்களின் செயல்களைச் சிந்திப்போம். நம் உடல் தூண்டல்-துலங்கல் (Stimulus-Response) என்ற உளவியல் தத்துவப்படி இயங்குகின்றது. உள்ளமும் அதற்கேற்பத் துலங்குகின்றது வெளி உலகிலிருந்து தூண்டல்கள் புலன்களைத் தாக்கும்போது (Sensory level) அவற்றிற்கேற்பத் துலங்குகின்றன. அதாவது, அப்புலன்கள் அத்தூண்டல்களால் கிளர்ச்சி அடைகின்றன. அதனால் ஏற்படும் உணர்ச்சியை மனம் அநுபவிக்கின்றது. இந்த உணர்ச்சிப் பெருக்கில் உண்டாகும் இன்பமே—முருகுணர்ச்சியே—சந்தர்ப்பத்திற்கேற்ப ஒன்பது சுவைகளாகப் பரிணமிக்கின்றன. எடுத்துக்காட்டாக, மணப்பொருள்கள் தரும் மணத்தை நாற்றப் புல நரம்புகள் வாங்கி மூளைக்கு அனுப்புகின்றன. மனம் அப்பொருள்கள் நல்கும் மணத்தைத் துய்க்கின்றது. ஊதுவத்தியில் மணம் செயல்படுவதைக் கருதுக; திருவேங்கடவனின் சேவைக்காக நாம் கருவறைக்குள் புகுங்கால் நாம் அநுபவிக்கும் மணத்தை எண்ணுக. இங்ஙனமே பிற புலன்களின் மூலம் பெறும் தூண்டல்களால் மனம் அந்தந்தப் பொருள்கள் தரும் சுவை களைப் பெற்று அவற்றில் ஈடுபடுகின்றது. இவ்வாறு வெளியுலகத் தூண்டல்களால் அடிக்கடி மனம் பெறும்அநுபவம் பெருமூளையில் (Cereberum) பதிவாகி விடுகின்றது. உலகை இன்ப மயமாகக் கண்டு உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள். ஆழ்வார்கள் போன்ற ஞானச் செல்வர்கள் உள்ளத்தில் கனிவு அடைந்தவர்களாதலின் அவர்கள் இயற்கையில் இறைவனையே காணும் பேறு பெற்றவர்களாகின்றனர்.

இவ்வாறு பெருமூளையில் பதிவாகியிருக்கும் அநுபவம் அச்சு வடிவிலுள்ள கவிதைகளைப் படிக்கும்போது நினைவாற்றலின் காரணமாகத் தூண்டல்களாக (Ideational

leval) மாறுகின்றன. இவை மூளையிலுள்ள பூத்தண்டு (Thalamus), மேற்பூத்தண்டு (Hypo-thalamus) என்ற பகுதிகளின் மூலமாகப் புலன்களை அடையும்போது மூளையில் அற்புதமாக அமைந்திருக்கும் நரம்பு அமைப்புகளைத் தூண்ட, அந்நரம்புகளின் இயக்கத்தால் மாங்காய்ச் சுரப்பிகள் (Adrenal glands) போன்ற நாளமில்லாச் சுரப்பிகளில் (Dctless glands) சாறுகளைச் சுரக்கச் செய்து குருதியோட்டத்தை மிகுவிக்கின்றன. உடலும் கிளர்ச்சி அடைகின்றது. அப்போது கவிதைகளில் வரும் படிமங்களைப் புலன்கள் மீண்டும் மனத்தில் தோன்றச் செய்கின்றன. மனம் அக்காட்சிகளை அநுபவித்து மகிழ்கின்றது. இத்தகைய முருகுணர்ச்சி ஆழ்வார் பாசுரங்களில் பக்தியுணர்ச்சியாகப் பரிணமிக்கின்றது. இந்தப் பாசுரங்களைப் பயிலுங்கால் அதே உணர்ச்சியை நாம் பயிற்சியால் பெற முடிகின்றது. ஆழ்வார்கள் அநுபவித்த பக்தி-உணர்ச்சி அவர்தம் பாசுரங்களில் தேக்கி வைக்கப் பெற்றுள்ளது. இப்பாசுரங்களை நாம் பயிலுங்கால் அவற்றிலுள்ள சுவைகளை—பக்தி உணர்வுகளை—நம் மனம் அநுபவித்து மகிழ்கின்றது. பாசுரங்களும் 'மம்மர் அறுக்கும் மருந்தாக' நமக்குக் களிப்பூட்ட, நாம் பிரம்மாநுபவம் பெற்ற நிலையை அடைகின்றோம்.

பின்னிணைப்பு—1

# பயன்பட்ட நூல்கள்

## (அ) தமிழ் நூல்கள்

அண்ணங்கராசாரிய சுவாமிகள், பி. ப.: திவ்வியார்த்த தீபிகை (கிரந்தமாலா ஆபீஸ், காஞ்சிபுரம்).

ஆழ்வார்கள் : நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு (திருவேங்கடத்தான் திருமன்றம், 19-B, பெருமாள் முதலித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014).

ஆழ்வார்கள் : நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் (மர்ரே கம்பெனி, ராஜம் பதிப்பு).

இளங்கோ அடிகள் : சிலப்பதிகாரம்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை (கழக வெளியீடு, சென்னை-600 108).

கம்பர் : சடகோபர் அந்தாதி — வை. மு. சடகோப ராமாநுசாச்சாரியார் உரை.

கிருஷ்ணவேணி அம்மையார், எஸ் : செம்பொருள் (திருமலை-திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி-517 501).

கோபாலகிருஷ்ணமாசாரியார், வை. மு. : கம்பராமாயணம்—உரை (தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005).

கோபாலகிருஷ்ணமாசாரியார், வை. மு. : அஷ்டப்பிரபந்தம்—உரை, (ஷை, சென்னை-600 005).

சஞ்சிவி, ந. (பதிப்பு): தெய்வத்தமிழ் (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை-600 005).

சீராமதேசிகாசாரியார் : தேசிகப் பிரபந்தம் — உரை, (ஒப்பிலியப்பன் சந்நிதி, கும்பகோணம்).

திருவரங்கம் திருமலை தாதாச்சாரியார் : பாரி ஜாதப் புஷ்பம் என்கிற பிரபந்த சார வைபவம் (ஸ்ரீனிவாச பிரஸ், திருவையாறு, 1961)

சுந்தர ராமாநுச சுவாமிகள் : தத்துவத்திரயம்—விளக்கவுரை [வேலூர் வைணவ சித்தாந்த மகா சங்கம், வேலூர் (1951)].

சுப்பு ரெட்டியார், ந. : பாண்டிநாட்டுத் திருப்பதிகள் (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, 6, பிலிப்ஸ் தெரு, சென்னை-600 001) 1977.

சுப்பு ரெட்டியார், ந. : சோழநாட்டுத் திருப்பதிகள்—பகுதி I 1981. பகுதி II 1981. (பாரி நிலையம்)

சுப்பு ரெட்டியார், ந. : வடநாட்டுத் திருப்பதிகள்—1980 (பாரி நிலையம், சென்னை-108).

சுப்பு ரெட்டியார், ந. : முத்திநெறி (பாரி நிலையம்—சென்னை-600 108, 1982).

திருவள்ளுவர் : திருக்குறள்—பரிமேலழகர் உரை (கழகம்).

புருடோத்தம நாயுடு, பு. ரா. : ஸ்ரீவசன பூஷணம் —மணவாள மாமுனிகள் வியாக்கியானத் தமிழாக்கம் (தி. கி. நாராயணசாமி நாயுடு, 2, சீதாராம் நகர், கடலூர்-1).

மதுரைக் கல்லூரி : அன்றும் இன்றும், (இளங்கலையியல் அறிவியல் 1982).

வரதராசன், மு. : தமிழ் இலக்கிய வரலாறு (சாகித்திய அகாடமி, சென்னை-600 018, ஐந்தாம் பதிப்பு-1983).

## (ஆ) ஆங்கில நூல்கள்

Hudson, W. H. : An Introduction to the study of Literature; 1946).

Srinivasachari, P. N. : The Philosophy of Visishtadvaita, (The Adyar Library, 1943).

Subbu Reddiar, N. : Religion and Philosophy of Nalayira Divya Prabandham with Special Reference to Nammalvar (S. V. University, Tirupati-2. 1978).

பின்னிணைப்பு—2

# பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்விய தேசங்கள்

| திவ்விய தேசம் | பதிகம், பாசுரம் | பக்கம் |
|---|---|---|
| அயோத்தி | 3.9:6, 8, 10; 3.10:4, 8; 4.7:9 | 207 |
| ஆய்ப்பாடி | 2.2:5; 2.3:7; 3.4:10 | 211 |
| கண்ணபுரம் | 1.6:8. | 210 |
| கண்டம் கடிநகர் | 4.7 | 198 |
| குடந்தை | 2.6:2; 2.6:6; 2.7:1; 2.7:7. | 208 |
| கோட்டியூர் | 1.2; 2.6:2; 4.4. | 177 |
| கோவர்த்தனம் | 2.10:4; 3.5. | 210 |
| சாளக்கிராமம் | 2.9:5; 4.7:9. | 205 |
| திருப்பாற் கடல் | 4.10:5; 5.1:7; 5.2:10; 5.3:7. 5.4:9; 10. | 211 |
| திருப்பேர் நகர் | 2.6:1; 2.7:2. | 208 |
| திருவரங்கம் | 2.9:4; 2.9:11; 4.8; 4.9; 4.10. | 191 |
| திருவெள்ளறை | 2.8. | 179 |
| துவரை | 4.1:6; 4.7:9; 4.9:4; 4.9:4; 5.4:10. | 206 |
| மதுரை (வட) | 3.6:3; 4.7:9; 4.10:8. | 204 |
| மாலிருஞ்சோலை | 1.6:8; 3.4:5; 4.2; 4.3; 5.3. | 181 |
| வதரி | 4.7:9. | 207 |
| வில்லிப்புத்தூர் | 2.2:6. | 211 |
| வேங்கடம் | 1.5:3; 1.9:8; 2.6:9; 2.7:3; 2.9:6; 3.3:4; 5.4:1. | 209 |
| வைகுந்தம் | 3.6:3; 4.7:9; 5.4:10. | 205 |

## பேராசிரியர்

# டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

**சமயம், தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

17. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
18. சிலநோக்கில் நாலாயிரம்
19. வைணவமும் தமிழும்
20. சைவசமய விளக்கு
21. ஆன்மிகமும் அறிவியலும்
22. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
23. கலியன் குரல்
24. கீதைக் குறள் (பதிப்பு)
25. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
26. கீதைப் பொழிவுகள்

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :**

27. மலைநாட்டுத் திருப்பதிகள்
28. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
29. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
30. வடநாட்டுத் திருப்பதிகள்
31. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
32. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (ஷை)
33. தம்பிரான் தோழர்
34. நாவுக்கரசர்
35. ஞானசம்பந்தர்
36. மாணிக்கவாசகர்

**திறனாய்வு:**

37. பாட்டுத் திறன்
38. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
39. அகத்திணைக் கொள்கைகள்
40. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
41. கண்ணன்பாட்டுத் திறன்
42. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
43. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
44. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
45. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
46. ஆழ்வார்கள் ஆரா அமுது
47. விட்டு சித்தன் விரித்த தமிழ்

**வரலாறு, தன் வரலாறு :**

48. நினைவுக் குமிழிகள் - முதற் பகுதி
49. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
50. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
51. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
52. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
53. வேமனர்
54. குரஜாட
55. மேகாணி
56. சி. ஆர். ரெட்டி
57. தாயுமான அடிகள்
58. பட்டினத்தடிகள்
59. வடலூர் வள்ளல்
60. பிரதிவாதி பயங்கரம்

**அறிவியல் :**

61. மானிட உடல்
62. அணுவின் ஆக்கம்
63. இளைஞர் வானொலி
64. இளைஞர் தொலைக்காட்சி
65. அதிசய மின்னணு
66. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
67. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
68. அம்புலிப் பயணம்
69. தொலை உலகச் செலவு
70. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
71. இல்லற நெறி
72. வாழையடி வாழை
73. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
74. வானமண்டலக் காட்சி

**ஆராய்ச்சி :**

75. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
76. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
77. Studies in Arts and Sciences: (61st Birth Day Commemoration Volume)
78. Collected Papers.

---